2832

T.N.L.A. Debates

Official Reports

Vol. IV No. 8&9

29, 30 March 1985

D
V2ll,31 N85
N85.4.344
136377

DIGITIZE

72 | 86
2832

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, 1985 மார்ச் 30, தொகுதி IV-எண். 4.
Saturday the 30th March 1985—Volume IV-No. 4.

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600009
Legislative Assembly Department, Fort St. George,
Madras-600 009

விலை-ரு. 3.50 காசுகள்] Price Rs. 3-50 paise

# உள்ளடக்கம்


| 29—3—1985 | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. பேரவைத் தலைவர் பிறந்த நாள் வாழ்த்து | .. | 277—279 |
| 2. இரங்கல் குறிப்பு : | | |
| முன்னாள் உறுப்பினர் திரு. ஆ. பரந்தாமன் மறைவு | .. | 279 |
| 3. வினாக்கள்—விடைகள் : | | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | .. | 279—293 |
| 4. கவன ஈர்ப்புகள் : | | |
| (அ) தஞ்சை மாவட்டத்தில் மஞ்சள் நோயினால் நெற்பயிர் பாதிப்பு | .. | 293—297 |
| (ஆ) நச்சுருவி நோயினால் விளை நிலங்கள் பாதிக்கப்படுவது | ... | 297—299 |
| 5. வரவு-செலவுத் திட்டம், 1985—86, பொது விவாதம் (தொடர்ச்சி) | | |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | .. | 299—317 |
| திரு. எஸ். என். இராசேந்திரன் | .. | 317—324 |
| திரு. ரா. சின்னச்சாமி | .. | 324—333 |
| திரு. க. இரா. சின்னராசு | .. | 333—343 |
| திரு. குமரி அனந்தன் | .. | 343—359 |
| திரு. கோ. இரகுபதி | .. | 359—369 |
| திரு. மு. இராசாங்கம் | .. | 369—375 |
| திரு. ஆ. சிவக்குமார் | .. | 375—380 |
| திரு. பொ. உத்திராபதி | .. | 380—399 |
| திரு. என். சண்முகம் | .. | 400—410 |
| திரு. கா. சொர்ணலிங்கம் | .. | 410—418 |
| திரு. இரா. அரிக்குமார் | .. | 418—422 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | .. | 423—424 |

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய பிறந்த நாள் விழா இன்றுபோல் நல்ல மகிழ்ச்சியோடு வருடந்தோறும் கொண்டாடப்படுவதற்கும், நீண்ட காலத்திற்கு தாங்கள் அரசியலிலும் இந்த அவையிலும் இருந்து பணியாற்றுவதற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வாழ்த்துகிறேன்.

**திரு. மு. இராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய பிறந்த நாள் விழாவில் நல் வாழ்த்துச் சொல்கிற பேற்றைப் பெற்றிருப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, ஆயிரம் பிறை கண்டு, பல்லாண்டு வாழவேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

* **திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய பிறந்த நாள் விழாவில் இந்திய முஸ்லீம் லீகின் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, தாங்கள் நீண்ட நெடுங்காலம் தொடர்ந்து இந்தப் பேரவையிலே தலைவராக இருந்து பணியாற்றவும், அப்போது இந்தப் பேரவையிலே நானும் உறுப்பினராக இருந்து ஒவ்வொரு பிறந்த நாள் அன்றும் உங்களுக்கு வாழ்த்து தெரிவிக்கவும், எல்லாம் வல்ல இறைவன் எல்லா நலன்களையும் தங்களுக்கு தரவேண்டும் என்று வேண்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பெண்களுக்குத்தான் வயதைப் கேட்கக் கூடாது என்று சொல்வார்கள். தாங்கள் இன்றையதினம் எத்தனையாவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுகிறீர்கள் என்ற பெரிய ஐயப்பாடு எங்களிடையே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு 40 வயது ஆகிறது. அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் வாழ்த்திய வாழ்த்துக்களை மனமார, நெஞ்சார ஏற்றுக்கொள்கிறேன். அவையின் வாழ்த்துக்களைக் கேட்கும்போது உண்மையிலேயே இன்றைக்கு அதிகமான பூரிப்பு அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருடைய வாழ்த்துக்களையும் நான் பெற்றமைக்காக மகிழ்ச்சிக் கொள்கிறேன். நன்றி.



## 2. இரங்கல் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் திரு. ஆ. பரந்தாமன் மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஆ. பரந்தாமன் அவர்கள் 10—3—1985 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. பரந்தாமன் அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை செங்கற்பட்டு மாவட்டம், கடம்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். பிற்பட்ட வகுப்பு ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும், திருவாலங்காடு கூட்டுறவு ஆரம்ப நிலவள வங்கி லிமிடெட்டின் தலைவராகவும், சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 3. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### விக்ரம் சாராபாய் தொழில் பேட்டையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள்.

29—(* வினா எண் 919)—திரு. டி. ஆர். வேங்கடராமன்

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விக்கிரம் சாராபாய் தொழில் பேட்டையில் பெண் தொழிலாளர்கள் அதிகமாக பணியாற்றுவதால் அவர்களின் கைக் குழந்தைகளுக்கு என்ன வசதிகள் செய்யப்பட்டு உள்ளன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டையில், 30-க்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பக வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் அணு துறையில் மின் கதிர் வீச்சுகளுக்கு எலக்ட்ரோ மாக்னைட்வேவ் வெளிவரக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே வேலை பார்க்கும் பெண் தொழிலாளர்களுக்கு தொழிலைச்சார்ந்த பிணிகள் — ஆக்குபேஷனல் அஸார்ட்ஸ் — என்று சொல்லப்படுகின்ற விபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவா அவர்களே, அப்படிப்பட்ட தகவல் வரவில்லை. ஏதாவது தகவல் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவிக் கலாம்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** பேரவைத் தலைவா அவர்களே, வெளிநாடுகளில் வேலை பார்க்கும் பெண்களுடைய மனநிலையையும், குடும்ப நிலையையும் அனுசரித்து அவா களுடைய பேறு காலத்திலே பெண்களுக்கு வழங்கப்படுகின் அந்த பிரசவ விடுப்பு போன்று, அவர்களுடைய கணவன்மா களுக்கு குறைந்தது 10 நாட்கள் வழங்கப்படலாம் என்ற புதிய கருத்து இருக்கிறதே, அதனை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவ அவர்களே, அரசு கவனத்தில் கொள்ளும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்கே அண்மையிலே வெளிவந்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையிலே இந்த விக்ரம் சாராபாய் தொழில் பேட்டையில், பெண் தொழி





லாளர்களுடைய குழந்தைகளுக்கு, அவர்களை பராமரிப்பதற்கான கூடங்கள் அமைக்க வேண்டும் என்று பரிந்துரை செய்து இருக் கிறார்களே, அது நிறைவேற்றப்பட்டதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். நிறைவேற்றப்பட்டு வருகிறது. இன்றைக்கு அங்கே அந்த எலக்ட்ரானிக் தொழில்கூடத்தில் 35 தொழிற் சாலைகள் இருக்கின்றன. அதில் 22 தொழிற்சாலைகளில் பெண் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். 22 தொழிற்சாலைகளில் 567 பெண் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். தொழிற்சாலை சட்டப்பிரிவு 48-ன்படி, 30-க்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற தொழிற்சாலைகளில் தான், இந்த குழந்தைகள் காப்பகம் போன்ற வசதிகள் அமைக்கப்படும். அந்த வகையில், இந்த தொழிற்பேட்டையில் 3 தொழிற்சாலைகளில் 30 க்கு மேற் பட்ட பெண் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றார்கள். அவற்றில் 2 தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பக வசதி செய்யப் பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஒரு தொழிற்சாலைக்கு குழந்தைகள் காப்பக கட்டிட வரைவு படம், தொழிற்சாலை ஆய்வகத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சிட்கோ நிறுவன அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழில் பேட்டையிலே இரவு நேரத்திலே பணிகளுக்காக பெண்கள் அமர்த்தப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அந்தத் தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே. சட்டப்படி அமர்த்தப்படக்கூடாது. அப்படி ஏதாவது விவரங்கள் இருந்தால் அரசுக்குத் தெரிவிக்கவும். தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி பா. வளர்மதி:** பேரவைத் தலைவர் அவர்களே, கைக்குழந்தைகளோடு வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள் எத்தனை பேர் என்று அறிய விரும்புகிறேன்.

[1985 மார்ச் 29

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இரண்டு தொழிற்சாலைகளில் தான் அந்த வசதி செய்து கொடுக்கப்படுகிறது. டைனோ விஷன் லிமிடெட் மற்றும் எல்கோ எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸ் என்ற இரண்டு தொழிற்சாலைகளில் அந்த வசதி செய்து கொடுக்கப்படுகிறது. முதல் தொழிற்சாலையில் 16 திருமணமான பெண்கள் வேலை செய்கிறார்கள். இரண்டாவது தொழிற்சாலையில் 11 திருமணமான பெண்கள் வேலை செய்கிறார்கள். அதுவும் அவர்கள் அசெம்பிளி பகுதியிலே பணியாற்றுகிறார்கள். ஆனால் குழந்தைகள் காப்பகத்தில் தற்போது குழந்தைகள் ஒருவரும் இல்லை. காரணம் அங்கே குழந்தைகள் உள்ள தாய்மார்கள் வேலை செய்யவில்லை.

**திரு. ஆர். ரெங்கசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பாக்டரி ஆக்ட்படி 30-க்கு மேற்பட்ட பெண்கள் வேலை செய்தால் தான் கிரீச் வைக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு பெரும்பான்மையான தொழிற்சாலைகளில் 30 பெண்களுக்கு குறைவாக வேலை செய்கிறார்கள். ஆகவே தனிப்பட்ட முறையில் வைப்பதற்கு பதிலாக, காமன் பூல் பண்ணி, எல்லா பேக்டரிகளுக்கும் சேர்த்து, ஒரு கிரீச் வைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை தான். இந்தக் கருத்தை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆர். செங்காளியப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஆக்ட் பிரகாரம் 30 பேர்களுக்கு மேல் இருந்தால் அவர்களுடைய குழந்தைகளுக்கு காப்பகம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். இந்த அரசாங்கம், 30 பேருக்கும் குறைவாக பெண்கள் வேலை செய்தால், அவர்களுக்கும் மனிதாபிமான அடிப்படையில், அவர்களுடைய குழந்தைகளுக்கு காப்பகம் அமைப்பதற்கு முன் வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது சாத்தியக்கூறு இருக்கிறதா என்று பரிசீலனை செய்து பார்க்கிறோம்.



1985 மார்ச் 29]

(முற்பகல் 9-10)

**திரு. மா. சின்னராசு:** பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக்குழு உறுப்பினர் மற்றும் தலைவர் என்ற முறையில் அந்தத் தொழிற்சாலையை நாங்கள் பார்வையிட்டோம். அங்கே சிட்கோ நடத்துகின்ற பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஒரே காம்பௌண்டிற்குள் இருக்கின்ற அந்த தொழில் மையத்தில், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் நான்கு பேர் ஐந்து பேர் குழந்தைகளோடு இருக்கின்ற தாய்மார்கள் பணியாற்றுகிறார்கள். அந்தத் தாய்மார்களுக்கு குழந்தைகள் காப்பகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. என்றாலும் சிட்கோவே அதற்கான ஒரு முயற்சியை எடுத்து காப்பகத்தை அமைப்பதற்கு மற்ற தொழிற்சாலைகளிடமிருந்து அதற்கான கட்டணத்தைப் பெறுவதற்கு, ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதுதான் எங்கள் பரிந்துரை. அப்படி செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும்.

* **திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடைமுறை கிண்டி தொழிற்பேட்டையிலும் அம்பத்தூர் தொழிற்பேட்டையிலும் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்படுகிறது. அப்படி என்றால் 30-க்கும் குறைவாக தொழிலாளர்கள் இருக்கின்ற தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு இல்லை என்று சொல்வதை தவிர்க்கும் பொருட்டு சிட்கோ கிண்டியில் ஒரு காப்பகமும், ஆவடி-அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ஒரு காப்பகமும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்களுக்கு பதில் சொல்லியிருக்கிறேன். அதுவே இதற்கும் பொருந்தும்.

**திரு. என். இராசாராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, [illegible] தொழிற்பேட்டையில் பெண் தொழிலாளர்கள் 30-க்கு மேற்பட்டவர்கள் பணியாற்றும் தொழிற்சாலையில்

[1985 மார்ச் 29

குழந்தைகள் காப்பக வசதி செய்து தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். இதுபோன்றே ஏனைய தொழிற்பேட்டைகளில் காப்பகங்கள் கட்டித்தரப்படுமா? இதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, 30 தொழிலாளர்களுக்கு மேல் உள்ள தொழிற்சாலைகளில் காப்பகம் வரவேண்டும் என்பது விதி. அப்படி எந்த எந்தத் தொழிற்சாலைகள் இருக்கிறது என்ற விவரம் இப்போது என்னிடம் இல்லை. தனி கேள்வி போட்டால் பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### வத்திராயிருப்பு—அர்ஜுனாபுரம் சாலை

**30—(* வினா எண். 768) திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு—அர்ஜுனாபுரம் பாலம், ரோடு அமைப்பதற்கு பணம் ஒதுக்கியும் ஒப்பந்தக்காரர்கள் வேலை செய்யாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வேலையைத் துரிதப்படுத்த அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) இப்பாலம் கட்டும் பணிக்கு மட்டும் ரூ. 35 லட்சத்திற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, தற்போது இப்பாலம் தரைமட்டம்வரை வேலை நடைபெற்றுள்ளது. தண்ணீர் சென்று கொண்டிருப்பதால் வேலை தடைபடுகிறது. மேற்கண்ட பணிகளை விரைவில் முடிக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஒதுக்குகிற பணம் முழுமையாக அவ்வில் மக்களுக்குப் போய் சேரவேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. அந்த அடிப்படையில் இங்கே உள்ள சில டிப.



1985 மார்ச் 29]

அதிகாரிகளும் அங்கே உள்ள சில காண்டிராக்டர்களும், அதாவது அரசு ஒதுக்குகிற பணத்தில் ஏதாவது கிடைக்காதா என்ற ஒரு பிரச்சினையின் காரணமாக வேலையில் தாமதம் ஏற்படுகிறது. இன்னும் அந்த ரோடு போடுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய வில்லை. விரைவாக நில ஆர்ஜிதம் செய்யப்படுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது வேலை நடைபெறுகிறது என்று சொன்னார்கள். நான் அந்த தொகுதி எம்.எல்.ஏ. காலையில் போன் வந்தது. இன்னும் வேலை நடை பெறவில்லை என்று சொன்னார். இப்படி அரசுக்குத் தவறான தகவல் தந்த அதிகாரிகளை சஸ்பெண்டு செய்ய வேண்டும். தண்ணீர் சென்று கொண்டிருப்பதால் வேலை தடைபடுகிறது என்று சொன்னார்கள். மழையே இப்போது பொழியவில்லை எப்படி தண்ணீர் வரும். இதை எல்லாம் கவனித்து விரைவாக வேலை நடைபெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா. தவறான தகவல் தந்த அதிகாரி சஸ்பெண்டு செய்யப்படுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது தண்ணீர் வருகின்ற காரணத்தால் வேலை அவ்வப்போது தடைபடுகிறது. இந்த வேலை நடைபெறுவதன் காரணமாகத்தான் தரைமட்டம் வரை வேலை நடைபெற்றிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் தவறு இருக்கின்றது என்று அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் கருதுவார்களானால், அதை விசாரித்து தவறு இருக்கு மானால் நடவடிக்கை எடுப்பதில் இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. அவர்கள் கொடுக்கின்ற அந்த குறிப்புகளை பார்த்து தான் நாங்கள் இங்கே பதில் சொல்லுகிறோம். இந்த குறிப்புகள் தவறாக கொடுக்கப்பட்டு இருக்குமானால், அதன் மீது நடவடிக்கை எடுப்பது எங்களது கடமை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அர்ஜுனாபுரம் என்பது ஒரு சிறிய கிராமம். இந்த சிறிய கிராமத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 35 லட்ச ரூபாய் ஒதுக்கி ரோடு பாலம் அமைப்பதற்கு அனுமதி அளித்து இருக்கிறார்கள். இந்த சிறிய கிராமத்திற்கு இவ்வளவு பெரிய தொகையா ஒதுக்குவது, இந்த தொகையை வேறு இடத்திற்கு மாற்றலாம் என்று சில சமூக விரோதிகள்

பிரச்சாரம் செய்கிறார்கள். அந்த சமூக விரோதிகளின் வாயை மூடுகின்ற அளவுக்கு அரசு தலைமை இன்ஜினியரை உடனடியாக அனுப்பி விரைவாக இந்த வேலையை முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, அவர்கள் செய்கின்ற பிரச்சாரத்தை விட அதிகமாக இப்போது இவர்கள் செய்திருக்கிறார்கள். இதற்கு நிச்சயமாக அரசாங்கம் வேகமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு தலைவரவர்களே, வால்பாறை தொகுதியாகிய என்னுடைய தொகுதியில், மலைப்பாங்கான பகுதிகளில் போக்குவரத்து சாதனங்கள் இல்லை. கேட்டால், பாலம் இல்லை என்று சொல்கிறார்கள். பில்லோனி எஸ்டேட் பகுதியில் பெரிய பாலம் அமைத்து. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக்கேள்வி திருவில்லி புத்தூர் தொகுதி பற்றியது. நீங்கள் கேட்கும் விஷயத்தைப் பற்றி மானியக் கோரிக்கையின் மீது பேசுவது நல்லது. இப்பொழுது கேட்டு முடித்து விடுங்கள்.

**திரு. வி. தங்கவேலு:** தலைவரவர்களே, பில்லோனியில் பாலம் அமைக்கப்படுமா? போக்குவரத்து அதிகரிக்கப்படுமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்புடையது இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதிக்குச் செய்ய வேண்டுமென்ற அக்கறையில் கேட்கிறார்கள். தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்து, ஏற்கனவே என்ன நிலையில் இருக்கிறது என்பதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்ஜெட்டிலே இதுபோன்ற பாலங்களையும் ரோடுகளையும் அமைக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப் பட்ட பிறகுங்கூட, ஆண்டின் ஆரம்பத்திலேயோ, மத்தியிலேயோ அந்தப் பணிகளில் ஈடுபடாமல், ஆண்டின் கடைசியில், அதாவது பட்ஜெட்டின் காலம் முடியப் போகின்ற நேரத்தில், அவசரக்





கோலத்தில் அள்ளித் தெளித்தாற்போல் பாலங்களையும் ரோடுகளையும் அமைக்கின்ற பணிகள் தமிழகமெங்கும் நடைபெறுகின்றன. இந்த நிலைமைகளை மாற்றி, உடனடியாக வேலைகளைத் தொடங்கி விரைவாகவும் சீராகவும் நடப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, எந்தெந்தப் பணிகளை இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளலாம் என்று பட்டியல் போட்டு அரசுக்கு அனுப்புகிறார்கள். அதைப் பார்த்து குறிப்பிட்ட தொகையை அரசாங்கம் அந்த வேலையைச் செய்வதற்காக ஒதுக்குகிறது. அப்படி ஒதுக்கப்பட்ட பின்பு, அதைத் தெரிந்து கொண்ட பிறகு, அந்த வேலைகளுக்கான ஆய்வுகளைச் செய்து, பிறகு டெண்டர் கேட்பது போன்ற நிலைமைகளையெல்லாம் பார்த்து இவைகளைச் செய்வதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. அப்படி அவர்கள் முறையாகக் கடைப்பிடிக்கவில்லையென்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமைகள் ஏற்படும். எனவே, அவர்களுக்கு அந்தக் கால அளவு கட்டாயம் தேவைப்படுகிறது. இருந்த போதிலும், இதைத் துரிதப்படுத்துவதற்கு அங்கேயுள்ள பொறியாளர்களைச் சந்தித்து, என்னென்ன முறைகளைக் கடைப்பிடிக்காலம், அவைகளை எப்படி மாற்றியமைக்கலாம் என்பதைப்பற்றி ஆய்வு செய்கிறோம்; எதிர் காலத்திலே இத்தகைய குறைபாடுகள் நீக்கப்படும் என்று கருதுகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவரவர்களே, மாநிலத்தில் பல பகுதிகளில், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட, 1980 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட பல பாலங்கள் இன்னும் கட்டப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாரப்பாடி என்ற இடத்திலே உள்ள பாலம் இன்னும் கட்டப் படாமல் இருக்கின்றது. அதைப்போன்றே, பழனியிலே ஒரு பாலம் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டு இன்னும் கட்டப் படாமல் இருக்கிறது. இப்படி ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்கும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, அரசாங்கம் சில நேரங்களில் மிகக் கவனமாக நடவடிக்கை எடுக்கும்பொழுது இப்படிப்பட்ட சங்கடங்கள் வருகின்றன. காரணம், ஒப்பந்தக்

வேலைகளில் காலதாமதம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகின்றது. அப்படி அதிகாரிகள் இருந்தால் அவர்களை இரண்டு மூன்று ஆண்டுகளில் வேறு பகுதிகளுக்கு மாற்றி அந்த வேலைகள் துரிதமாக நடப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அதிகாரி கட்டாயமாக மூன்று ஆண்டுகளுக்கு மேலே ஒரு இடத்தில் இருக்கக்கூடாது என்றுதான் இப்போது நாம் வைத்திருக்கிறோம். அதுவும் குறிப்பாக நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் அதைக் கட்டாயமாகக் கடைப்பிடித்து வருகிறோம். மூன்று ஆண்டுகளுக்கு மேலே எந்த அதிகாரியும் ஒரு இடத்தில் இருப்பதில்லை. அப்படி இருந்தும் தவறுகள் நடந்தால் அதைப்பற்றித் தெரிவிக்க வேண்டியது மாண்புமிகு உறுப்பினர்களின் கடமை என்றால் அதிலே நடவடிக்கை எடுக்க வேண்டியது எங்களுடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாண்டுகளில் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளை மாற்றக்கூடாது என்று திட்டவட்டமான ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதால் அதிலும் தவறுகள் நடக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கு நம்மை மாற்ற மாட்டார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் ஒப்பந்தக்காரர்களோடு சேர்ந்துகொண்டு தவறுகளைச் செய்கிறார்கள். எனவே எந்த நேரத்திலும் அவர்களை மாற்றலாம் என்ற ஒரு அதிகாரம் அரசுக்கு இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு மேலே கட்டாயமாக ஒரு இடத்தில் இருக்கக்கூடாது என்று உத்தரவு இருக்கின்றது என்றால் மூன்று ஆண்டுகளுக்குள்ளே தேவை இல்லாமல் வேண்டுமென்றே யாரையும் தொந்தரவு செய்யக்கூடாது என்பதற்காகத்தான் இந்தப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் தவறு செய்தால் அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் மாற்றம் செய்யத் தடை இல்லை. எனவே அதைக் கடைப்பிடிக்கலாம்.



## திருவில்லிபுத்தூர் தொகுதியில் ஆதிதிராவிட மாணவர்கள் விடுதிக் கட்டிடங்கள்.

31—(*வினா எண். 763) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி திருவில்லிபுத்தூர் நகர், கிருஷ்ணன் கோவில் ஆகிய இடங்களில் உள்ள ஆதி திராவிட மாணவர்கள் தங்கும் விடுதிகளுக்கு நிரந்தர கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** பேரவைத் தலைவர் அவர்களே, விடை அளிப்பதற்கு முன்னால் என்னை தமிழக அமைச்சரவையிலே இடம் பெறச் செய்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி துவங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருவில்லிபுத்தூரில் ஒரு அரசு ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்டுவதற்காக தாட்கோவிடமிருந்து ரூ. 23.50 இலட்சத்திற்கு மதிப்பீடுகளும், வரைபடங்களும் பெறப்பட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரால் ஜூலை 1984-ல் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் 1984-85ம் ஆண்டுக்கான ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போதாத காரணத்தினால், இம் மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளிக்க இயலவில்லை. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் அவர்கள், 1985-86 ஆம் ஆண்டில் இம்மதிப்பீடுகளை அவ்வாண்டுக்குரிய கட்டுமான விகிதங்களின் அடிப்படையில் திருத்தியமைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்.

கிருஷ்ணன் கோவிலில் ஒரு அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுவதற்கான மதிப்பீடுகளும் வரை படங்களும் தாட்கோவின் பரிசீலனையில் உள்ளது.

D 2 A 55—3

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் அரிசன மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அங்கே படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்குத் தங்கும் விடுதிகள் மிகவும் மோசமான நிலைமையில் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. போன நிதியாண்டில் அதாவது 1984-85 ஆம் நிதியாண்டில் இதற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்காகப் ஃபைனான்ஸ் டிபார்ட்மெண்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் நிதிப்பற்றாக்குறை காரணமாக இந்தத் திட்டத்தைச் சேர்த்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது. இந்தத் தடவையும் தமிழ்நாடு மட்டத்திலிருந்து பல கோரிக்கைகள் நிரந்தரக் கட்டிடத்திற்காக வரும். எனவே இந்தத் தடவை தப்பிவிடாமல் நிச்சயமாக 1985-86-ம் திட்டத்தில் அதைச் சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் உத்திரவாதம் கொடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான வரைபடமும் மதிப்பீடும் அரசாங்கத்திற்கு 31—3—1985-க்குள் தாட்கோ இயக்குநரிடமிருந்து அனுப்பி வைக்கப்படுவதாக தகவல் வரப்பட்டுள்ளது. ஆகவே, இது ஆய்வில் இருக்கிறது, நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் நகர், கிருஷ்ணன் கோவில் ஆகிய இரண்டு இடங்களிலும் நிரந்தரக் கட்டடம் வேண்டுமென்று கேட்கிறபோது அமைச்சர் அவர்கள், கிருஷ்ணன் கோவிலைப் பொறுத்தவரையில் அந்த வரைபடம் இன்னும் வரவில்லை என்று சொன்னார்கள். ஆகவே அந்த வரைபடம் விரைவாக வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா? இந்த கிருஷ்ணன் கோவில், திருவில்லிபுத்தூர் நகர் ஆகிய இரண்டு இடங்களிலும் நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு, இந்த ஆண்டே அதை எடுப்பதற்கு வேண்டிய சாங்ஷனைச் செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?





**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியின் அளவைப் பொறுத்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 4. கவன ஈர்ப்புகள்.

### (அ) தஞ்சை மாவட்டத்தில் மஞ்சள் நோயினால் நெற்பயிர் பாதிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் மா. மீனாட்சி சுந்தரம், எல். இராசாராமன், ந. சிவஞானம், மூ. இராசாங்கம், இ. கிருஷ்ணமூர்த்தி, மா. மணிமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. மா. மீனாட்சி சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்தில் மஞ்சள் நோயினால் நெற்பயிர் விளைச்சல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகையால் சென்ற பல ஆண்டுகளாக கட்டாது இருந்த வரி வசூல் மற்றும் கடன் வசூல் ஆகியவைகளை ஒத்திவைக்க வேண்டுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, மதுரை மாவட்டங்களில் சொர்ணவாரி நெற்பயிர்களின் இலைகள் பரந்த அளவில் நோய்த்தாக்குதலுக்கு உட்பட்டிருந்தது. மதுரை,

தஞ்சை மற்றும் திருச்சி மாவட்டங்களில மட்டும் சம்பா நெற்பயிர் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தது. தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெற்பயிர்கள் மஞ்சள் நிற நோயினால் தாக்குதலுக்குள்ளாயின. இந்த நோயால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பாதுகாக்கும்பொருட்டு வேளாண்மைத்துறை தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2. இயற்கை சீற்றங்களினால் பயிர் பாதிப்பு ஏற்பட்டால் விவசாய சேவை கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் குறுகிய காலப் பயிர் கடன்களை மூன்றாண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் மத்திய காலக் கடன்களாக மாற்றிக்கொடுப்பதன் மூலம் தேவையான நிவாரணம் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு மத்திய காலக் கடனாக மாற்ற பயிர் விளைச்சல் ஆறணாவிற்கும் அதற்கு குறைவாகவும் உள்ளது என அனாவாரி சான்றிதழ், மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி ரத்தும் செய்யப்பட்டதாக வருவாய்த்துறையினரால் சான்று அளிக்கப்படின் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் குறுகிய கால பயிர் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றி அவ்வுறுப்பினர்களுக்கு மேற்கொண்டு பயிர்க்கடன் அளிக்கப்படும்.

3. தஞ்சாவூர் மாவட்டத்தில் நெற்பயிர்களுக்கு மஞ்சள் நோய் ஏற்பட்டு சம்பா மகசூல் பாதிக்கப்பட்டதன் தொடர்பாக மாவட்ட அளவில் விவசாயத்துறையால் ஆய்வு செய்யப்பட்டு மஞ்சள் நோய் பாதிப்பு 26,420 ஹெக்டேர் பரப்பில் காணப்பட்டதாகவும் பல பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால், 13,908 ஹெக்டேர் பரப்பில் இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டது எனவும் மீதியுள்ள 12,612 ஹெக்டேர் பரப்பில் உள்ள பயிர்கள், பாதிப்பு அடைந்து மகசூல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் இவ்வாறான நிலங்களை தல சோதனை செய்து குறைவாக கண்டுமுதல் கண்ட நிலப்பகுதிகளுக்கு நிலவரி வஜாவிற்கு தகுதி இருப்பின் வஜா செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் தஞ்சை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இவ்வாறே மஞ்சள் நோயினால் பாதிக்கப்பட்ட ஏனைய மாவட்டங்களில் உள்ள பகுதிகளிலும் தஞ்சை மாவட்டத்தில் எடுத்துவரும் நடைமுறைகளையே பின்பற்றுமாறு தக்க அறிவுரைகள் வழங்கப்படும்.





**திரு. மா. மீனாட்சி சுந்தரம்:** தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில், '.... இவ்வாறான நிலங்களை தல சோதனை செய்து குறைவாக கண்டுமுதல் கண்ட நிலப்பகுதிகளுக்கு நில வரி வஜாவிற்கு தகுதி இருப்பின் வஜா செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது . . .' என்று தந்திருக்கிறார்கள். ஆனால் நெற்பயிர்கள் எல்லாம் அழிந்து அறுவடையாகி விட்ட தருணத்தில் 'தகுதி இருப்பின்' என்பது எந்த அடிப்படையில் பொருந்தும்? அதை எந்த வகையில் அரசு கணக்கிடப் போகிறது என்று தெரியவில்லை. வேதாரண்யம் பகுதியில் மானாவாரி சாகுபடி பூராவும் அழிந்து விட்டதென்று மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் அரசுக்கும் தெரிவித்துள்ளேன். அதன்மீது வேதாரண்யம் தாலுகா பூராவும் வஜா செய்யவும் கடன்களை ஒத்திவைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றி விவர அறிக்கையிலேயே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே எல்லா இடங்களிலும், மாவட்டம் முழுவதும் ஒட்டுமொத்தமாக கூறமுடியாது. அதற்கென்று சில பல முறைகளும் வகைகளும் ஏற்கனவே வைக்கப்பட்டிருக்கின்றன. இயற்கைச் சீற்றங்களினால் பயிர்பாதிப்பு ஏற்பட்டால் விவசாய சேவை கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் குறுகிய காலப்பயிர் கடன்களை மூன்றாண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் மத்திய காலக் கடன்களாக மாற்றிக்கொடுப்பதன் மூலம் தேவையான நிவாரணம் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு மத்திய காலக் கடனாக மாற்ற பயிர் விளைச்சல் ஆறணாவிற்கும் அதற்கு குறைவாகவும் உள்ளது என அனாவாரி சான்றிதழ் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி ரத்தும் செய்யப்பட்டதாக வருவாய்த் துறையினரால் சான்று அளிக்கப்படின் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் குறுகிய கால பயிர் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றி அவ்வுறுப்பினர்களுக்கு மேற்கொண்டு, பயிர்க்கடன் அளிக்கப்படும். இதெல்லாம் ஏற்கனவே கையாளப்பட்டு வருகிற முறைகள். அந்த முறைகளில், வஜா, வரி ரத்து செய்யப்படவேண்டியது, எந்தெந்த வகையில் பயிர்க்கடன்களை மாற்றிக்கொடுக்க வேண்டும்

என்பதை சான்றிதழ் வழங்குவதன் மூலமாக மேற்கொள்ள முடியும். அதுதான் அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**திரு. எஸ். இராசாராமன்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மாவட்டம் பூராவும் மஞ்சள் நோயினால் பயிர்கள் பாதிக்கப்பட்டு அதனால் விவசாயிகள் கண்டுமுதல் மிகக் குறைவாக ஏற்பட்டு இன்றையதினம் அறுவடையும் முடிந்து விட்டது. அறுவடை முடிந்ததற்குப் பிறகு இப்போது மாவட்டம் பூராவும் வரிவசூல் கெடுபிடி செய்துகொண்டிருக்கிறார்கள். இதுபற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்? அதோடு மட்டும் அல்லாமல் கடன் பூராவையும் ரத்து செய்வதாகவோ தள்ளுபடி செய்வதாகவோ அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். இந்த மாதம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கெடுபிடி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். சிலபலயிடங்களில் அறுவடை கூட செய்யக்கூடாது என்று தடுத்திருப்பது அரசுக்குத் தெரியுமா? என அறிய விரும்புகிறேன். இதன்மீது தக்க நடவடிக்கைகள் எடுத்து விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய முழு நடவடிக்கைகளையும் வேளாண்மைத் துறையினரும், தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரும் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். மஞ்சள் நோய் ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், இதுபற்றி ஆராய்ச்சி செய்ததில் 26,420 ஹெக்டேர் பரப்பளவில் இந்த பாதிப்பு காணப்பட்டதாகவும், பல பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டதால் 13,808 ஹெக்டேர் பரப்பளவில் இந்த மஞ்சள் நோய் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மிகுதியுள்ள 12,612 ஹெக்டேர் பரப்பளவு பயிர்கள் பாதிக்கப்பட்டு, மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாறான நிலங்களில் கண்டுமுதல் குறைந்திருந்தால், நிலவரி ரத்து செய்வதற்கும், வரி வஜா செய்யப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி மாவட்ட ஆட்சித்



தலைவரும், வருவாய்த் துறையினரும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நிவாரணம் அளிக்கப்படும்.

**(ஆ) நச்சுருவி நோயினால் விளைநிலங்கள் பாதிக்கப்படுவது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் பொ. உத்திராபதி, கு. சுப்பராயன், ஆ. சந்திரசேகரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்திலுள்ள மதுரை வடக்கு, நிலக்கோட்டை, மேலூர், உசிலம்பட்டி ஆகிய தாலுகாக்களில் ஒருபோக, இருபோக சாகுபடி நிலத்தில், 'துங்ரோவைரஸ்' என்ற நோய் தாக்கியுள்ளதால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மதுரை மாவட்டத்தில் மதுரை வடக்கு, நிலக்கோட்டை, மேலூர், ஆகிய தாலுகாக்களில் துங்ரோவைரஸ் என்னும் நோய் காணப்பட்டது.

இது ஒரு நச்சுருவி நோயாகும். துங்ரோவைரஸ் என்னும் நச்சுருவி நோயைப் பரப்பும் பச்சைத் தத்துப் பூச்சிகளை ஒழிப்பதன் மூலம் இந்நோயை கட்டுப்படுத்தலாமே தவிர, நச்சுருவை நேரடியாக அழிக்க முடியாது. இந்நிலையில் நோயைப் பரப்பும் தத்துப் பூச்சிகளை அழிப்பதில் தீவிரக் கவனம் மேற்கொள்ளப்பட்டது. முதல் போகத்தில் மதுரை வடக்கில் 179 கிராமங்களில் சுமார் 1980 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் நிலக்கோட்டை தாலுக்காவில் முதல் போகத்தில் 42 கிராமங்களில் சுமார் 3,000 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் இந்நோய் தாக்கியது.

இரண்டாம் போகத்தில் மதுரை வடக்கில் 179 கிராமங்களில் சுமார் 7,410 ஹெக்டேர் நிலப்பரப்பிலும், மேலூரில் 10 கிராமங்களில் சுமார் 1,538 ஹெக்டேர் பரப்பிலும் நிலக்கோட்டை தாலுக்காவில் 48 கிராமங்களில் சுமார் 4,000 ஹெக்டேர் பரப்பிலும் இந்நோய் தாக்குதல் காணப்பட்டது. உசிலம்பட்டி தாலுக்காவில் இந்நோயின் தாக்குதல் இல்லை. விளைச்சலில் ஏற்பட்ட இழப்பு விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| விளைச்சல் இழப்பு | ஒரு ஹெக்டேருக்கு | மொத்த இழப்பு-நெல் மெட்ரிக் டன்னில் |
| --- | --- | --- |
| முதல் போகம் | 2.37 மெ.டன். | 11.802 மெ.டன். |
| இரண்டாம் போகம் | 0.74 மெ.டன். | 9.781 மெ.டன். |
| | மொத்தம் | 21.583 மெ.டன். |

நாற்றங்காலில் கார்போபியூரான் 3 சத குருணை மருந்தும் நடவு வயலில் இருமுறை மருந்து தெளிக்க பாஸ்போமிடான் மற்றும் பென்தியான் மருந்தும் உபயோகப்படுத்தப்பட்டது. பயிர் பாதுகாப்பிற்காக ஒரு ஹெக்டேருக்கு பூச்சி மருந்து (நாற்றங்கால் மற்றும் நடவு வயலில் இருமுறை மருந்தடிக்க) ரூ. 225-ம், மருந்து தெளிக்கும் செலவுக்கான மானியத்திற்காக ரூ. 30-ம் ஆக மொத்தம் ரூ. 255 செலவு ஆனது. இதில் விவசாயிகள் செலுத்திய பங்கு தொகை ரூ. 112.50 ஆகும். (பூச்சி மருந்தில் 50 சதவிகிதம்) மீதமுள்ள அரசு மானியம் இத்திட்டத்தின் முதல் போகத்தில் 1,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூ. 2,16,110 செலவிலும், இரண்டாம் போகத்தில் நாற்றங்காலில் 252.8 ஹெக்டேர் பரப்பில் ரூ. 59,627 செலவிலும், நடவு வயலில் 3,050 ஹெக்டேர் பரப்பில் ரூ. 4,30,000 செலவிலும் மருந்தடிக்கப்பட்டது. பரந்த அளவில் மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதால் இந்நோய் மேலும் பரவுவதை தடுக்கப்பட்டதோடு மகசூல் இழப்பும் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. மருந்தடிக்கும் பணி முடியும் தருவாயில் இருக்கிறது. இம்மாதம் இத்திட்டப் பணி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரமான அறிக்கையை அமைச்சர் அவர்கள் இங்கே புள்ளிவிவரங்களோடு வைத்திருக்கிறார்கள். அதிலே





21,583 மெட்ரிக் டன் நெல் பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நோயைப் போக்குவதற்காக பூச்சி மருந்துகளும் அடிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது தமிழகத்திலே பெரும் பகுதிகளில், எல்லா மாவட்டங்களிலுமே இந்த நோயினால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. அறிக்கையும் வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது எல்லாம், இப்படி முழுமையாக பாதிக்கக்கூடிய விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற வகையில், பயிர் இன்சூரன்சு திட்டத்தை விரிவுபடுத்தி பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்த பாதிப்பு முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ளுமா? அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, இப்போது இயலாது. எதிர்காலத்தில் இதைப் பற்றிச் சிந்திக்கலாம்.

## 5. வரவு-செலவுத் திட்டம் 1985-86 பொது விவாதம்—(தொடர்ச்சி)

*** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட மன்றத்திற்கு நான்காவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கே வந்து நிற்கிறேன். இப்போது கூட பழனி தொகுதி மக்களுடைய அன்பாலும், அபிமானத்தாலும் இங்கே சில வார்த்தைகளை பேசுவதற்கு நிற்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட வரவு-செலவு திட்டத்தின் மீது ஒருசில கருத்துக்களைச், சொல்ல விரும்புகிறேன். இங்கே இந்த வரவு செலவு திட்டத்தில் ஆரம்பிக்கும்போதே, தன்னாட்சி, கூட்டாட்சி என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சி காலத்தில், மிகக் குறைந்த வருமானத்தை வைத்து பல பெரிய பெரிய திட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றி இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன்.

இந்த நேரத்திலே தன்னாட்சி, கூட்டாட்சி என்று பேசுவது அவ்வளவு நல்லதா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவேதான் நாம் மத்திய அரசை அணுகி, நம்முடைய வேலைகளை முடிப்பதற்கு நமக்கு எவ்வளவு பணம் அதிகமாக வேண்டுமோ அந்த அளவிற்குப் பணம் பெற்று நம்முடைய திட்டங்களை நிறைவேற்றினால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

இலங்கைப் பிரச்னையைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். முன்பு பிரிவினை, பிரிவினை என்று பேசிய காரணத்தினால் பர்மாவிலிருந்து தமிழர்கள் அகதிகளாக விரட்டப்பட்டதைப் போல, இலங்கையிலே நிம்மதியாக வாழ்க்கை நடத்திக் கொண்டு வந்தவர்கள், பிரிவினை, பிரிவினை என்று வெளிநாடுகளிலே பேசப்பட்ட காரணத்தால்தான், அவர்கள் அந்த நாட்டிலே வாழ முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, இன்றைக்கு மக்கள் கொன்று குவிக்கப்படக் கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, நாம் பேசுவதிலேகூட சற்று நிதானமாகப் பேச வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், உலகமெல்லாம் போற்றி புகழப் பெற்ற உத்தமத் தலைவர், பத்தரை மாற்றுத் தங்கம் என்று புகழப் பெற்ற பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் வாரிசாக வந்த, உலகத்திலே ஒரு சிறந்த வல்லரசியாகத் திகழ்ந்த நம்முடைய அருமைத் தலைவி, இந்திரா காந்தியினுடைய புதல்வனாக விளங்குகிற, அவர்கள் இரண்டு பேர்களுடைய சக்தியை ஒன்றாகப் படைத்த, மிகச் சிறிய வயதிலேயே மிகப் பிரமாண்டமான நாட்டுக்கு, மிகப் பெரிய நாட்டுக்குத் தலைவராகப் பொறுப்பேற்று இருக்கிறார்கள். நிச்சயமாக, பிரதமர் அவர்கள், யார் எங்கே பாதிக்கப் பட்டாலும், அது தமிழகத்து மக்களாக இருந்தாலும், இந்திய மக்களாக இருந்தாலும், எந்த நாட்டிலே பாதிக்கப்பட்டாலும் அதிலே நிதானமாக சற்றுக் கவனம் செலுத்தி, செய்து முடிப்பார்கள் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆகவே, அவர்களிடத்திலே நாம் விட்டு விடுகின்றோம். தமிழ் ஈழம், தமிழ் ஈழம், என்று பேசி ஆங்காங்கு போராட்டம்



136377 600 008.



நடத்துவதன் விளைவு, இலங்கையிலே உள்ள மக்களுக்கு இன்னும் கெடுதல் ஏற்படக் கூடுமோ என்று எங்களைப் போன்றவர்கள் அஞ்ச வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்னையில் மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து அந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, நாம் 20 அம்சத் திட்டத்தை மிக நல்ல முறையிலே செய்து வருகிறோம், அதற்கு என்னுடைய பாராட்டுக்கள். ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டம், என்.ஆர்.இ.பி. திட்டம், ஐ.ஆர்.டி.பி. திட்டம் போன்ற திட்டங்களை எல்லாம் நாம் மத்திய அரசு கொடுக்கும் பணத்தோடு, நாமும் பணம் ஒதுக்கி, நல்ல முறையிலே, சிறப்பான முறையிலே செய்து வருகிறோம் என்பதை நாங்கள் கண்கூடாகப் பார்க்கிறோம். அதற்காக என்னுடைய பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இந்தத் தன்னிறைவுத் திட்டம், என்.ஆர்.இ.பி. திட்டம் ஐ.ஆர்.டி.பி. திட்டம் போன்றவற்றின் மூலமாகப் போடக் கூடிய ரோடுகள் சேதப்பட்டிருக்கின்றன. தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, மக்களுக்குப் பிரச்னைகள் இல்லையென்ற அளவுக்குப் பல வசதிகளைச் செய்தார்கள். ஆனால், அதன் மூலமாக போடப்பட்ட ரோடுகள் எல்லாம் இன்றைக்கு 4, 5 ஆண்டுகள் கழித்து, திரும்பிப் பார்ப்போமானால், போடப் பட்ட அந்த ரோடுகள் எல்லாம் அழிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக, என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலமாக, ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலமாகப் போடப்பட்ட ரோடுகளுக்கெல்லாம் மராமத்துக்கென்று தனியாக நிதி ஒதுக்கினால்தான் அவற்றை நல்ல முறையிலே செய்ய முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக வீடு கட்டும் திட்டம். அத்திட்டத்தின்கீழ், சென்ற 2, 3 ஆண்டுகளாக, ஆண்டுக்கு 40,000 வீடுகளைக் கட்டி முடிப்பது என்று இலக்கை வைத்திருக்கிறோம். அது மிகவும் பாராட்டக்கூடியது தான். இருந்தாலுங்கூட அந்த வீடு கட்டும் திட்டத்திலே, ஏழை மக்கள், குறிப்பாக அரிசன மக்கள்,

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1985 மார்ச் 29

அதிகமாக கூரை வீடுகளை மாற்றி, ஒரு ஓட்டு வீடு வேண்டுமென்று கேட்கிறார்கள். முதலில், அந்த வீடுகளுக்கு, வீட்டிற்கு ரூ. 2,800 ஒதுக்கப்பட்டது, பிறகு ரூ. 3,800 ஒதுக்கப்பட்டது, பிறகு ரூ. 4,500 ஒதுக்கப்பட்டு, ரூ. 6,000 வழங்கப்பட்டது. பலர், ரூ. 2,800, ரூ. 3,800 என்று வாங்கி, கூரை வீடுகளைப் பிரித்துவிட்டு, ஓடு வீடு கட்ட ஆரம்பித்தார்கள். அப்படி வீட்டை ஆரம்பித்து, இன்றைக்கு முழுமையாக கட்டி முடிக்க முடியாமல் பாதியோடு நிற்கின்ற சூழ்நிலை மாநிலம் முழுவதும் இருக்கிறது. எனவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் தயவுசெய்து எங்கெங்கே எல்லாம் அந்த வீடுகள் கட்டி முடிக்கப்படாமலே இருக்கின்றனவோ, அங்கங்கே எல்லாம் அவர்களுக்கு ரூ. 4,800 கொடுத்து, அந்த அந்த வீடுகளைக் கட்டி முடிக்க வழிவகை செய்வோமானால் நாம் கொடுத்த கடனும் நமக்குத் திரும்ப வரும், நாம் எந்த இலக்கை அடைய வேண்டுமென்று இந்தத் திட்டத்தைப் போட்டோமோ அந்த இலக்கைப் பூர்த்தி செய்து விட முடியும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

நான் ஏற்கனவே சொன்னதைப் போல, தன்னிறைவுத் திட்டத்திலே பாலங்களைக் கட்டுவதிலே கூட கவனம் செலுத்த வேண்டும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சரிடத்திலே மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். என்னை எதற்காகத் தான் நிதியமைச்சர் பழனி தொகுதிக்கு அனுப்பினார் என்று

(முற்பகல் 9-40)

தெரியவில்லை. அந்தப் பழனி தொகுதி இவ்வளவு பின்தங்கிய தொகுதியாக இருக்குமென்று நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை. ரோடு கிடையாது, குடிதண்ணீர் கிடையாது. லைட் கிடையாது, பள்ளிக்கூடங்கள் கிடையாது என்கிற நிலையில் தான் பழனித் தொகுதி இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அந்தப் பழனித் தொகுதிக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அந்தத்தொகுதிக்கு முக்கியமாக இரண்டு, மூன்று பாலங்கள் தேவைப்படுகின்றன. பழனி—பழைய தாராபுரம் ரோடில் மானூர் அருகில் சண்முகா நதியில் ஒரு பாலம் கட்டப்பட வேண்டும். அந்தப் பாலம் முன்பே அடித்துக்



1985 மார்ச் 29] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

கொண்டு செல்லப்பட்டது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். அடுத்து இராஜாபுரம் To தாமரைகுளம் ரோட்டில் ஒரு பாலத்தையும் கட்ட வேண்டும். பார்ட்-2 ஸ்கீமில் சேர்த்தாவது இந்த இரண்டு பாலங்களையும் கட்டிக் கொடுத்தால் அந்த மக்களுக்கு பயனுள்ளதாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயம். விவசாயத்திற்கு நாம் பல நல்ல காரியங்களைச் செய்தாலும் கூட விவசாயிகள் இந்தத் துறையில் முன்னுக்கு வர முடியாமல் பாதிக்கப்பட்டு, நிலமிழந்த நிலைமையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். மழை ஓரளவிற்கு இருந்தாலும் கூட மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டு, மக்கள் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல், கிணற்றில் தண்ணீர் இல்லாமல், மின்சார வசதி இருந்தாலும் சரியாக மின்சாரம் கிடைக்காமல் இப்படிப் பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. மக்கள் மிகவும் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பழனி தொகுதி முழுமையும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பழனி யூனியன் தொப்பம்பட்டியில் 11 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. பழனி தொகுதி முழுவதிலும் வறட்சியால் பாதிக்கப்பட்டு குடிக்க கூட தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்தத் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து மக்களுக்கு என்னென்ன சலுகைகளைக் கொடுக்க முடியுமோ அவற்றை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது நாம் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கிறோம். கேள்வி நேரத்தில் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இங்கே பேசிய அங்கத்தினர்கள் கூட சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இரண்டு லட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. பிறகு 10 லட்சம் இணைப்புகள் கொடுக்கப் பட்டன என்று சொன்னார்கள். அவ்வாறு கொடுத்தது என்பது உண்மை தான். அதற்கு பின்னால் இரண்டு அரசாங்கம் இருந்தன. இதற்கு முன்பு இருந்த அரசாங்கமும், இப்போது நம்முடைய இந்த அரசாங்கமும் மின்சார உற்பத்திக்காக எந்த வழிவகையும் எடுத்துக் கொள்ளவில்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மின்சார உற்பத்தி செய்து வைத்திருந்து மின்சாரத்தை

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1985 மார்ச் 29

நாம் 10 லட்சம பம்ப் செட்டுகளுக்கு கொடுத்தோம் என்பது உண்மை. அதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திட்டங்களைத் தீட்டி, அவற்றை நிறைவேற்றி, மின்சாரத்தை உற்பத்தி செய்து வந்தார்கள். அதை நாம விநியோகம் செய்தோம் என்பதில் நாம் பெருமை அடைகிறோம், மகிழ்ச்சி அடைகிறோம். அந்த அளவிற்கு மின்சார விநியோகம் செய்து வந்தோம். நான் ஒரு விவசாயி. இப்போது பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் சரிவர கிடைப்பதில்லை. சில நேரங்களில் ஆட்களை அனுப்பி இரவு நேரங்களில் தண்ணீர் பாய்ச்ச சொன்னால் குறிப்பிட்ட நேரத்தில் மின்சாரம் கிடைப்பதில்லை. 10 மணி, 11 மணி என்று இரவு முழுவதும் தூங்காமல் காத்திருந்தும் மின்சாரம் வரவில்லை. பின் 3.20 மணிக்கு மின்சாரம் வந்தது. அரை மணி நேரம் இருந்தது. பிறகு போய்விட்டது என்று சொல்கிறார்கள். இப்படி நிச்சயமில்லாமல் கரண்ட் வருவதால் காயில் பர்ன் ஆகிவிடுகிறது. 5 ஹார்ஸ் பவர் காயில் பர்ன் ஆகிவிட்டால் 700 ரூபாய் செலவு செய்து சரி செய்ய வேண்டியிருக்கிறது. 3 ஹார்ஸ் பவர் காயில் பர்ன் ஆகிவிட்டால் 500 ரூபாய் செலவு செய்து சரி செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பதை இரவு நேரத்தை முழுமையாக மாற்றிவிட்டு பகல் நேரத்தில் 10-லிருந்து 2 மணி வரைக்கும் நான்கு மணி நேரமாகிலும் நிச்சயமாக கரண்ட் வருமென்ற நிலைமையை செய்து கொடுத்தால் விவசாயிகள் இந்த அரசை மிகவும் போற்றுவார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பழனி தொகுதியில் சண்முகா நதியில் நீர் மின் நிலையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று பல ஆண்டுகளாக திட்டமிருக்கிறது. இந்தத் திட்டம் இன்றைக்கு எப்படியோ கைவிடப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணமென்று இலாக்காவிலே கேட்டால் அவர்கள் சண்முகா நதித் தண்ணீர் அமராவதியில் விழுகிறது; அமராவதி தண்ணீர் காவேரியில் விழுகிறது; காவேரி தண்ணீருக்கு டிஸ்பியூட் இருப்பதால் திட்டம் கைவிடப்பட்டது என்று சொல்கிறார்கள். இது நியாயம் இல்லை. எங்கோ உற்பத்தியாகிற தண்ணீர் எங்கோ விழுகிறது. அதற்கு ஒரு காரணத்தைச் சொல்லி இந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பது சரியல்ல......



1985 மார்ச் 29]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தவரையில் மத்திய அரசு அனுமதி தரவில்லை என்பது தான் இதில் உள்ள கருத்து.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** என்ன காரணம் சொன்னாலும் இந்த இலாக்கா என்னுடைய அருமை தம்பி திறமையான அமைச்சர் காளிமுத்து அவர்கள் கையில் இருக்கிறது. அவர்கள் மத்திய அரசிடம் சொல்லி திட்டத்தை வாங்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மின்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலேயே பதில் சொல்லி இருக்கிறார்கள். பலமுறை மத்திய அரசுக்கு எழுதியும் அந்த அனுமதி கிடைக்கவில்லை.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** அணுகுகிற முறையில்தான் எதுவும் இருக்கிறது. அந்த முறையோடு அணுகினால் நிச்சயமாக நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு தடை சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த முறையில் அணுகவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** இதைப் பெற்றுத் தருவதற்கு காங்கிரஸ் கட்சியும் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** நாங்களும் உங்களோடு சேர்ந்து இருக்கிறோம். கட்டாயமாக எல்லோரும் சேர்ந்து இந்தத் திட்டத்தை வாங்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளலாம்.

ஆகவே இந்த மின்சாரத்தை தேவையான அளவுக்கு உற்பத்தி செய்வதற்கு உரிய வேலைகளை நாம் ஆரம்பிக்க வேண்டும். அதற்காகவும் அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கசிவுநீர் குட்டைகள் அமைக்கும் திட்டம் இருக்கிறது. விவசாயக் காரியங்களுக்காக நாம் சிறு சிறு திட்டங்கள் போட்டிருக்கிறோம். ஏற்கெனவே நாம் பல அணைகள் கட்டியிருக்கிறோம். உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன். பாலாறு—பொரந்தலாறு திட்டம் இருக்கிறது.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [23 மார்ச் 1985

இந்தத் திட்டத்தில் வரக்கூடிய தண்ணீர் வீணாகக் கூடாது என்பதற்காக 39 கிலோமீட்டர் தூரத்திற்கு லைனிங் ஓர்க் செய்ய வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு லைனிங் ஓர்க் செய்யும் திட்டம் தான் இருக்கிறது. இப்படி சிறுக, சிறுக ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தால் ஒரு அமைச்சரால் முடியாது, பல அமைச்சர்கள் வரவேண்டும். சிறு சிறு அளவிலே இப்படி நிறைவேற்றினால் எந்த அளவுக்கு எதிர்பார்த்த பயன் ஏற்படும் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 39 கிலோ மீட்டர் தூரத்திற்கு லைனிங் ஓர்க் செய்வதாக முடிவுசெய்து, அதிலே இந்த ஆண்டுக்கு ஒரு கிலோமீட்டர் மட்டும் எடுத்துக்கொண்டால் அதனால் எவ்வளவு தண்ணீரை மிச்சப்படுத்த முடியும்? ஒரு பயனும் இருக்காது. அந்த 39 கிலோமீட்டர் தூரத்திற்கும், லைனிங் ஓர்க் செய்தால் கிட்டத்தட்ட 1,500 அல்லது 2,000 ஏக்கர் புதிதாக பாசனம் பெறும் என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கி றார்கள். ஆகவே அந்த 39 கிலோ மீட்டர் தூரத்திற்கும் லைனிங் ஓர்க் செய்து கொடுத்தால் அதனால் கூடுதலாகக் கிடைக்கும் தண்ணீரைக்கொண்டு ஓரளவுக்கு வறட்சியைப் போக்க முடியும், அது அந்தப் பகுதி மக்களுக்குச் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. எங்கெங்கே எல்லாம் மழைத்தண்ணீர் அதிகமாக வருகிறதோ அதை வீணாக்காமல், அந்த தண்ணீரை தேக்கி வைக்க கசிவு நீர் குட்டைகளை நிறைய ஆரம்பிக்க வேண்டும்.

அடுத்தப்படியாக இன்றைக்கு விவசாயத்தில் பல கஷ்டங்கள் உள்ளன. அவர்களுடைய கஷ்டத்தை ஓரளவுக்கு குறைக்க 102 கோடிக்கு மேல் பணம் ஒதுக்கி ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை அமைக்கத் திட்டம் போட்டிருக்கிறோம். திட்டம் போடுவதை நிறைவேற்ற வேண்டும். வத்தலக்குண்டு என்ற இடத்தில் 7, 8 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு விற்பனைக் கூடம் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அந்த விற்பனைக் கூடம் இதுவரையில் திறந்துவைக்கப்படவில்லை. விவசாயிகளின் விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்க வேண்டும். அவர்களுக்கு பயன் கிடைக்க வேண்டும் என்பதற் காகத்தான் விற்பனைக் கூடங்களைக் கட்ட திட்டமிட்டுள்ளோம்.



1985 மார்ச் 29] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

இடங்கள், சந்தை கூடும் இடங்களில் கட்ட வேண்டும். அப்படிப் பட்ட இடங்களில் கட்டினால்தான் விளைபொருள்களைச் சுலபமாகக் கொண்டுவந்து அங்கே வைத்து, நல்ல விலைக்கு விற்க வசதி ஏற்படும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. 600 குடும்பங்களுக்கு ஒரு ரேஷன் கடை வைக்க இலக்கு வைத்திருக்கிறோம். 600 குடும்பங்களுக்கு ஒரு ரேஷன் கடை என்று வைக்கிற அதேநேரத்தில் கிராம மக்களுக்கு நல்ல அரிசி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது 20 கிலோ அரிசி கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இருந்த போதிலும் கிராம மக்களுக்கு அது முறையாகக் கிடைக்கவில்லை. இப்போது கொடுப்பதையாவது சரியான முறையில் ஒழுங்காக எல்லா மக்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

அது மட்டுமல்ல. விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். சென்ற சட்டசபைக் கூட்டத்தில்கூட நான் ஒரு பிரச்சனையைச் சொல்லியிருக்கிறேன். மதுரையி லிருந்து சென்னைக்கு ப்ளேனில் வரக்கூடிய நிலைமை ஏற்பட் டால் தெரியும். வழியில் இலட்சக்கணக்கான ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது. இப்போது அந்த நிலம் விவசாயத்திற்கு ஏற்றதாக இல்லை. அந்த நிலங்களை எல்லாம் யாரையும் கேட்காமல், எந்த விவசாயியையும் கேட்காமல், யார் நிலம் என்று கேட்காமல், சர்வே செய்து, எந்த அளவுக்குத் தண்ணீர் வசதி, கிரவுண்ட் வாட்டர் வசதி இருக்கிறது என்பதை 'வாட்டர் டிவைனர்' வைத்தாவது கண்டறிந்து, அங்கே பெரிய ராட்சசக் கிணறுகளை வெட்டி, 30 ஏக்கருக்கு அல்லது 40 ஏக்கருக்கு ஒரு கிணறு என்று வெட்டி, நீர்ப்பாசனம் செய்து கொடுத்தால் சாலச்சிறந்ததாக இருக்கும். ஏற்பட்ட செலவுகளுக்கு 'வாட்டர் செஸ்' வசூல் செய்து கொள்ளலாம். அந்த வகையில் ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டால், கூட்டுறவுத் துறையிலே பால் பண்ணைகள் நிறைய அமைத்திருக்கிறோம். ஐ. ஆர். டி. பி. திட்டம் [illegible] நிறைய மக்களுக்கு பயனளிப் பதாக இருக்கிறது. அதேபோல, நம்முடைய நிலவள வங்கி [illegible]

நடைமுறை எப்படி இருக்கிறது என்பதுபற்றி நான் பல மகஜர்கள் பெற்று, வைத்திருக்கிறேன். நிலவள வங்கியில் நானே கடன் வாங்கியிருக்கிறேன். 1979 ஆம் ஆண்டு மார்ச் 26-ந் தேதி 14,900 ரூபாய் திராட்சை போட கடன் வாங்கினேன். இரண்டு ஆண்டுகள் தவணை கட்ட வேண்டியதில்லை என்று சொன்னார்கள். அதன் பிறகு இதுவரையில் நான் அசலாகக் கட்டியது 9,110 ரூபாய்; வட்டி 7,035 ரூபாய், அபராத வட்டி 346 ரூபாய். ஒரு மாதம், 15 நாள் என்று சில நேரங்களில் காலம் கடந்துவிடுவது உண்டு. அதற்காகக் கட்டிய அபராத வட்டி 346 ரூபாய். ஆக மொத்தம் 16,491 ரூபாய் கட்டியிருக்கிறேன்.

(முற்பகல் 9-50)

ஆக மொத்தம் 16,491 கட்டப்பட்டு இருக்கிறது. அப்படியும் இன்னும் அசல் 5,739 ரூபாய் என்று போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், நான் சின்ன வயசிலே கிளாசிலே படிக்கும்போது வாத்தியார் சொல்வார், காசுக்கு காசு வட்டி என்று, அந்த மாதிரி இருக்கிறது. இந்த மாதிரியான நிலவள வங்கி மூலமாக சாதாரண மக்கள், ஏழை மக்கள் 10 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினால், 10 ஆயிரம் ரூபாய் வட்டி கட்ட வேண்டிய நிலைமையிருக்கிறது, இப்படிப்பட்ட நிலைமை நல்லதல்ல. எனவே அமைச்சர் அவர்கள் இதைச் சற்று சிந்தித்துப் பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த வட்டி எப்படிப் போடப்படுகிறது என்று தெரியவில்லை. இது கூட்டு வட்டியா அல்லது தொடர் வட்டியா என்பதை எங்களைப் போன்றவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த வட்டியை எல்லாம் முழுமையாக தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு எல்லாம் வேண்டும் என்று சொல்லவில்லை. என் என்றால் எனக்குக் கொஞ்சம் நிலம் இருக்கிறது. அதனால் நான் கேட்டால் நன்றாக இருக்காது. ஆகையினாலே சாதாரண மக்களுக்கு, 5 ஏக்கருக்குக் கீழே உள்ள மக்களுக்கு அந்த வட்டியைத் தள்ளுபடி செய்து அந்த அசலைக் கூட ஐந்து ஆண்டுகள் கட்டுவதாக இருந்தால் 10 ஆண்டுக்காலம் வரையிலும் அதை வருகின்ற வகையில் வழி செய்தால், அது [illegible]





[illegible] இருக்கும். விவசாயிகளுக்கும் நாம் நல்ல ஒரு காரியத்தைச் செய்தவர்களாவோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் இப்போது கட்டிய அசல், வட்டி, அபராத வட்டி என்று இவைகளை எல்லாம் கணக்கில் சேர்த்தால், கிட்டத்தட்ட 30 ஆயிரம் ரூபாய் வந்துவிடும்போல் தெரிகிறது. எனவே இந்த நிலைமை எல்லாம் இல்லாமல், இதையெல்லாம் கவனித்து, என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழிற்சாலைகள். 1980 ஆம் ஆண்டு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், மதுரை மாவட்டத்திலே ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே ஒரு தொழில் மையம் ஏற்படுத்த வேண்டும் என்று வந்து பார்த்தார்கள். அப்போது நாங்கள் பல இடங்களைக் காட்டினோம். ஒரு இடத்தைப் பார்த்து—செம்பட்டி அருகில் அந்த இடம் நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு தேவைப்பட்ட அதிகாரிகளை எல்லாம் போஸ்ட் செய்துவிட்டார்கள். ஆனால் 2 ஆண்டுக்காலத்திற்கு பிறகு அங்கே கிரவுண்ட் வாட்டர் இல்லை, 80 சதவீதம் தண்ணீர்தான் இருக்கிறது என்று சொல்லி, இப்போது திரும்பவும் வேறு இடத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். நாம் போடக்கூடிய திட்டங்களை எல்லாம் அந்தந்த ஆண்டுக்குள்ளேயே நிறைவேற்றுவதற்கு வழி வகை செய்தால்தான் நாம் எந்த இலக்கை அடைய வேண்டும் என்று நினைக்கிறோமோ, எந்த மக்கள் பயனடைய வேண்டுமென்று விரும்புகிறோமா அந்த மக்கள் பயனடைய முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே மதுரை மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தியிருக்கின்ற, ஏற்படுத்தக் கூடிய அந்தத் தொழில் மையத்தை விரைவிலே கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு நிறையப் பெண்கள் படித்து விட்டு எம்.ஏ., பி.எட்., பி.ஏ.பி.எட்., போன்ற படிப்புகளைப் படித்துவிட்டு ஆயிரக்கணக்கான பெண்கள் வருகிறார்கள். அது மாதிரி ஆண்களும் வருகிறார்கள். அப்படி அவர்கள் வருகிற போது நான் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அவர்களுக்காகத்தான் 20 அம்சத் திட்டத்தில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தை உருவாக்கி, அதற்கு நம்முடைய அரசும், மத்திய அரசும் அதன் மூலமாக எவ்வளவோ காரியங்களைச் செய்து

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1985 மார்ச் 29

கொண்டு வருகின்றன. அப்படி இருந்தும் பேங்கிலே சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கு கடன் வாங்கச் சென்றால், அவர்கள் சரியாகக் கொடுப்பதில்லை. பிளாக்கிலேயிருந்து சிபாரிசு செய்கிறார்கள், நாங்களும் சிபாரிசு செய்கிறோம். அப்படிச் செய்தும்கூட, பேங்கிலே உள்ளவர் என்ன உங்களுக்குக் கடன், யார் சட்டம் போட்டது என்று பேசக்கூடிய நிலைமை இருக்கிறது. பணத்தை அவர்கள் கையிலேயிருந்து கொடுக்கவில்லை. இந்திய அரசாங்கம் உத்தரவு போடுகிறது, மாநில அரசாங்கம் உத்திரவு போடுகிறது. எனவே அரசாங்கம் ஜில்லாக் கலெக்டர்கள் மூலமாக அந்த பேங்கிலே உள்ள மேனேஜர்களை அழைத்துப் பேசி, அவர்களுக்கு சரியான முறையிலே இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து. மூலப்பொருள்கள் எங்கெங்கே கிடைக்கிறதோ, அங்கெல்லாம் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும். உதாரணமாக வீடு கட்டும் திட்டம் இருக்கிறது, அதற்கு செங்கற்கள் தேவைப்படுகின்றன. எனவே எங்கே மண் சிறப்பாக இருக்கிறது, எங்கே கல் அறுத்தால் நல்லது என்பதை ஆராய்ந்து பார்த்து தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால், லட்சக்கணக்கான மக்கள் பயன் பெறும் வகையில் தொழில்களை ஆரம்பிக்க ஏதுவாக இருக்கும். எனவே மூலப்பொருள்களை வைத்து நாம் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால், அது எவ்வளவோ பேர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பழனி தொகுதியில் ஆயக்குடியில் கொய்யாப் பழங்கள் அதிக அளவிலே உற்பத்தியாகின்றன. அங்கே ஆண்களும் பெண்களும் ஆயிரக்கணக்கில் வேலை செய்கிறார்கள். நான் கூட சென்று பார்த்தேன். அந்த ரோடு பக்கம் போய்ப் பார்த்தால், கிட்டத்தட்ட 5 ஆயிரம் கூடை ஒரு நாளைக்கு வருகிறது. அவர்கள் எல்லாம் காலை 3 மணிக்கே சென்றுவிடுகிறார்கள். அங்கே உள்ள மலைஅடிவாரத்திலே இருந்து பழங்களைக் கொண்டு வந்து அவர்கள் அதை விற்பனை செய்கிறார்கள். அப்படி அதிக அளவிலே உற்பத்தியாகக்கூடிய அந்த இடத்தில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து, இவைகளைக்



1985 மார்ச் 29] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

கொண்டு ஒரு ஜாம் தயார் செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி, அதை அன்னிய நாடுகளுக்கு அனுப்பினால் நமக்கு அன்னியச் செலாவணியும் கிடைக்கும், அதனால் நூற்றுக் கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். அதோடு உற்பத்தி செய்பவர்களுக்கும் பலன் கிடைக்கும், அவர்களுக்கு நல்ல வருமானமும் கிடைக்கும்.

அடுத்து என்னுடைய பழைய தொகுதி — . . .

அடுத்து என்னுடைய பழைய தொகுதி — இந்தத்தடவை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள்தான் என்னை பழனி தொகுதியில் போய் நிற்கச் சொன்னார்கள். அதனால்தான் எனக்கு பல சிரமங்கள், சூழ்நிலைகள் ஏற்பட்டு நான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். மக்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள். எனக்குத்தான் பல சூழ்நிலைகள் அதனால் ஏற்பட்டது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதும் அவருடைய உறவினர் ஒருவர்தான் அங்கே அவருடைய பழைய தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அதனால் பிரச்சனை இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே போய் நான் சொன்னபடி நின்றதினால்தான் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாம் பழனி தொகுதியில் போய் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். ஒருவேளை நாவலர் அவர்கள் பால் இருக்குது, பழம் இருக்குது பழனி மலையிலே என்பதனால்தான் அங்கே போய் நிற்கச் சொன்னார்களோ என்று அறியவிரும்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: ஆமாம். என்னுடைய பழைய தொகுதியிலே, நான் பலமுறை சொல்லியிருக்கிறேன், திராட்சைத் தோட்டங்கள் நிறைய இருக்கின்றன. நான் கூட

திராட்சை விவசாயிதான். கடன் வாங்கி திராட்சை பயிர் செய்திருக்கிறேன். அதையும் இங்கே பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த திராட்சை விவசாயி அங்கே கஷ்டப் பட்டுக் கொண்டேயிருக்கிறான். காரணம் இங்கே போய் திராட்சையின் விலையைக் கேட்டுப் பாருங்கள், கிலோ 8 ரூபாய் சொல்லுகிறார்கள். ஆனால் அங்கே அந்த ஏழை விவசாயி விற்கும் விலை 2 ரூபாய் தான். அதைக்கூட இரண்டு ரூபாயா என்று தான் அங்கே வாங்கும்போது கேட்கிறார்கள். அதுவும் சிறு, சிறு விவசாயி. சின்ன சின்னதாக 30 சென்ட், 40 சென்ட் என்று வைத்திருக்கும் விவசாயிதான் திராட்சையைப் பயிரிடுகிறான். ஆகவே, அவர்களுக்கு உதவும் பொருட்டு, அங்கே ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பித்தால், விவசாயிக்கும் மொத்தத்தில் நல்ல லாபம் கிடைக்க வழி ஏற்படும், அங்கேயுள்ள 100, 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்க வழி உண்டாகும். இப்போது அந்த என்னுடைய பழைய தொகுதியில் தம்பி அ. பாலுச்சாமி அவர்கள் நின்று ஜெயித்திருக்கிறார்கள். இருந்தாலும், இது நான் முன்னமேயே எடுத்துச் சொன்ன விஷயம்; இதை அந்தப் பகுதி மக்களுக்குச் செய்துக் கொடுத்தால் மிகவும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்ற வகையில் இப்போது அதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

அடுத்து நாம் சுதந்திரம் அடைந்து 37 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இந்த 37 ஆண்டுக்காலத்திலும் கூட, நாம் குடிதண்ணீர் கொடுப்பதில் நிறைவு பெற்று, குடிதண்ணீர் பிரச்சனையே இல்லாமல் அதை தீர்த்திருக்கிறோமா என்று பார்க்கும் போது நமக்கு அது ஓரளவு மனவருத்தத்தைத்தான் தருகிறது. இப்போது அந்த குடிதண்ணீர் வழங்கு துறை நம்முடைய மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்களுடைய பொறுப்பிலே வந்திருக்கிற காரணத்தால், அதைச் சற்று அவர்கள் கவனித்து செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நாம் இப்போது தன்னிறைவுத் திட்டத்தை எல்லா இடங்களிலும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாய்மார்களிடத்தில்





மிகுந்த பரிவு காட்டுபவர்கள். தாய்மார்கள் தங்கள் முதலமைச்சர் அவர்களை நம்பியிருப்பவர்கள். வளத்திற்காக முதலமைச்சரிடத்தில் மிகுந்த மரியாதையும் தாய்மார்களும் வைத்திருக்கிறார்கள். அதன் விளைவாகத்தான் மதிப்பும் ஓட்டுகளை அள்ளி அள்ளிக் கடந்த தேர்தலில் தங்கள் மூன்றாவது முறையாக இந்த ஆட்சி கொட்டியிருக்கின்றார்கள். அந்த தாய்மார்கள் படும் குடிநீர் வருவதற்கு—அப்படிப்பட்ட தீர்க்க இந்த அரசு முயல கஷ்டத்தை ஓரளவிற்காவது 15 கிராமங்களை இணைத்து வேண்டும். 10 கிராமங்களை, ஒரு திட்டத்தைப் போட்டு காம்பிரஹென்சிவ் ஸ்கீமாகக் கூட ஒரு திட்டத்தைப் போட்டு அந்த குடிதண்ணீர் பிரச்னையை தீர்க்க முயல வேண்டும். இது பற்றி அமைச்சரிடம் பேச வேண்டும் என்று நான் அவர் அறைக்குச் சென்றிருந்தபோது, அவர் அங்கு இல்லை. அவருடைய பி. ஏ. இடத்தில் அதற்கான மனுவைக் கொடுத்து விட்டு வந்தேன். அதிலும் குறிப்பாக நெய்க்காரன்பட்டியிலே இருக்கும் ஒரு பள்ளியிலே—ஹைஸ்கூல் அது—அந்தப்பள்ளியிலே குடிக்கக் கூட பிள்ளைகளுக்கு தண்ணீர் இல்லை. அங்கே நான் ஓரிரண்டு முறை போயிருக்கிறேன். போனபோது எல்லாம் அந்தப் பிள்ளைகள் என்னை வந்து சூழ்ந்து கொண்டார்கள். எங்களுக்கு குடிப்பதற்கு நீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டார்கள். எனக்கே இப்போது நேரம் சரியில்லை, சற்று தாமதமாகத்தான் இருக்கிறது; கண்டிப்பாக உங்கள் குடிதண்ணீர் பிரச்னையை முடித்து வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். ஆகையினால் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், எந்த ஊரிலானாலும் பள்ளிப் பிள்ளைகளுக்கு குடிதண்ணீர் இல்லை என்றால், அதற்குச் சற்று முன்னுரிமை கொடுத்து அந்தப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பாப்பம்பட்டியில் குடிநீர் கொண்டு வரும் திட்டத்திற்காக அவர்கள் பணம் கட்டி எவ்வளவோ ஆண்டுகள் முடிந்து விட்டன. 72-லே கட்டினார்கள். இதுவரையில் அவர்களுடைய குடிநீர் பிரச்னை தீர்க்கப்படவில்லை. அதேபோல ஆயக்குடியிலே குடிநீர் பிரச்னையை தீர்ப்பதற்காக, ஓவர் ஹெட் டேங்கெல்லாம் கூட அரசு கட்டியிருக்கிறது. ஆனால் இன்னும்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1985 மார்ச் 29

இணைப்பின் மூலமாக கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை, அதிலே தாமதம் ஏற்படுகிறது. அங்கேயுள்ள எதிர்க்கட்சியினர் இதற்காக போராட்டம் நடத்த வேண்டும் என்று அந்த மக்களை தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒரு போராட்டம் நடந்து அதில் பொது மக்கள் கலந்து கொண்டால், இந்த பிரச்னையில் நான் தலையிட்டு உங்களுக்கு செய்து கொடுக்க மாட்டேன் என்று நான் கூறியிருப்பதால் அவர்கள் ஓரளவு கட்டப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, பாபம்பட்டி, ஆயக்குடி ஆகிய இரண்டு இடங்களிலும் இந்த குடிதண்ணீர் கொடுப்பதற்கு, அதுவும் வரும் தமிழ் புத்தாண்டு தினத்திலேயே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்று நான் அவர்களிடம் சொல்லிவிட்டு வந்திருக் கிறேன். ஆகவே அதை உடனடியாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்வி. உழைப்பவனுக்குத்தான் இனிமேல் வாழ்வு உண்டு என்ற அடிப்படையில் தொழிற் கல்வியை கொண்டு வந்திருக்கிறீர்கள். அது பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான். இருந்தாலும் கூட இந்தக் கல்வித் துறையிலே ஏமாற்றுக்காரர்கள், ஏமாற்றிப் பிழைப்பவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அதை யெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போ தெல்லாம் சில தனியார்கள் கிராமப்புறங்களில் கூட ஆங்காங்கு ஆங்கிலக் கல்விப் பள்ளிகளை திறந்து 5 ஆம் கிளாஸ் வரையில், நான் ரெக்கக்னைஸ்டு என்று வைத்து வருகிறார்கள். ஆனால், நல்ல ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்றால், இடம் கிடைக்காத நிலைமைதான் இருக்கிறது. ஆகையினால், எங்கெங்கெல்லாம் ஆங்கிலப் பள்ளிகள் வைக்க வேண்டும் என்று கேட்கிறார்களோ, அவர்களிடம், அதற்கான பணத்தை வாங்கிக் கொண்டு—ஒரு லட்சம் அனுமதிக்காக அவர்கள் கட்ட வேண்டும் என்று நினைக்கிறேன்—அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு, அவர்களுக்கு அனுமதி அளித்து, அவைகளை ரெக்கக்னைஸ்டு பள்ளிகளாகவே செயல்படும் வகையில் வைக்கலாம்.



1985 மார்ச் 29] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

(முற்பகல் 10-00)

ஆகவே அமைச்சர் வீட்டில் உள்ள குழந்தைகள் ஆங்கிலப் பள்ளியில் படிக்கிறார்கள். அதேபோன்று சட்டமன்ற உறுப் பினர்களுடைய குழந்தைகளும் ஆங்கிலப் பள்ளியில் படிக் கிறார்கள். அரசு உத்தியோகத்தில் உள்ளவர்களின் குழந்தைகள் ஆங்கிலப் பள்ளியில் படிக்கிறார்கள். சாதாரண ஏழை வீட்டுப் பிள்ளைகள் ஆங்கிலப் பள்ளியில் படிக்க வேண்டுமென்றால் அதற்கான வழி இல்லாமல் இருக்கிறது. அது நல்லதல்ல. இந்தி படிக்க விரும்புகின்றவர்களுக்கும் நாம் உதவி புரிய வேண்டும். பிற மொழிகளுக்கு உதவி செய்வதைப்போல், அதை படிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது சர்க்கரை. சர்க்கரை ஆலைகள் 10 ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்பட் டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதற்காக நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். சென்றமுறை டிசம்பர் மாதம் 1983-ம் ஆண்டு பாண்டியராசன் சர்க்கரை ஆலையை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அதை அரசாங்கம் எடுத்து இருக்கிறது. இன்றைக்கு அந்த மில்லின் வளர்ச்சிக்காக ரூ. 3 கோடிக்கு மேல் பணத்தை ஒதுக்கி, அந்த மில்லிலே, அந்த மெஷினரி எல்லாம் நல்ல முறையிலே வேலை செய்யக்கூடிய அளவிற்கு செய்து ஒரு நாளைக்கு 1,600 டன்கள் அரைக்கக்கூடிய நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. அதற்கு பாராட்டு தெரிவித்து நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நானும் ஒரு கரும்பு விவசாயி என்ற முறையிலே, அந்த கரும்பை வெட்டி அந்த மில்லுக்கு அனுப்பினேன். விவசாயம் செய்வதற்கு பணம் இல்லாமல் முன்னாள் மேனேஜ்மென்ட் மூலமாக வங்கியிலிருந்து பணத்தை கடன் வாங்கினோம். எங்களுடைய கரும்பை வெட்டி மில்லுக்கு அனுப்பியவுடன், எவ்வளவு பணம் கடன் வாங்கினோமோ, அவ்வளவு பணத்தையும் வட்டியும் முதலுமாக பிடித்துக்கொண்டு விட்டார்கள். அந்தப் பணத்தை அவர்கள் வங்கிக்கு கட்டவில்லை. கட்டவில்லை என்பதற்கான ரிக்கார்டு இருக்கிறது.

ஒரு கோடிக்கு மேல் அவர்களே சாப்பிட்டுவிட்டார்கள். இந்த நிலைமையை மாற்றி, அந்த விவசாயிகள் கரும்பிற்கு எவ்வளவு பணம் கடன் வாங்கினார்களோ அவற்றை அரசாங்கமே கொடுத்து உதவுவதற்கான வழிவகை செய்ய வேண்டும். இதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. நீங்கள் கமிஷன் போட்டிருக்கிறீர்கள். அவர்களுக்கு மூலம் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்து, விவசாயிகளிடமிருந்து பாங்கிற்காக பிடித்தம் செய்த பணத்தை அரசாங்கமே கொடுத்து உதவ வேண்டும்.

முன்னாள் மானேஜிங் டைரக்டர் இரவோடு இரவாக 55,000 சர்க்கரை மூட்டைகளை கடத்திச் செல்வதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்தார்கள். ஆயிரக்கணக்கான விவசாயிகள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, அந்த இடத்தில் நின்று கொண்டு அவற்றை எடுக்க விடாமல் தடுத்தார்கள். விவசாயிகள் தடுக்காமல் இருந்திருந்தால் சர்க்கரை 55,000 மூட்டையும் போயிருக்கும். அரசாங்கம் நிர்ணயம் செய்த ஒரு டன்னுக்கு ரூ. 25.30 பைசா கூடுதல் விலை கொடுக்க வேண்டும். அவற்றை கொடுத்து அந்த கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது ஹரிஜன மக்கள். சென்ற ஆண்டு ஹரிஜன மக்களுக்கு தனியாக ஒரு ஸ்டேட் ஹரிஜன் வெல்பேர் கமிட்டி போடுகிறோம் என்றார்கள். சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனை செய்துகொடுக்கவில்லை. கிராமப்புறத்தில் விவரம் தெரிந்தவர்கள் ஏன் நமக்கு மட்டும் கமிட்டி போடவில்லை என்று கேட்டார்கள். போடுவார்கள் என்று நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஸ்டேட் ஹரிஜன் வெல்பேர் கமிட்டி சென்றமுறை போடவில்லை. இந்த முறையாவது போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கான திட்டங்களைத் தீட்டும்போது, அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது 15 அடி நீளம் அகலம் என்று கட்டிக் கொடுக்கிறோம். நாம் கொடுக்கும் இந்த அளவு மனையடி சாஸ்திரத்தின்படி சரியில்லை என்று சொல்கிறார்கள். அதிகாரிகளை பார்க்கும்போதெல்லாம் நாங்கள் ஐயா, சாமி இப்படி



வைக்காதீர்கள் என்று நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம். மேலும் நாம் வீடு கட்டிக்கொள்வதற்காக ரூ. 6,000 கொடுக்கிறோம். அவர்கள் மேற்கொண்டு விரிவாக வீடுகளைக் கட்டிக் கொள்வதனால் அவற்றைச் சட்டப்பிரச்சனையாக எடுக்காமல் விட்டுவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பழனி தொகுதியிலே ஹரிஜனங்களில் பல பிரிவுகள் இருக்கின்றன. அவற்றில் அருந்ததியினர் ஷெட்யூல்ட் ட்ரைப்ஸை விட மிகவும் மோசமாக இருக்கிறார்கள். வீடு கிடையாது. குடிக்க தண்ணீர் கிடையாது. எனவே அவர்களுக்கும் ஏதாவது புதிய திட்டங்களைத் தீட்டி. வீடுகள் கட்டிக்கொடுப்பது, குடிநீர் அளிப்பது, குழந்தைகளுக்கு படிப்பு வசதி மற்றும் தொழிற்சாலை அமைப்பது போன்றவற்றைச் செய்தால் அவர்கள் முன்னுக்கு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83-ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டம்மீது பேசுகின்ற நல்வாய்ப்பினைக் கொடுத்தமைக்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்பு தூத்துக்குடி தொகுதியிலிருந்து இரண்டாவது முறையாக—கடந்த முறை 1980-ஆம் ஆண்டு 14 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது—இந்த முறை 22 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெறச் செய்த தூத்துக்குடி தொகுதி மக்களுக்கும் என் இதய தெய்வம் தெய்வ மகன் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லி இந்த அறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல எண்ணுகிறேன்.

மூன்றாவது முறையாக டாக்டர் புரட்சித் தலைவரின் ஆட்சியை அமைப்பதற்கு மக்கள் ஆர்வம் காட்டியிருக்கிறார்கள் என்றால் அரசின்மீது அவர்களுக்கு அசைக்கமுடியாத ஒரு நம்பிக்கை ஏற்பட்ட காரணத்தினால், அவர்கள் நல்லது

செய்வார்கள், பாதுகாப்பு கொடுப்பார்கள் என்று அவர்கள் கொண்டிருக்கிற நம்பிக்கைக்குப் பங்கம் வராத அளவுக்கு தமிழக அரசு அதனை நடத்திச் செல்கிற தானைத் தலைவர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசோச்சுகிற காரணத்தினால் தான் மக்கள் மீண்டும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

வருங்கால சரித்திர ஆசிரியர்கள் நிச்சயமாக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரின் ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடும் போது அவர்கள் பொற்காலம் சமைத்திருக்கிறார்கள் என்ற நிகழ்ச்சியை ஈட்டி வருகிற நூற்றாண்டுகளிலே சரித்திரத்தைப் படிக்கின்றவர்கள் எல்லாம் அதை உணரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற முறையிலே உள்ள அத்தகைய சூழ்நிலையை நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம். அந்தப் பொற்காலத்திலே நாம் வாழ்கிறோம் என்று எண்ணுகிறபோது நமக்கெல்லாம் மகிழ்ச்சி ஏற்படுகிறது. பொற்காலம் என்றால் என்ன என்பதை நாம் பள்ளிகளிலே படிக்கிறபோதும், கல்லூரிகளிலே படிக்கிற போதும் தெரிந்து வைத்திருக்கிறோம் என்றாலும் இந்தியாவிலே எத்தனையோ சக்கரவர்த்திகள் ஆண்டாலும் அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தைத்தான் பொற்காலம் என்று கூறுவார்கள், அதைப்போன்றே இந்தியாவிலே—எத்தனையோ மௌரிய சக்கரவர்த்திகள் ஆண்டிருந்தாலும் சந்திர குப்த மௌரியர் காலத்தைத்தான் பொற்காலம் என்று கூறுவார்கள்—டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சி தான் பொற்காலம் என்று சரித்திரங்கள் கூறுகின்ற நிலை ஏற்படும். அந்தக் காலத்திலே அந்த அரசர்கள் ஆட்சியை எல்லாம் பொற்காலம் என்று சொல்வதற்கு என்ன காரணங்கள் என்பதை நாம் படித்திருக்கிறோம். அவர்கள் சாலைகளை அமைத்திருப்பார்கள், அவர்கள் சாலையோரங்களிலே மரங்களை வைத்தார்கள், வழிப்போக்கர்களுக்கு உதவுவதற்காக கிணறுகளையும் குளங்களையும் குட்டைகளையும் வெட்டினார்கள். கிராமங்களுக்கு இப்படிப் பல வசதிகளை அவர்கள் செய்து கொடுத்த காரணத்தினால்தான் அவர்கள் ஆட்சியை பொற்கால ஆட்சி என்று கூறினார்கள். தற்காலத்திலே டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியில் அனைத்துக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன, சாலையோரங்களிலே சமூக நலக் காடுகள் வளர்க்கப்படுகின்றன, பயணிகள் தங்குவதற்காகச் சாலையோரங்களிலே





விடுதிகள் கட்டப்படுகின்றன, மக்களுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது, இப்படி மக்களின் தேவைகளை உணர்ந்து அவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையிலே செயல்பட்டு வருகிற காரணத்தினால் இந்த ஆட்சியும் பொற்கால ஆட்சி என்று சரித்திரத்திலே பொறிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவுக்கு ஆட்சியை நடத்திச் செல்வதற்கு திறமையான, தூய்மையான பலமான நிர்வாகம் அமைந்திருப்பதும் அப்படி அமைந்திருப்பதால் இந்த ஆட்சியை நல்லாட்சி என்று நிச்சயமாக சரித்திர ஆசிரியர்கள் கூறுவார்கள். அப்படிப்பட்ட திறமையான ஒரு ஆட்சி இங்கே அமைந்து இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக இருப்பதுதான் இந்த வரவு-செலவுத் திட்டமாகும். திறமையான நிர்வாகம் எப்படி அமையும் என்பதற்கு ஒரு விளக்கம் சொல்லவேண்டுமானால், தலைவனும் தலைவியும் தங்கள் குழந்தைகளையும் பேரப்பிள்ளைகளையும் பேணிக் காப்பதற்காக—அவர்கள் மாதவருமானம் 1,500 ரூபாய் என்று இருந்தாலும் கூட—மாதத்திலே எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிட்டு திட்டமிட்டு செலவுகளை அமைப்பதற்காக குடும்பத்திற்கு அந்த மாதத்திலே என்ன என்ன தேவை என்பதையெல்லாம் பார்த்து கணக்கு எழுதிப் பார்த்து, 1,500 ரூபாய் தேவைப்படுகிறது என்றாலும் அந்தச் செலவுகளையெல்லாம் அந்தத் தலைவியின் திறமையின் காரணமாக தலைவனின் ஒத்துழைப்போடு அந்தக் குடும்பத்தின் வரவு-செலவுக் கணக்கிலே 1,500 ரூபாய் தேவைப்பட்டாலும் 1,100 ரூபாயில் குடும்பத்தை நல்ல முறையில் நடத்துவார்கள். அப்படி நடத்துகிறபோது 400 ரூபாய் மிச்சப்படுத்துகிறார்கள் என்றால் அது கஞ்சத்தனம் என்று பொருள் அல்ல, பிள்ளைகளுக்கு என்ன என்ன தேவை என்று பார்த்து அத்தனை தேவைகளையும் வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு திறமையான நிர்வாகம் என்ற முறையிலே அந்த தலைவனும் தலைவியும் செய்கிற காரணத்தினால் செலவுகளைக் குறைத்து குடும்பத்தை நல்ல முறையிலே நடத்துகிறார்கள் என்றுதான் அதற்கு அர்த்தம்.

[திரு. எஸ். என். இராசேந்திரன்] [1985 மார்ச் 29

(முற்பகல் 10-10)

அந்த முறையில் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே 57-வது பக்கத்திலே 99-வது பாராவில் நற்சான்றிதழ் கொடுத்து இருக் கிறார்கள். அதனை நான் வாசித்துக் காட்ட விரும்புகிறேன். சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட 1983-84 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில், அவ்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட பற்றாக்குறை ரூ. 129.3 கோடி என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவீர். இருப்பினும், 1983-84 ஆம் ஆண்டிற்குரிய பற்றாக்குறை ரூ. 42.43 கோடியேயாகும். இவ்வாறு பற்றாக்குறை அதிக அளவுக்குக் குறைந்ததற்கான காரணம் செலவுகளை உன்னிப்பாகக் கண் காணித்து முறைப்படுத்தியதும் சிக்கனத்தை அதிக அளவிற்குக் கடைபிடிக்க பெருமுயற்சி எடுத்துக் கொண்டதுமாகும். என்று அறிக்கையில் மிக அருமையாக சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். செலவினத்தைக் குறைத்து இருக்கிறார்கள் என்றாலும் நல்ல முறையில் தேவைகளைப் பார்த்து செலவுகளைச் செய்து இருக்கிறார்கள். என்றாலும் கடந்த ஆண்டை நாம் மறந்து இருக்க மாட்டோம். காரணம் 1982-83 ஆம் ஆண்டு கடுமையான பஞ்சத்தை தமிழ்நாடு சந்தித்தது. எதிர்பாராத செலவுகளை செய்வதற்கு உண்டான சூழ்நிலையை இந்த அரசு பெற்றது. இருந்தாலும் கூட நாட்டு மக்கள் அந்த பஞ்சத்தை உணராத அளவுக்கு திறமையாக நடத்திச் சென்ற பெருமை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு. கடந்த ஆண்டை இன்னும் மறந்து இருக்க மாட்டோம். இவ்வளவு சிக்கன செலவுகளை செய்தாலும் எதிர்பாராத அளவுக்கு மழை இல்லாத காரணத்தால் நாம் தண்ணீருக்கு பட்ட கஷ்டம் இன்னும் நம் மனதில் நீங்கா இடம் பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டபோதுகூட இப்படி தண்ணீர் கிடைக்கவில்லையே என்ற எண்ணம் ஏற்படாத அளவுக்கு திறமையாக நிர்வாகத்தை நடத்திச் சென்ற தன்மை பாராட்டுக்குரியது. அந்த பாராட்டுக்குரியவர் தமிழக முதல்வா டாக்டர் புரட்சித் தலைவர் ஆகும். ஆகவே அருமையாக சிக்கனமாக நிர்வாகத்தை நடத்திச் சென்ற காரணத்தால் மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கையை பெற்றிருக்கிறார்கள்.



1985 மார்ச் 29] [திரு. எஸ். என். இராசேந்திரன்]

நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்கு திறமை மட்டும் போதுமா என்றால் நிச்சயமாக இல்லை. அதற்கு வருமானமும் தேவைப் படுகிறது. 1977 ஆம் ஆண்டைப் போலவே 1985-ஆம் ஆண்டு பட்ஜெட் தயாரிக்கப்படுமானால் நிச்சயமாக விலைவாசி கூடி வாழ்க்கைத் தரம் கூடியிருக்கிறது. ஆகவே, வருமானத்தைப் பெருக்க வேண்டும். வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்றால் அதற்காக ஏழைகளை கசக்கிப் பிழிந்து அவர்களிட மிருந்து பணத்தைப் பெற்று நிர்வாகத்தை நடத்த வேண்டுமா என்றால் நிச்சயமாக இல்லை. வருமானமும் வேண்டும், பாமர மக்களும் பாதிக்காமல் இருக்கவேண்டும். அந்த திறமை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு. அவரது கொள்கையே Tax rich and pat the poor. பணக்காரர்களிடமிருந்து எடுத்து ஏழைகளை வாழ வைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தைக் கொண்டவர் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள். அந்த அடிப் படையில் சாராயத்திற்கு வரி, கனிமங்களுக்கு வரி, மோட்டார் வாகனங்களின் உதிரி பாகங்களுக்கு வரி என்று கூட்டியிருக் கிறார்கள். பாமர மக்கள் மீது வரி போட்டிருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. இப்போது போட்டிருக்கிற வரிகள் எல்லாம் பணக்காரர்களிடமிருந்து வருகின்ற பணமாகத் தான் இருக்கும் என்பதை நன்கு உணர்ந்து இருக்கிறார்கள். இப்படி நிர்வாகத் திறமையோடு நல்ல வகையில் ரூபாய் 49 கோடியை அதிகமாக வருமானத்தை பெறுகின்ற இந்த அரசு நல்ல திட்டங்களுக்காக செலவழிக்கிறது, நல்ல திட்டங் களை வகுத்து அதற்காக இந்த பணம் செலவிடப்படுகிறது என்பதற்கு இந்த வரவு செலவுத் திட்டம் அத்தாட்சியாக அமைந்து இருக்கிறது. இந்த வரவு செலவுத் திட்டத்தால் ஏழை மக்களுக்கு அனேக நன்மைகளை புரிந்து இருக்கிறார்கள். சிறார்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு, இளைஞர்களுக்கு, விவசாயிகளுக்கு இப்படி பலதரப்பட்டவர்களுக்கு திட்டங்கள் வகுத்து அதற்காக பண ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்தாலும் கூட நல்ல திட்டங்கள்

[திரு. எஸ். என். இராசேந்திரன்] [1985 மார்ச் 29

வருத்தாலும் கூட அழுத்தமாக இந்த அரசுக்கு நன்றியைச் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்றால் ஒரு வியாபாரியின் மகனாக இருக்கிற காரணத்தால் வியாபார பெருங்குடி மக்களுக்கு இந்த அரசு செய்திருக்கிற நன்மைகளை உண்மையில் பாராட்ட வேண்டும். எத்தனையோ ஆட்சிக் காலத்தில் வியாபாரிகள் சார்பாக பலமுனை வரியை நாம் உண்ணுகின்ற பொருட்களான மிளகாய், புளி ஆகியவற்றிற்கு ஒரு முனை வரியாக மாற்ற வேண்டும் என்று எத்தனையோ முறை சொல்லியும் கூட கேளாது இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு வியாபாரிகளின் கஷ்ட நஷ்டங்களை தெரிந்து இருக்கிற இந்த தமிழக அரசும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் 5 பொருட்களுக்கு பல முனை வரியாக இருந்ததை ஒரு முனை வரியாக கொண்டு வந்திருக்கிறார்கள். இது காணாது என்றாலும், ஆரம்பத்திலே நம்பிக்கையூட்டும் நட்சத்திரமாக இருப்பதாலே மற்றப் பொருட்களுக்கும் தொடர்ந்து அந்த விதி விலக்கை அளிப்பார் என்ற நம்பிக்கை வியாபாரிகள் மத்தியில் இருக்கிறது. வியாபாரிகளின் மனம் இன்றைக்குக் குளிர்ந்திருக் கிறது. இன்னும் அவர்களின் மனதைக் குளிர வைப்பதற்கு நட வடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்னும் பல கஷ்டங்களை அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். மக்களை நேரடி யாகச் சந்திப்பவர்கள் சிறு வியாபாரிகள்தான். அவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசு பரிவோடு பரிசீலிக்கும் என்று கருதுகிறேன். சாதாரண வியாபாரிகளாக இருப்பவர்கள், மொத்த வியாபாரிகள் அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்து எண்ணெய், மாவு போன்ற வைகளை வாங்கி ஜனங்களுக்கு விநியோகிக்கிறார்கள். அப்பொழுது அதில் கலப்படம் நடந்திருக்கிறது என்பது அந்த அப்பாவிச் சிறு விவசாயிகளுக்கு நிச்சயமாகத் தெரியாது. இருந்தாலும்கூட, எய்தவன் எங்கோ இருக்க அம்பைப் பழி வாங்குவதைப்போல, சிறு வியாபாரிகள் கலப்பட வழக்கிலே வதைப்படுத்தப்படுகிறார்கள். அதையும் தயவு செய்து பரி சீலனை செய்து கலப்படச் சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சிகளை அரசு எடுக்க முடியுமேயானால் வியாபாரிகள்



1985 மார்ச் 29] [திரு. எஸ். என். இராசேந்திரன்]

இன்னும் அழுத்தமாக நன்றிக் கடனோடு இருப்பார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வரவு செலவுத் திட்ட அறிக்கையைப் படித்துப் பார்க்கின்ற பொழுது, என்னுடைய தொகுதியாகிய தூத்துக்குடியைப் பற்றி இரண்டு இடங்களிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். தூத்துக்குடி நகரம் வளர்ந்து வருகின்ற தொழில் நகரமாக, சென்னையைப் போன்றும், பம்பாயைப் போன்றும், கல்கத்தாவைப் போன்றும் வளர்ந்து வரும் மிகப் பெரிய தொழில் நகரமாக உருவாகிக் கொண்டு வருகிறது. அங்கே சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்காக 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. சிப்காட் நிறுவனத்தின் வாயிலாகத் தொழில் கூடங்கள் ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுக் கொண்டு வருகிறது என்று அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. சிப்காட் நிறுவனத்தின் வாயிலாகத் தொழிற்கூடம் வருகிறது என்று நான்காண்டுக் காலமாகத் தூத்துக்குடி நகர மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வழக்கு மன்றத்திலே இருந்ததால் தாமதப்படுத்தப்பட்டு, இப்பொழுது வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு விட்டன. ஆகவே, விரைவிலே தூத்துக்குடியில் சிப்காட் நிறுவனத்தின் வாயிலாகத் தொழிற் கூடம் அமைக்கின்ற முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடியைப் பொறுத்தவரையில் அதன் வளர்ச்சிக்கும் தமிழகத்தின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவக்கூடிய சேது சமுத்திரத் திட்டத்தை இந்த அரசு வலியுறுத்தி அதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்குமேயானால் தூத்துக்குடி மட்டுமல்ல, தமிழகமே வளர்ச்சியடையும் வாய்ப்பிருக்கிறது என்பதை நான் இந்த அரசுக்கும், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் பணிவான வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

[திரு. எஸ். என். இராசேந்திரன்] [1985 மார்ச் 29

நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து தூத்துக்குடி நகரத்தைக் கொண்ட மாவட்டம் வ.உ.சி. மாவட்டமாக வரும் என்று அறிவித்திருக்கிறார்கள் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரவர்கள். அங்கே டீஃபேக்டோ டிஸ்ட்ரிக்ட் என்ற முறையில், அனைத்து மாவட்ட அலுவலகங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தேதி ஒன்றை நிர்ணயித்து அறிவிப்புதான் செய்ய வேண்டியிருக்கிறது. விரைவில் அந்த அறிவிப்பைத் தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடியின் வளர்ச்சியிலே இந்த அரசு அக்கறை காட்டுகிறது என்பதில் எங்களுக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது. எனவே, இப்படிப் பிரிந்துவிட்டால் தூத்துக்குடிக்கு தெருக்கள் போன்ற இன்னும் பல வசதிகளைச் செய்வதற்கான வாய்ப்பிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டி, இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கை ஒரு அற்புதமான அறிக்கை, பாமர மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கை. ஆகவே, இதை மனதாரப் பாராட்டி அமைகிறேன். நன்றி.

* **திரு. ரா. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் இரண்டாம் முறையாகச் சட்டமன்ற உறுப்பினராக இங்கே பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்த தமிழகத்தினுடைய, தமிழ்ச் சமுதாயத்தினுடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தர்மபுரி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தைச் சேலம் மாவட்டத்திலேயிருந்து இரண்டாகப் பிரிக்கின்ற நேரத்தில், தொழில் துறையில், கல்வியில், பொருளாதாரத் துறையில், இப்படிப் பல்வேறுபட்ட வகைகளில் பின்தங்கிய பகுதியாக இருப்பதால்தான் தர்மபுரி மாவட்டம் தனியாக மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சிக் காலத்தில் பிரிக்கப்பட்டது.



1985 மார்ச் 29] [திரு. ரா. சின்னச்சாமி]

(முற்பகல் 10-20)

இருந்தாலும் தர்மபுரி மாவட்டம் இன்றைக்கும் மிகப் பின்தங்கிய நிலையிலேதான் இருக்கின்றது. தமிழக அமைச்சரவையிலே 25 பேர் இருந்தும் தர்மபுரி மாவட்டத்திற் கென்று ஒரு அமைச்சர் இல்லாத குறை இருக்கின்றது என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இருப்பினும் தர்மபுரி தொகுதியில் பிறந்து வளர்ந்து கல்வி பயின்ற மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் அமைச்சராக வீற்றிருக்கிறார்கள். அவருடைய சேலம் மாவட்டத்தை விட தர்மபுரி மாவட்டத்தில் இருந்துதான் அவருடைய பொது வாழ்க்கையில் அவர் முதன்முதலாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த வகையில் அவர் முதலில் நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெறுவதற்கு தர்மபுரி மாவட்டம்தான் அமைந்தது என்பதை ான் இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

எல்லா வகையிலும் தர்மபுரி மாவட்டம் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றது. குறிப்பாக இந்த அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் தர்மபுரி மாவட்டத்திற்காக எந்தவிதமான வளர்ச்சிப் பணிகளைப் பற்றியும் தெளிவாக அறிவிக்கப்படவில்லை. வருடத்திற்கு வருடம் மக்களின் அடிப்படைத் தேவைகள் வளர்ந்து வருகின்ற நிலையில் தொழில் துறை வளர்ச்சியை ஏற்படுத்தி ஆயிரக் கணக்கான படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையிலே எந்தவிதமான அறிவிப்புகளும் இல்லாத ஒரு நிதி நிலை அறிக்கையாகத்தான் இந்த அறிக்கை இருக்கின்றதே தவிர வேறில்லை என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாகத் தர்மபுரி மாவட்டத்தில் கழக ஆட்சிக் காலத்தில் தமிழகத்திலே எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு மாவட்ட வளர்ச்சிக் கழகம் என்று புதிதாக ஏற்படுத்தி அதற்கென்று தனியாக ஒரு I.A.S. அதிகாரியை தர்மபுரி மாவட்டத்தில் கலைஞர் அவர்கள் நியமித்தார்கள். காரணம், எல்லாத் துறைகளிலும் பின்தங்கி இருக்கின்ற ஒரு மாவட்டம்

[திரு. ரா. சின்னச்சாமி] [1985 மார்ச் 29

மற்ற மாவட்டங்களைப் போல வளர்ச்சி அடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் கலைஞர் அவர்கள் மாவட்ட வளர்ச்சிக் கழகத்தை ஆரம்பித்து தனியாக ஐ.ஏ.எஸ். அதிகாரியை தர்மபுரி மாவட்டத்திற்கு நியமித்தார்கள்.

தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வறட்சியான நிலைமையில் இருப்பதால் பஞ்சப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் இருக்கின்ற கடும் வறட்சியை எதிர்த்து நிற்க இயலாமல் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் அண்டை மாநிலங்களில், பெங்களூர் போன்ற பகுதிகளுக்கு படை எடுத்த வண்ணமாக இருக்கின்றனர். தர்மபுரி, ஊத்தங்கரை, அரூர் போன்ற பகுதிகளிலிருந்து 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூலி வேலைக்காகச் செல்கின்ற சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. எனவே தர்மபுரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து தமிழக அரசு போர்க்கால நடவடிக்கையாக துரிதமாக நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். எனவே தர்மபுரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. தர்மபுரி மாவட்டம் தனியாகப் பிரிந்த காலத்திலிருந்து இதுவரையில் ஒரு பெண்கள் கல்லூரி இல்லாத நிலைமை இருந்து வருகின்றது. தமிழக அரசு மகளிருக்காகத் தனியாக பல்கலைக் கழகத்தை அன்னை தெரசா பெயரில் அமைந்திருக்கின்றது. தர்மபுரி மாவட்டத்தில் 150-க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் இருந்தும் பெண்களுக்கென்று தனியாக ஒரு கல்லூரி இல்லாத ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை தர்மபுரி மாவட்டத்தில் இருக்கின்றது. எனவே தர்மபுரி மாவட்டத்தில் அரசின் சார்பிலே தனியாக ஒரு பெண்கள் கல்லூரியை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 29] [திரு. ரா. சின்னச்சாமி]

அதே நேரத்தில் இன்றைக்கு சேலம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியும், கால்நடை மருத்துவக் கல்லூரியும் ஏற்படுத்துவதாக இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. என்ன காரணத்தினாலே, பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் கால்நடைப் பண்ணை இருக்கிற ஓசூரில் அத்தகைய கல்லூரி அமைப்பதற்கு ஏற்ற இடம் இருந்தும் அங்கே ஆரம்பிக்காமல், நாமக்கல்லிலே அந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைய இருக்கிறது என்பதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சேலம் மாவட்டத்திலேயிருந்து தர்மபுரியைத் தனியாகப் பிரித்ததன் காரணமே, தர்மபுரி எல்லா வகையிலும் பின்தங்கியிருக்கிறது, அங்கே எந்தவிதமான வசதியும், வாய்ப்பும் இல்லை. அத்தகைய சூழ்நிலையில், அரசாங்கம் தனியாகக் கவனம் செலுத்தி, வளர்ச்சி அடையச் செய்ய வேண்டுமென்று தான் தர்மபுரி மாவட்டம் பிரிக்கப்பட்டது. ஆகவே, தர்மபுரி மாவட்டத்திற்கு அரசாங்கம் தனியாக கவனம் செலுத்தி, புதிதாக ஆரம்பிக்கின்ற கல்லூரிகள் அனைத்தையும், தொழில்கள் அனைத்தையும், அங்கே அமைவதற்கு ஏற்ற முறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, கல்வியைப் பொறுத்தவரையில் நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. தர்மபுரியைத் தனியாகப் பிரித்த காலத்தில் ஏறத்தாழ 40 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. இப்பொழுது சுமார் 160-க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் இருந்தும் அங்கே ஏறத்தாழ 40, 50 உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தான் கட்டிட வசதிகள் இருக்கின்றன. சாதாரண மக்களால் கூறைக் கொட்டகைகள் போடப்பட்டு, ஆசிரியர்களுக்கு ...ற்காலி போன்ற அடிப்படை வசதிகள் கூட இல்லாமல், அந்த உயர்நிலைப் பள்ளிகள் இன்று வரையிலே இயங்கி வருகின்றன. நான் பல பள்ளிகளுக்குச் சென்ற நேரத்தில், அந்தந்தப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், ஊர் மக்கள், பள்ளியைச் சுற்றிக் காண்பித்து, பள்ளியின் நிலையைப் பற்றி தயவுசெய்து சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்லுங்கள் என்று சொல்கின்ற ...வல நிலை இருக்கிறது. இந்த ஆண்டு பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ,

[திரு. ரா. சின்னச்சாமி] [1985 மார்ச் 29

4,000 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கிற இந்த மாநிலத்தில் கட்டிடங்கள் கட்ட ரூ. 1 கோடி அறிவித்தால், அது யானைப் பசிக்கு சோளப் பொறி கொடுத்தாற்போலத்தான் இருக்கும். தர்மபுரி மாவட்டத்தைத் தனியாக எடுத்துக் கொண்டு, இந்த அரசு கிராமங்களில் அமைந்திருக்கிற உயர்நிலைப் பள்ளிகளுக்கு நல்ல கட்டிட வசதிகள் செய்து தருகின்ற முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 10, 12 ஆண்டு காலமாக அந்த உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிட வசதி இல்லாததால், மரத்தடியிலும், வெய்யிலிலும் பிள்ளைகள் படிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, இந்த மாமன்றத்தில் இன்னொன்றையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தர்மபுரியில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. ஏறத்தாழ 2,700-க்கு மேற்பட்ட மாணவர்கள் அந்த மேல்நிலைப் பள்ளியிலே படிக்கிறார்கள்; 100-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறார்கள். தர்மபுரி, அம்மாவட்டத்திற்குத் தலைநகரமாக இருந்தும் வேறு உயர்நிலைப் பள்ளியே அங்கே இல்லை. ஆகவே அந்தப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, இன்னொரு மேல்நிலைப் பள்ளியைத் துவக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல், அங்குள்ள மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 2,500-க்கு மேற்பட்ட மாணவிகள் படிக்கிறார்கள். ஆயிரம் மாணவர்கள் படித்து வந்த உயர்நிலைப் பள்ளியை, பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக மாற்றியிருக்கிறார்கள். ஆகவே அங்கு, 1,000 பேர்கள் படிப்பதற்கான வசதிகள் தான் இருக்கின்றன. ஆனால் 2,500-க்கு மேற்பட்ட பெண்குழந்தைகள் அந்தப் பள்ளியிலே படிக்கின்ற துர்பாக்கியமான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பள்ளியையும் இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், அந்தப் பள்ளிக்கு அருகிலேயே வனத் துறைக்குச் சொந்தமான பழைய கட்டிடங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டிடத்தையும் அந்த உயர்நிலைப் பள்ளிக்கு வழங்கினால், அது மேலும் வசதியைப் பெற முடியும்.



1985 மார்ச் 29] [திரு. ரா. சின்னச்சாமி]

அதேபோல், கலைக் கல்லூரி என்றால், பல்வேறு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இருந்தும் தர்மபுரியைப் பொறுத்த வரையில் பி.காம்., எம்.காம். போன்ற வகுப்புகள் இல்லை. அந்தக் கல்வி வகுப்புகளைத் துவக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நமது தொழில் துறை அமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்தைப் பற்றி எல்லா பகுதிகளையும் நன்கு அறிந்தவர். அவர் வருகின்ற ஆண்டிலேயாவது, எலெக்ட்ரானிக் தொழிற் சாலையை அங்கே துவக்குகின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று சிறப்பாகக் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-30)

அரூர் தாலுக்காவில் தொட்டம்பட்டியில் லாஸ்கோ ஸ்டீல் தொழிற்சாலை இருக்கிறது. அது பல ஆண்டு காலமாக மூடப்பட்டிருக்கிறது. அதிலே வேலை செய்த ஏறத்தாழ 400 தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அவரும் நானும் சென்று அங்கே இருக்கிற தொழிலாளர்கள் கொடுத்த வரவேற்பில் கலந்து கொண்டோம். அந்தத் தொழிலாளர்களைப் பற்றி நன்கு தெரிந்தவர் தொழில் துறை அமைச்சராக வந்திருக்கிற காரணத்தால் அந்த லாஸ்கோ ஸ்டீல் தொழிற்சாலையை உடனடியாகத் திறந்து, அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல தர்மபுரி மாவட்டத்தில் 250-க்கும் மேற்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டு, அவை பல பேர்களுக்கு ஒதுக்கப்பட்டன. ஆனால் சரியான மூலப் பொருள் வழங்காத காரணத்தினாலோ அல்லது தலைவராக இருந்தவர் சரியாக நிர்வாகத்தை நடத்தாத காரணத்தினாலோ அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடப்பட்டு கிடக்கின்றன. கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கப்பட்ட அந்தத் தொழிற்சாலைகளில் அரசாங்கத்தின் மூலதனம் இன்றைக்கு முடங்கிக் கிடக்கிறது. உடனடியாக அந்தத் தொழிற்சாலைகளைத் திறக்கிற முயற்சியில் இந்த அரசு

[திரு. ரா. சின்னச்சாமி] [1985 மார்ச் 29

ஈடுபட வேண்டும். 250-க்கு மேற்பட்ட பல்வேறு கிராமப் பகுதிகளில் அந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு பயனற்று கிடக்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அரசு இதில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த ஆண்டில் 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைத் திறப்பதாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் இன்னொரு சர்க்கரை ஆலையை கண்டிப்பாக திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக அந்த சர்க்கரை ஆலை அரூர் பகுதியில் அமைய வேண்டும். அதனை தனிப்பட்டவர்களிடம் ஒப்படைக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்றைக்கு மாநிலத்திலேயே முதன்மையாக விளங்குகிற சர்க்கரை ஆலை பாலக்கோடு சர்க்கரை ஆலை தான். 8.5 சதவீதம் சர்க்கரை சத்துள்ள கரும்பிற்கு விலை நிர்ணயிக்கிற நேரத்தில் பாலக்கோடு சர்க்கரை ஆலையில் 10.5 சதவீதம் சர்க்கரை சத்துள்ள நல்ல கரும்பு விளைகிற பகுதியில் அது அமைந்திருக்கிறது. அந்த ஆலை எங்கள் மாவட்டத்தில் நல்ல இலாபகரமாகவும் நடக்கிறது. ஆகவே அரூர் பகுதியிலே இன்னொரு ஆலையை நிறுவ வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். 10 சர்க்கரை ஆலைகள் வருகிறபோது தர்மபுரி மாவட்டத்தை தள்ளிவிட மாட்டீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே இந்த அரசு தர்மபுரி மாவட்டத்தில் அரூர் பகுதியில் சர்க்கரை ஆலையை துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் இராசேந்திரன் அவர்கள் வியாபாரிகளைப் பற்றி தெரிவித்தார்கள். வியாபாரிகளைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய இந்த அரசுக்கு ஆயிரம் கோடிக்கு வணிக வரியாக தருகிற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அந்தச் சமுதாயத்தினால் பல்வேறு கோரிக்கைகள் இந்த அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டும் அவற்றின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இல்லாமல் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் சில பொருள்களுக்கு நாங்கள் ஒருமுனை வரியாக ஆக்கி இருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். அது எப்படி



1985 மார்ச் 29] [திரு. ரா. சின்னசாமி]

யென்றால் 5 சதவீதமாகயிருந்த விற்பனை வரியை 8 சதவீதமாக உயர்த்தி அதனை ஒருமுனை வரியாக ஆக்கியிருக்கிறோம் என்று தான் சொல்லி இருக்கிறார்களே தவிர வேறல்ல. 60 பொருள்களுக்கு மேற்பட்டு ஒருமுனை வரியை விதிக்க வேண்டுமென்று இந்த மாநிலத்தில் இருக்கிற அத்தனை வியாபாரிகளும் குரல் கொடுத்தும் 5 பொருள்களுக்கு மட்டும், அதுவும் மிளகாய், மிளகு, புளி, மஞ்சள் போன்ற சாதாரண பொருள்களுக்கு, ஒரு குடும்பத்தில 20 பைசா, 10 பைசா என்ற அளவில் வாங்கக்கூடிய பொருள்களுக்குத்தான் ஒருமுனை வரியாக ஆக்கியிருக்கிறீர்களே தவிர வேறில்லை என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதேநேரத்தில், வியாபாரிகளுடைய கோரிக்கை ஒன்று இருக்கிறது. அதாவது, அடிஷனல் டாக்ஸ், சர்சார்ஜ் இவைகளை நீக்க வேண்டுமென்று இந்த அரசிடம் வியாபாரிகள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று, அடிஷனல் டாக்ஸ், சர்சார்ஜ் ஆகியவைகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாப் பொருள்களுக்கும் ஒருமுனை வரி விதிக்க வேண்டுமென்று வியாபாரிகள் கோரிக்கை ஒன்று வைத்திருக்கிறார்கள். நான் ஒரு வியாபாரி என்ற முறையில் அவர்களுடைய கஷ்டம் எனக்குத் தெரியும். பல்வேறு வியாபாரிகள் என்னிடம் கொடுக்கிற மகஜர் அடிப்படையில், அவர்களுடைய எண்ணத்தின் அடிப்படையில் இதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. நலிந்த வியாபாரிகளுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு வியாபாரிகள் நல வாரியம் அமைக்க வேண்டுமென்று நீண்டகாலமாக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டும். காரணம் அவர்கள் ஆயிரம் கோடி ரூபாய்க்கு வணிக வரியாக தரும்போது, தொழில் துறையில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டாலும் அவர்களுடைய பொருளாதார நலனுக்கு சீர்கேடு ஏற்பட்டாலும், தவறாமல் நல்ல முறையில் வணிக வரியைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வியாபாரிகளில் நலிந்தவர்களுக்கு உதவி செய்கின்ற வகையில் வியாபாரிகள் நல வாரியம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ரா. சின்னச்சாமி] [1985 மார்ச் 29

அடுத்து, ஒகனேக்கல் நீர் மின்சாரத் திட்டம் இருக்கிறது. 1965-லிருந்து 1975 வரையில் ஆய்வு செய்யப்பட்டு, அதற்காக பல கட்டிடங்கள் எல்லாம் ஒகனேக்கலில் கட்டப்பட்டும், இன்று வரையில் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை. ஏறத்தாழ 400 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிற வகையில் அந்தத் திட்டம் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலமான கர்நாடக மாநில முதலமைச்சர், மிகச் சிறந்த ஜனநாயகவாதி, மாண்புமிகு இராமகிருஷ்ண ஹெக்டே அவர்களோடு பேசி, உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். இதை நான் குறிப்பிட காரணம், தர்மபுரி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு இதுவும் ஒரு முக்கிய ஏதுவாக அமையும்

அதேநேரத்தில் இந்தத் திட்டத்தை மேகதாத் என்ற இடத்தில் அமைத்தால் அது பயனுடையதாக இருக்காது. ஆகையால் ஒகேனக்கலிலேயே அமைக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று 'தொட்டஹல்லா நீர்த்தேக்கத் திட்டம் இருக்கிறது. கழகக்கால ஆட்சியில் அதற்கு திட்டம் தயாரித்து, மதிப்பீடு எல்லாம் போடப்பட்டது. அந்தத் திட்டம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. தேன்கனிகோட்டை தாலுகாவில் அஞ்சட்டிக்கு அருகில், அந்தப் பகுதி மக்கள் பயனடையும் வகையில் அந்த நீர்த்தேக்கத் திட்டத்தை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தர்மபுரி மாவட்டத்தில் தொப்பையாறு நீர்த்தேக்கத் திட்டம் ஒன்று இருக்கிறது. அது தற்போது முடிவடையும் தருவாயில் இருக்கிறது. சேலம் மாவட்டத்தையும் தர்மபுரி மாவட்டத்தையும் இணைக்கின்ற ஒரு திட்டமாக அது இருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் நிலம் இங்கே இருக்கிறது; இங்கே உள்ளவர்கள் நிலம் அங்கே இருக்கிறது. ஆனால் அந்த நிலங்களுக்கு சென்றுவர ஒரு பாலம் அமைக்கப்படவில்லை. அதனால் அவர்கள் தண்ணீரில் நீந்தி செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. தொப்பையாறு நீர்த்தேக்கத் திட்டத்தைத் தயாரிக்கும்போதே அங்கே ஒரு மேம்பாலம் கட்டு-



1985 மார்ச் 29] [திரு. ரா. சின்னச்சாமி]

வதற்கும் ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அது விடுபட்டிருக்கிறது. அந்த மக்களின் கஷ்டத்தை உணர்ந்து, ஒரு மேம்பாலம் கட்டும் திட்டத்தையும் இணைத்து, அதையும் முடித்துத் தர வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

* **திரு. க. இரா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது கருத்துக்கள் சொல்வதற்கு வாய்ப்பு தந்த உங்களுக்கு முதலிலே நன்றி சொல்லி, இந்த மாமன்றத்திற்கு என்னை மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்திருக்கிற என்னுடைய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிற அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்த முற்போக்கு ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த அந்த மாவட்ட வாக்காளப் பெருமக்களுக்கும், அதிலும் குறிப்பாக நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற நிதிநிலை அறிக்கையில் சிறப்பு வாய்ந்த பல நல்ல திட்டங்களை இந்த நாட்டு ஏழை எளிய மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள், என்பது இந்த நாடறிந்த ஒரு உண்மையாகும். ஆகவே அந்த வகையிலே சீரான நிதிநிலை

(முற்பகல் 10-40)

அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நமது அரசு 3-வது முறையாக இங்கே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிற இந்த அரசைப் பார்த்து, எதிர்த் தரப்பிலே இருந்து பேசுகிறவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். ஏதோ அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகம் அனுதாப அலையிலே இங்கே வெற்றிபெற்றுவிட்டதாக சொன்னார்கள். அவர்கள்தான் தமிழகத்தினுடைய மக்கள் மத்தியிலே அனுதாபத்தைப் பெறுவதற்கு பல்வேறு வகைகளில் முயற்சிகளை மேற்கொண்டும், மக்கள் அவர்களுக்கு வாய்ப்புத் தரவில்லை என்பதற்காக, நாங்கள் தோற்றுவிட்டோம் என்பதை

[திரு. க. இரா. சின்னராசு] [1985 மார்ச் 29

மக்கள் மத்தியிலே ஒத்துக்கொள்வதற்கு முடியாமல் இங்கே அனுதாப அலையிலே அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகம் ஜெயித்துவிட்டதாகச் சொல்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம், தேர்தல் காலத்தில், தேர்தல் நேரத்திலே உங்களுடைய கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் பேசிய பேச்சுக்களை நினைத்துப் பார்க்கவேண்டும். இந்த தடவை எங்களுக்கு வாய்ப்புத் தரவேண்டும் என்று வாக்காளர்கள் மத்தியிலே கேட்டார்கள். தமிழகத்தின் மக்களுக்கு கால் செருப்பாக இருந்து நாங்கள் பாடுபட்டோம், 7 ஆண்டுக்காலம் எங்களுக்கு தந்த தண்டனை போதாதா? இந்த தண்டனைக்கு வழியில்லையா? இந்த முறை அந்த வாய்ப்பைத் தரவேண்டும் என்று நீங்கள் கேட்டீர்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் பேசுகிற கூட்டங்களில் இவ்வாறு பேசியது இந்த நாடறிந்த உண்மையாகும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகம் திரும்பி வரமாட்டார்கள், அவர் உயிரோடு இல்லை என்று பல்வேறு கோணங்களில் மக்கள் மத்தியிலே எடுத்துச்சொல்லியும் அதையெல்லாம் மக்கள் ஏற்றுக்கொள்ளாமல், உங்களை தோல்வியடையச் செய்திருக்கிறார்கள் என்றால், அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் ஒரு ஜனநாயக முறைப்படி, அதைவிட்டுவிட்டு, ஏதோ அனுதாப அலையிலே நாங்கள் எல்லாம் ஜெயித்துவிட்டதாக நீங்கள் சொல்வது தவறு. இந்த அனுதாப அலை ஆந்திரத்திலேயும், கர்நாடகத்திலேயும், வீசவில்லையா? அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த வகையிலே அனுதாப அலையிலே ஜெயித்து நாங்கள் இந்த ஆட்சியை அமைக்கவில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே தந்திருக்கிறார்கள். இன்றைக்கு 80 லட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு தந்து இருக்கிறார்கள். 5 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்குச் சீருடை தருகிறோம் என்கிற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே குழந்தைகளுக்கு சோறும், அவர்கள் படிப்பதற்கு வேண்டிய புத்தகங்களும், அவர்களுடைய உடைக்கு வேண்டிய சீருடைகளும் அளிக்கும் இந்த சீரான திட்டத்தை இந்த நாட்டில் இருக்கிற தாய்மார்களும், பெற்றோர்களும், பாராட்டுகிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு



1985 மார்ச் 29] [திரு. க. இரா. சின்னராசு]

உறுதுணையாக இருக்கிறது, என்பதை இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்தாலே தெரிகிறது. இந்த நாட்டிலே உள்ள ஏழைகளின் கஷ்டங்களை ஏற்றுக்கொள்கிற ஒரு சிறப்பு வாய்ந்த திட்டமாகும் இது.

இந்த நாட்டிலே உள்ள ஏழைகள், தங்களுடைய குழந்தைகளை காலையில் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பிவிட்டு, தங்களுடைய வேலைக்குச் செல்லுகிறார்கள். மாலையில் அவர்கள் வீடு திரும்புகிறபோது, குழந்தைகள் பள்ளியைவிட்டு வருகின்ற அந்த இடையிலே இருக்கிற நேரத்திலே, அந்தக் குழந்தைகள் அரசாங்கத்தினுடைய பாதுகாப்பிலே இருந்து வளர்ந்து வருகிறது என்றால், இதைவிட வேறு சிறப்பான திட்டத்தை இந்த நாட்டிலே வேறு எந்த அரசாவது கொடுத்ததுண்டா?

அதுமட்டுமல்ல, இன்றைக்கு விவசாயிகளை எடுத்துக் கொண்டால், எத்தனை கோடி நஷ்டம் வந்தாலும், அது பெரிய விவசாயியாக இருந்தாலும், அல்லது சிறிய விவசாயியாக இருந்தாலும், அல்லது ஏழை விவசாயியாக இருந்தாலும் அவர்களுக்கு மின்சார வரியை ரத்து செய்திருக்கிறார்கள். இதையாவது நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டாமா? அவர்களுக்கு நல்ல பல காரியங்களைச் செய்திருக்கிற காரணத்தால்தான், 3-வது முறையாக இந்த ஆட்சியை தமிழகத்திலே ஏற்படுத்தியிருக்கிறார்கள். தவிர, நீங்கள் சொல்கிற மாதிரி அனுதாப அலையிலே அல்ல. அதற்கு நாங்கள் முயற்சி செய்யவும் இல்லை. நீங்கள் மக்கள் அனுதாபத்தைப் பெறமுடியாமல், அதற்கு இந்தக் காரணத்தைக் கற்பிப்பது நியாயமாக இருக்காது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து இந்த நிதிநிலை அறிக்கை 264 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட்டாக தயாரிக்கப் பெற்றிருக்கிறது என்றாலும், அந்தப் பற்றாக்குறையை எப்படியும் மத்திய அரசின் துணையோடு சரிக்கட்டி விடலாம் என்ற நல்ல எண்ணத்தோடு தான் நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் போட்டிருக்கிறார்கள். அதை நான் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. இரா. சின்னராசு] [1985 மார்ச் 29

உணவுத் துறைக்காக, ஆயிரத்திற்கும் மேலான குடும்ப அட்டைகள் ஒரு கடையில் இருந்தால அதை இரண்டாகப் பிரித்து அதன் மூலம் ஏழைகள் தங்களுடைய உணவுப் பொருள் களை எளிதில் பெற வசதி செய்திருப்பதோடு, 20 கிலோ அரிசியை ஒரு மாதத்தில் வாங்கினால், ஒரு கிலோ அரிசி இனாமாகக் கொடுக்கின்ற ஒரு சிறந்த திட்டத்தையும் அரசு அறிவித்திருக் கிறது. அது உண்மையிலேயே ஏழை எளிய மக்களுக்கு உதவக் கூடிய ஒரு திட்டம். இந்த திட்டத்தை தொழிலாளி, பாட்டாளி மக்கள், ஏழை விவசாய மக்கள் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு விலைவாசி உயர்வு தடுக்கப்பட்டிருக்கிறது ஓரளவுக்கு என்று சொன்னால், அது இப்படி மாதம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசியை ஏழை எளியவர்களுக்கு தருவதன் காரண மாகத்தான் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். அந்த வகையிலேயும், இப்படி ஆயிரம் கார்டுகளுக்கு மேல் ஒரு கடையில் இருந்தால், அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற நடைமுறையினாலும், ஏழை எளிய மக்கள் மிகவும் பயனடைவதால் அந்த வகையிலேயும் இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மாத்திரம் அல்ல, 20 கிலோ அரிசி ஒரு குடும்பத்திற்கு என்று சொல்கிறபோது அரசுக்கு கிட்டத்தட்ட 80 ஆயிரம் டன் கூடுத லாக செலவாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் எவ்வளவு செலவு வந்தாலும் பரவாயில்லை, இந்த நாட்டு மக்களை காப்பாற்று கின்ற கடமை அரசுக்கு இருக்கிறது என்ற ஒரே நல்ல நோக்கத் திலே, அரசு இவைகளையெல்லாம் ஏற்று செயலாற்றிக் கொண்டிருப்பதை, தமிழக மக்கள் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே தொழில் வளர்ச்சிக்கு சிறந்த இடம் தரவில்லை என்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொன்னார்கள். ஆனால் பல் வேறு புதிய தொழில்கள் தமிழகத்திலே துவங்கப்பட்டு, அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான பேர்கள் வேலை வாய்ப்புப் பெறவும் நல்ல வழியை இங்கே காட்டியிருக்கிறார்கள். அதன் அடிப்படை யில்தான் 7-வது திட்டக் காலத்தில் தமிழகத்தில் 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கொண்டுவரப்படும் என்று சொல்லியிருக்



1985 மார்ச் 29] [திரு. க. இரா. சின்னராசு]

கிறார்கள். நான் இந்த நேரத்திலே நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த 10 சர்க்கரை ஆலைகளில் இரண்டையாவது தர்மபுரி மாவட்டத்திற்கு தாங்கள் வழங்க வேண்டும் என்பதுதான். அதையும் கிருஷ்ணகிரி பகுதியிலே ஒன்றையும், அரூர் பகுதியிலே ஒன்றையும அமைக்கலாம் என்று அதிகாரிகள் அரசுக்கு பரிந்துரை வந்திருப்பதாகக் கேள்விப் படுகிறேன். மேலும் தர்மபுரி மாவட்டம் தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால், அங்கு விளைகிற கரும்பும் தரம் அதிகம் உள்ளதாக இருப்பதால், சுல்டு பெர்சென்டேஜ் எல்லா கரும்புகளையும் விட அதிகமாக இருப்பதால், எங்கள் பகுதிக்கு இரண்டு சர்க்கரை ஆலைகளை வழங்கினால், நல்ல லாபகரமான முறையில் தொழிற்சாலை இயங்கும் என்று தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

தற்போது தர்மபுரி மாவட்டத்தில் விளைகிற கரும்பு வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கும சர்க்கரை ஆலைக்கு வருகிறது. ஆகவே, அந்த மாவட்டத்தில் விளைகிற கரும்பை அந்த மாவட்டத்திலேயே பயன்படுத்துகிற வகையில் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அத்தோடு நமது மாநிலத்தில் புதிதாக தொழில் துவங்கு வதற்காக வெளிநாடுகளில் வாழ்ந்துக் கொண்டிருக்கிற தமிழர் களுக்கு அழைப்புக் கொடுத்து, இங்கே தொழிலை துவங்கு வதற்கான சூழ்நிலையை இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் ஏற்படுத்திக் கொடுத்ததை பாராட்டி வரவேற்கிறோம். அயல் நாடுகளிலே சம்பாதிக்கிற பணத்தை தமிழகத்திலே முதலீடு செய்து தொழிலை வளர்ப்பதற்கு தமிழர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையிலே இந்த திட்டம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு, கல்வித் துறையிலும் மறுமலர்ச்சி ஏற்படுகிற வகையில் 1985-86 ஆம் ஆண்டில் கூடுதலாக 500 இடைநிலை ஆசிரியர்களையும், 75 தமிழாசிரியர்களையும், 50 உடற்பயிற்சி ஆசிரியர்களையும், 150 பட்டதாரி ஆசிரியர்களையும், 75 பட்டமேற்படிப்பு ஆசிரியர் களையும் புதியதாக போடப்போவதாக கூறப்பட்டுள்ளது. நான் ஒரு கருத்தை நமது அரசுக்கு இது சம்பந்தமாக சொல்ல விரும்புகிறேன்.

[திரு. க. இரா. சின்னராசு] [1985 மார்ச் 29

சிறப்பான சத்துணவு திட்டத்தை நாம் கொண்டு வந்ததன் காரணமாக பள்ளிக்கு வருகிற குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதன் காரணமாக, 500 இடைநிலை ஆசிரியர் களை மட்டும் போட்டிருப்பது போதுமானதாக இருக்காது என்று நான் கருதுகிறேன். அங்கே இன்னும் அதிகப்படியான ஆசிரியர்களை நியமிப்பதன் மூலம்தான், கல்வியினுடைய தரத்தை நாம் ஆரம்பத்திலேயே நல்ல முறையிலே கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே 500 இடைநிலை ஆசிரியர்கள் என்பதை சற்று அதிகரித்து 1,000 அல்லது 1,500 இடைநிலை ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் தர்மபுரி மாவட்டத்தில், அந்தக் காலத்தில் கன்னியாகுமரியில் இருந்தும், திருநெல்வேலியிலிருந்தும் ஆசிரியர் பணிக்கு வந்தவர்கள், ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதன் விளைவாக, டிரான்ஸ்பரில் அவர்கள் இடத்திற்கே திரும்பிச் சென்று விட்டார்கள். அதனால் தர்மபுரி மாவட்டத்தில் பல இடங்களில், பல ஆரம்பப் பள்ளிகளில் 5, 6 ஆசிரியர்கள் வேலை செய்கிற இடத்தில் ஒரே ஆசிரியர் பணி புரிய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-50)

ஆகையினால் அந்த இடைநிலை ஆசிரியர்கள் ஆயிரம் பேரைச் சேர்க்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அஃதோடு தருமபுரி மாவட்டத்திலே, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டது போல் இந்த மாவட்டத்தை பிரிக்கின்றபோது இருந்த உயர்நிலைப்பள்ளி களைக் காட்டிலும், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஏற்பட்ட பிறகுதான் இந்த 8 ஆண்டு காலத்தில் நூற்றுக்கணக்கான உயர்நிலைப்பள்ளிகள் தர்மபுரி மாவட்டத்திற்கு வழங்கப்பட்டிருக் கின்றன. அந்த பள்ளிகளுக்கு எல்லாம் கட்டிட வசதி மிகக் குறைவாக இருந்துகொண்டிருக்கின்றன. அரசாங்க கட்டி டங்கள் இல்லாத மேல்நிலைப்பள்ளிகள் இருந்து கொண்டிருக் கின்றன. ஒருகோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் தன்னிறைவுத் திட்டத்தைக்கொண்டு வந்த சிறப்பான முறையிலே செயல்படுத்தியவர்கள். ஆரம்பப் பள்ளிகளுக்கு எல்லாம் கட்டிடம் இல்லாத பள்ளிக்கூடமே இல்லை என்ற



1985 மார்ச் 29] [திரு. க. இரா. சின்னராசு]

வகையில், காமராஜர் காலத்திய பள்ளிக்கூடங்களுக்கு நாம்
கட்டிட வசதி செய்துகொடுத்து இருக்கிறோம். என்னைப்
பொறுத்தவரையில், அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய ஒரு
கருத்து, உயர்நிலை பள்ளிக்கும், மேல்நிலை பள்ளிக்கும்
கட்டிடங்களைக் கட்டித்தருகின்ற வகையில் ஒரு தன்னிறைவை
கல்வித் துறையிலே ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அத்துடன் பள்ளிகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்து
வதற்கு ரூ. 75 லட்சம் ஒதுக்கிருப்பதாக நிதியமைச்சர் அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். நாடு பூராவும் இருக்கின்ற பள்ளி
களுக்கு இந்த 75 இலட்சம் சரியாக இருக்குமா என்பதை
பார்த்து அதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே கல்வித்தரம் உயர வேண்டுமென்றும்,
தமிழகத்தில் படிக்காதவர்களே இருக்கக்கூடாது என்று
முதலமைச்சர் அவர்கள் எடுத்த சீரிய திட்டத்தின் அடிப்
படையிலே எடுக்கப்பட்டது தான் இந்தச் சத்துணவுத் திட்டம்.
மேலும் கல்வித்தரம் உயர கோயம்புத்தூரிலே பாரதியார்
பல்கலைக் கழகம், திருச்சியிலே பாரதிதாசன் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூரிலே தமிழ் பல்கலைக் கழகம், கோடைக்கானலில்
அன்னை தெரசா பெண்கள் பல்கலைக் கழகம், உலகத் தமிழ்
ஆராய்ச்சிக் கழகம் இதுபோன்ற பல்வேறு பல்கலைக் கழகங்களை
இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே, இந்த நாடு
சுதந்திரம் அடைந்து 37 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்திலே
இத்தனை பல்கலைக் கழகங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த
வகையிலே, இந்தச் சிறப்பான திட்டங்கள் எல்லாம் செம்மையாகச்
செயல்பட வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு
மேற்கொள்வதோடு, தர்மபுரி மாவட்டத்தில் இதுவரை இரண்டே,
இரண்டுக் கல்லூரிகள் இருந்துக் கொண்டிருக்கின்றன. அந்த
இரண்டுக் கல்லூரிகளிலும் பட்ட மேற்படிப்பு கல்வியகங்களில்,
எம்.ஏ. எம்.காம்., பி.காம். போன்ற பட்டப் படிப்புகளை
ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்வதோடு நமது மாநிலத்தில் இன்றைக்கு தொழிற் கல்வியை
ஒரு ஆயிரம் கோடி ரூபாய்க்கு தொழில்கல்வி உருவாக்குவதற்கு

[திரு. க. இரா. சின்னராசு] [1985 மார்ச் 29

என்று அரசு அறிவித்து இருப்பதை இந்த நாட்டு மக்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்த வகையில் தொழிற் கல்வியை கொண்டு வருகின்ற சீரிய திட்டத்தை உருவாக்குகின்ற அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே ஒரு பொறியியல் கல்லூரி கொண்டு வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை ஆகும். பல மாவட்டங்களில் தனியார்கள் கல்லூரியிலே பொறியியல் கல்லூரிகள் வழங்கியிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்திலே வசதி உள்ளவர்கள் குறைவாக இருப்பதால், அரசாங்கமே ஒரு பொறியியல் கல்லூரியை இந்த மாவட்டத்திலே வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெண்களுக்குத் தனியாக ஒரு கல்லூரிக் கிடையாது. எங்களுடைய மாவட்டத்தில் உள்ள பெண்கள் படிக்க வேண்டுமென்றால் சேலம், கோயம்புத்தூர், சென்னை போன்ற நகரங்களுக்கு வரவேண்டியிருக்கிறது. பெண்களை அவ்வளவு தூரத்திற்கு அனுப்புவது சிரமம். ஆகவே தர்மபுரி மாவட்டத்தில் பெண்களுக்கான ஒரு கல்லூரியை உருவாக்கித்தர விசேஷ அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஓசூரிலே 200 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து கால்நடை பண்ணை இருக்கிறது. சேலம் மாவட்டத்தில் கால்நடை கல்லூரியை துவக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. சேலம் மாவட்டத்திலே துவக்குவதைப்போல், தர்மபுரி மாவட்டத்தில் மத்திகிரியில் இருக்கின்ற கால்நடைப் பண்ணையிலும் துவக்கினால் நன்றாக இருக்கும். ஏனெனில் அங்கு கட்டிட வசதிகள் மற்றும் பிற வசதிகள் இருப்பதால் அரசிற்கு அதிகமாக செலவு வருவதற்கு வாய்ப்பு இல்லை.

ஆகவே அதையும் எங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்வியைப் பொறுத்த வரையில் தர்மபுரி மாவட்டத்தில்—அந்த மாவட்டம் ஒரு பக்கம் ஆந்திர மாநிலம் இன்னொரு பக்கத்திலே கர்நாடக மாநிலத்தின் எல்லையில் இருக்கிற காரணத்தினால் ஓசூர், தேன்கனிக்கோட்டை வட்டங்களிலே உள்ள ஆரம்பப் பள்ளிகளிலே தமிழ்ப்பிரிவுகள் வேண்டுமென்று பல்வேறு இடங்களில் கோரிகைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே கல்வி அமைச்சர் அவர்கள் அ



1985 மார்ச் 29] [திரு. க. இரா. சின்னராசு]

பகுதிகளிலே உள்ளவர்கள், எத்தனை பள்ளியில் தமிழ் படிக்க விரும்புகிறார்களோ அத்தனை பேர்களும் தமிழ் படிக்கக்கூடிய முறையில் தமிழ்ப்பிரிவுகளை அந்தப் பகுதிகளிலே ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் நம்முடைய அரசு இன்றைக்கு கிராமப்புற வளர்ச்சியில் ஈடுபட்டு கிராமங்களுக்கு குடிநீர் வழங்குகிற சீரிய திட்டத்தைச் சிறப்பாகச் செய்து வருகிறது. கேட்டகிரி 3 என்றும் கேட்டகிரி 6 என்றும் 1975 இல் எடுக்கப்பட்ட கணக்கு இருக்கிறது. 1975-க்குப் பின்னாலே பல்வேறு கிராமங்களிலே குடிநீருக்காக மக்கள் அவதிப்படுகிறார்கள். பாறைகள் நிறைந்த பகுதிகளிலே கிராமங்கள் இருக்கின்ற காரணத்தினால் மக்கள் குடிதண்ணீருக்காகக் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டுவருகிறார்கள். அந்தக் கிராமங்களுக்கு எல்லாம் அரசு மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டிக் கொடுத்து குடிநீர் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே வீடு கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகள் மிகச் சிறப்பான முறையில் அமைகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 50 என்றும், 75 என்றும், 175 என்றும் வீடுகளைக் கட்டுகிற போது கட்டுமானச் செலவுகள் கூடுதலாகிக் கொண்டே போகின்றன. அதனால் வீடுகளைக் கட்டுவதற்கு அதிகாரிகள் சிரமப் படுகிறார்கள். கட்டுமானச் செலவு கூடுதலாக வருவதன் காரணமாக 6 ஆயிரம் என்பதை 8 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் ரூபாய் என்று கூட்டினால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

எங்களுடைய தர்மபுரி மாவட்டத்திலே வருவாய்க் கோட்டத்தின் தலைமை இடமாக கிருஷ்ணகிரியை அறிவித்திருக்கிறார்கள் என்பதால் நான் நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கிருஷ்ணகிரி அரசு மருத்துவ மனையில் இதுவரைக்கும் இல்லாத சவ பரிசோதனைக் கூடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக நான் தொகுதி மக்களின் சார்பாக அரசுக்கு நன்றியைத்

[திரு. க. இரா. சின்னராசு] [1985 மார்ச் 29

தெரிவித்துப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கிருஷ்ண கிரி அரசு மருத்துவ மனையில் சமையல்கூடம், பிரசவ விடுதி, குழந்தைகள் நலப் பிரிவு, வெளி நோயாளிகள் பிரிவு, அறுவைச் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றைக் கட்டுவதற்கு அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதையும் செய்து கொடுக்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தர்மபுரி மாவட்டத்திலே என்னுடைய தொகுதி யிலே நீர்பாசனத் துறையிலே பல்வேறு அணைகள் கட்டிக்கொண் டிருந்தாலும்கூட இன்னும் பல அணைகளைக் கட்டவேண்டு மென்று அரசுக்கு மதிப்பீடுகளைப் போட்டு அனுப்பியிருக் கிறார்கள். அந்த வகையிலே நாச்சிக் குப்பம் ஆற்றிற்குக் குறுக்கே சிங்கனப்பள்ளியில் ஒரு அணை கட்டித்தரவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று தேங்கனிக் கோட்டை வட்டத்திலே அஞ்சட்டிக்குப் பக்கத்திலே தொத்தவலா அணையைக் கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன். அதைப்போலவே தேங்கனிக்கோட்டைக்குப் பக்கத்திலே சினத் குமார் நதியின் குறுக்கே ஒரு அணையைக் கட்டித்தா வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிறுபாசனத் துறையின் கீழ் தர்மபுரி மாவட்டத்திலே பல்வேறு ஏரிகள் அமைக்கப்பட வேண்டுமென்ற முறையிலே மதிப்பீடுகள் போடப்பட்டு பரிந்துரைகள் செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-00)

அதன் அடிப்படையில் என்னுடைய தொகுதியில் ஆலங்குதரணி என்ற கிராமத்தில் ஒரு ஏரி கட்டுவதற்கும், ஆவல்ஆற்றும் என்ற கிராமத்தில் ஒரு ஏரி கட்டுவதற்கும், கோடேகவண்டனூர் என்ற கிராமத்தில் ஏரி கட்டுவதற்கும் துடகனஅள்ளி மந்திரிகவுண்டன் கேட்டியில் ஒரு ஏரி கட்டுவதற்கும், குருகட்டனூர் ஏரி கட்டுவதற்கும் ஏற்பாடுகள் செய்வதோடு கூலியும் புழைய ஏரியிலிருந்து ஒரு காவாய் மூலமாக தண்ணீர் கொண்டு வந்தால் 200 ஏக்கர் பாசனம் பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. அதையும் அரசு பரிசீலித்து வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் ஓசூரில் சென்ற ஆண்டு பொழிந்த மழையின் காரண



1985 மார்ச் 29] [திரு. க. இரா. சின்னராசு]

மாக கண்ணனூர் ஏரி உடைந்து விட்டது. அந்த ஏரியை இன்னும் கட்டாமல் இருக்கிறார்கள். அதையும கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தேங்கனிகோட்டை, என்னுடைய தொகுதிக்கு சம்பந்தப்பட்ட வட்டத்தில், ஈழம் ஏரி என்ற தென்பண்ணை ஆற்றிலிருந்து கால்வாய் மூலமாக தண்ணீர் வந்து நிரம்பக் கூடிய அந்த சூழ்நிலையில் இருக்கிறது. அந்தக் கால்வாய்கள் பாழடைந்து பல காட்டாறுகள் காவாயில் புகுந்து உடைப்பு ஏற்பட்டக் காரணத்தால் அதையும் அரசு பலசீலனை செய்து கால்வாய் கட்டித் தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த நல்ல வாய்ப்பை வழங்கிய தலைவர் அவர்களுக்கும், தற்காலிக தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொண்டு விடைபெறு கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இராதாபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டு இருக்கிற நான் அந்த தொகுதியிலே நமது அரசு செய்ய வேண்டும் என்று நான் விழைகின்ற செய்திகளை முதலில் குறிப்பிட்டு விட்டு இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி என்னுடைய கருத்தை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸின் சார்பில் சொல்ல இருக்கிறேன். ஏன் என்றால் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்போன்ற தேர்தல்களிலே வெற்றிப் பெற்று வந்தவர்கள் இருப்பார்களேயானால் பல்வேறு பொறுப்புகளை அவர்கள் எடுத்துக்கொள்வார்கள். அந்தத் தேர்தல்கள் நடத்தப் படும் என்று அரசு உறுதி கொடுத்து இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி, அடைகிறோம். அதற்கு முன்னால் எல்லாமே சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பில் வருகின்ற காரணத்தாலே மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அந்த பொறுப்பை தங்களுடைய தோள்களிலே சுமந்து எங்களுக்கு உதவ வேண்டும், உதவுகிறார்கள் என்பதற்காகவே இதனை நினைவுபடுத்துகிறேன். இங்கே அதிகாரிகள் இருக்க வேண்டிய இடங்களில் கூட இவ்வளவு நேரம் ஒருவரும் இல்லாமல் இப்போது மட்டுமே ஒருவர் வந்து அமர்ந்தார். எனவே உங்களுக்கும் துணைக்கு இருப்பதற்கு ஆட்கள் குறைவாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன் எனவே, We are Sailing in the same boat

[திரு. குமரி அனந்தன்] [1985 மார்ச் 29

என்று சொல்லுகின்ற வகையில் ஒருவருக்கொருவர் தோள் கொடுக்க வேண்டும் என்று வேண்டி திசையன்விளை பனங்குடியில் முழு நேர அரசு மருத்துவ மனை வேண்டும். நியாய விலைக் கடைகளில் பொருள்களை வழங்குகிறபோது சீரான விநியோகம் நடைபெறவில்லை என்ற மக்கள் குறையை தீர்ப்பதற்கு முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டாலும், சின்னஞ்சிறு கிராமத்திலிருந்து ஒரு பெரிய கிராமத்திற்குச் சென்று இந்த உணவுப் பொருட்களை வாங்கி வருகின்ற காரணத்தால், அவர்கள் வேலை கெடுகின்ற காரணத்தால் 500, 1000 பேர் இருக்கின்ற இடங்களில் நியாய விலைக் கடைகளை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலை பராமரிப்பு செய்து வெகுகாலம் ஆகிவிட்ட காரணத்தாலும் அந்த சாலைகளை செப்பனிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூடன்குளத்தில் மேல் நிலைத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டும் அதற்கு குழாய்கள் கட்டாத காரணத்தாலே எண்ணிய எண்ணம் ஈடேறாமல் இருக்கிறது. அதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அனல் மின் நிலையம் ஒன்று வரும் என்று அறிவித்து காத்து இருக்கிறார்கள். தமிழக அரசு அதனை விரைவுபடுத்தி நிறைவு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இராதாபுரம் தாலுக்கா இப்போது தனி தாலுக்காவாக பிரிக்கப்பட்டு இருக்கிறது. முன்பு நாங்குநேரியில் இருந்த போது அது தொழிலே இல்லாத ஒரு தாலுக்கா என்று அறிவிக்கப்பட்டு, பின்தங்கிய தாலூக்கா என்று அறிவிக்கப் பட்டு தொழில் தொடங்குவதற்கு பல சலுகைகள் செய்யப் பட்டன. அதைப் போலவே அதிலிருந்து இப்போது பிரித்து எடுத்து இருக்கிற இராதாபுரம் தாலுகாவை அவ்வாறு அறிவிக்க வேண்டும். அதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேருந்து வசதி எல்லா கிராமங்களுக்கும் வேண்டும் என்று விரும்புகிறார்கள் மக்கள். வருவாயை பெருக்கு வதற்கு அது ஒருவழியாக இருக்கிற காரணத்தால் அதை மக்களிடமிருந்து வரியாக எடுக்காமல், அவர்களுக்கு வசதியாக கொடுப்பதன் காரணத்தாலே, இந்தப் பேருந்தை எல்லாம் அவர்கள் கேட்கின்ற இடத்திற்கு விட்டு கொடுக்கின்ற முயற்சியை



1985 மார்ச் 29] [திரு. குமரி அனந்தன்]

நமது அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் வெகு தூரத்திற்கு சென்று பணிபுரிபவர் களாக இருக்கிறார்கள். பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, கோயம்பத்தூர், கூடலூர் போன்ற பகுதிகளிலே கூட அவர்கள் வாணிபம் செய்கின்ற காரணத்தாலே திசையன்விளையிலிருந்து நேரடியாக கோவை போன்ற இடங்களுக்கு பேருந்துகளை விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே தொழில் இல்லாத காரணத்தால் இராதாபுரத்தில் கிடைத்துக் கொண்டு இருக்கக்கூடிய, வள்ளியூர் பகுதியில் கிடைத்துக்கொண்டு இருக்கக் கூடிய, கூடங்குளம் பகுதியில் கிடைத்துக்கொண்டு இருக்கக்கூடிய ஜிப்சம், சுண்ணாம்புக் கல் இவைகளைப் பயன்படுத்தி, மினி சிமெண்டு ஆலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உவரி, கூடுதாழை, இடிந்தகரை, கூந்தன்குளம் போன்ற பகுதிகளில் வாழ்கின்ற மீனவர்களுக்கு மீன் வளர்ப்புப் பண்ணைகளுக்கு ஏற்பாடுகள் செய்வதற்கு தாங்கள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே பலயிடங்களில் குடியிருப்புகள் கட்டி அவர்களுக்கு வேண்டிய மின் இணைப்பு கொடுக்காத காரணத்தால் வருத்தத்தோடு இருக்கிறார்கள். அவைகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்று பக்கத்தில் இருக்கின்ற சாத்தான்குளம் தொகுதியில் ஒரு பஸ் நிலையம் இல்லாமல் மக்கள் துன்புற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதனையும் அரசு கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் இலங்கையிலிருந்து வந்திருக்கிற மக்கள் வாழ வேண்டும் என்பதற்காக, அவர்களுடைய கண்ணீரை துடைக்க வேண்டும் என்பதற்காக, அகதிகளுக்கு அதிக உதவி செய்வது பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். பாராட்டு கிறேன். கிராமப்புற ஏழைகளுக்கு 20,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, பாராட்டு கிறேன். அதைப்போல, சுற்றுலாத் துறையின் மூலம், இந்தத் தேசத்திற்காகக் கொடியேந்தி கொள்கைக் குன்றாக நின்று, மார்பிலே அடிபடுகின்ற நேரத்திலேயும், கொடியை விட மாட்டேன் என்று சொன்ன, கொள்கைக் குன்றாக இருந்த

கொண்டிருக்கின்ற குமரனுடைய நினைவாகத் திருப்பூரிலே மணிமண்டபம் ஒன்று கட்டுவது, அதைப் போலே, அருமைத் தமிழ் எடுத்து அனைவர் நெஞ்சத்தையும் ஈர்த்த கவியரசு கண்ணதாசனுக்குக் காரைக்குடியிலே நினைவு மண்டபம் கட்டுவது போன்றவைகளை இங்கே அறிவித்திருக்கிறார்கள், மகிழ்ச்சி, வரவேற்புக்குரியது.

சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் உதகமண்டலத்திலே ஃப்ளோட்டிங் ரெஸ்டாரண்ட் என்று சொல்லுகின்ற வகையில் மிதக்கும் உணவகம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதையெல்லாம் மிகுந்த மனநிறைவோடு நாங்கள் பாராட்டுகின்றோம்.

அந்த வகையிலே இத்தனை பாராட்டுகளையும் பெற்று, இன்னும் பல பாராட்டுகளையும் பெறுகின்ற இந்த அரசாங்கம் மேலும் பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தோடு இங்கே சொல்லப்படுகிறது. பாராட்டுக்குரியவைகளையெல்லாம் வெளியே எடுத்துச் சொன்னாலும்கூட, இங்கே அமைச்சர்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற ஒரு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே இங்கே சொல்வதற்கு நாங்கள் முனைந்து நிற்கின்றோம்.

வரி அதிகமாகப் போடப்பட்டிருப்பது சாராயத்திற்குத் தானே என்று இங்கே சொல்லப்பட்டது. நியாயம்தான். ஒரு பல்க் லிட்டருக்கு 4 ரூபாயாக இருந்த ஆயத் தீர்வையை 6 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள்; விற்பனை வரியைப் பொறுத்த வரையில் 6 சதவீதமாக இருந்ததை 25 சதவீதமாக உயர்த்தியிருக்கிறார்கள். குடியே கூடாது என்பதுதான் நம்முடைய கொள்கை. இன்னும் சொல்லப்போனால், ஆளுகின்ற முதலமைச்சரவர்களுடைய கொள்கைகூட அதுதான். அந்த வகையிலே பார்க்கின்றபொழுது இதைப்பற்றியே பேசுவதற்கு மனம் சற்றுக் கூசினாலும், இருக்கின்ற நிலைகளை எடுத்துச் சொல்ல வேண்டியகடப்பாடு இருக்கின்ற காரணத்தினாலும், அரசாங்கத்தினுடைய வருவாய் இதனையே நம்பியிருப்பதாக இங்கே சொல்லப்படுகின்ற நேரத்தில், வருவாய் குறைந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கின்ற காரணத்தினாலும், ஆயத் தீர்வையையும், விற்பனை வரியையும் இவ்வளவுதூரம் உயர்த்திவிட்டபொழுது, கள்ளச் சாராயம் அதிகமாகப் புழக்கத்திற்கு வந்து விடாதா என்ற ஒரு அச்சம் எங்களைப் போன்றவர்களின் நெஞ்சத்திலே எழுகின்றது.





ஒட்டுமொத்தமாக இந்தக் குடி, போக வேண்டுமென்பதிலே அக்கறையோடு இருக்கிறோம் என்பதை முதலிலேயே சொன்னேன். நாமக்கல் கவிஞர் ஒரு இடத்திலே பாடுகின்றபொழுது சொல்லுவார், "விட்டது சனியன், விட்டது சனியன், விட்டது, விட்டதுடா" என்று குடி ஒழிந்த காலத்தில் அவர்கள் ஒரு பாடலையே பாடினார்கள். "நான் வணிகன் ஆகப் போனேன் ஆனால் இப்போது மனிதன் ஆகிப் போனேன்" என்று கலைவாணர் பாடினார்.

இப்பொழுது இதனை நீக்க வேண்டுமென்ற ஆசை முதலமைச்சருடைய உள்ளத்திலே இருந்தாலும் அதற்குரிய நாளை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். அதற்கிடையே இருந்து கொண்டிருக்கின்ற துன்பங்களையும், துயரங்களையும் நாம் பார்க்க வேண்டும். சிலயிடங்களிலே நிறைய சம்பாதிக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்ற சிலர், தாங்கள் மேற்கொண்டிருந்த தொழிலைக் கூட விட்டுவிட்டு இதிலே புகுந்தபிறகு ஒன்றுமில்லாமல் போய்விடுகின்ற வரலாற்றுக் கதைகளெல்லாம் நம்முடைய காதுகளிலே விழத்தான் செய்கின்றன. சிலநேரங்களில் நமது சட்டத்தில் இருக்கின்ற ஓட்டைகளைப் பயன்படுத்திக்கொண்டு, சாதுர்யவான்கள் சாமான்யர்களைத் தோற்கடித்து விடுவதையும் பார்க்கிறோம். எனக்குத் தெரிந்த இரண்டு நண்பர்களைப் பொறுத்தவரையிலே இங்கே தகவல் சொன்னார்கள். ஓரேயிடத்தில் ஒரு கடையை ஏலம் எடுக்கின்றபொழுது ஒருவர் 1,30,000 ரூபாய்க்கு எடுக்கிறார்; பக்கத்திலே இருக்கிற ஒரு வார்டிலே இன்னொருவர் 20,000 ரூபாய்க்கு எடுக்கிறார். ஒரு வார்டிலே இருக்கின்ற மக்களை நம்பி 1,30,000 ரூபாய்க்கு எடுக்கின்றவர் ஒரு ஓரத்திலே வைக்கின்ற பொழுது 20,000 ரூபாய்க்கு ஏலம் எடுத்தவர் அவருக்குப் பக்கத்திலேயே கடையை வைத்து விடுகின்றார். ஏனென்றால், அவருடைய வார்டு தொடங்குகின்ற இடமாகவும், இவருடைய வார்டு முடிகின்ற இடமாகவும் இருக்கின்றது. ஆக, ஒருவர் 1,30,000 ரூபாயைக் கொடுப்பதற்கு, அரசாங்கத்திற்கு வருவாயாக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றபொழுது, இன்னொருவர் 20,000 ரூபாயைக் கொடுத்துக்கொண்டு 20 அடி, 30 அடி தூரத்திற்குள்ளேயே இன்னொரு கடையை வைத்துக்கொண்டு இப்பொழுது பெருத்த முதலைப்போட்டு அந்தத் தொழிலைத் தொடங்குகின்றவர்

[திரு. குமரி அனந்தன்] [1985 மார்ச் 29

நசித்துப் போகின்ற அளவிற்குச் செய்கின்றார். அரசாங்கம் எவ்வளவோ முயன்றும் அதனைச் செம்மைப்படுத்த முடியாமல் திணறுவதைக்கூட நான் பார்க்கிறேன். அப்படிப் பாதிக்கப் பட்டவர்களுக்கு அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதும் எனக்குத் தெரியாது. ஒட்டுமொத்தத்திலே இந்தக் குடியினை ஒழித்துக் கட்டினாலொழிய இப்படிப்பட்ட துன்பங்கள் போகாது. ஆனால் அதுவரையிலும் சிலர் ஒழிந்துவிடாமல் இருக்கவேண்டும் என்பதிலாவது நாம் அக்கறை காட்ட வேண்டும்.

இப்பொழுது ஒரு கடையை நான் காரிலே போகின்றபொழுது பார்க்கிறேன். அதிலே ஒரு போர்டை எழுதிப் போட்டிருக்கி றார்கள். கவிதை நயத்தோடு எழுதிப் போட்டிருக்கிறார்கள் சாராயக் கடையிலே. "உத்தரவின்றி உள்ளே வா சச்சரவின்றி வெளியே போ" என்று கவிதை நயத்தோடு போதைக் கடை களெல்லாம் பாதையில் போகின்றவர்களையெல்லாம் அழைப் பதைப் பார்க்கிறோம். இப்படியெல்லாம் அவர்கள் செய்து கொண்டிருப்பதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு முழு மனதோடு இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் இலாக்காவைப் பொறுத்தவரையில் அவர்கள் மிகுந்த துயரத்திற்கும் துன்பத்திற்கும் இடையிலே காரியமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல பல்வேறு துறைகளிலும் அப்படித்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

சுற்றுலாப் போய்க்கொண்டு வந்த பசுபதிபாளையத்தைச் சேர்ந்த பள்ளி மாணவ மாணவிகளை அழைத்து வந்தவர்கள், ஈரோடு இரயில் நிலையத்திலே ஒரு பெண் — ஒரு சிறுமி — சிறுமி என்று சொன்னால் பள்ளியிலே ஏழாவது படித்துக் கொண்டிருக் கின்ற ஒரு பெண், சிறுநீர் கழிப்பதற்காக கழிவறைக்குச் செல்லு கின்ற நேரத்தில், சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்ற ஆசிரியரே அங்கே சென்று அந்தப் பெண்ணை மானபங்கப்படுத்தினார் என்று சொல்லுகின்ற ஒரு புகார்.



1985 மார்ச் 29] [திரு. குமரி அனந்தன்]

(முற்பகல் 11-10)

இதை பசுபதிபாளையம் போலீஸ் நிலையத்திலே சென்று பெற்றோர்களும், மற்றவர்களும் சொன்னால் இது இரயில்வேக்கு சம்பந்தப்பட்டது, நாங்கள் இதில் தலையிடுவதற்கில்லை என்று சொல்லி அந்த ஏழைப் பெற்றோர் களை அலைக்கழிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே பெரிய அதிகாரிகள் இதிலே உடனே கவனம் செலுத்தி இப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அதைப்போலவே எங்கள் தொகுதியிலே கூட சில ரைஸ்மில்காரர்கள் ஒருவருக்கொருவர் இணையாக இருந்து கொண்டு சில மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது அங்கே இருக்கிற ஒரு பெருமகனார் இதைக் கேள்விப்பட்டு அவர்களைச் சீர்திருத்தி, செம்மைப்படுத்தி நாட்டு மக்களுக்கு நல்லது செய்கின்ற மக்களாக மாற்றவேண்டும் என்ற நோக்கத் தோடு அவர்களைப் பிடித்துக் கொடுக்க முயன்றபோது, சில அதிகாரிகளே அவர்களுக்குத் துப்புக் கொடுத்து—ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற ஒருவர் சுட்டிக்காட்டியதற்குப் பின்னாலும் கூட, அதிகாரிகள் சிலர் அவர்களுக்குத் துப்புக் கொடுத்து—அவர்கள் தப்பிக்கின்ற முயற்சியிலே அவர்களை ஈடுபட வைத்தார்கள். இவை எல்லாம் நமது மனதிற்குச் சோர்வு தரக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். பெரிய அதிகாரிகளும், அமைச்சர் பெருமக்களும் இதிலே அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, சாராயத்தைப்பற்றிப் பேச எனக்குப் பிடிக் காது என்றாலும் நடைமுறையில் அது இருக்கின்ற காரணத்தால் நான் அதுபற்றி எப்படிச் சொன்னேனோ அதேபோன்று இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இரண்டு மூன்று நாட்களாகப் பத்திரிகைகளில் சரமாரியாக வந்துகொண்டிருக் கின்ற ஒரு செய்தியைப் பற்றிச் சொல்கிறேன். இதில் எனக்கோ, என் கட்சிக்கோ நம்பிக்கை நிச்சயமாகக் கிடையாது. ஆனால் இந்தக் குதிரை பந்தய மைதானத்தில் என்ன நடக்கின்றது என்பதே எங்களுக்குப் புரியமாட்டேன் என்கிறது. டெல்லிக்குப்

[திரு. குமரி அனந்தன்] [1985 மார்ச் 29

போயிருந்த நேரத்தில் கூட அங்கே இருக்கின்ற பத்திரிகையில் எழுதுகிறார்கள்; என்ன எழுதுகிறார்கள் என்றால் சென்னையிலே இருக்கின்ற குதிரைப்பந்தயத்தை நடத்துகிறவர்கள் தன்னிச்சையாக அதை நடத்துவதாகவும், அந்தக் குதிரைப் பந்தயம் நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்பதற்காக அரசாங்கத்தினுடைய சார்பிலே போய் அங்கே அமரவேண்டிய நான்கு பெருமக்கள் ஏதோ காரணத்தால் அங்கே போவதில்லை என்றும் எனவே இப்போது அதன் நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்கள் தங்களுடைய எண்ணத்தின்படி, தங்களுடைய விருப்பத்தின்படி காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலைச் சொல்கிறார்கள்.

உதாரணமாக ஜகதீஷ் என்று சொல்லப்படுகின்ற குதிரை ஓட்டுநர் 2,000 குதிரைகளில் ஏறி வெற்றி வாய்ப்பினைப் பெற்றவர். அப்படி புகழ் பெற்ற ஒருவருக்குச் சரியான காரணம் இல்லாத வகையில் 10 ஆயிரம் ரூபாய் என்று சொல்கிற அளவுக்கு அபராதம் விதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இன்னொரு செய்தி. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய இணை வேந்தராக இருந்து கொண்டிருக்கின்ற அருமை நண்பர் திரு. எம். ஏ. இராமசாமி அவர்கள் மிகப் புகழ் பெற்றவராகப் பல்வேறு துறையிலே இருந்தாலும், விளையாட்டுத் துறையிலேயும் புகழ் பெற்றவர். இந்த குதிரைப் பந்தயத்தை ஒரு விளையாட்டுத் துறை என்று எடுத்துக் கொண்டால் இந்த குதிரைப் பந்தியத்தில் கூட அவர் 109 வெற்றிகளை, அதாவது க்ளாசிக் வின் என்ற வகையில் பெற்று உலக ரெக்கார்டு புத்தகம் என்று சொல்லப்படுகின்ற கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறார். அந்த இன்னஸ் புத்தகத்தில் 109 வெற்றிகளை ஏறத்தாழ 20 ஆண்டுக் காலத்தில் பெற்றிருக்கின்ற ஒரு மனிதர் என்று சொல்லி, இடம் பெற்றிருக்கின்ற ஒரே தமிழர் அவராகத்தான் இருக்கிறார். அந்த உலக ரெக்கார்டை இதுவரையில் நான் புரட்டிப் புரட்டிப் பார்த்தபோது ஒரே ஒரு தமிழர்தான் அந்த இடத்தில் இடம் பெற்றிருக்கிறார். இன்னும் பல தமிழர்கள் பல்வேறு துறைகளில் வெற்றி பெற்று இடம் பெற வேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம். அப்படிப்பட்ட ஒருவர் தன்னுடைய வெற்றி பெற்ற குதிரையை விரர்



1985 மார்ச் 29] [திரு. குமரி அனந்தன்]

சாதனையோடு அழைத்து வருகிற நேரத்தில், பூரிப்போடு அழைத்து வருகிற நேரத்தில் தோற்றுப்போன குதிரையை ஓட்டிய ஒரு மேலைநாட்டு குதிரை ஓட்டுநர் அவரை வாயிலே சொல்லக்கூடாத, அச்சிட முடியாத, அருவருக்கத் தகுந்த வார்த்தைகளாலே திட்டினார் என்றும், உடனே அங்கே இருந்த கூட்டத்தார் அந்த அன்னிய நாட்டுக்காரர் மீது பாய்ந்தார்கள் என்றும், அந்த வெற்றிகரமான குதிரையை நடத்தி வந்தவர் அவர்களை எல்லாம் தடுத்து, நீதி நமக்குக் கிடைக்கும், இங்கே இருக்கிற ஸ்டுவர்ட்ஸ் அவர்களை எல்லாம் பார்த்துக் கொள்வார்கள் என்று சொல்லி தன்னுடைய புகாரை எழுதிக் கொடுத்த பிறகும் கூட, அந்த மேலைநாட்டுக்காரரை அழைத்து அவர் இப்படி ஒரு வார்த்தையைப் பேசியது உண்மைதான் என்று கண்டுபிடித்ததற்குப் பின்னாலும் கூட, அவரை வாய்மொழியாகவே எச்சரித்து மன்னித்திருக்கிறார்கள்.

ஆனால் அதேநேரத்தில் 2,000 வெற்றிகளைக் குவித்த மனிதரைப் பொறுத்தவரையில் சரியான காரணம் காட்டாமலேயே 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார். இது பற்றிப் பத்திரிகையில் வந்ததற்குப் பிறகு அங்கே இருந்த செய்திகளைத் தெரிந்துகொள்வதற்காகச் சிலரை கேட்டபோது, அங்கே என்னென்னமோ நடந்து கொண்டிருக்கின்றது என்று தெரிய வருகிறது. கர்நாடகாவிலே ஒருநாள் குதிரைப் பந்தயம் நடத்தப்பட வேண்டும் என்றால், அதற்கு உரிமக் கட்டணமாக 3 இலட்சம் ரூபாய் பெறுகிறார்கள்; கர்நாடக அரசினர். ஆனால் இந்த நாமோ ஒரு ரூபாய் கூட அவர்களிடமிருந்து பெறாமல் குதிரைப் பந்தயத்தை நீங்கள் நடத்துங்கள் என்று சொல்கிறோம். அப்படிச் சொல்கிறபோது ஒரு உத்தேசத்தில் கணக்கிட்டால் கூட ஒரு வாரத்திற்கு நான்கு நாட்கள், ஐந்து நாட்கள் நடக்கின்றது. இவ்வாறு நான்கு நாட்கள், ஐந்து நாட்கள் ஒரு வாரத்திற்கு நடக்க வேண்டியது தேவை தானா? இப்படி ஒரு வருஷத்திற்கு 230 நாட்கள் நடக்கிறது. கல்லூரிகளும், பள்ளிகளும் கூட, அதாவது மாணவர்கள் ஞானம் பெறுவதற்காகப் படிக்கின்ற பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் கூட 230 நாட்கள் நடப்பதில்லை. ஏறத்தாழ 180 நாட்கள்தான் நடக்கின்றன. இது நடுநிலைப் பள்ளிகள் என்று சொல்கிறபோது, உயர்நிலைப் பள்ளிகளும் மற்ற பள்ளிகளும் 200 நாட்கள்தான்

[திரு. குமரி அனந்தன்] [1985 மார்ச் 29

நடக்கின்றன. ஆனால் குதிரைப் பந்தயம் 230 நாட்கள் நடந்தாலும், ஒரு நாளைக்கு 3 இலட்சம் ரூபாய் கர்நாடக அரசு வருவாயைத் தேடிக்கொள்கிறபோது நாம் ஒன்றுமே செய்யாமல் இருக்கிறோமே, ஒரு ரூபாய் கூட கேட்காமல் இருக்கிறோமே, ஏறத்தாழ 6 கோடியே 90 இலட்சம் ரூபாய் என்ற அளவுக்கு அந்தக் கர்நாடக அரசு செய்வதுபோல் நாமும் செய்திருந்தால் இந்த உரிமப் பணம் மட்டுமே அவ்வளவு வந்திருக்குமே என்பதை எண்ணிப் பார்க்கிறபோது நம்முடைய அரசாங்கம் அதிலே சற்று கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, அது தொடர்பாக. அங்கே இருக்கிற ஸ்டுவர்ட்ஸ் என்று சொல்கின்றவர்கள், அங்கேயிருக்கிற அதிகாரிகள், குதிரை மேலே பந்தயம் கட்டுவதாகத் தகவல் வருகிறது. எந்தப் பரிசை நடத்துபவர்களாக இருந்தாலும், போட்டியை நடத்துபவர்களாக இருந்தாலும், நடத்துபவர்களே அதிலே பங்குகொள்ளக் கூடாது என்பது ஒரு மரபு. ஆனால், இதில் ஏன்தான் அப்படி இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. எனவே, அரசு 1977-க்கு முன்னாலே இருந்த அரசாங்கம் அதைத் தடுத்து நிறுத்துகிறோம் என்று சொன்னதை நீங்கள் ஏற்று, அதனை முழுக்க, முழுக்க தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையென்றால், இப்பொழுது இருக்கிற அந்த நிலவரத்தை மாற்றுவதற்காக அரசாங்கமே கொஞ்ச நாளைக்குக் குதிரைப் பந்தயத்தை ஏற்று நடத்தட்டும். அதன் மூலம் வருவாய் வரட்டும் என்று நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், எந்த, எந்த வகையிலே அங்கே பணம் போய்க் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். உதாரணமாக, ஸ்டுவர்ட்ஸ் கிளப் செக்கரட்டரி என்று சொல்கிறவருக்கு ஒரு வருஷத்திற்கு ரூ. 2½ இலட்சத்திலிருந்து ரூ. 3 இலட்சம் வரை சம்பளம் கொடுக்கப்படுகிறது. இது முதலமைச்சர் பெறுகிற சம்பளத்தைவிட அதிகமாகும். முதலமைச்சர் பெறுகிற சம்பளத்தைவிட அதிகமான சம்பளத்தை ஒருவர் பெற்றுக் கொண்டு இப்படி ஒவ்வொரு காரியத்திலும் தன்னுடைய விருப்பம் போலே நடந்து கொண்டிருப்பதை அரசாங்கம் அனுமதிக்கிறதா என்பதை நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 29] [திரு. குமரி அனந்தன்]

இங்கே ஒரு சிறப்பான செய்தியினை இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஏழை, எளிய மாணவர்களுக்குச் சீருடை கொடுப்பதோடு, புத்தகங்களும் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள், பாராட்டுக்குரியது. ஆனால், அந்தப் புத்தகங்கள் பேரறிஞா அண்ணா அவர்கள் பிறந்த தினத்திலேயிருந்து கொடுக்கப்பட இருக்கிறது என்று சொல்கிறீர்கள். சீருடை என்றிலிருந்து கொடுத்தாலும் பரவாயில்லை. ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினத்திலேயிருந்து நீங்கள் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருப்பதற்குரிய காரணம் படிப்பிலே அதிக அக்கறை செலுத்திய அண்ணாவினுடைய நினைவாக அதைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்ற எண்ணத்தோடு, கொடுப்பது நியாயமான ஒன்றாக இருந்தாலும், அவருடைய பிறந்த தினம் செப்டம்பரிலே வருகிற காரணத்தாலே, ஜூன் மாதத்திலேயே பள்ளிக்கூடங்கள் திறந்துவிடும்; ஆதலினாலே ஏழை, எளிய மாணவர்களுக்கு நீங்கள் ஜூன் மாதத்திலேயே புத்தகங்களைக் கொடுத்துவிடுவது நல்லது என்று சொல்கின்ற குறிப்பையும் உங்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது பல்வகையான ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நமது வேளாண் துறை அமைச்சர் அவர்கள் முன்னாலே இருந்து கொண்டிருக்கிறார்கள். நான் சில பகுதிகளிலே சுற்றுப்பயணம் செய்கின்ற நேரத்திலே பார்க்கிறேன்; இந்த மாதம் சேலம் மாவட்டத்திற்குச் சென்றிருந்த பொழுது அங்கே ஒரு காட்சி. ஒரு கூடை நிறையத் தக்காளியை ரூ. 1½-க்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ரூ. 1-க்கு 8 கிலோ தக்காளி அங்கே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல மரச்சீனி ஏகப்பட்டது விளைந்து கிடக்கிறது. கேரளா தான் அதை முதலிலே உற்பத்தி செய்தது, இப்பொழுது கேரளாவிலே அந்த விளைச்சல் நிலங்கள் குறைக்கப்பட்டிருப்பதால், தமிழகம் அதன் உற்பத்தியில் உயர்ந்து கொண்டிருக்கிறது. இப்படி விளைச்சல் நிலம் உயர்ந்து கொண்டு அதிலே அதிகமான விளைச்சல் வருகிறபொழுது வாங்குவோரின்றி அவர்கள் துன்பப்படுகிறார்கள். அதைப் போலவே பல இடங்களிலே பூக்கள். அந்தப் பூக்கள் அபரிமிதமாக

[திரு. குமரி அனந்தன்] [1985 மார்ச் 29

வருகின்றன. அது திருவனந்தபுரத்திற்கோ, மதுரைக்கோ வந்து, விமானம் மூலம்தான் மற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆக, மரச் சீனிக் கிழங்கிலேயிருந்து ஸ்டார்ச் போன்றவைகளைத் தயாரிப்பதற்கு, குளுக்கோஸ் போன்றவைகளைத் தயாரிப்பதற்கு வழி செய்ய வேணடும். ஏன் சாராயமே தயாரிக்கலாம் என்று சொல்கிறார்கள். தேவைப் பட்டால் அது கூட — நமக்கு விரோதமாக இருந்தாலும்கூட — நமக்குத் தேவையென்றால் அதையும்கூட தயாரிக்கலாம்; பூக்களிலேயிருந்து தைலம் எடுப்பது, தக்காளியிலேயிருந்து ஜூஸ் எடுப்பது போன்றவைகளை எல்லாம் நாம் செய்து கொடுத்தோம் என்றால், அந்த மக்கள் உற்பத்தி செய்த பொருள்கள் எல்லாம் வீணாகிப் போகின்றன, விலை கிடைக்காமல் போகிறது என்று சொல்கிற மனக் குறை இல்லாமல் இருப்பார்கள் என்பதற்காக இவைகளை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதைப் போலவே இன்று ஒரு செய்தியினை மக்கள் மிகுந்த கோபத்தோடு எங்களுக்குச் சுட்டிக் காட்டினார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற மக்கள், பனை ஏறுகின்ற தொழிலிலே இருக்கின்றவர்கள், எந்த விதமான உரிமமும் பெற வேண்டியதில்லை.

They need not get any licence or permit

அங்கே இருக்கிற மக்கள் மரங்களிலே ஏறி அவர்களுடைய வாழ்க்கையை நடத்தலாம். அதனைப் பின்பற்றி நமது தமிழ்நாடு அரசாங்கம், மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையிலே இருக்கிற அரசாங்கம், தமிழகத்திலே எந்தப் பகுதியிலே வாழ்கின்றவர்களாக இருந்தாலும், அவர்கள் மலையேறிப் பிழைக்கின்றவர்களாக இருந்தாலும், உரிமம் பெற வேண்டியதில்லை என்ற ஒரு உத்தரவு இட்டார்கள். என்ன காரணம் என்றால், பதநீர் விற்றுக் கொண்டு போகிற பெண்களிடம் போலீசார் உரிமம் இருக்கிறதா என்று கேட்பது; வா என்று சொல்லி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் உட்கார வைப்பது, சற்று நேரத்திலே அந்தப் பதநீர் புளித்து, மாலை நேரத்திலே ஏறத்தாழ கள்ளாகிவிடும். உடனே, பார்த்தாயா, நீ கள்தான் விற்றுக் கொண்டிருந்தாய் என்று சொல்வது? இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் இருந்த காரணத்தால்தான் பொது மக்களுடைய துன்பத்தைப்



1985 மார்ச் 29] [திரு. குமரி அனந்தன்]

போக்குவதற்காக நமது தமிழக அரசாங்கம் உரிமம் வேண்டாம் என்று சொல்லிற்று. ஆனால், மீண்டும் அந்த உரிமம் வேண்டுமென்று ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டதாகத் தகவல். அப்படி மீண்டும் உரிமம் வேண்டுமென்று அரசாணை பிறப்பிக்கப் பட்டிருக்குமேயானால், முன்பு என்ன கொடுமைகள் தவிர்க்கப்பட வேண்டுமென்பதற்காக உரிமம் வேண்டாம் என்று சொன்னோமோ, அந்தக் கொடுமைகள் எல்லாம் தலைவிரித்தாட ஆரம்பித்துவிடும். எனவே கிராமங்களில் உள்ள மக்களைக் கொண்டே இதற்கென்று ஆங்காங்கே குழுக்களை அமைத்து, அந்தந்த கிராம மக்களே நேரிடையாக அந்த வேலைகளில் ஈடுபடுகிற வகையில் அந்தத் திட்டத்தை அமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

எங்கள் பகுதி மிகவும் வறண்ட பகுதியாக இருப்பதினால் எங்கள் பகுதியில் உள்ள கண்மாய்களை தூர் எடுப்பதற்கும், வரத்துக் கால்வாய்களை செம்மைப்படுத்துவதற்கும் திட்டம் தீட்டிச் செயல்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர்கள் இங்கே அமர்ந்திருக்கிறவர்கள் மூலம் நான் அரசை பணிவோடு கேட்டுக் கொள்வேன், இப்படிப்பட்ட உரிமம் பெறுகிற நிலையெல்லாம் நமக்கு வேண்டாம்.

அடுத்த செய்தியாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் ஏறத்தாழ 4 லட்சம் குடும்பங்கள் இருக்கிறார்கள். 4 லட்சம் குடும்பங்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் நெசவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக இருக்கிறார்கள். இந்த நெசவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக இருக்கிறவர்கள் பனையிலிருந்து கீழே விழுந்துவிட்டால் அவர்களுக்கு நிதியுதவி கொடுக்கிற அளவிற்கு அரசு நல்ல மனதோடு காரியம் செய்கிறது. ஆனால் சில நிபந்தனைகளை விதித்து இருக்கிறோம். அந்த நிபந்தனை கட்டுகளிலிருந்து அவர்கள் விடுபட முடியுமா என்பது தெரியவில்லை. உதாரணமாக ஒருவன் புளிய மரத்திலிருந்து கீழே விழுந்து இறந்தால் அவன் கீழே விழுந்து செத்தான் என்று பிரேத பரிசோதனைச் சான்றிதழ் போதும். ஆனால் ஒருவன் பனையிலிருந்து கீழே விழுந்து விட்டான் என்றால் கீழே

[திரு. குமரி அனந்தன்] [1985 மார்ச் 29

விழுந்து செத்தான் என்பதோடு மட்டுமல்லாமல் அவன் கள் குடிக்காமல் இருந்தான் என்பதையும் நிரூபிக்க வேண்டும். அவன் போதையில் இல்லாமல் இருந்தான் என்பதையும் நிரூபிக்க வேண்டும். எனவே என்ன செய்கிறார்கள் என்றால் இரண்டுவிதமான சோதனை. கீழே விழுந்து செத்தான் என்பதற்கு ஒரு டாக்டருடைய சான்று; அதற்குப் பிறகு அவனுடைய வயிற்றில் கள்ளினுடைய போதைப் பொருள் எதுவும் இல்லாமல் இருக்கிறது என்று நிரூபிப்பதற்காக அந்தக் குடலை எடுத்து ஃபாரென்சிக் லாபரட்டரி என்று சொல்கிறார்களே, நச்சு பொருள் ஆய்கின்ற ஆய்வுக் கூடத்திற்கு அனுப்புகிறார்கள். இந்த ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பி அவர்கள் ஏதாவது ஒரு பகுதி இப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் கீழே விழுந்தவன் குடும்பத்திற்கு எதுவும் கிடையாது. ஆகவே அவன் குடிக்கவில்லை என்று நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்க வேண்டுமென்ற நிலை ஏற்படுகிற போது விதவைப் பெண்களாக இருக்கிறவர்கள் அழுது துடிக்கிற நிலை மிகவும் பரிதாபகரமானதாக இருக்கிறது. ஏனென்றால் விரைவில் நடைபெறுகிற காரியமில்லை அது. ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். செங்கல்பட்டு மாவட்டத்தில் பழையசீவரம் என்ற ஊர் இருக்கிறது. அந்த இடத்தில் ஒருவன் பனை மரத்திலிருந்து கீழே விழுந்து செத்தான் என்று முடிவிற்கு வந்து விட்டார்கள். அப்படி செத்தவனுடைய குடலிலே போதை பொருள் இல்லை என்பதை ஆராய்வதற்காக குடலை எடுத்து வைத்திருக்கிறார்கள். இன்னும் ஃபாரென்சிக் லாபரட்டரிக்கு அனுப்பவில்லை. இரண்டு வருடங்களாக அங்கே இருக்கிறது. இரண்டு வருடங்களாக எடுத்து வைக்கப் பட்டிருக்கிற குடல் பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்று சொன்னால் அவனுடைய குடும்பம் என்னவாகும் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே இப்படிப் பட்ட பல்வேறு நிபந்தனைகளைப் போட்டு அந்தத் தலைவனை இழந்த குடும்பத்தை தத்தளிக்க விட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மாவட்டங்களில் பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் இருக்க வேண்டுமென்ற ஆசையோடு, 1948 ஆம் ஆண்டில் இவைகளைத் தொடங்கினோம். 1948-ல்,



1985 மார்ச் 29] [திரு. குமரி அனந்தன்]

தொடங்கியதற்குப் பிறகு கூட இன்று வரையில் மொத்தமாக இருக்கிற சங்கங்கள், ஆரம்ப சங்கங்கள் என்று சொல்கிறார்களே, அந்த பிரைமரி சங்கங்கள் 1,023 தான். மீனவர்கள் சங்கங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று பார்த்தால், நெசவாளர்கள் சங்கங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று பார்த்தால், விவசாயிகள் சங்கங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று பார்த்தால், இவைகளுக்கு பக்கத்திலே வைத்து அதனைப் பார்த்தால் இது எந்தஅளவிற்கு முன்னேற வேண்டுமோ அந்த அளவிற்கு முன்னேறவில்லை. இதற்கு என்ன காரணம் என்றால் போதிய கவனத்தை செலுத்த முடியவில்லை என்பது தான். காதி அண்ட் வில்லேஜ் இண்டஸ்ட்ரிஸ் துறையோடு இருக்கிறது பனை பொருள் உற்பத்தி அல்லது பனைத் தொழில். இதனை காதி அண்ட் வில்லேஜ் இண்டஸ்ட்ரிஸ் துறையிலிருந்து தனியாகப் பிரித்து ஒரு வாரியமாக மாற்றி விட வேண்டும். அப்படி மாற்றி இவர்களுடைய பிரச்னைகளை நல்ல முறையில் ஆராய்ந்து இவர்களுக்கு என்ன உதவிகளைச் செய்ய முடியுமோ அவற்றைச் செய்ய வேண்டும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், இது எந்தவகையில் செயல்படுகிறது என்பதைப் பார்ப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய சட்டமன்றக் குழுவை அமைக்கலாம். தமிழகத்திலே இருக்கிற 4 கோடி பனை மரங்களில் ஒரு கோடி மரங்கள் தான் பயன் தருகின்றன. மீதியிருப்பவை பயன் தரவில்லை. இந்த பனை ஏறுகிற தொழிலாளர்கள் மட்டுமல்லாமல், இந்த பனை பொருள்களை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிற பாய்முடைவோர், பெட்டிமுடைவோர் போன்றவர்களுக்கெல்லாம் வாழ்க்கை வசதிகளை செய்து கொடுப்பதற்கு இந்தச் சட்டமன்றக் குழுவின் மூலம் ஒரு அறிக்கை கொடுக்க செய்யலாம் என்பதை உங்களிடம் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, பனை மரத்தில் எடுக்கிற பதநீரை உடனடியாக கருப்புக் கட்டியாக காய்ச்சி அதனைச் சந்தைக்கு கொண்டு போக வேண்டுமென்றால் விறகு மிகவும் அதிகமாகத் தேவைப் படுகிறது. காடு வளர்ப்பு நமக்கு தேவைப்படுகிற நேரத்தில், விறகை எல்லாம் வெட்டிப் போட்டு, காட்டை அழித்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, இப்போது ஒரு நல்ல இயந்திரம்

[திரு. கோ. இரகுபதி] [1985 மார்ச் 29

1985-86 ஆம் ஆண்டுக்கான இந்த 8-வது நிதிநிலை அறிக்கையிது ஏழை எளிய மக்களுக்கும், விவசாயிகளுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கு பால் பெருக்கும் திட்டங்களுக்கும், கிராமக் குடிநீர் திட்டங்களுக்கும், உழவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுக்கும் திட்டங்களுக்கும் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங் களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தும், தொழிலாளர் நலனுக்கும், இளைஞர் நலனுக்கும் தேவையான நல்ல பல திட்டங்களுக்கும் இன்னும் பல திட்டங்களுக்கு வழிவகை செய்து, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களைத் தயாரித்து அளித்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் காட்பாடி தொகுதி மக்கள் சார்பாகவும் என்னுடைய சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு பட்ஜெட்டைவிட இந்த ஆண்டு பட்ஜெட்டில் நிதிநிலை கூடி வந்திருக்கிறது, நலத் திட்டங்களுக்கு அதிகமாக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை வாழ்த்துவதோடு நன்றியோடு நடந்துகொள்ள வேண்டிய சூழ்நிலையில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல் இங்கே நாம் அன்போடு பழகுகிறோம்; உரிமையோடு வாதாடுகிறோம்; உரிமையோடு வாதாடும் சக்தியை நாம் பெற்றிருக்கிறோம்.

(முற்பகல் 11-30)

அப்படித் தீட்டுகின்ற தன்மையிலே, விவசாய முன்னேற்றத் திற்கான திட்டங்களிலே ஈடுபட்டு, விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருள்கள் அனைத்தும் நல்ல விதத்திலே விற்பனையானால் தான், அனைத்து மக்களும் வாழ்வதற்கும், அனைத்து தொழிலாளர்கள் வாழ்வதற்கும் உண்டான நிலைமையை நாம் உருவாக்க முடியும். அந்த வகையிலே வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டு இருக்கின்ற விவசாயிகள்தான் இன்றைக்கு அந்த நிலைமையை உருவாக்க முடியும். அந்த வகையிலே இந்த அரசு, புரட்சித் தலைவர் அரசு மண் வளப் பாதுகாப்பு போன்ற திட்டங்களையும், நீர் பாதுகாப்பு போன்ற திட்டங்களையும், பூமியை வளப்படுத்துகின்ற திட்டங்களையும், பாசன வசதி மேம்பாட்டுத் திட்டங்களையும் இங்கே வகுத்துத் தந்திருக் கிறார்கள்.



1985 மார்ச் 29] [திரு. கோ. இரகுபதி]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அப்படி வகுத்துத் தருகின்ற திட்டங்களை, விவசாயிகள் பயன் படுத்தி, நல்ல விதத்திலே பயிர் செய்து உற்பத்தியை உருவாக் கினால்தான், அத்தனை ஆலைகளும் சரி, அத்தனை மக்களும் சரி சுறுசுறுப்பாகச் செயல்பட முடியும் என்பதை இந்த மாமன்றமும் அறியும், நாடும் அறியும், நானும் நன்றாக அறிவேன்.

அதோடு மட்டுமல்லாமல், விவசாயி என்பவன், எப்படி மனிதனுக்கு முதுகெலும்பு மிகவும் எவ்வளவு அவசியமோ, அதைப்போல இந்த நாட்டு முன்னேற்றத்திற்கு விவசாயி முக்கியமானவன் என்பதை நாம் எல்லாம் நீண்டகாலமாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். அப்படிப் பார்க்கிறபோது, அந்த முதுகெலும்பு போன்ற விவசாயிகளை நாம் காப்பாற்றியாக வேண்டும். அந்த முதுகெலும்புக்குக் நோய் ஏற்படுமானால் அந்த நோயைத் தீர்க்க கூடிய வகையிலே, நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி விவசாயிகள் எந்தவித கஷ்டமும் இல்லாமல் இருந்தால்தான் நாம் நல்வாழ்வு பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற அந்த எண்ணத்தை நான் தெரிவித்துக்கொள் கிறேன். அந்த அடிப்படையிலே இந்த பட்ஜெட்டிலே நல்லபல திட்டங்களைத் தீட்டி அவர்களுடைய வாழ்வுக்கு வழிகாட்டுகின்ற வகையிலே இது அமைந்திருக்கிறது என்பதைப் பார்த்து நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

அந்த அடிப்படையிலே நிலமற்றோர் வேலைவாய்ப்பு ஈட்டுறுதித் திட்டம், கசிவு நீர் குட்டைகள் கட்டும் திட்டம், தடை அணைகள் கட்டும் திட்டம் போன்ற திட்டங்கள் இதிலே இருக் கின்றன என்பதை கண்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இதைப்பற்றி நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கசிவு நீர்க் குட்டைகளை கட்டும் திட்டம் இருக்கிறது. தடை அணைகள் கட்டுவதற்கு திட்டம் இருக்கிறது. மலைப் பாங்கான பிரதேசத்தில் இருந்து மழை பெய்கிறதுபோது, அந்தத் தண்ணீர் வாய்க்கால்கள் மூலமாக, வரத்துக் கால்வாய் என்று சொல்கிறோமே அதன் மூலமாக வந்து சேருவதற்கான அந்த வரத்துக்கால்வாய்களை சீரமைப்பதற்கான திட்டம் எதுவும் இந்த பட்ஜெட்டில் இல்லை என்பதை நான்

சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; ஆகவே மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள், இதைப் பரிசீலித்து, அந்த வரத்துக்கால்வாய்கள் சீராக சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இருந்தால்தான் குட்டைகளுக்கும், ஏரிகளுக்கும், இந்த அணைகளுக்கும் தண்ணீர் வருவதற்கு வசதியாக இருக்கும் என்பதை அவர்களும் அறிவார்கள். ஆகவே இதுபோன்ற வரத்துக்கால் வாய்களை உருவாக்குகின்ற திட்டத்தையும், இருக்கின்ற கால்வாய்களை சீரமைக்கும் திட்டத்தையும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு என்னுடைய பகுதியிலே ராஜாத் தோப்பு அணைக் கட்டு கட்டும் திட்டம் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலே இருந்த காலத்திலிருந்து போடப்பட்டது. அந்தக் காலத்தி லேயிருந்த உறுப்பினர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரை வைத்துத்தான், புரட்சித் தலைவருடைய தத்துப் பிள்ளை என்று சொல்லித்தான் வெற்றி வாகை சூடினார்கள். புரட்சித் தலைவருடைய எண்ணங்களுக்கு ஏற்ப அந்த எம்.எல்.ஏ. செயல்படுவார் என்றுதான் அந்தப் பகுதி மக்கள் அவருக்கு வாக்கு அளித்தார்கள். அதற்குப் பிறகு, அந்தத் தொகுதி மக்களை சந்திக்கச் செல்லாமல், இங்கே சென்னையிலே குடிபுகுந்துவிட்டு. . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையிலே இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசக்கூடாது.

**திரு. கோ. இரகுபதி:** ஆகவே அந்த நிலையில் நாங்கள் நன்றி கெட்டவர்களாக மாறவில்லை. புரட்சித் தலைவருடைய நல்ல திட்டங்களுக்கு ஏற்ப, மக்களுடைய நன்மைகளுக்கு ஏற்ப, புரட்சிகரமான திட்டங்களைத் தந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்றபோது, அவருடைய எண்ணத்தைப் பிரதிபலிக் கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது, நாம் பாராட்டத்தான் வேண்டும்.



அடுத்து ராஜாத்தோப்பு அணை, 1971 ஆம் ஆண்டிலிருந்து அந்த அணையைக் கட்ட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். போராடுவதோடு மட்டும் அல்ல, அவ்வப்போது அந்த மக்கள் மனுக்களையும் கொடுக் கிறார்கள். அங்கே வருகின்ற அமைச்சர்களிடத்திலேயும் அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். இப்படி சமயம் வரும்போதெல்லாம் இது குறித்து அந்த விவசாய மக்கள் எடுத்துச் சொல்லி போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த ராஜாத்தோப்பு அணைத் திட்டத்தைப் பற்றி அரசு பரிசீலனை செய்து, புலன் விசாரணை ரிப்போர்ட் பி.டபிள்யூ.டி. டிபார்ட்டிமெண்டிலேயிருந்து அரசுக்கு வந்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அந்த திட்டத்தை நாம் நிறைவேற்றிக் கொடுத்தோமேயானால், கிட்டத்தட்ட 2 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் அதனால் வாழும். அத்தோடு உணவு பெருக்குத் திட்டத்தின் கீழே உணவு உற்பத்தியும் அதிகமாகக் கிடைக்கும். தங்களுடைய வாழ்வும் அதனால் வளம் பெறும் என்ற நம்பிக்கை யோடு அந்த மக்கள் காத்திருக்கிறார்கள். இருக்கின்ற நிலைமையை பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே விரைவில் அதைச் செயல்படுத்த வேண்டும் என்று என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாகவும் நான் பணிவோடும் பண்போடும் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு அல்லாமல், வட ஆற்காடு மாவட்டம் ஒரு பின் தங்கிய மாவட்டம். நிலத்தடி நீரை நம்பியிருக்கிற மாவட்டம். ஆனால் அப்படி நிலத்தடி நீரையே நம்பியிருந்தாலும் அதன் மூலமாகவே நல்ல விளைச்சலை காணக்கூடிய மாவட்டம். இன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில் வேளாண்மையில் முதன்மை காணுகிற மாவட்டம் தஞ்சை மாவட்டம் என்று சொல்லப்படு கிறது. அதற்கு அடுத்த மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம். தஞ்சை மாவட்டத்தில் காவிரி நீர் பாய்வதன் மூலமாக பயிரிடு கிறார்கள். ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில் அதன் விவசாய பெருங்குடி மக்கள், சுமார் 100 அடி 150 அடி ஆழக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து, தங்கள் உழைப்பின் மூலமாக விவசாய உற்பத்தியில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

அந்த வகையில் பார்க்கும்போது, அந்த மாவட்டத்திற்கு அதிகமாக மின் பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கொடுக்க வேண்டும். இப்போது அரசாங்கம் ஓரளவு கொடுத்திருக்கிறது என்றாலும், இன்னும் அதிக அளவில் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதற்கு சில தடைக்கற்கள் பாலாறு பேசின் தடை என்ற பெயரில் அங்கேயிருக்கிற விவசாயிகளுக்கு இருக்கிறது என்பதை சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

இந்த பாலாறு பேசின் தடை திட்டம் 1931-லே ஆங்கிலேயன் காலத்திலே வகுக்கப்பட்ட ஒரு திட்டம். இந்த திட்டத்தை நீக்க வேண்டும் என்று பலமுறை . பல சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பலன்தான் இல்லை.

என்னிடம் என் தொகுதி மக்கள் கொடுத்திருக்கிற குறிப்பிலே பார்க்கும்போது வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள 36 ஒன்றியங்களில் 32 ஒன்றியங்கள் பாலாற்றுப் படுகைக்குள் அமைந்துள்ளன. இந்த 32 ஒன்றியங்களில் 11 ஒன்றியங்கள் கருமைப் பகுதி என வகைப்படுத்தப்பட்டுள்ளன. 18 ஒன்றியங்கள் சாம்பல் பகுதி என வகைப்படுத்தப்பட்டுள்ளன. 3 ஒன்றியங்கள் வெண்மைப்பகுதி என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கருமைப்பகுதி என்னும் அந்த வகையில், திமிரி, குடியாத்தம், சோளிங்கர், நாட்றாம்பள்ளி, பேரணாம்பட்டு, கந்திலி, அணைக்கட்டு, மாதனூர், கே. வி. குப்பம், ஆலங்காயம், திருப்பத்தூர் ஆகிய 11 ஒன்றியங்கள் கருமைப்பகுதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. நுண்ணிய ஆய்வு நிலநீர்ப்பிரிவால் நடத்தப் பெற்று, 'நாபார்ட்டு' என்ற நிறுவனத்தின் அங்கீகாரத்துடன், இந்த 11 ஒன்றியங்களில் நிலநீர் விலக்களிக்கப்பட்ட கிராமங்கள் சில இருக்கின்றன. இந்த 11 ஒன்றியங்களில் பாலாறு சான்றிதழும், நிலநீர் விலக்கு சான்றிதழும் இடைவெளி தளர்வு இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவசியம் பெறவேண்டும் என்ற நிலை இருக்கிறது. நிலநீர்ப் பிரிவிலிருந்து நிலநீர் விலக்கு சான்றிதழ், பெற்றப் பின்னரே, மாவட்ட ஆட்சித் தலைவரால் பாலாறு சான்றிதழ் மின் இணைப்பிற்காக அளிக்கப்படுகிற நிலை இருக்கிறது.





நிலநீர் விலக்கு சர்டிபிகேட் வாங்கவேண்டும் என்று சொன்னால் பி.டபிள்யூ.டி. துறைக்குச் சென்றால், அங்கே உள்ள அதிகாரிகளிடம் கோப்பு கீழே இருந்து, மேல் வரையில் போய் வர 6 மாதம் ஆகிறது. அதற்குப் பிறகு ரெவின்யூ துறைக்குப் போய் வர 6 மாதம் ஆகிறது. சாதாரண சிறு விவசாயிகளாக இருப்பவர்கள் இதையெல்லாம் சமாளிக்கக் கூடிய நிலையில் இல்லை என்பதைத்தான் நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு விவசாயி முன்னேற வேண்டுமானால் அவனுடைய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டும். மின் இணைப்போடு மழையும் சரியான முறையிலே சரியான காலத்திலே பெய்து, நீர்த்தேக்கங்களான கிணறு, ஏரி, ஆறு, குட்டைக் குளங்களை நிரப்ப வேண்டும்.

(முற்பகல் 11-40)

கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் சரியான நேரத்திலே கடன் கொடுக்கப்பட வேண்டும். அப்படி கொடுத்தால்தான் நாம் விலைவாசியை கண்காணிக்க முடியும். கொள்முதல் அடிப் படையில் விலையை கட்டுப்படுத்த முடியும். அப்படிச்செய்தால் தான் இது விவசாயிகளுடைய முதுகெலும்பை பாதுகாக்கின்ற ஒரு திட்டமாக இருக்கும். பாலாறு பேசின் திட்டத்தைப் பார்க்கும்போது யு.என்.டி.பி. பிராஜெக்ட் திட்டத்தின் அடிப் படையில் விலையை கட்டுப்படுத்த முடியும். அப்படிச் செய்தால் பகுதியில் இருக்கின்ற மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையிலே, பூமியிலே 60 அடிக்கு கீழே மண் வளம், தண்ணீர் கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக் கிறது. காவேரி போன்ற நதிகளிலே, அங்கே பாறையின் மேல் ஓடிக்கொண்டிருக்கின்ற நிலைமை என்று சொல்லப்படுகிறது. என்னவோ தெரியவில்லை. இந்த பாலாறு திட்டம் என்பது விவசாயிகளை நசுக்குகின்ற ஒரு திட்டமாக இங்கே அமைந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்த திட்டத்தை அறவே போக்க வேண்டும். அறவே போக்குவார்களானால், அந்த 'விவசாயி களுக்கு 'அழுகின்ற குழந்தைகளுக்கு பால் ஊற்றுவது' என்று சொல்வார்களே அப்படி இருக்கும். புரட்சித் தலைவர் அவர் களுக்கு மேலும் மேலும் நன்றி உள்ளவர்களாகவும் நாங்கள்

உள் அவர்களாகவும் இருப்பார்கள் என்பதை என் தொகுதி மக்கள் சார்பாகவும், விவசாய மக்கள் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு மத்திய அரசை கேட்க வேண்டும் என்று நம்முடைய அரசு நினைத்து இருக்கலாம். ஆனாலும் எங்களுடைய கோரிக்கை அதை விரைவாக செய்து கொடுக்க வேண்டும். நாங்கள் நிலத்தடி நீர் துறையிலே போராட வேண்டியிருக்கிறது. ரெவின்யூ துறையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஆர். ஐ. என்ற அடிப்படையில் கோப்புகள் போகவேண்டி இருக்கிறது. இரண்டும் ஒன்று சேர்ந்தால்தான் மின் இணைப்பிற்கான சர்ட்டிபிகேட் கொடுப்பதற்கான ஒரு நிலை ஏற்படுகிறது. அதை மாற்றி அமைக்கின்ற வகையில், சிறிய விவசாயிகள், குறுகிய நேரத்தில் பெரிய பெரிய அதிகாரிகளை பார்க்க முடியாத சூழ்நிலையில், அந்த சர்ட்டிபிகேட்டை கீழ்மட்ட அதிகாரிகளிடமிருந்து பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்கள், நில அடமான வங்கிகள், பல திட்டங்களை தந்திருக்கிறார்கள். ஆடு வளர்ப்புத் திட்டங்கள், பசுமாடுகள் வளர்ப்பதற்கான திட்டங்கள், கிணறுகள் கட்டுகின்ற திட்டங்கள் என்று தந்திருக்கிறார்கள்.

எல். டி. பாங்கில் சூப்பர்வைசர் போன்றவர்கள் எப்போது அந்த வங்கி பணியாற்றத் துவங்கியதோ, அப்போதிலிருந்து வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அரசுடைய கொள்கைபடி ஒரு அலுவலர் மூன்று வருடங்களுக்கு மேல் அந்த இடத்தில் பணியாற்றக்கூடாது. அப்படி பணியாற்றினால் ஊழல் நடப்பதற்கு ஏதுவாகும். ஆகவே அவர்கள் மாற்றப்பட வேண்டும் என்பது அரசினுடைய கொள்கை. அதன் அடிப்படையில் அவர்களை மாறுதல் செய்கின்ற ஒரு நிலையை உருவாக்கித்தர வேண்டும் என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் இந்த அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் சென்ட்ரல் பேங்க் என்று நம்முடைய அரசு மூலமாக செயல்படுகின்ற பேங்க் இருக்கிறது. அந்த பேங்க் என்று ஆரம்பிக்கப்பட்டதோ அன்றிலிருந்து, அந்தப் பணியாளர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். வெளியிலே செய்கின்றவர்கள் வெளியிலே செய்





கிறார்கள். உள்ளே செய்கின்றவர்கள் உள்ளே செய்கிறார்கள். உள்ளே இருப்பவர்கள் வெளியிலே செல்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் அவர்கள் அதைப் பயன்படுத்தாமல் நிலுவையாக இருக்கின்றன. எனவே அந்தச் சங்கத்தின் வளர்ச்சி கருதி, அந்தப் பணியாளர்கள் எங்கும் செயல்பட வேண்டும், எந்த டிபார்ட்மெண்டிலேயும் செயல்பட வேண்டும், என்ற நிலையை ஏற்படுத்தி ஊழலைத் தவிர்க்க வேண்டிய நிலையை ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற எண்ணத்தோடு மாற்றியமைத்து, கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய வங்கியில் நீண்டகாலமாக இருக்கின்ற பணியாளர்களை, கள பணியாளர்களாக, மாற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நாகால் என்ற ஏரி என்.ஆர்.ஈ.பி. திட்டத்தின் அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடிப் பார்வையில் பார்வையிடப்பட்டு, ஏறக்குறைய ரூ. 60 ஆயிரத்திற்கு எஸ்டிமேட் சாங்ஷன் செய்யப்பட்டு, அந்த ஏரியை விரைவிலே கட்ட வேண்டும் என்று பொதுமக்கள் பல கோரிக்கைகள் விடுத்தும் இன்னும் செய்யப்படவில்லை. அந்தத் திட்டத்தை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கோள்கிறேன்.

1978 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் காட்பாடி ரெயில்வே ஸ்டேஷன் மேம்பாலத்தை பார்வையிட்டு, அந்தப் பாலம் வலுவிழந்த பாலம், உடனடியாக அதனை சீர்செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு, ஹைவேய்ஸ் சி.ஈ. போன்ற அதிகாரிகளை அழைத்து திட்டங்களைத் தீட்டினார்.

நம்முடைய தமிழக அரசு மத்திய சர்க்காருக்கு, இன்வெஸ்டிகேஷன் என்ற அடிப்படையில், அதற்குரிய பணத்தைக் கட்டியிருக்கிறார்கள் என்று 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார்கள். அந்தத் திட்டம் இன்றுவரைக்கும் செயல்படுத்தப்படவில்லை. காட்பாடி மேம்பாலம் குறுகிய பாலமாகவும், வலிவில்லாத பாலமாகவும் இருக்கிற காரணத்தினால் பல ஆக்சிடென்ட்ஸ் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தப் புள்ளிவிவரம் எல்லாம் அரசுக்கு நன்றாகத் தெரியும். அந்த ரயில்வே பாலத்தை, விரிவுபடுத்த வேண்டும் என்பது புரட்சித் தலைவர் அவர்களுடைய

[திரு. கோ. இரகுபதி] [1985 மார்ச் 29

திட்டமாகும். அவர்களுடைய நல்ல எண்ணத்தோடு உருவாக்கப்பட்ட திட்டம் ஆகும். ஆகவே அந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கே. வி. குப்பம் வட்டாரத்திலே தண்ணீர் உப்புத் தண்ணீராக இருக்கிறது. ஸ்டேஜ் 3 ஆக இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதி மக்களுக்கு விரைவிலே நல்ல தண்ணீரை பாலாற்றுத் தண்ணீரை தரவேண்டுமென்று அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அமைக்கின்ற திட்டம் அடிப்படையில் அந்த இன்வெஸ்டிகேஷன் செய்து, எஸ்டிமேட் போட்டு, அனுப்பி 6 மாதம் ஆகிறது. ஆனால் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை விரைவிலே ஏற்படுத்திக் கொடுத்து அந்தத் தொகுதி மக்களுக்கு பாலாற்றுத் தண்ணீரைக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து வடுகந்தாங்கல் காவனூர், பழைய கிருஷ்ணாபுரம் ஆகிய திட்டங்களும் இருக்கின்றன, அவைகளையும் விரைவிலே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வட்டார வளர்ச்சி என்ற அடிப்படையிலே என்.ஆர்.இ.பி. திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மஸ்டர் ரோல் என்ற அடிப்படையில் செய்யப்படுகிறது. வேலைவாய்ப்பை அரசே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற வகையிலே செயல்படுத்தப்படுகிறபோது பி.டி.ஓ. எஞ்சினியர், கிராம சேவக் ஆகியோர்கள் அந்தத் திட்டத்தையே மாற்றியமைக்கக்கூடிய எண்ணங்களை பிரதிபலிக்கக்கூடிய முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஊழல் ஏற்படாமல் நாம் எண்ணுகிற திட்டங்களை மக்களுக்காகவும், ஏழை எளிய மக்களுக்காகவும் நிறைவேற்றுகிற முறையிலே அவர்கள் வேலைவாய்ப்பைப் பெறவேண்டுமென்ற முறையிலே செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய திட்டங்கள் அனைத்தும் வரவேற்கக்கூடிய திட்டங்களாகவும், செயல் முறைத் திட்டங்களாகவும், நேர்மையாகவும், கண்ணியத்தோடும் செயல்படுத்தப்படுகிற திட்டங்களாகவும் இருக்கின்றன. அந்தத்



1985 மார்ச் 29] [திரு. கோ. இரகுபதி]

திட்டங்களைக் கொண்டது இந்த பட்ஜெட் ஆகும். 1985-86 ஆம் ஆண்டினுடைய பட்ஜெட் வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. ஏழை எளிய மக்களுக்காகவும், விவசாய மக்களுக்காகவும் கொடுக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதமாகும் அது என்பதைச் சொல்லி எனக்கு வாய்ப்புக் கொடுத்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும், பேரவை தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் நான் பேசு
வதற்கு முன்னால் நம்முடைய பாரதப் பிரதமர் திரு. ராஜீவ்
காந்தி அவர்களுக்கும் என்னை இந்த அளவுக்கு வளர்த்து
ஆளாக்கிய அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர்
திரு. ஜி. கே. மூப்பனார் அவர்களுக்கும் திருவிடை மருதூர்
தொகுதி வாழ் மக்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும்
தெரிவித்துக் கொண்டு உரையை ஆரம்பிக்கிறேன்.

1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழகத்தினுடைய நிதிநிலை
அறிக்கையில் தஞ்சை மாவட்ட விவசாயிகள் பல்வேறு சலுகைகள்
கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் நிதிநிலை
அறிக்கையில் போதுமான சலுகைகள் அறிவிக்கப்படவில்லை.
கடந்த 4 ஆண்டுக்காலமாக வெள்ளத்தாலும் இந்த ஆண்டு சம்பா,
தாளடிப் பயிர்கள் மஞ்சள் நோயாலும் பாதிக்கப்பட்டு வாங்கிய
கடன்கள் கட்டமுடியாமல் குத்தகை அளிக்க முடியாமல் இருக்
கிறார்கள். தமிழக அரசை நம்பிக்கொண்டிருக்கிற தஞ்சை
மாவட்ட விவசாயிகளுக்கு உள்ள குத்தகை பாக்கிகளை தள்ளுபடி
செய்தும் சிறு விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்தும் மற்ற
விவசாயிகளுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்து அசலை தவணை
முறையில் வசூலித்தும் ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். ஒத்திவைக்கப்பட்ட நிலவரி பாக்கி
களை தள்ளுபடி செய்து அந்த விவசாயிகள் பாதிக்கப்பட்ட
நிலையைக் கருத்தில் கொண்டு தஞ்சை மாவட்ட விவசாயிகளை
வாழ வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த 1983-84
ஆண்டு வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் கூட நம்முடைய
நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று வெள்ளத்தால்

[திரு. மு. இராசாங்கம்] [1985 மார்ச் 29

நிலங்கள் பெரும் அளவுக்குப் பாழடைந்து விட்டன, அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு விட்டது என்பதையும் மனதிலே கொண்டு தஞ்சை மாவட்ட விவசாயிகளை அரசு பாதுகாக்க வேண்டும். பல தொல்லைகளை அனுபவித்துக்கொண்டு வரும் தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஓய்ந்துவிட்டால் தமிழகம் உணவு உற்பத்தியில் பின்னடைந்துவிடும் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கிறேன். நெல்லுக்குக் கொடுத்துவருகிற ஊக்க போனஸ் உரம் கொடுப்பதற்குப் பதிலாக வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறபோது அவர்களுக்கு அந்தத் தொகையை ரொக்கமாக கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த 2 பொதுத் தேர்தல்களில் ஆளும் கட்சிக்கு எதிராக உறுப்பினர்களை, இந்த அவைக்கு தெரிந்து எடுத்து அனுப்பினார்கள். அந்த காரணத்தினாலோ என்னவோ தமிழகத்தினுடைய ஆளும்கட்சியாக இருந்த அ.இ.அ.தி.மு.க. அரசால் புறக்கணிக்கப்பட்ட மாவட்டமாக தஞ்சை மாவட்டம் இருந்தது. ஆனால் அதனை உணர்ந்த தஞ்சை மாவட்ட மக்கள் பெருவாரியாக வோட்டுகள் போட்டு ஆளும் கட்சியினையும், ஆளும் கட்சியின் தோழமைக் கட்சி உறுப்பினர்களாகிய எங்களையும் தேர்ந்து எடுத்து அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு மனிதாபிமான உணர்வுடன் தஞ்சை மாவட்ட விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுகின்ற விதத்தில் அவர்களுக்கு நிவாரணம் அளித்து அவர்களை வாழ வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தஞ்சை மாவட்ட விவசாயிகளைப் பொறுத்த வரையில் வருடத்திற்கு சுமார் 2, 3 மாதங்கள் தான் மின்சார மோட்டார்களை உபயோகிக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அவசரத் தேவைக்காகத் தான் மின்சார மோட்டார்களை உபயோகிக்கிறார்கள். அதற்காக வாங்குகின்ற கட்டணம் ஒரு குதிரை சக்திக்கு 75 ரூபாய் என்று இருப்பதை சிறு விவசாயிகளுக்கு அளித்துள்ள சலுகைகளைப் போல் அளிக்காவிட்டாலும்



1985 மார்ச் 29] [திரு. மு. இராசாங்கம்]

உபயோகிக்கின்ற மின்சாரத்திற்குரிய கட்டணத்தை வசூலிக்க அரசு உரிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த அவையில் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

(முற்பகல் 11-50)

அடுத்து, உலக வங்கியின் உதவி கொண்டு தஞ்சை காவேரி
பாசன கால்வாய்களை நவீனப் படுத்தும் திட்டத்தை விரைவுப்
படுத்தி செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
பாசன கால்வாய்களை அரசினுடைய செலவிலேயே முழுமையாக
செம்மைப்படுத்தி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். விவசாய பகுதியாக விளங்குகின்ற திருவிடைமருதூர்
தொகுதியில் அரசின் நிதிநிலை அறிக்கையில் கூறியபடி நிறுவ
இருக்கின்ற சர்க்கரை ஆலையில் ஒன்றை அமைத்துத் தர
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கல்வித் துறையைப் பொறுத்தவரையில், நான் ஒரு
சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். சரியான பராமரிப்பு
இல்லாமல் நடைபெறுகின்ற தனியார் பள்ளிகளை அரசு ஏற்று
நடத்த ஆவன செய்வதுடன் தனியார் பள்ளி ஆசிரியர்களை அரசு
ஊழியர்களாக ஆக்கி அவர்களுக்கு பயண . சலுகைகள், ஓய்வு
பெறும்போது அரசு ஊழியர்களுக்கு கொடுப்பது போன்று
10 ஆயிரம் ரூபாய், திருமண முன் பணம், வீடு கட்ட கடன்
போன்ற சலுகைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். எங்கள் திருவிடைமருதூரில் பெண்கள்
மேல்நிலைப்பள்ளி ஒன்றும், திருவிசநல்லூர், கதிரா
மங்கலம் ஆகிய பகுதிகளில் ஒரு உயர்நிலைப்பள்ளியையும்
அமைக்க உரிய முயற்சிகளை அரசு எடுத்துக் ,கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். நாச்சியார் கோயிலில் பெண்கள்
மேல்நிலைப்பள்ளி அமைக்க பொது மக்களால் நன்கொடை
திரட்டப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கடந்த இரண்
டாண்டுகள் ஆகியும் அனுமதி கிடைக்காமலிருக்கிறது. அதற்கு
உரிய அனுமதியையும் அரசு வழங்க ஆவன செய்ய வேண்டு
மென்று இந்த அவையிலே கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மு. இராசாங்கம்] [1985 மார்ச் 29

அடுத்து, நெசவாளர்களும், விவசாயிகளும் வாழ்கின்ற திருபுவனம், திருநாகேஸ்வரம் ஆகிய பேரூராட்சிகளில் மேதகு ஆளுநர் உரையில் சொல்லியுள்ளதைப்போல மருத்துவமனைகள் ஏற்படுத்தியும், தலைநகரான திருவிடைமருதூரில் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி நடத்தவும் அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பனந்தாள் ஒன்றியத்தில் இரண்டாண்டுகளுக்கு முன்பு கூட்டு மன்றத்தினுடைய உதவியால் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை மருத்துவ அதிகாரியை நியமனம் செய்யாத 'காரணத்தால் இயங்காமல் இருக்கிறது. அதற்கு அரசு உடன் உத்தரவு பிறப்பித்து மருத்துவமனையை இயங்கச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக் கொள்கிறேன்.

திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட எல்லாக் கிராமங்களிலும் குடிநீர்ப் பம்புகள் பெரும்பாலானவை பழுதடைந்து கிராம மக்கள் குடிதண்ணீருக்காகக் கஷ்டப்படுகின்ற நிலையில் இருக்கிறது. மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும் சரியாக இயங்கவில்லை. ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம் பொதுமக்களும், நாங்களும் பலமுறை வற்புறுத்திச் சொல்லியும் சரிசெய்யப்படாமல் இருந்து வருகிறது. தஞ்சை மாவட்டத்து மக்களுக்குக் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை என்ற நிலையை மாற்றுவதற்கு அரசு உரிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக் கொள்கிறேன்.

திருவிடைமருதூர் நகரத்திலே பத்தாண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் நகரில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் குடிதண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம, நகரப் பகுதிகளில் மின்சார விளக்குகள் எரியாமல் கிராமங்கள் இருளிலே மூழ்கிக் கிடக்கின்றன. பல முயற்சிகளுக்குப் பின்னால் சிலயிடங்களில் தற்காலிகமாக, குழல்



1985 மார்ச் 29] [திரு. மு. இராசாங்கம்]

விளக்குகள் இருந்த இடத்திலே, அதை மாற்றி 230 வோல்ட் உள்ள பல்புகளைப் பொருத்துகின்றார்கள். அந்த பல்புகள் போடப்பட்ட அன்றே பழுதடைந்து விடுகின்றன. ஆகவே, அரசு உரிய கவனம் செலுத்தி, குழல் விளக்குகளோ அல்லது 250 வோல்ட் உள்ள மின் பல்புகளோ போடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளை அதிகமாக வளர்க்கின்ற, எங்கள் தொகுதியில் உள்ள திருநாகேஸ்வரம், திருச்சேறை ஆகிய இடங்களில் கால் நடை மருத்துவமனைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருவிடைமருதூர் தாலுக்காவாக சுமார் ஐந்தாண்டு களுக்கு முன் உயர்த்தப்பட்டு, முன்பிருந்த துணை வட்டாட்சியர் அலுவலகமும், கிளை சிறைச்சாலையும், வட்டாட்சி அலுவலக மாகக் கடந்த ஐந்தாண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதை அரசு உடனடியாகப் பரிசிலனைக்கு எடுத்துக்கொண்டு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு உரிய கட்டிடங்களைக் கட்டிக் கொடுப்பதுடன், குற்றவியல் நீதிமன்றமும, உரிமை இயல் நீதி மன்றமும், தியணைப்பு நிலையமும் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களில் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு வீட்டிற்கு ஒரு விளக்கு என்ற தமிழக அரசின் திட்டத்தின் கீழ் தேங்கியுள்ள மனுக்களைப் பரிசீலித்து, உடனடியாக மின்னிணைப்பு தருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அவையிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மனைப் பட்டாக்களுக்கு மனுச் செய்துள்ளவர்களுக்குப் பட்டா வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்து, தேங்கியுள்ள மனுக்களுக்கு மனைப்பட்டாக்களை வழங்கியும், இலவச வீடுகளைக் கட்டியும் கொடுக்கின்ற எண்ணிக்கையை உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதைப்போல, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையான 6.000

[திரு. மு. இராசாங்கம்] [1985 மார்ச் 29

ரூபாயை அதிகப்படுத்தி, 10,000 ரூபாயாகக் கொடுக்க உத்தரவிட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியிலே முதியோர் உதவித் தொகைக்கு கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கின்றன. இதையும் உடன் பரிசீலித்து வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அளிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகியும் இயக்குநர்கள் சரியாக இல்லாத காரணத்தால் இயங்காமல் இருக்கின்றன. அவற்றை இயங்கச் செய்வதோடு பேரூராட்சிகளுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இல்லம் ஒன்றிருக்கின்றது. அங்கே ஆதி திராவிட மாணவர்களுக்கென்று ஒரு இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருவிடைமருதூர் காவல் நிலையத்தைத் தாலுகா காவல் நிலையமாக ஆக்கவேண்டும். அதிகப்படியாகக் கலவரங்கள் நடக்கின்ற காரணத்தால் கும்பகோணத்தில் ஒரு காவல் கட்டுப்பாடு நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடிக்கடி கலவரம் நடக்கின்ற பகுதியாக இருப்பதன் காரணத்தால் வேப்பத்தூர் பேரூராட்சியில் ஒரு துணைக் காவல் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பட்டு மற்றும் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு அளிக்கும் ரிபேட் தொகையைப் பொறுத்தவரையில் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தத் தொகையைப் பொதுமக்களுக்கு அளித்திருக்கின்ற நிலையில், அரசு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல இலட்சக்கணக்கான ரூபாய் கொடுக்க வேண்டி இருக்கின்றது. இதனால் அந்தச் சங்கங்களுக்கு நிதி நெருக்கடி



1985 மார்ச் 29] [திரு. மு. இராசாங்கம்]

ஏற்படுகின்றது. எனவே அந்தத் தொகையை அவர்களுக்கு அளித்து அவர்கள் கடன் வழங்குவதற்குரிய வாய்ப்பினை அளிக்க வேண்டும். மேலும் சங்கங்கள் பெற்ற கடன்களைப் பொறுத்தவரையில் வட்டி அளிக்க வேண்டி இருக்கின்றது. ஆனால் சங்கங்கள் பெற்ற ரிபேட் தொகையை உடனடியாகக் கொடுக்காத காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் தடைபடுகின்றது. எனவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு அந்தத் தொகையை உடனடியாகக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக எங்கள் தொகுதியில் திருபுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏறத்தாழ 68 இலட்சம் ரூபாய் ரிபேட் தொகை அரசிலிருந்து வரவேண்டி இருக்கின்றது. அவர்களுக்குக் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் வங்கியிலிருந்து வாங்கிய கடன் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அந்தக் கழிவுத் தொகையினை அரசு உடனடியாகக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த இந்தப் பேரவைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

* திரு. ஆ. சிவக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மன்றத்திற்கு அடையாளம் காட்டி அனைவரும் அறிகிற வகையில் ஆளாக்கி வைத்த நான் வணங்கும் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வெற்றிக்காக அரும்பாடுபட்ட சமயநல்லூர் வாக்காளப் பெருமக்களுக்கும், தோழமைக் கட்சி அன்பர் களுக்கும், நண்பர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் நாவலர் அவர்களால் இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை குறித்த என்னுடைய எண்ணங்களைச் சொல்வதற்கு நான் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். குறிப்பாகச் சொல்லப்போனால் வசதி வாய்ப்பற்று விளங்கும் நாட்டினர் அனைவருக்கும் ஏழ்மையிலும், வறுமையிலும் உழலும் நலிந்தோருக்கும் நல்வாழ்வு அளிக்கின்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது என்பதை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

[திரு. ஆ. சிவக்குமார்] [1985 மார்ச் 29

1985-86 ஆம் ஆண்டுத் திட்டத்தில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றவும், புதிய திட்டங்களைத் தொடங்கவும் நிதி ஒதுக்கப் பட்டு இருக்கின்றது. குறிப்பாகப் பொருளாதார வளம் பெருமளவுக்கு முன்னேறவும், மின்சக்தி, வேளாண்மை போன்ற வைகளுக்காக அதிக நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டிருக்கின்றது.

அடுத்தபடியாக இலங்கைப் பிரச்சினையை எடுத்துக்கொண் டால் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு எங்களது தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவர், தானைத் தலைவர், நிரந்தரத் தலைவர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மண்டபம், கோட்டப்பட்டு மற்றும் பல இடங்களில் முகாம்களை அமைத்திடச் செய்து அவர்களுக்கு பண உதவி, உணவு, மலிவு விலையில் அரிசி, உடை, சமையல் பாத்திரங்கள் போன்ற வற்றைத் தந்து வாழ்வளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை அவர்களுக்கு 40 கோடி ரூபாயைக் கடனாகவும், மானியமாகவும் இந்த அரசு வழங்கியதோடு மட்டுமல்லாமல், நடப்பாண்டில் மட்டும் ரூபாய் 66 இலட்சம் வழங்கியிருக்கிறார்கள். இதற்குப் பின்னாலும் எதிர் அணியில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசு இலங்கைப் பிரச்சினை குறித்து என்ன செய்திருக்கின்றது என்று பேசுகின்றபோது உள்ளபடியே அவர்களுக்கெல்லாம் இதயம் இருக்கின்றதா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

அடுத்தபடியாக, தொழில் துறையைப் பொறுத்தமட்டில் புரட்சித் தலைவர் அரசு ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகிறது. உதாரணத்திற்குச் சொல்லப் போனால் சிப்காட்டின் உதவியின் பேரில் கும்மிடிபூண்டி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை போன்ற இடங்களிலே 4 தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தி அதன் மூலமாக எத்தனையோ நூற்றுக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமின்றி, தொழில் முதலீட்டு நிறுவனம் மூலமாக, புதிதாகத் தொழில்களைத் தொடங்கவும், செயல்பட்டு வரும் தொழில் பிரிவுகளை விரிவுபடுத்தவும், நவீனமயமாக்கவும் கடன் வசதிகளை அளித்து வருகிறது.



1985 மார்ச் 29] [திரு. ஆ. சிவக்குமார்]

அதே போன்று கல்வியைப் பொறுத்தமட்டில் இந்த அரசு எடுத்துக்கொள்ளும் முயற்சி பல நாடுகளுக்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் கல்விக்காக ஒதுக்கிய தொகை ரூ. 468 கோடியாகும். அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்கும் திட்டத்தினால் நாம் அடைந்துள்ள சாதனை போற்றுதற்குரியதாகும்.

5 முதல் 11 வயது தொகுதியினரைப் பொறுத்தமட்டில் 95 சதவீதம் என்ற இலக்கை அனைத்திந்திய அளவில் நிர்ணயித்திருந்தாலும், நம்முடைய நாடு 98.66 விழுக்காட்டை எட்டியிருக்கிறது. அதேபோல, 11 முதல் 14 வயது தொகுதியினரைப் பொறுத்தமட்டில், நிர்ணயித்துள்ள இலக்கு 50 சதவீதம் ஆகும். ஆனால் நாம் அடைந்த சாதனை 72-18 சதவீதம் ஆகும். 1984-85 ஆண்டில் இந்த வயதில் 2.98 இலட்சம் பேர் கூடுதலாகப் பள்ளியில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஆறாவது திட்டக் காலத்தில் 13.67 இலட்சம் பேர்கள் கூடுதலாகப் பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இவ்வாறு குழந்தைகளின் எண்ணிக்கை கூடுகின்றபோது 1985-86 ஆம் ஆண்டு கூடுதலாக 500 இடைநிலை ஆசிரியர்களும், 75 தமிழாசிரியர்களும், 50 உடற்பயிற்சி ஆசிரியர்களும், 150 பட்டதாரி ஆசிரியர்களும் 75 பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களும் நியமிக்க வேண்டிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

குறிப்பாக, கோவையில் பாரதியார் பல்கலைக் கழகமும், திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பல்கலைக் கழகமும், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகமும், கொடைக்கானலில் அன்னை தெரசா பல்கலைக் கழகமும் கட்டிடம் கட்டவும், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவும், இந்த அரசு மானியம் வழங்கியுள்ளது. அதேபோன்று காரைக்குடியிலும் பல்கலைக் கழகம் கட்டிட சட்டம் உருவாக்கி அதனை நிறைவேற்றிட முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

[திரு. ஆ. சிவக்குமார்] [1985 மார்ச் 29

அதேபோன்று தொழில் நுட்பக் கல்லூரியானாலும், வேளாண்மைக் கல்லூரியானாலும், சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம் லத்திவாடியில் இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரியானாலும் தொடங்குவதற்கு இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக, 1984-85 ஆம் ஆண்டில் மட்டும் 17 பொறியியல் கல்லூரிகளை தொடங்க அனுமதி தந்திருக்கிறது அரசு என்பதனை இதயமுள்ள எவரும் மறப்பதற்கில்லை.

சத்துணவுத் திட்டம், நல்ல திட்டம் இல்லையா? 80 இலட்சம் ஏழைக் குழந்தைகள், குறிப்பாக அரிசனக் குழந்தைகள் நன்மை அடையவில்லையா? ஆயிரக்கணக்கான முதியோர்கள் வயிறார சாப்பிடவில்லையா? நம் மாநிலம் மட்டுமின்றி, பிற மாநிலத்தவர்கள் பாராட்டவில்லையா? ஆண்டி முதல் அரசர் வரை இத்திட்டத்திற்கு ஆதரவு தரவில்லையா? பிறகு ஏன் இதைக் குறை கூறுகிறீர்கள். பிச்சைக்காரர்கள் திட்டம் என்கிறீர்கள், 6 மாதத்திற்கு நடைபெறாது என்கிறீர்கள். தேர்தல் வந்தால் மட்டும் சத்துணவை, சத்துணவாகவே போடுகிறோம், இலையில் போடுகின்றோம் என்கிறீர்கள். இதெல்லாம் என்ன இரட்டை வேடம்? "மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடமா?" ஆகவே, எதிர் அணியில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்குச் சொல்வதெல்லாம் நல்ல பல திட்டங்களைத் தயவுகூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள். எதிர்க்கட்சி என்றாலே எதையும் எதிர்க்க வேண்டும் என்பது பொருளல்ல. எதிர்க்க வேண்டியதை, எதிர்க்க வேண்டிய நேரத்தில், எதிர்க்க வேண்டிய மரபுப்படி, தாராளமாக எதிர்த்துக் கூறுங்கள். வரவேற்கின்றோம், வாழ்த்துகின்றோம். ஏற்றுக்கொள்கின்றோம். அதை விடுத்து வாதத்திலே தங்களது வாழ்க்கையை நடத்தாதீர்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அடுத்தபடியாக எனது தொகுதியைப் பொறுத்தமட்டில் முழுமையாக விவசாயத்தையே நம்பி இருக்கும் தொகுதியாகும். இந்த ஆண்டு "துங்ரோ வைரஸ்" என்ற புதுவகையான நோய் தாக்குதலினால் ஏக்கருக்கு 30 மூடை, 40 மூடை என்று விளைச்சல் தந்து கொண்டிருந்த இடமெல்லாம் இவ்வாண்டு 2 மூடை, 3 மூடை என்ற அளவில் விளைச்சல் கண்டிருக்கிறது.



1985 மார்ச் 29] [திரு. ஆ. சிவக்குமார்]

பாவம் விவசாயப் பெருங்குடி மக்கள் ஏக்கர் ஒன்றுக்கு 1,000, 2,000 என்று செலவு செய்து இறுதியில் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இவை குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடமும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும், முறையிட்டதன் பேரில் அவர்கள் ஆவன

(பிற்பகல் 12-10)

செய்வதாக உறுதி கூறியுள்ளார்கள். ஆகவே இந்த அவையின் வாயிலாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிற காரணத்தினால், இந்த ஆண்டு சாப்பிடவே வழியில்லாத என்னுடைய தொகுதி விவசாயிகளுக்கு நிவாரணம் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

விவசாயக் காலங்களில் உரம், பூச்சி மருந்து, விதை போன்ற பொருட்களை தந்துதவுமாறும் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக இந்த ஆண்டு வசூலிக்க வேண்டிய வரிகளையும், கூட்டுறவு வங்கிகளின் மூலமாக வாங்கியிருக்கக் கூடிய கடன்களையும் ரத்து செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியின் பெயரை தாங்கி இருக்கக்கூடிய சமயநல்லூரில் மேல்நிலைப் பள்ளி ஒன்று இருபாலரும் இணைந்து படிக்கக்கூடிய வகையில் இயங்கி வருகிறது. இதில் ஏறக்குறைய 1,500 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். இந்த மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கை கொண்ட பள்ளி என்றும் சொல்கிறார்கள். சுமார் 500 மாணவிகள் படித்தாலும், தனியாக பெண்களுக்கென மேல்நிலைப் பள்ளி கிடையாது. எனவே, பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றை அமைத்திட அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஓரிருவர் இதனை அவைக்கு அறிவித்திருந்தாலும், என்னுடைய தொகுதி என்ற வகையில் நானும் சொல்வதற்கு கடமைப்பட்டவனாக இருக்கிறேன். எனது தொகுதியிலுள்ள அனல் மின் நிலையத்தை மீண்டும் துவக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மின்துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன். அது தற்போது

[திரு. ஆ. சிவக்குமார்] [1985 மார்ச் 29

எவ்வித இயந்திரமோ, அல்லது கதவு, ஜன்னல் கூட இல்லாமல் 'மூளி அலங்காரி' போன்று காட்சியளிக்கிறது. அதனை தாயுள்ளம் கொண்டவர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் மீண்டும் செயல்படச் செய்தால் இரு மாவட்டங்களுக்கும் பயனுள்ளதாக இருக்குமென்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அருகில் உள்ள பவர் ஹவுஸ் குடியிருப்பில் அடங்கிய அரசு ஓய்வு விடுதி ஒன்று, அன்றைய அதாவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்த ஒரு மாண்புமிகுவிற்காகவே கட்டப்பட்டதாகச் சொல்கிறார்கள். அது தற்போது பயனற்ற நிலையில் உயர் அதிகாரி ஒருவர் பயன்படுத்தி வருகிறார். அதையும் தயவுகூர்ந்து அரசு எடுத்து பயன்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலே புதூர் என்ற ஒரு ஊர் உள்ளது. இது என் தொகுதியிலேயே பெரிய ஊராகும். இங்கு காவல் நிலையம் ஒன்று அமைத்திட வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. அதனை ஏற்படுத்தித் தருமாறு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நான் சொல்ல விரும்புவது, எனது தொகுதியில் வைகை ஆற்றை இணைக்கின்ற வகையில் சக்குடிக்கும், மணலூருக்கும் இடையில் பாலம் ஒன்று அமைத்திட வேண்டுமென இந்த அவையின் மேலான கவனத்திற்கு கொண்டு வர ஆசைப்படுகின்றேன். அவ்வாறு இணைப்பதால் வியாபாரம், விவசாயம், போக்குவரத்து போன்றவைகள் நல்ல முறையில் செயல்பட ஏதுவாக இருக்குமெனச் சொல்லி, இந்த 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை ஒரு ஒப்பற்ற, உயர்ந்த, ஏழை, எளிய மக்களுக்கு பயன் தரக்கூடிய அறிக்கை என்பதைச் சொல்லி, வாய்ப்பினை தந்த மாண்புமிகு மன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலத்தைச் சொந்தமாக்குவது என்பது திட்டத்தின் [illegible] இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.



1985 மார்ச் 29] [திரு. பொ. உத்திராபதி]

1985-86 ஆம் ஆண்டுக்கு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற நிதிநிலை அறிக்கையில் ஆண்டு வருமானம் 2,368 கோடி 46 லட்சமும், செலவு 2,314 கோடி 86 லட்சமும், உபரி இருப்பது 53 கோடி 60 லட்சம் தான் என்று சொல்லி இருக்கிறார்கள். வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. புதிய வரியாகப் போட்டிருப்பது ரூ. 49 கோடி. ஆனால் இறுதி பற்றாக்குறை என்பது 219 கோடி 26 லட்சம் ரூபாய் ஆகும். மத்திய சர்க்கார் பட்ஜெட்டிலே புதிய வரி போட்டிருப்பது 3,669 கோடி ரூபாய். அங்கேயும் பற்றாக்குறை 3,015 கோடி ரூபாய்.

ஆக, எட்டாவது பொதுத் தேர்தலில் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் விலைவாசியைக் குறைப்பார்கள்; புதிய வரிகள் அதிகம் வராது என்று. ஆனால் மத்திய சர்க்கார் போடும் வரியும் பற்றாக்குறையும், தமிழ் நாட்டில் போடப்படுவது போல் ஒவ்வொரு மாநிலமும் போடும் வரியும் பற்றாக்குறையும் முழுமையாக மக்கள் தலையில்தான் இன்றைக்கு சுமத்தப் படுகிறது. மத்திய சர்க்காரில் இரயில் கட்டணத்தை உயர்த்தி யிருக்கிறார்கள். டீசலுக்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் மற்ற பொருள்களுக்கு வரி குறைவாக இருந்தாலும் சாராயத்தின் மீது வரி அதிகமாகப் போடப் பட்டிருக்கிறது. இரண்டாவதாக, போக்குவரத்துக் கட்டணம் உயர்த்தப்பட போகிறது. இன்றைக்கு சென்னைக்கு உயர்த்தப்பட்டிருக்கிற கட்டணம் எதிர்காலத்தில் தமிழ் நாடு முழுவதும் வரும். இதற்குக் காரணம் உலக வங்கி நம்முடைய நாட்டை அடிமைப் படுத்தும் வலுப்பெற்று வருகிறது. கடன் வாங்கியிருக்கிறோம்; வட்டியையும் முதலையும் திருப்பிக் கட்டுகிறோம். ஆகவே, அந்த உலக வங்கியின் உத்தரவினால் மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலைக்கு இன்றைக்கு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் தான் சொல்கிறோம் இந்த பட்ஜெட் மக்கள் தலையின் மேல் [illegible] சுமத்துகிறதே தவிர மக்களுக்கு வேகமாக விடுதலை கொடுக்கக் கூடிய அளவுக்கு அமையவில்லை என்று.

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 29

ஆனால் சாராயத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு வரி அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். இப்பேரம் பேச உதவும் சாராயம், கள்ளுக்கடை என்பது தனி மானியக் கோரிக்கையாக வந்தாலும் இதுபற்றி அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும். ஒரு கிராமம் கூட இன்றைக்கு பாக்கியில்லை. சத்துணவு போடுகிறோம், சீருடை கொடுக்கிறோம். இந்த இரண்டையும் குழந்தைகளுக்குக் கொடுத்துவிட்டு, குழந்தைகளின் தந்தையை குடித்துவிட்டு தெருவிலே உருளச் செய்வதாக இருக்கிறது. தெருவெல்லாம் சாராயக் கடை, கள்ளுக்கடை. ஒரு கிராமம் கூட பாக்கியில்லாமல் கரைபுரண்டு ஓடுகிறது. இதனால் குடும்பம் சீரழிந்து போகிறது. குடிப் பழக்கத்தைத் தடுக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பஸ் போக்குவரத்தில் ஒரு சீட்டுக்கு 30 ரூபாய் கூடுதலாக்கி யிருக்கிறார்கள். அதன் மூலம் 10 கோடி ரூபாய் எதிர் பார்க்கிறார்கள். உலக வங்கியின் வற்புறுத்தலுக்காக இந்த கட்டணத்தை உயர்த்துவதன் மூலம் மேலும் மக்களுக்கு பெரும் பாரமாக இது அமையும். எதிர்காலத்தில் கட்டணத்தைக் குறைக்க யோசிக்க வேண்டும்.

உற்பத்திப் பெருக்கத்தைப் பார்த்தால் இன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 60 இலட்சம் மெட்ரிக் டன் எதிர்பார்க்கிறோம் என்று. அது மட்டுமல்லாமல் குறுவை பருவத்தில் ஏக்கருக்கு 5 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சொல்வதிலே பெருமைதான். ஆனால் அவர்களுக்கு இருக்கிற பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டாமா?

இன்று காலையிலே கூட ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் போது விவசாயிகள் நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்திலும் பிற இடங்களிலும் பல்வேறு விதமான நோய்களால் பயிர் தாக்கப்பட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி பாதிக்கப்படுகிற விவசாயிகளுக்கு இந்த பட்ஜெட்டில் நிவாரணம் அளிப்பதற்கு ஏதாவது இருக்கிறதா என்றால் நிவாரணம் அளிப்பதற்கான அறிகுறியே இல்லை.



1985 மார்ச் 29] [திரு. பொ. உத்திராபதி]

அதே நேரத்தில் இன்றைக்கு இந்தியாவில் பெரிய ஆலை முதலாளிகள் ரிசர்வ் வங்கியில் கடன் வாங்குகிறார்கள். ஒவ்வோராண்டும் தொழில் வளம் பாதிக்கக் கூடாது என்பதற்காக மத்திய சர்க்கார் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்க்கு நிவாரணம் வழங்குகிறது. ஆலை முதலாளிகளுக்கு நிவாரணம் அளிக்கிற மத்திய சர்க்காரிடம் இந்த நாட்டு மக்களுக்கு உணவு அளிக்கக் கூடிய விவசாயிகள் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு நிவாரணம் அளிக்க எந்தவிதமான திட்டமும் இல்லை. இது பற்றி எதிர்காலத்தில் சிந்திக்க வேண்டும்.

அதைப்போன்று இருபது அம்சத் திட்டத்தில் ஒரு முக்கியமான திட்டம் அடிப்படை நிலச் சீர்திருத்தம். ஆனால் இந்த பட்ஜெட்டில் அதுபற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. நிலச் சீர்திருத்தம் இருபது அம்சத் திட்டத்தில் பிரதானமான ஒரு திட்டமாக இருக்கிறது. இந்த சட்ட மன்றத்திலே 1958ஆம் ஆண்டு முதல் 1960ஆம் ஆண்டு வரையில் உள்ள இடைக் காலத்தில் பினாமியாக எழுதி வைக்கப்பட்ட நிலங்களை எல்லாம் எடுக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பி வைத்தோம். ஆனால் மத்திய சர்க்கார் அதை திருப்பி அனுப்பி விட்டது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். தமிழ் நாட்டில் கோவில் நிலங்களை எல்லாம் வசதி படைத்த பெரிய பணக்காரர்கள் வைத்திருக்கிறார்கள், அவற்றை எடுத்து ஏழை அரிசனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று

(பிற்பகல் 12-20)

சொன்னார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். இந்த 3 ஆண்டுக் காலத்தில் பினாமியாக தமிழகத்தில் எழுதி வைத்திருப்பவர்கள் பெரிய நிலப் பிரபுகள். அந்த நிலத்தை எடுத்து தமிழகத்தில் இருக்கக்கூடிய லட்சோப லட்சக் கணக்கான ஏழை எளிய நிலமற்ற விவசாயத் தொழிலாளிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று அந்த அடிப்படையில் சட்டத்தை இயற்றினோமே, அந்த சட்டத்தை இன்று மத்திய சர்க்கார் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை காங்கிரஸ் கட்சி மீண்டும் வலியுறுத்தி, இந்தச் சட்ட மன்றத்தில் கொண்டு வந்து, அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம்

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 29

நடவடிக்கை எடுத்தால்தான் இந்த நில உச்சவரம்பு மூலமாக லட்சக்கணக்கான நிலமற்றவர்களுக்கு நிலம் கிடைப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல் குத்தகை விவசாயிகள். இன்றைக்கு நம்மு டைய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். தமிழகத்திலே 5 லட்சம் ஏக்கர் கோயில் நிலங் களை குத்தகைக்காரர்கள் வைத்திருக்கிறார்கள். அதனால்தான் கோயில் நிலம் எல்லாம் பாழாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே எதிர்காலத்திலே விதி விலக்கு அளித்து எல்லாக் கோயில் நிலங்களையும் எடுத்துக்கொள்ளப் போவதாக சொல்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது இந்த குத்தகை விவசாயப் பாதுகாப்பு சட்டம் என்பது, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் பெரும் பகுதி விவசாயிகள் போராடி, உயிர் தியாகம் செய்து பெற்றது அந்தப் பாதுகாப்புச் சட்டம். அந்தச் சட்டத்தில் பினாமியாக ஒருசில பேர்கள் வைத்து இருக்கலாம். சில ஆயிரம்பேர்கள் நிலத்தை பதுக்கி வைத்து இருக்கலாம். ஆனால் அதற்காக இந்தச் சட்டத்திற்கு விதி விலக்கு அளித்து லட்சக்கணக்கான ஏக்கர் வைத்து இருக்கிற ஏழை எளிய விவசாயிகளை அதிலிருந்து விதி விலக்கு அளித்து விடக்கூடாது. எனவே இந்தச் சட்டத்தை பாதுகாத்து, குத்தகை விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும். அதுதான் அண்ணா தி.மு.க. வினுடைய கொள்கையாக அமையவேண்டும். அந்த குத்தகை விவசாயினுடைய நிலத்தைச் சொந்தமாக்குவோம் என்று ஒரு பக்கம் 72-லிருந்து 75 வரை சொல்லி வந்த கட்சி, இப்போது வேறு திசையில் போகிறது என்பது நல்ல பாதையாக இருக்காது. எனவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், குத்த கையை நேரடியாக வைத்திருப்பவர்களுக்கு அந்த நிலத்தை சொந்தமாக்க வேண்டும். அவர்களை நிலச் சொந்தக்காரர்களாக ஆக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 29]

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த குத்தகை விவசாயிகள் என்கிற பெயராலே, ஆலய நிலங்களை உழுதுகொண்டு இருக்கின்றவர்கள், அவர்கள் உண்மையான விவசாயிகளாகவும் இருக்கிறார்கள், அல்லது விவசாயி என்கிற பெயரால் மற்றவர் களும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். பல நேரங் களில், வெள்ளம் காரணமாக, புயல் காரணமாக, வறட்சி காரண மாக, அரசாங்கம் தள்ளுபடி செய்து அந்த குத்தகையை கட்டவேண்டாம் என ஆணையைப் பிறப்பிக்கிறது. ஆனால் விளைகின்ற காலங்களிலே ஒரு 25 சதவீதம் என்று நிர்ணயிக்கப் பட்டதற்குப் பிறகு, அதைக் கூட கொடுக்க மறுத்துக்கொண்டு, திட்டமிட்டு, பாக்கியாக வைத்துக்கொண்டிருக்கிறார்களே, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் சேர்த்து மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், அது பலன் உள்ளதாக இருக்கும்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, நான் சொல்வதெல்லாம் ஒருசில ஆயிரம் ஏக்கர்களை பினாமியாக வைத்து இருந்தால், அந்த நிலத்தை எடுப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. ஆனால் நேரடி யாக உழுது அதிலே பிழைத்துக்கொண்டு இருக்கிற அந்த குத்தகை விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் கொள்கைப் பிரச்சனை. அது முடிவு எடுக்கவேண்டிய பிரச்சனை. இப்போது சட்டப்படி ஏற்றுக்கொண்டிருக்கிற குத்தகை 40 சதவீதமாக இருந்ததை மாற்றி, 25 சதவீதம் என்று மாற்றியதற்குப் பிறகும், அதைக் கொடுக்காமல் இருக்கிறார்களே, அதைக் கொடுக்க நீங்கள் கூறுகிற வழி என்ன?

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 25 சதவீதம் கொடுக்கவேண்டாம் என்று சொல்ல வில்லை. விளைகின்ற காலத்தில் ஓரளவு நியாயமாகத்தான் விவசாயிகள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, யாரும் கொடுக்கவேண்டாம் என்று சொல்லவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். அவர்கள் என்னைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் சார்ந்திருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்திருக்கின்ற தலைவர்களும் பேசுகின்ற பொதுக்கூட்டங்களில் கூட அவர்கள் தெரிவிக்கிறார்கள். தனியாகவும் தெரிவிக்கிறார்கள். நீங்கள் யாருமே கொடுக்க வேண்டாம், அதையெல்லாம் உங்களுக்கே சொந்தமாக்கப் போகிறார்கள் என்ற உணர்வை வளர்ப்பதாகவும் தகவல் வந்து கொண்டு இருக்கிறதே, அப்படி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் சொல்லுகிறார்களா ? விளைந்தாலும் 25 சதவீதம் கொடுக்கக் கூடாது என்று தடுத்துக் கொண்டு இருக்கிறார்களா என்பதை அரசு தெரிந்து கொண்டாக வேண்டும்.

* **திரு. கு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, பினாமியாக பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை குத்தகை என்ற பெயரைச் சொல்லி, குத்தகைக்கு எடுத்து அந்தக் குத்தகையைக் கட்டாமல் ஏமாற்றுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. மேலும் 75-25 என்று குத்தகையை பிரித்ததற்குப் பிறகு உண்மையிலேயே விளைச்சல் இருக்கிறது என்று சொன்னால் அந்த குத்தகை கொடுக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு சிலர், ஒரு செண்ட் நிலத்தை வைத்து வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ஏழை விவசாயியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு — இந்த அரசே கூடச் சொல்லியிருக்கிறது, யார் யார் ஏழை விவசாயிகள் என்று — அவர்களுக்கு உண்மையாகவே கொடுக்க முடியாத நிலையில் நஷ்டம் வந்திருந்தால், அதைத் தள்ள வேண்டியதும், கொடுக்க வேண்டாம் என்று சொல்ல வேண்டியதும் அரசாங்கத்தினுடைய கடமை. அப்படிப்பட்ட நிலைமையிலே காரியங்கள் நடக்க வேண்டும் என்பதைத் தான் சொல்கிறோமே தவிர, இந்த மாதிரி பினாமியாக நிலம் வைத்திருப்பவர்களை விட்டு விடலாம் என்று ஒருகாலும் நாங்கள் சொல்லவில்லை. எங்களுடைய நிலையும் அது அல்ல.

1985 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரமணி அவர்கள் இங்கே விளக்கம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பினாமியாக நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று அவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்த பினாமி யார் என்று கண்டு பிடிப்பதிலேதான் இப்போது இருக்கிற பிரச்னை எல்லாம். அதற்கு அரசியல் கட்சிகள் துணையாக இருக்குமேயானால் நாம் இந்தப் பிரச்னைகளுக்குள்ளே இவ்வளவு ஒரு கஷ்டமான சூழ்நிலையை உருவாக்க வேண்டிய அவசியமே வராது.

ஏழை எளியவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள், குறைச்சலான அளவுக்கு நிலங்களை வைத்துக் கொண்டு இருப்பவர்கள் ஆகியோருக்கு இயற்கையினுடைய உற்பாதங்களினால் விளைச்சல் இல்லாமல் அவர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறபோது, அரசாங்கமே அதைத் தள்ளுபடி செய்கிறது. அப்படி தள்ளுபடி செய்ததற்குப் பிறகு, இந்த 25 சதவீதம் அவர்கள் தரவேண்டும் என்கிற அந்த கணக்கில் தான் இன்றுவரையில் ஏறத்தாழ 35 கோடி ரூபாய் அறநிலையங்களுக்கு இருக்கிறது.

ஆகவே, நாம் அறநிலையங்கள் என்கிற அந்த அமைப்பைப் பாதுகாப்பதற்கு உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறோமா அல்லது அளித்திருக்கிற அந்த உறுதியை நிறைவேற்றப் போகிறோமா? அதற்கு இந்த அவையிலே இருக்கிற நாம் அனைவரும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறோமா இல்லையா என்பதைத்தான் நாம் நாட்டு மக்களுக்கு தெரிவிக்க வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம். ஒரு ஏக்கர் அரை ஏக்கர் வைத்துக் கொண்டிருப்பவர்கள் கஷ்டப்படுகிறார்கள். கட்டமுடியவில்லை என்பதைக் கூட மனிதாபிமானக் கண்ணோட்டத்திலே விட்டு விடத் தயாராக இருக்கிறோம். ஆனால் 2 ஏக்கர், 3 ஏக்கர், 4 ஏக்கர் என்று வைத்துக் கொண்டிருப்பவர்களும், விளைந்தாலும் கொடுக்க மறுத்துக் கொண்டிருக்கிறார்களே அதை வசூலிப்பதற்கு இங்கே பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் உதவியாக இருப்பார்களா என்பதைத் தான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1985 மார்ச் 29

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னபடி, நாங்கள் சொல்வது எல்லாம், இந்த் 75-25 என்கிற வாரம் ஒரு நியாயமான வாரம். நாங்களே ஏற்றுக் கொண்டதுதான் என்பதை இந்த நேரத்திலே நான் மறுக்கத் தயாராக இல்லை. ஆனால் தவிர்க்க முடியாத காரணம் ஏற்படுகிறபோது வறட்சி, புயல், வெள்ளம் போன்றவைகளால் பாதிக்கப்படுகிறபோதுதான் கொடுக்க முடியாது என்று சொல்லுகிறோம்.

இந்தச் சூழ்நிலையை தவிர்க்க வேண்டும் என்றுதான், நாங்கள் கேட்டுக் கொள்வது, குத்தகை விவசாயிகளுக்கு ஒரு 5 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு அல்லது என்ன கொள்கையை இதில் வைத்திருக்கிறோமோ, அந்த அடிப்படையில், மற்ற மாநிலங்களில் உதாரணமாக கேரளத்தில் செய்திருப்பது போல, தமிழகத்திலே உள்ள குத்தகை விவசாயிகளுக்கு, அவர்கள் உழுகின்ற நிலத்தை சொந்தமாக்கி இந்தப் பிரச்னையை தீர்க்க வேண்டும் என்று தான் நாங்கள் கேட்டுக் கொள்ள விரும்புகிறோம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, குத்தகை விவசாயிகளை நிலத்திற்குச் சொந்தக் காரர்களாக ஆக்குவது என்கிற கொள்கை கவர்ச்சிகரமான கொள்கைதான். அது ஏற்றுக் கொள்கிற கொள்கையும் கூட. அதிலே மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உறுதியாகத்தான் இருக்கிறார்கள். அப்படி எடுத்துக் கொண்டதற்குப் பிறகு, அவர்களை உரிமையாளர்களாக ஆக்கிய தற்குப் பிறகு, அந்த நிலத்திற்கு கிரயத்தை யார் கொடுப்பது? அந்த விவசாயிகளே கொடுப்பதா ? அப்படிக் கொடுப்பதனால் அதற்கு யார் உத்திரவாதம் அளிப்பது.

இன்றைக்கு விவசாயிகள் மத்தியிலே நம்முடைய அரசியல் கட்சிகள் எழுப்பியிருக்கிற அந்த உணர்வின் அடிப்படையில் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ' கட்டியவனுக்கு ஒரு வீடு, கட்டாதவனுக்கு பல வீடு என்பதைப்போல, நாங்கள் ஏன் அதை விலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் ? விலைக்கு எடுத்துக் கொள்ளாமல் குத்தகை என்ற பெயராலே வைத்துக் நாங்கள் கிஸ்தியும் கட்ட வேண்டியதில்லை, குத்தகையும் கட்ட வேண்டியது இல்லை, அனுபவ பாத்தியதையில்



1985 மார்ச் 29] [திரு. ஆர். எம். வீரப்பன்]

வைத்துக் கொண்டிருக்கிறோமே, அப்படி இருக்க நாங்கள் ஏன் இளிச்ச வாய்த்தனமாக அதை ஏற்றுக் கொண்டு, அதற்கு கிரயம் கட்ட வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நிலத்தை சொந்தமாக்குகிறபோது அந்த நிலத்திற்கு கிரயத்தை யார் வழங்குவது ? எப்படி வசூலிப்பது என்ற திட்டத்தையும் உறுப்பினர் அவர்களே சொன்னால் அரசுக்கு அது உதவியாக இருக்கும்.

(பிற்பகல் 12-30)

* **திரு. கு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முக்கியமான ஒரு கொள்கைப் பிரச்சனையாக கொண்டு வந்திருக்கிறார். நல்லது என்று நான் கருதுகிறேன். எங்களைப் பொறுத்தவரையில் அரசியல் கட்சிகள் என்று மார்க்சிஸ்ட் கட்சியையும் சேர்ந்து சொல்வதால் நாங்கள் சொல்கிறோம். இல்லையென்றால் சொல்ல மாட்டோம். இந்த விவசாயிகளுக்கு கோயில் நிலங்களை சொந்தமாக்குவது என்று சொல்லும்போது, வசதிக்காரர்களுக்கு நிலம் கொடுக்கவேண்டு மென்று இப்பவும் சொல்லவில்லை. இது ஒன்று, மற்றொன்று வசதியற்ற தானே உழைத்து, பயிரிட்டு பிழைக்கக்கூடிய, அப்படிப் பட்டவர்களுக்கு அந்த கோயில் நிலங்களை சொந்தமாக்க வேண்டும் என்ற கொள்கையை நமது அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்களா என்பதைத் தெரிவிக்கக் கோருகிறேன். அப்படி அவர்கள் அதை ஒத்துக்கொண்டால், அந்த நிலத்தை கொடுக்கும்போது, நமது நாட்டில் கேரள மாநிலத்தில் கூட சில முறைகளை கையாண்டு இருக்கிறார்கள். அவர்கள் கேட்கக் கூடிய குத்தகை, 10 வருடத்தினுடைய குத்தகையோ, 12 வருடத் தினுடைய குத்தகையோ, 8 வருடத்தினுடைய குத்தகையோ, ஒரு நிர்ணயிக்கப்பட்ட குத்தகைத் தொகையினை அதற்கு ஈடாக வங்கியிலே அவர்கள் வருடா வருடம், தங்களுடைய குத்தகையை கட்டுவது போல கட்டி அப்படி குறைந்தபட்சம், அவர்களுக்கு சக்தி உள்ள அளவிற்கு ஒரு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டால், அவற்றை அந்த கோயிலினுடைய சொத்தாக வைத்துக்கொண்டு, கோயிலை பராமரிப்பதற்கு அது போதுமானது. அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டியது அரசு. அப்படி ஒரு திட்டத்தை அவர்கள் இன்று அவை முன்னால் வைக்கட்டும். நாங்கள் அதற்கு எங்களுடைய ஆலோசனையை கொடுக்கிறோம்.

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 29

ஆனால் நிலத்தை இந்த முறையில் எடுத்து அந்த ஏழை களுக்கு கொடுப்பது என்ற கொள்கையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு இன்றைக்குத் தெரிவித்தால் நாங்கள் சந்தோ ஷப்படுவோம். அதற்கு ஆலோசனையும் சொல்லுவோம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கொள்கைப் பிரச்னையாக நாடு முழுவதும், மாநிலங்கள் முழுவதும் விவாதித்துக்கொண்டு இருப்பதனால், அதிலும், இதிலே அக்கறை காட்டுகின்ற கட்சி களைச் சார்ந்த உறுப்பினர்கள், குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் பேசுகின்றபோது நான் இதிலே குறுக்கிட்டு சில தெளிவுகளை இந்த விவாதத்தின் மூலம் நாட்டிற்கு தெரிவிக்கலாம் என்ற கருத்திலே நான் இடையிலே குறுக்கிட்டுக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு ரமணி அவர்கள் தெரிவித்ததைப் போன்று ஏழை விவசாயிகளுக்கு, நிலம் அற்ற விவசாயிகளுக்கு, உழுகின்ற விவசாயிகளுக்கு நிலத்திலே இறங்கி உழுது வாழ்க்கையை நடத்துகின்ற விவசாயிகளுக்கு இந்த நிலங்களை உரிமையாக்கு வதற்கு அரசு ஒத்துக்கொள்கிறதா என்ற ஒரு கொள்கையை அவர்கள் முன்னால் வைக்கிறார்கள். நான் ஒன்றைத் தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டங்களைப்பற்றி பேசு கின்றபோது மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுக் காட்டுவது சிலவற் றிற்கு பொருந்தும். ஆனால் அது எல்லாவற்றிற்கும் பொருந் தாது. இன்றைக்கு கேரள மாநிலத்தினுடைய இயற்கை அமைப்பு, பூகோள அமைப்பு, பூமியினுடைய அமைப்பு வேறு வகை, நம்முடைய மாநிலத்தினுடைய அமைப்பு வேறு வகை. அங்கே உள்ள ஆலயங்களுடைய அமைப்பு முறை வேறு. நம்முடைய ஆலயங்களுடைய அமைப்பு முறை வேறு. அங்கே நிலங்கள், சொத்துக்கள் எந்த அளவிற்கு உள்ளன என்பதும், பயிர் நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதும், அதிலே தோட்டப் பயிர்கள் மலைகளிலே இருக்கின்றன என்பதும், நம்மைப்போல் பாசன வசதி உள்ள சாதாரண விளை நிலங்கள் எப்படி அமைந்துள்ளன என்பதையும் அடிப்படையாக உணர்ந்து விவாதிக்க வேண்டிய ஒன்றாகும். நம்முடைய மாநிலத்தை



1985 மார்ச் 29] [திரு. ஆர். எம். வீரப்பன்]

பொறுத்தவரையில் சுமார் 5 இலட்சம் ஏக்கருக்கு மேல், ஆலயங் களுக்கு பட்டாவாக இருக்கின்றன. பட்டா பெயரிலே இருக் கின்றன. அதேபோல் அனுபவம் வேறு இடத்தில் இருக்கின்றன. இதுதான் நடைமுறை.

இதனை மாற்றி உழுகின்றவர்களுக்கு நிலத்தைச் சொந்த மாக்குவது ஏழை எளிய விவசாயிகளுக்குச் சொந்தமாக்குவது என்ற கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. குறிப் பாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஆலய நிலங்களை அப்படி உரிமையாக்குகின்ற முயற்சியை பார்க்கின்றபோது அந்த ஆலயங்களுக்கு நாம் அவைகளுடைய தேவைகளை உறுதி செய்து, சட்டப்படி செய்து கொடுத்தாக வேண்டும். அப்படி கொடுக்கின்றபோதுதான் இந்த கொடுக்கின்ற நிலங்களுக்கு விதிக் கப்படுகின்ற, நிர்ணயிக்கப்படுகின்ற அந்தத் தொகையை யார் கட்டுவது, எப்படி கட்டுவது என்ற பிரச்சனை வருகிறது. அப் பொழுதுதான், விவசாயிகள் மத்தியிலே அந்த உணர்வை இன்றைக்கு எழுப்பி இருக்கிறார்கள். இப்பொழுது நாங்கள் கிஸ்தியைக் கட்டாமல், குத்தகையைக் கட்டாமல் அனுபவித்துக் கொண்டிருக்கிறோமே, ஏன் இதை நாங்கள் சொந்தமாக்கிக் கொண்டு, அதற்கு ஆண்டுதோறும் பணம் கட்டுகின்ற ஒரு சூழலுக்கு நாங்கள் எங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்? எங்களுக்கு ஏன் இந்த வம்பு என்ற உணர்வு விவசாயி களிடத்திலே வளர்ந்து இருக்கிறது.

அந்த அடிப்படை உணர்வை எப்படிப் போக்குவது? அப்படி அவர்களுக்கு உரிமை கொடுக்கின்றபோது, 15 ஆண்டுகளா, 20 ஆண்டுகளா, தவணையிலே கட்டுவதா என்பது வேறு பிரச்சனை. அதைப்பற்றி விவாதித்துக் கொள்ளலாம். அப்படி முடிவு எடுத்தால், அவர்கள் கட்டுவதற்கு உத்திரவாதம் அளிப்பது யார்? அப்படி கட்டவில்லை என்றால், அவர்களுடைய நிலத்தை அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளலாமா? எடுத்துக் கொள்வதற்கு நாம் அனுமதிக்கிறோமா? அப்படி தவறுகின்ற வர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அனுமதிக்கிறோம் என்றால் இப்போது 25 சதவீதம் தருவதற்கு அவர்கள் தவறு கின்றபோது, நடவடிக்கை எடுப்பதை ஏன் நீங்கள் தடுக்கிறீர்கள்?

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1985 மார்ச் 29

ஆகவே, ஒப்புக்கொண்டதைக் கொடுத்தால் அவர்கள் அனுபவிக்கலாம். ஒப்புக்கொண்டதைக் கொடுக்க மறுக்கின்ற போது நடவடிக்கை எடுக்கலாம் என்கின்ற இந்த பொது நியதி தான் உரிமையாக்குகின்ற போதும் வருகிறது. குத்தகையாக இருக்கின்றபோதும் வருகின்றது. இந்த இரண்டுக்கும் இடையிலே வேறு பிரச்சனைகளே இல்லை. அவர்களுக்கு உரிமையாக்குவது என்பது கொள்கைப் பிரச்சனை. அதை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. நடைமுறைப்படுத்த முயல வேண்டும். நமக்கு அச்சமாக இருக்கின்ற முன்மாதிரி என்னவென்றால் குத்தகை எடுக்கின்றபோதே கொடுக்க மறுக்கின்றார்களே, உரிமை யாக்கிவிட்டால் அந்தக் கட்டணத்தை, உரிய தொகையை, கிரயத்தை கொடுக்காமல் இருந்தால், அப்போது ஆலயங்களுக்கு யார் பதில் சொல்வது என்பதுதான் இன்றைக்கு இருக்கின்ற பிரச்சனை. கொள்கை அளவிலே மாண்புமிகு இந்திய கம்யூ னிஸ்ட் உறுப்பினர் இது நியாயமாக கொடுக்கப்பட வேண்டியது

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தான் என்பதை ஒத்துக் கொள்கிறார்கள். 25 சதவீதம் ஏற்றுக் கொண்டபடி விளைந்தால் கொடுக்க வேண்டியதுதான் என்பதை அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். அப்படி அவர்கள் ஒத்துக் கொள்வதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் வசூல் செய்வதற்கு அனுமதியைப் பெற்றுவிட்டால் அதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அந்த நிலங்களை அவர்களுக்கே உரிமையாக்குகிற திட்டத்தின் அடிப் படையில் அந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்து வதற்கும் நிர்ணயிக்கப்படுகிற அந்தக் கிரையத் தொகையை அவர்கள் வழங்குவார்கள் என்ற உறுதியைப் பெறுவதற்கும் அந்தக் குத்தகையைக் கொடுக்கச் சொல்வது பொருத்தமாக இருக்கும்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் வேண்டாம், தாங்கள் அமருங்கள்.

**திரு. கு. ரமணி:** இந்தப் பிரச்சினையில் அமைச்சர் அவர்கள் சில விவாதங்களை முன்வைத்தார்கள் . . . .



1985 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சியில் பின்னாலே பேசுகின்றபோது அதற்குப் பதில் சொல்வதுதான் முறையாக இருக்கும். இப்படி உடனுக்குடன் பதில் சொல்வது சரியல்ல.

**திரு. கு. ரமணி:** அவர்கள் கொள்கையைச் சொல்லி விட்டார்கள், நாங்களும் எங்களுடைய நிலையைச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் தெளி வாக விளக்கம் கொடுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு ஏற்கெனவே பேசிக் கொண்டிருக்கிற திரு. உத்திராபதிதான் பேச வேண்டும், தாங்கள் அமர வேண்டும். (குறுக்கீடு) இப்படி ஒவ்வொருவரும் கேட்டால் எப்படி அவையை நடத்த முடியும்? கொஞ்சம் தாங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) உங்களுக்குக் கொடுத்தால் மற்றவர் களும் கேட்கிறார்கள், அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பது முறையல்ல. (குறுக்கீடு) தாங்கள் 2, 3 தடவைகள் பேசியிருக்கிறீர்கள். இந்த மாதிரி விவாதம் நடத்த முடியாது. வேறு யாராவது உங்கள் கட்சியிலிருந்து பேசும் பொழுது அதற்குப் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. நாம் ஏதாவது ஒரு முறையைப் பின்பற்றவேண்டும். ஒரு நடைமுறை யைப் பின்பற்றவேண்டும். அதிலிருந்து டிவியேட் செய்ய வேண்டாம்.

**திரு. கு. ரமணி:** இது அரசாங்கத்தின் கொள்கை சம்பந்த மானது, அவர்கள் எங்களைக் கடைசியாகக் கேள்வி கேட்டார்கள், அதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு வாய்ப்பில் அதைப் பற்றிக் கேட்டுக் கொள்ளுங்கள். இப்போது நீங்கள் ஒத்துழை யுங்கள். உங்களுக்கு வாய்ப்புக் கொடுப்பது தவறான முன்மாதிரி யாக ஆகிவிடும். நான் விதியைத்தான் சொல்கிறேன், அமருங்கள்.

**திரு. கு. ரமணி:** எங்கள் கட்சியைப்பற்றிக் கேட்டார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை வளர்க்காதீர்கள், 2, 3 தடவை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். இப்படிக் கேட்பதற்கு விதியும் கிடையாது, மரபும் கிடையாது. ஆகவே, தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தவேண்டாம். (குறுக்கீடு).

[1985 மார்ச் 29

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் சொல்கிற முறையில் இந்த அவையில் யார் பேசுகின்றாரோ அவருக்குத்தான் அந்த நேரத்திலே இந்த அவை விடப்பட்டிருக்கிறது. அவர் இடத்திலே சில ஐயப்பாடுகளைக் கேட்கலாம். நான் அதற்கு இடம் தரவில்லை என்று சொல்வதற்குக்கூட அவருக்கு உரிமை இருக்கிறது. இப்போது திரு. உத்திராபதி பேசிக்கொண்டிருக்கிறார். அவரிடம் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களையும் வினாக்களையும் கேட்டார்கள். அவர் அதற்குப் பதில் சொன்னார். கொள்கையின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில ஐயப்பாடுகளை எழுப்பியிருக்கிறார்கள். பேசிக் கொண்டிருக்கின்ற உறுப்பினர் திரு. உத்திராபதி விரும்பினால் அந்தக் கொள்கையில் அவர் கருத்தைத் தெரிவிக்கலாம். அமைச்சரும் அவரும் கருத்தைத் தெரிவிக்கலாம். பேசிக்கொண்டிருக்கிறவரிடத்திலே விளக்கம் கேட்கப்படுகிறது. ஆகவே அதில் அவருக்கும் இவருக்கும் இடையே தான் தொடர்பு இருக்க வேண்டுமே தவிர, தொடர்பு இடம் விட்டு இடம் பெயர்ந்து வேறு உறுப்பினர்களுக்குச் சென்று விட்டால் பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினர் உட்கார்ந்துவிட வேண்டிய நிலை வரும். உங்களுக்கு வாய்ப்பு ஏற்படும்போது கருத்துக்களை நீங்கள் தெரிவிக்கலாம்.

(பிற்பகல் 12-40)

**திரு. கு. ரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் விவசாயிகளிடத்தில் அந்த உணர்ச்சிகளைத் தூண்டிக்கொண்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குப் பதில் சொல்லி ஆக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிறகு நீங்கள் பேசும்போது பேசலாம். இப்போது தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டு இருந்தானால் அவர்களிடத்தில் கேள்விகள் போட்டு விளக்கங்கள் பெறலாம். அப்போது இந்தப் பிரச்சினையை எழுப்பி இருப்பார்களானால் அவர்களிடத்தில் கேள்விகள் போட்டு விளக்கங்கள் பெறலாம். தாங்கள் இந்த பொது விவாதத்தில் பேசுவதற்கு



1985 மார்ச் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வாய்ப்பு ஏற்படும்போது (குறுக்கீடு) நீங்கள் சொல்லலாம். (குறுக்கீடு) விவாதத்திற்கு உடனுக்குடன் பதில் சொல்ல முடியாது. அவையில் பேசுகின்றவர் இடத்தில் கொடுத்துப் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்போதைக்கு அப்போது குறுக்கீடு இருப்பது நல்ல மரபு அல்ல. வேறு ஏதாவது தனிப்பட்ட குற்றச்சாட்டு இருந்தால் எழுப்ப வாய்ப்பு உண்டு.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, இது தனிப்பட்ட குற்றச்சாட்டுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையை ஒரு முறையாக நடத்த வேண்டும். திரும்ப உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்போது சொல்லுங்கள். தயவுசெய்து இப்போது அமருங்கள்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு இணக்கமாக அந்த 25 வாரம் கொடுப்பதில் எந்த விதமான மறுப்பும் கிடையாது. அதேநேரத்தில் எப்படி பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், நான் சொல்லிக் கொள்வது எல்லாம், ஒரு 12 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலத்திற்கு எப்படி சீலிங் ஆக்டில் நிலம் எடுத்து அரசாங்கம் பணம் வசூல் செய்ததோ அதேபோல 12 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலத்திற்கு அந்தத் தொகையை பாங்கு மூலம் கட்டச்சொல்லி அப்படி இந்த நிலத்தைச் சொந்தம் செய்யலாம் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் விவசாயிகளுக்கு ஒரு கட்டுப்படியான விலை கிடையாது. மத்திய அரசு தொடர்ந்து மறுத்துக் கொண்டே வருகிறது. ஆக தமிழகத்திலும் தஞ்சை மாவட்டத்திலும் பருவ மழை மாறி மாறி வருவதால் மஞ்சள் நோய், துங்ரு நோய் இப்போர்ப்பட்ட நோய்களால் பாதிக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு, கடன் பிரச்சினை இன்னும் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு ஆளாக்கப்பட்ட விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 29

அதேபோல் விவசாயிகளுக்கு இரவு முழுவதும் என்று இல்லாமல் பகலில் முழுமையாக மின்சாரம் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 102 கோடி ரூபாய் திட்டத்திலே தஞ்சையில் நவீன கால்வாய்த் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அந்தத் திட்டத்தை வரவேற்கிறேன். தஞ்சை மாவட்டம் என்று சொல்லும்போது உண்மையிலேயே ஒவ்வொரு ஆண்டும் மழை வருகிறபோது சரியான வடிகால்கள் கிடையாது, சரியான வாய்க்கால்கள் கிடையாது. இதேபோல் காவேரி, வெண்ணாறு டிவிஷனில் இருக்கக் கூடிய ஆறுகளை நவீனப்படுத்த வேண்டும் என்று சொன்னால் படிப்படியாக என்று சொல்வதை விட ஒரு ஆண்டுத் திட்டம் என்று போட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போட்டு அந்த வாய்க்கால்கள் அத்தனையையும் சீர் செய்வதற்கு வேகமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் காவேரி, வைகை, தாமிரபரணி வடிநிலப் பகுதிகளில் வடிகால்கள் மிகவும் தூர்ந்து இருக்கின்றன. அந்த வாய்க்கால்களை எல்லாம் சரி செய்வதற்கு அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய வேலைவாய்ப்புத் திட்டம், என்று இப்படிப் பல்வேறு திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் அந்த ஒதுக்கப்படும் பணத்தினால் எந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அவர்களுக்குக் கிடைக்காமல் காண்ட்ராக்ட் மூலம் விடுவதால் காண்ட்ராக்ட்காரர்கள் சரியான முறையில் எந்த வேலைகளையும் செய்யாமல் பணம் முழுமையும் பாழாகப் போய்க்கொண்டிருக்கிறது. திட்டங்களின் மூலம் அங்குள்ள கிராமப்புற வேலையில்லாத மக்களுக்குக் குறைந்த பட்சம் அவர்களுக்கு நாட்கள் வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அந்த யூனியன் மட்டத்தில் கமிட்டி அமைத்து, அந்தக் கமிட்டியின் மூலம்தான் வேலை கொடுக்க செய்ய வேண்டும்.



1985 மார்ச் 29] [திரு. பொ. உத்திராபதி]

அதைப்போல, கிராமப்புற ஏழைகளுக்கு, 20,000 வீடுகள் கட்டப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். அந்த வீடுகளை 6,000 ரூபாய் திட்டத்திலே கட்டுகிறார்கள். 6,000 ரூபாய் என்று சொல்லும் பொழுது 1,500 ரூபாயை யார் வீடு கட்டிக்கொள்கிறார்களோ அவர்கள் பங்குத்தொகையாகப் போட வேண்டியிருக்கிறது; அந்த வீடுகளைக் காண்ட்ராக்ட்டிற்கு விடுவதனால், பெரும்பாலான கிராமங்களில் வீடுகள் கட்டப்படாமலேயே பாதி அளவில் நின்று கொண்டிருக்கின்றன. இன்றைக்கு சிமெண்ட் விலை ஏறியிருக்கிறது. கம்பி விலை ஏறியிருக்கிறது. கூலி உயர்ந்திருக்கிறது. எனவே, இந்தத் தொகையை 10,000 என்று உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுவதற்கு 6,000 ரூபாய் கடன் கொடுக்கிறார்கள்; 1,500 ரூபாய் மானியம் வழங்குகிறார்கள். ஆனால், அந்த ஆதி திராவிடர்கள் மனு கொடுத்தால், மாதக் கணக்கில் அலைய வேண்டியிருக்கிறது. அப்படி அலைவதன் மூலம் 1,500 ரூபாயாகக் கிடைக்கின்ற மூன்று மானியம் செலவாகி விடுகிறது. மீதித் தொகையை மூன்று கட்டமாகக் கொடுப்பதன் மூலம் வீடு கட்ட முடியாமல் நின்று விடுகிறது. எனவே, அந்தக் கடனை 10,000 ரூபாய் என்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விழைகிறேன்.

இன்றைக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. அதில் பல குறைபாடுகள் சொல்லப்படுகின்றன. இதற்கெல்லாம் காரணம், சத்துணவில் வேலை செய்கின்ற அமைப்பாளர்களுக்கு 150 ரூபாய் சம்பளம்தான் கொடுக்கிறார்கள். 150 ரூபாய் என்று சொல்லும் பொழுது அவர்கள் தவறு செய்யக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதைப்போல பாலசேவிகாக்களையும் நிரந்தரமாக்கி, அதிகமாகச் ரூ. 350 சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். (மணியடிக்கப் பட்டது) எனக்கு நேரம் குறைந்துவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 12, 13-க்கு ஆரம்பித்திருக்கிறீர்கள். அப்படியென்றால் எவ்வளவு நேரமாகியிருக்கிறது என்று பார்த்துக் கொள்ளுங்கள். இன்னும் நிறையப் பேர் பேச வேண்டும்.

[1985 மார்ச் 29

திரு. பொ. உத்திராபதி: அதேமாதிரி நெல் கொள்முதல் நிலையங்களில் பணியாற்றுகிறார்கள். நிறையத் தப்புச் செய்வதாக நடவடிக்கை எடுக்கிறார்கள். அவர்களையும் சர்க்கார் ஊழியர்களாக ஆக்கி சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகள் அவர்களுக்கும் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டம் விவசாயப் பகுதிகள் கொண்ட மாவட்டம். அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்திக் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டு, என்ன காரணத்தினாலேயோ நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. உடனடியாகத் தஞ்சை மாவட்டத்திற்கு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்திக் கொடுக்கும்படி வேண்டுகிறேன்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள பெரும்பகுதி கிராமங்களை இணைக்க வேண்டுமென்றால் கிளை ஆறுகள், வாய்க்கால்கள் ஓடுகின்றன, இதனால் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு ஜனங்கள் போக முடியாமல் பள்ளிக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல முடியாமல் நெருக்கடி இருக்கிறது. இப்படிப்பட்ட கிராமங்களை. இணைக்கக்கூடிய வகையில் பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல என்னுடைய தொகுதியில் முத்துப்பேட்டை யூனியனில் பேருந்து நிலையம் இல்லாமல் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ச்சியாகச் சொல்லி வருகிறேன். இந்த ஆண்டிலேயாவது அந்தப் பேருந்து நிலையத்தை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முத்துப்பேட்டை பகுதியில் தொண்டியகாடு, இடும்பவனம், முத்துப்பேட்டை பகுதியிலுள்ள ஏழை எளிய மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு மீன்பிடித் துறைமுகம் இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, ஒரு சிறிய மீன்பிடித் துறைமுகத்தை அங்கே கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1985 மார்ச் 29] [திரு. பொ. உத்திராபதி]

அதைப்போல, திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையம் வேண்டுமென்று ஏழு ஆண்டுகளாகக் கேட்டு வருகிறோம். இந்த ஆண்டாகிலும் அந்தப் பேருந்து நிலையம் ஒன்றும், தீயணைப்பு நிலையம் ஒன்றும், கோட்டூரில் சிறிய மருத்துவமனை ஒன்றும் இந்த ஆண்டில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

மத்திய அரசின் பட்ஜெட்டைப் பொறுத்தவரையிலும் அதைப் பார்க்கின்றபோது இன்றைக்கு விலைவாசியைக் கட்டுப்படுத்து வதாக அரசு அமையவில்லை. ஆனால் நமது நாட்டில் 40 ஆயிரம் கோடி ரூபாய் கறுப்புப் பணத்தைப் புழங்கவிட்டு, நமது நாட்டுப் பிரதமர் அவர்கள் வந்தவுடனே பொதுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட தனியார் துறைக்குத்தான் அதிக முக்கியத் துவம் கொடுப்பதால் ஏகபோக முதலாளிகள் கொள்ளை அடிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதேபோல் நமது தமிழகத்தில் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும், பாலிடெக் னிக்குகளைப் பொறுத்தவரையிலும் அவற்றை அமைக்கத் தனியார்களுக்கு சலுகைகளை அதிகமாக அளிப்பதன் காரணத் தால் ஏழை எளிய, நடுத்தர குழந்தைகளால் பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. போன்றவற்றில் சேர முடியாத நிலைமை இருக்கின்றது. 15 ஆயிரம், 20 ஆயிரம் என்று லஞ்சம் கொடுக்க வேண்டி உள்ளது (மணியடிக்கப்பெற்றது) . . . . . இதனால் இன்றைக்கு ஏழை எளிய மக்கள் கல்லூரிகளுக்கும், பாலிடெக்னிக்கு களுக்கும் போக முடியாத நிலைமை இருப்பதன் காரணத் தால் நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்வது நீங்கள் மத்திய அரசின் பார்வையில் செல்லாமல் தமிழகத்தினுடைய வளத்தைப் பெருக்குவதற்குரிய வகையில், தமிழகத்தினுடைய உரிய பங்கை மத்திய அரசினிடத்திலே இருந்து பெறுகின்றபோது உங்களது தேர்தல் உறவுகளைப் பார்க்காமல் தமிழகத்தினுடைய வளம் பெருக வேண்டும் என்றால் அவர்கள் கொடுக்கின்ற நிதி போதாது என்று சொல்லிக் கேட்டு, அதிகமாகப் பெற்றுக் கொள்வதுடன் பொதுத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, முடிக்கிறேன்.

[1985 மார்ச் 29

* திரு. என். சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தின் நெற்களஞ்சியமான காவேரிப்பாக்கம் பகுதியில் இருந்து என்னை சோளிங்கர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த சோளிங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், வாய்ப்பளித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், வடாற்காடு மாவட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை என்றிருந்த நிலையை மாற்றி அதனை உடைத்தெறிந்த அண்ணன் ப.உ.ச. அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேச அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலும், மேதகு ஆளுநர் உரையிலும் உறுதி கூறப்பட்டுள்ள சுழல்முறை நீர்ப்பாசன முறைகள் அமல்படுத்தப் படுவதை நான் வரவேற்கிறேன். கிடைக்கிற நீர் ஆதாரத்தை அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கு ஏற்றாற்போல திட்டங்கள் செயல்படுத்தப்படவேண்டும். விவசாயத்தைத் தவிர வேறு எதுவும் இல்லாத இந்தப் பகுதி பாலாற்றில் தண்ணீர் வராத காலங்களில் மிகவும் வறண்டுவிடுகிறது. நிலத்தடி நீரை நம்பியே பயிர் செய்யப்படுகிறது. பாலாறு படுகை விதிகள் அதற்குத் தடையாக உள்ளது. அவைகள் நியாயமான விதிகளாக இருந்தாலும் கூட, பசித்தவனிடம் அதைச்சாப்பிட்டால் பித்தம், இதைச் சாப்பிட்டால் சூடு என்று சொன்னால் எப்படி அவன் காதில் ஏறாதோ அந்த நிலைமையில் நாங்கள் இருக்கிறோம்.

பாலாறு படுக்கைக்கு கடல் நீரை நல்ல நீராக்கும் திட்டத்தை அமல்படுத்தி பாலாறு படுகையில் தேங்க விடுவதன் மூலமாக நீர் நிலையில் ஏற்றத்தாழ்வுகளைச் சமப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பிட்ட கால அளவை நிர்ணயித்து அனைத்து கிணறுகளுக்கும் மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஒரே இடத்தில் இலவச மின்சாரத்தில் பயிர் செய்வதும், அதே இடத்தில் ஆயில் இன்ஜின் வைத்து பயிர் செய்வதும் என்ற வகையில் விவசாயிகளுக்குள் ஏற்றதாழ்வு ஏற்படுத்தப்பட்டுவிடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1985 மார்ச் 29] [திரு. என். சண்முகம்]

நாம் இன்னமும் ஆறுகளிலிருந்து வீணாகும் மழை நீரை பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்த ஆண்டு மாவட்டத்திலேயே பெரிய ஏரியான காவேரிப்பாக்கம் ஏரிக்கு இரண்டு மாத நீர்தான் வந்தது. ஆனால் சோளிங்கர், பெருங்காஞ்சி போன்ற ஏரிகளில் நீர் நிறைந்து இரண்டு மாதங்கள் கடைவாயில் நீர் விழுந்து வீணாகக் கடலில் விழுகிறது. ஒரே தொகுதியில் இரண்டுவித நிலை. இதை மாற்றி பெருங்காஞ்சி ஏரி நீர் கரிக்கல், பாணவெட்டாம்பாடி, வேலம் முதலிய இடங்களுக்கு கிடைக்குமாறு பாசனக்கால்வாய்களை ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் வெட்டித் தருமாறு வேண்டுகிறேன்.

ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் தற்போது உருவாகி வரும் கசிவுநீர்க்குட்டைகள் அமைக்கும் திட்டத்தை நான் வரவேற்கிறேன். ஒரு சொட்டு மழை நீர் கூட வீணாகாமல் குட்டைகளில் தேக்கப்பட்டு பூமியில் செல்லும்படி நடவடிக்கை எடுக்க உள்ளதை வரவேற்கிறேன். இதனால் புதிய, புதிய ஊற்றுக்கண்கள் ஏற்பட்டு இந்த பூமி வளமாகட்டும். ஏற்கெனவே அரசின் திட்டத்தில் உள்ள காவேரிப்பாக்கம் ஏரியின் கரையை இரண்டடி உயர்த்தும் திட்டத்தை அமல்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்த படியாக நெல், கரும்பு, வாழை பயிரிடப்படுகிறது. ஆனால் சுதந்திரம் அடைந்ததிலிருந்து தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற வசதிகள் வடாற்காடு மாவட்டத்திற்குக் கிடைக்கவில்லை. விகிதாச்சார அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்தால் வடாற்காடு மாவட்டம் எத்தனையோ மடங்கு பாதிக்கப்படுகின்றது. 20 இலட்சம் டன் உற்பத்தி உள்ள இடத்திற்கு 100 கோடிக்கு மேல் செலவிடப்படுகின்றது. ஆனால் அதில் சரிபாதிக்கு மேல் விளைச்சல் உள்ள வடாற்காடு மாவட்டத்திற்கு ஒரு சில கோடிகள்தான் செலவழிக்கப்படுகின்றன. எனவே, நெல், கரும்பு, உற்பத்தியைக் கணக்கில் கொண்டு விகிதாச்சார அடிப்படையில் வட ஆற்காடு மாவட்டத்திற்கு பல கோடியை ஒதுக்குமாறு வேண்டுகிறேன். அந்த மாவட்டத்தில் பல ஏரிகளின் கொள்ளளவுகளை உயர்த்தி [illegible] நீர் [illegible] வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். சண்முகம்] [1985 மார்ச் 29

திருவலம், திருவாலங்காடு சர்க்கரை ஆலைகளுக்கு காவேரிப் பாக்கம் பகுதியிலிருந்து கரும்பு செல்வதால் பாணாவரம் வட்டாரத்தில் சர்க்கரை ஆலைகளை அமைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக எனது தொகுதி கைத்தறி நெசவாளர்கள் அடங்கிய தொகுதியாகும். மிகவும் திறமையாக இயங்க இத்துறை பிரிக்கப்பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். குறிப்பிட்ட கால அளவை நிர்ணயித்து கூட்டுறவுச் சங்கங்களில் தங்களை இணைத்துக்கொள்ளாதவர்களே இல்லை என கூறுகிற அளவுக்கு அனைத்து கைத்தறி நெசவாளர்களையும், இணைக்கும் சங்கங்கள் உருவாக வேண்டும். தொழிலியல் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள், மிகவும் அதிகமாக வெற்றிபெறும் வாய்ப்புள்ளதால், எனது தொகுதியில் சோளிங்கர், மின்னல் பாவத்தூர், கங்கை மேட்டூர், கூடலூர், கோவிந்தாங்கல், கீழவளம், கொடைக்கல், ரெண்டாடி முதலிய இடங்களில் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வேண்டுகிறேன்.

நெசவாளர் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் எனது தொகுதியில் கூட்டுறவு முறையில் ஒரு நூற்பாலை அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்றுமதிக்குத் தகுதியான துணிகளை நெய்வதற்கு விசைத்தறி கொண்ட கூட்டுறவுச் சங்கங்களை மேற்படி ஊர்களில் அமைத்துத் தருமாறும், நெசவுத் தொழிலாளர்களின் வாழ்வை வளப்படுத்துமாறும் வேண்டுகிறேன். அனுமதி இல்லாமல் இயங்கும் விசைத்தறிகளைக் கட்டுப்படுத்துமாறு வேண்டுகிறேன்.

நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை நான் வரவேற்கிறேன். எந்த கைத்தறி நெசவாளர்களுக்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் உழைத்தார்களோ, தன் தலையிலேயே கைத்தறித் துணைகளைச் சுமந்து தெருத் தெருவாகக் கூவி விற்றாரோ, அந்த நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் வீட்டுமனை கொடுக்க அரசு எடுத்துள்ள நிலையை எதிர்த்து அதை ஏலத்தில்தான் விடவேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டதை நினைக்கும் போது பேரறிஞர் அண்ணாவின் கொள்கையிலிருந்து தி.மு.க.



1985 மார்ச் 29] [திரு. என். சண்முகம்]

வினர் எவ்வளவு தூரம் விலகிச் சென்றுள்ளார்கள் என தெரிகிறது. ஏலத்தில் விட்டால் நெசவுத் தொழிலாளர்கள் எடுக்க முடியுமா என்பது மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்களுக்குத் தெரியாதா? அரசு நிர்ணயித்துள்ள ரூ. 20,000 அதிகம், ரூ. 10,000 கொடுத்தால் நலமாக இருக்கும் என கூறியிருந்தால் உங்களை ஏதோ சிறிது மாற்று குறைந்த அண்ணாவின் தம்பியாகவாவது ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், பொது ஏலத்தில் விட வேண்டும் என்று சொன்னதன் மூலம் உழைக்கும் வர்க்கத்திற்கு எந்த அளவுக்கு தி.மு.க. வினர் எதிரிகளாக உள்ளவர் என்பது தெரிந்தது.

கோவில் சொத்துக்களைக் காப்பாற்ற, காஞ்சி முனிவர்களின் ஆசியோடு ஒரு அறப்போரை நடத்திக் கொண்டு வரும் திரு. ஆர்.எம்.வீ. அவர்கள் குத்தகையையும், வாரத்தையும் வசூல் செய்ய இயலாமல் தவித்துக் கொண்டு இருக்கும் கோயில் நிர்வாகிகளுக்கு உதவியாக அரசே அந்த நிலங்களை வீட்டு வசதிக்காகக் கையகப்படுத்த வேண்டும்.

கடந்த ஆண்டில் உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் பணியில் இறந்தால் ரூ. 10,000 என்று உயர்த்தியதை வரவேற்கிறேன். இதில் கூட்டுறவுச் சங்கங்களில் தங்களை இணைத்துள்ள கைத்தறி நெசவாளர்களைச் சேர்க்குமாறு வேண்டுகிறேன்.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீன்பிடிக்கும் தொழிலையே குலத்தொழிலாகக் கொண்டுள்ளவர்களுக்கு மட்டும் ஏலம் விடப்பட வேண்டும். மீன் பிடிக்கும் காலம் தவிர மீதி நேரங்களில் அவர்கள் புதிய தொழில் செய்ய பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மீனவர்களுக்காக மட்டும் உள்ள மீன்பிடித் தொழிலை மற்றவர்களுக்கு ஏலம் விடுகிற சூழ்நிலையை உண்டாக்கும் அதிகாரிகளை வேலை நீக்கம் மட்டும் இல்லாமல், வேலையிலிருந்தே நீக்க வேண்டும்.

இலங்கையில் இருந்து வரும் அகதிகளில் பெருவாரியானவர் மீனவர்கள் என்பதும், நாம் நீண்ட கடற்கரையின் சொந்தக்காரர்கள் என்பதாலும், இன்னமும் அந்நிய மீன்பிடி படகுகள், நமது மீன்களைப் பிடிக்கப் போக்கு இருப்பதாலும், கோடிக்

[திரு. என். சண்முகம்] [1985 மார்ச் 29

கணக்கான அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் இத் தொழிலில் இப்பினவர்களை முழுமையாகப் பயன்படுத்தி, அவர்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கையை அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன்.

இலங்கை தமிழ்க் குடும்பத்தைச் சில நாட்களுக்கு முன் நான் சந்தித்தேன். அவர்களுக்கு உள்ள 5, 6, வயதுள்ள குழந்தை திடீர், திடீர் என சிலிர்த்துக் கொள்கிறது. ஏன் என்று கேட்டால், அதோ வருகிறது, இராணுவம், இதோ வந்துவிட்டது இராணுவம் என்று அடிக்கடி ஒளிந்து கொள்வதால், தமிழகம் வந்துள்ள நிலையிலும் அக்குழந்தைக்கு அச்சம் தெளியாத நிலை உள்ளது. அதே நேரத்தில் சிலோன் பிரஜைகளே, தம்மவர்களைக் காப்பாற்றுவார்களாம். அப்பொழுது அவர்கள் சொல்லுவார்கள், இப்பொழுது நாங்கள் காப்பாற்றுகிறோம், நாளை இந்திய இராணுவம் வரும்பொழுது நீங்கள் எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்பார்களாம். ஒரு நாள் இந்நாட்டின் இராணுவம் அங்கே நுழையும் என்ற எண்ணம் அங்கேயே உள்ள நிலையில், இராமாயணத்திலே, ஒருமுறை இலங்கை தீப்பற்றி எரிந்தது; மீண்டும் இலங்கை தீப்பற்றாமலேயே தம்மவர்களுக்கு நீதி கிடைக்கும் என நம்புவோம்.

ஏந்த ஏழை, எளிய அரிசன மக்களின் வாக்குகளைப் பெற்று, இன்று ஆட்சியில் உள்ளோமோ, அவர்களுக்குப் பல திட்டங்களை நிறைவேற்றுவதை வரவேற்கிறேன். டாக்டர் அம்பேத்காருக்குப் பின் அரசமைத்தவர்களின் இதயகீதமாக உள்ளவர் புரட்சித் தலைவர் அவர்கள் தான் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அரிசனங்களுக்கு அதிகமாக நிலம் உள்ள இடங்களில் சுழல் முறையில் குழாய்க் கிணறுகளை அமைத்து மின் இணைப்பு தருமாறு வேண்டுகிறேன்.

அரிசனங்களுக்கு, கூட்டுறவு முறையில் செங்கல் சூளைகளை அமைப்பதை வரவேற்கிறேன். 200 ஏக்கருக்கு மேல் அரசு நிலங்கள் உள்ள இடங்களில் அரிசனங்களுக்கும், கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். எனது தொகுதியில் ஐயப்பேடு, பெருவளையம் இதற்கு ஏற்ற தாக இருக்கும். மற்றும் அரிசனக் காலனிகளுக்கு, சாலைக்கும் சுடுகாட்டுப் பாதைகளுக்கும் குறிப்பிட்ட கால அளவை நிர்ண யித்து முடித்துத் தருமாறு வேண்டுகிறேன்.



1985 மார்ச் 29] [திரு. என். சண்முகம்]

மத்திய அரசின் பெரிய தொழில்கள் நமக்கு வரவில்லையே என்கிறபொழுது மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் மாநில அரசு ஏதோ நிலங்களைக் கையகப்படுத்தித் தரவில்லை என்பது போல் சொன்னார்கள். ஆனால் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன், இராணிப்பேட்டையில் 'பெல்' தொழிற்சாலை அமைக்க இடம் கோரியபொழுது அரசு மின்னல் வேகத்தில் இயங்கி 6 மாதத்தில் 2,000 ஏக்கர் நிலத்தை அளித்ததை மத்திய அதிகாரிகள் பாராட்டுகின்றனர் என்பதை கூறிக்கொள்ள வரும் போது, மத்திய அமைச்சர்களை மாநில அமைச்சர்களாகச் செயல்படாமல் பார்த்துக் கொள்வதற்கு மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் முழுமையாகப் போராடுமாறு கேட்டுக்கொள் கிறேன். ஏன் என்றால் எனது தொகுதியில் வர இருந்த இராணுவப் படை சாதனம் தயாரிக்கும் தொழிற்சாலை தற்பொழுது மேடக் சென்றுள்ளது, இணைப்புப் பெட்டி தொழிற் சாலை பஞ்சாபுக்குச்சென்றுள்ளது; கலர் பிலிம் தொழிற்சாலை டார்ஜிலிங் போய் விட்டதாகக் கூறுகிறார்கள்.

மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்களின் வளமானத் தமிழைக் கேட்கும்பொழுது உண்மையிலேயே மகிழ்ச்சியாக உள்ளது. நீங்கள் பேசும்பொழுது தி.மு.க. உறுப்பினர்கள்தான் கதர்ச் சட்டை அணிந்து பேசுகிறார்களா என்ற அளவுக்குத் தமிழ் வளமாகவும் கோவையாகவும் உள்ளது. மாறி, மாறி, கழகங் களிடம் அணி சேர்த்து, தமிழை அழகாகப் பேசக் கற்றுக் கொண்டார்கள், வாழ்த்துக்கள். காங்கிரஸ் நண்பர்களிடம் நாங்கள் உண்மையிலேயே நிறைய எதிர்பார்க்கிறோம். ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் இரண்டு கண்கள் என்பார்கள். துரதிருஷ்டவசமாக கடந்த 7 ½ ஆண்டுக் காலமாக ஒரு கண் காமாலைக் கண்ணாக இருந்து விட்டது. இப்பொழுது மக்கள் காங்கிரஸ் என்ற ஒளிமிக்கக் கண்ணை அளித்துள்ளனர். ஒளி மிக்க இரு கண்களையும் கொண்டும் வலிமையான இந்தியாவில் வளமான தமிழகத்தை உருவாக்குவதற்கு மாண்புமிகு காங்கிரஸ் நண்பர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

அரசு அலுவலர்களுக்குச் சலுகை அளிப்பதை நான் எதிர்க்க வில்லை. என்றாலும் தவறு புரிகிற அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுகிறேன். காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் அரக்கோணம் அரசு கஜானாவில் கட்டப் படவேண்டிய ரூ. 2.72 இலட்சம் பணம் கடந்த மூன்று ஆண்டுகள்

[திரு. என். சண்முகம்] [1985 மார்ச் 29

கால கட்டத்தில் மோசடி செய்யப்பட்டுள்ளது. இதற்கு முழு உடந்தையான ஆணையாளர், கோட்ட வளர்ச்சி அதிகாரியாகப் பதவி பெற்றபொழுது, நாங்கள் எல்லாம் அதிர்ச்சி அடைந்தோம். இந்த வழக்கிலே இதுவரை யாருமே கைது செய்யப்படாதது வேதனை அளிக்கக்கூடியதாக உள்ளது.

ஒன்றியத்திற்குத் தணிக்கைக்கு வந்த கோட்ட வளர்ச்சி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆடிட்டர்கள் மற்றும் லோக்கல் பண்டு ஆடிட்டர்கள் கூட இவைகளைக் கண்டுபிடிக்கவே இல்லையா? இலையென்றால் கண்டு கொள்ளாமல் இருந்து விட்டார்களா என்பதை அரசு தீவிரமாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வசூலாகிற வரிப்பணம் ஒழுங்காக கஜானாவுக்குச் செல்லுகிறதா என்பதை அரசு தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும். மிக இளமையி லேயே திருவண்ணாமலையில் நகராட்சிக்குப் பெருந்தலைவ ராகப் பொறுப்பேற்ற திராவிடப் பாரம்பரியத்திற்குப் புகழ் சேர்த்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் சிறைச்சாலையில் அடைப்பார் என நம்புகிறேன். இந்த மோசடிக்கு உடந்தையாகப் பின்னணியில் இருந்தவர்களையும் அரசு கண்டுபிடிக்க வேண்டுகிறேன்.

(பிற்பகல் 1-00)

யாராலும் எதிர்க்க இயலாத சத்துணவுத் திட்டத்தை அமைத் துள்ள புரட்சித் தலைவர் பெயரில் ஒரு பெரிய காப்பியம் அமைக்க தமிழ் படித்த பெரும்புலவர்களை நியமிக்க வேண்டும். அமுத சுரபி கொண்டு உணவளித்த மணிமேகலைக்கு ஒரு காப்பியம் உள்ளபொழுது, நிர்வாகத் திறமையால் பசியாற்றும் திட்டத்தைக் கொண்டு வந்த புரட்சித் தலைவர் பெயராலே ஆறாவது காப்பிய மாக ஒரு காப்பியம் இயற்ற இம்மாமன்றம் ஆவன செய்து தன்னை பெருமிதப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பு கிறேன்.

தொழிலாளர்கள் தலைவர்கள் என்று மாற்றி, மாற்றி, தங்களைக் கூறிக்கொள்ளும் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கு நான் ஒரு நிகழ்ச்சியைக் கூற விரும்புகிறேன். எனது தொகுதியில் சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ் என்ற மில் உள்ளது. இதிலுள்ள தொழிற்சங்கத்திற்கு தி.மு.க. வைச் சேர்ந்தவர் தலைவராக



1985 மார்ச் 29] [திரு. என். சண்முகம்]

உள்ளார். அந்த ஆலையின் அதிருப்தியடைந்த தொழிலா
ளர்கள் இடது கம்யூனிஸ்ட் தலைமையில் ஒரு தொழிற் சங்கம்
ஆரம்பித்து கொடியேற்றினர். அன்று ஏற்பட்ட மோதலில்
இடதுசாரி கம்யூனிஸ்ட்டுகள் அடித்து விரட்டப்பட்டு, கொடிக்
கம்பம் பிடுங்கி எறியப்பட்டு, தீ வைத்துள்ளனர். இந்த
மோதலில் ஒரு உயிர் பலியானது. அந்த பரிதாபத்திற்குரியவர்
எங்கள் இயக்கத்தைச் சார்ந்தவர். இப்படி தொழிலாளர்களை
மோதவிட்டு ரத்தபலி வாங்குகிற நீங்கள் இந்த சபையில்
இழைந்து கொண்டிருப்பதை மக்கள் கவனித்துக் கொண்டு தான்
இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நான்
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எல்லாம் தலைவ்
ராக இருக்க வேண்டும் என்பதற்காக தொழிலாளர்களை பகடைக்
காயாக்க வேண்டாமென கேட்டுக் கொள்கிறேன். விருப்பப்
பட்ட தொழிற்சங்கத்தை ஆரம்பிக்கும் உரிமை தொழிலாளர்
களுக்கு உள்ளபொழுது அதைத் தடுப்பதும், வன்முறைக்குத்
தூண்டுவதும் அண்ணாவின் தம்பிகள் என்று சொல்லிக் கொள்
பவர்களுக்கு அழகா என்பதை யோசிக்குமாறு வேண்டுறேன்.
சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ் தொழிலாளர்கள் வயிற்றிலே அடிப்ப
தால் மட்டும் ஆண்டுக்கு ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய்
சுரண்டியதாகத் தெரிகிறது. இதனைக் கூறி தக்க நடவடிக்கை
எடுக்க வேண்டுகிறேன். இந்த மில்லின் நடவடிக்கைகளை, மிக
உன்னிப்பாக கவனித்து வரும் தொழிலாளர் நல அமைச்சர் தக்க
நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறேன்.

அடுத்து. பஞ்சாயத்து தேர்தல்களை நடத்த வேண்டு
மென்பதில் இரண்டுவித கருத்துக்கள் இருக்க இயலாது. தேர்தல்
நடக்கும்போது அரிசனங்களுக்கும், தாய்மார்களுக்கும் இட
ஒதுக்கீட்டின்படி நடக்க வேண்டும். எந்த அரிசனங்களின்
வாக்குகளையும், பெண்களின் வாக்குகளையும் பெற்று ஆட்சிக்கு
வந்து இருக்கிறோமோ அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

அடுத்து பள்ளிக் கட்டிடங்களை செப்பனிடும் திட்டத்தை
வரவேற்கிறேன். பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்களுக்கு
படிக்கின்ற உணர்வு ஏற்படுகின்ற வகையில் கட்டிடங்கள் எந்த
மாக வைத்துக்கொள்ள அரசு ஆணையிட வேண்டும். எனது
தொகுதியில் மிகவும் பழுதடைந்துள்ள பாணாவூர் உயர்நிலைப்
பள்ளியை முழுமையாக புதுப்பித்து தருமாறு வேண்டுகிறேன்.

[திரு. என். சண்முகம்] [1985 மார்ச் 29

சோளிங்கர் நகரில் ஒரு தனியார் ஐ.டி.ஐ. அமைத்துத் தர வேண்டும். எங்கெங்கெல்லாம் நீர் ஆதாரங்கள் உள்ளதோ அங்கெல்லாம் மேல்நிலை நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு குழாய்கள் அமைக்கும் திட்டத்தை வரவேற்கிறேன்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வையில் சாராயத்திற்கு விதிக்கப்பட்டுள்ள ஒருமுனை வரியை பல்முனை வரியாக உயர்த்துமாறு வேண்டுகிறேன். ஜூலை மாதம் 1984-ல் சில்லறை சாராய வியாபாரிகளுக்கு ஒரு பாட்டில் சாராயம் விற்றால் ஏழு ரூபாய் லாபம் இருந்தது. தட்டுப்பாடு ஏற்பட்டபின் சில்லறை வியாபாரிகளுக்கு பாட்டிலுக்கு வந்து கொண்டிருக்கும் லாபம் 15 ரூபாய் ஆகும். இந்த நிலையில் இடைப்பட்ட நிலையில் உள்ள 8 ரூபாய் வரியாகப் பெற்று விடுவதுதான் நியாயம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏறிய விலைவாசிகள் இறங்குவது இல்லையென்பது முடிவாகியுள்ள நிலையில் சில்லறையாக விற்கும் சாராயத்திற்கு 20 சதவீத அளவிலே விற்பனை வரி விதிக்குமாறு வேண்டுகிறேன். இதனால் அரசுக்கு கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணத்தை தனிப்பட்ட வியாபாரிகள் சுரண்டிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்பனிடம் வாங்கி பிள்ளைகளுக்குக் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். இந்தியா முழுவதும் மதுக்கடைகள் உள்ளன. ஆனால் அங்கெல்லாம் அப்பனிடம் வசூல் செய்வதோடு சரி என்பதை நினைவூட்ட 'விம்புகிறேன்.

காவல் துறையில் தனியாக இயங்கிக் கொண்டிருக்கும் மதுவிலக்கு காவல் பிரிவை அந்தந்தப் பகுதி காவல் நிலையங்களில் இணைத்துவிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். காவல் நிலையங்களில் குற்றப் பிரிவு, சட்டம்-ஒழுங்கு இருப்பதைப் போல எக்சைஸ் என ஒரு பிரிவையும் ஏற்படுத்த வேண்டும். மாவட்ட போலீஸ் அதிகாரிகள் தொடர்ந்து பல ஆண்டுகள் மாவட்டங்களில் நீடிக்கிற நிலையில், காவல் நிலைய தனி ஆர்வாளர்களிடம் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டு விடுவதால், மேல் அதிகாரிகளிடம் அதிக அச்சம் நீங்கிய நிலையில், அரசியல்வாதி



1985 மார்ச் 29] [திரு. என். சண்முகம்]

களையும், மக்களையும் மதிக்கிற மனோபாவம் குறைந்து விடுகிறது என்கிற நிலையில் பதவிக்காலம் முடிந்த உயர் அதிகாரிகளை உடனடியாக மாறுதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சுற்றுப்புற சூழல் இலாக்கா மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரின் கீழ் மிகவும் சிறப்பாக சேவை செய்யுமென நம்புகிறோம். ஏனென்றால் கழிவு நீரால் ஆற்று நீர் படுகைகள் முழுமையும் பாதிக்கும் நிலை உள்ளது. இராணிப்பேட்டை தோல் தொழிற்சாலைகளிலிருந்து வரும் சுண்ணாம்பு; உப்புக் கலந்த விஷ நீர் ஆறுபோல பாலாற்றில் விழுகிறது. இதன் விளைவாக ஏற்கனவே சென்னசமுத்திரம், பூண்டி ஏரிகளில் விழுந்து தண்ணீர் பாழாகிவிட்டது. அந்த ஏரிகள் நீர் நிறைந்திருந்தும் கூட ஏரித் தண்ணீரை விவசாயிகள் பயன்படுத்தாமல், கிணற்று நீரை உபயோகப்படுத்திக்கொண்டு வருகின்றனர். தற்பொழுது மாவட்டத்தின் மிகப் பெரிய ஏரியான காவேரிப்பாக்கம் ஏரி முழுவதுமாக விஷமாகக்கூடிய நிலையுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோடீஸ்வர முதலாளிகள் பணம் சேர்க்க ஏழை விவசாயிகள் பலியாவதை அரசு கடுமையாகக் கருத வேண்டும். இதில் தக்க நடவடிக்கை எடுக்காததன் விளைவாகத்தான் ஆம்பூரின் சுற்றுவட்டாரங்கள் சரி செய்ய முடியாத அளவிற்கு நாசமாகிவிட்டதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தோல் தொழிற்சாலைகளுக்கு சாந்தப்பா அவர்கள் தெரிவித்துள்ள அறிவுரைகளை உடனே அமல்படுத்த வேண்டுகிறேன். தோல் தொழிற்சாலைகள் 90 சதவீதம் மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு சொந்தம் என்பதாலும், விவசாய நிலங்கள் 90 சதவீதம் மெஜாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சொந்தம் என்பதாலும் இந்தப் பிரச்சினை வேறுமாதிரி மோதலை உருவாக்கிவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வடாற்காடு மாவட்டத்திற்கு ஒன்று என அறிவிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், காவேரிப்பாக்கத்திற்கு ஒதுக்கிய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அங்கு உடனடியாக புதிய கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

[திரு. என். சண்முகம்] [1985 மார்ச் 29

போக்குவரத்துக் கழகங்கள் மோட்டல்கள் ஆரம்பிப்பதை
வரவேற்கும் நான் காவேரிப்பாக்கம் பகுதியில் மோட்டல் ஒன்று
தொடங்கவிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். ஓட்டுநர், நடத்துனர்கள் தங்கள் சொந்த பலன்
கருதி தனிப்பட்டவர்களிடம் விலை போகிற காரணத்தால்
பயணிகள் உப்பு, சப்பற்ற உணவை சாப்பிட வேண்டிய நிலைக்குத்
தள்ளப்படுகின்றனர். தட்டிக் கேட்டால் வன்முறைக்கு ஆளா
கின்றனர். ஆதலால் போக்குவரத்துத் துறை அமைச்சர்
அவர்கள் அங்கீகரிகப்படாத இடங்களில் வண்டிகள் நிற்பதை
உடனே தடை செய்ய வேண்டும். போக்குவரத்து ஊழியர்கள்
தங்கள் சுயநலத்திற்காக மக்களின் வெறுப்பை சம்பாதித்துக்
கொள்ளக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது).

**திரு. கா. சொர்ணலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இங்கே எனக்கு பேசுவதற்கான வாய்ப்பினை அளிக்
கின்ற வகையிலே அரசியலில் ஈடுபடக்கூடிய அளவுக்கு என்னை
உருவாக்கித் தந்த இந்தியாவின் ஒருமைப்பாட்டை வளர்க்க
வேண்டுமென்ற நோக்கத்தோடு இறுதிவரையில் வாழ்ந்து, அந்த
நோக்கத்திற்காகவே சுண்டடிப்பட்டு இறந்த எங்களுடைய
ஆருயிர் அன்னை இந்திரா காந்தி அவர்களை வணங்கி,
சட்டசபையில் பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தி, ஒரு நல்ல
நிர்வாகத்தை உருவாக்கித் தந்த பாரதப் பிரதமர் மாண்புமிகு
திரு. இராஜீவ் காந்தி அவர்களுக்கும், இந்தப் பேரவையிலே ஒரு
உறுப்பினராக இருக்கக்கூடிய சந்தர்ப்பத்தை பெற்றுத்தந்த
எங்களுடைய ஆருயிர் அண்ணன் சிவாஜிகணேசன் அவர்
களுக்கும் நன்றி தெரிவித்து, என்னுடைய தொகுதி வாக்காளர்
பெருமக்களுக்கும் தோழமைக் கட்சி பெரியோர்களுக்கும் நன்றி
தெரிவித்து இந்த 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது
என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் இங்கே பேசிய அண்ணா திராவிட
முன்னேற்றக்கழக உறுப்பினர், காங்கிரஸ் பேரியக்கத்தில்
இருக்கிறவர்கள் ஒவ்வொரு தேர்தலிலும் திராவிட முன்னேற்றக்
கழகத்துடன் அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்துடன் உறவு வைத்துக் கொள்வதால்தான் காங்கிரஸ்



1985 மார்ச் 29] [திரு. கா. சொர்ணலிங்கம்]

கட்சியில் இருக்கிறவர்களுக்கு பேச்சுத் திறமை வளர்ந்திருக்கிறது
என்று கூறினார். அவருக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்,
நாங்களும் தமிழர்கள்தான்; எங்கள் உடலிலேயும் தமிழ்
இரத்தம்தான் ஓடுகிறது; நாங்களும் நன்றாக தமிழ் கற்று
பேசுகின்றவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் அவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன் (கரவொலி).

1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது
பொதுவாக எல்லாத் தரப்பு மக்களுக்கும் சமாதானம் சொல்லு
வதுபோல் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் சாதாரண
மக்களுக்கு வேண்டிய பல சலுகைகளை அளித்திருந்தாலும்
அந்தச் சலுகைகள் முறையாக மக்களுக்கு போய்ச் சேருகின்ற
வகையிலே உரிய திட்டங்கள் இல்லை என்பதை முதலிலே
தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய திருவாடானை முன்பு கிழக்கு
இராமநாதபுரத்தில் இருந்தது. அது மிகவும் பின்தங்கிய
தொகுதி. இப்போது மாவட்டங்களைப் பிரிக்கும்போது,
இராமநாதபுரம் மாவட்டத்தை இராமநாதபுரம் மாவட்டம்,
முத்துராமலிங்கம் மாவட்டம், காமராஜ் மாவட்டம் என்று
மூன்றாகப் பிரித்தார்கள். என்னுடைய தொகுதி பிரிக்கப்பட்ட
இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதியும், முத்துராமலிங்கம்
மாவட்டத்தில் பாதியுமாக இருக்கின்றது. இப்படிப் பிரிக்கப்
பட்டு, தேவகோட்டை யூனியனில் இருந்து மூன்று பஞ்சாயத்துக்
களை திருவாடனை யூனியனிலும், கண்ணங்குடி யூனியனில்
உள்ள 18 பஞ்சாயத்துக்களை திருவாடானை யூனியனிலும்,
தேவகோட்டை யூனியனிலிருந்து 24 பஞ்சாயத்துக்களை
ஆர்.எஸ். மங்கலம் யூனியனிலும் சேர்ந்திருக்கிறார்கள். இதனால்
நிர்வாகச் சிக்கல்கள் நிறைய இருக்கின்றன. இந்த சிக்கல்களைத்
தீர்க்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள
வேண்டும்.

ஏனென்றால் கண்ணங்குடி, தேவகோட்டை யூனியன்களுக்கு 4,
5 மைல்களில் இருக்கின்ற ஊர்கள் கூட ஆர். எஸ். மங்கலம்,
திருவாடானை யூனியன்களில் சேர்க்கப்பட்டு, இராமநாதபுரம்
மாவட்டமாக உருவாக்கியிருக்கிறார்கள். அதனால் ஒவ்வொரு
காரியத்திற்கும் 20 மைல், 30 மைல் தூரம் அந்தப் பகுதி மக்கள்
சென்றுவர வேண்டியிருக்கிறது.

[திரு. கா. சொர்ணலிங்கம்] [1985 மார்ச் 29

தேவகோட்டை நகராட்சி ஒரு பழமையான நகராட்சி. முத்துராமலிங்கம் மாவட்டத்தில் இருக்கிற மூன்று நகராட்சிகளில் தேவகோட்டைதான் மூத்த நகராட்சி. கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு மேலாக அது ஒரு நகராட்சியாக இருந்த போதிலும் அதற்குரிய வளர்ச்சியடையவில்லை. இதற்குக் காரணம் இதற்கு முன்னாலே இருந்தவர்கள் தேவகோட்டை நகராட்சியில் போதிய கவனம் செலுத்தவில்லை.

அப்படி இருந்தபோதிலும் இந்த மாவட்டப் பிரிவினைக்கு பின்னால் இப்போது இருக்கிற முக்கிய அலுவலகங்கள் சிவகங்கை, காரைக்குடிக்கு மாற்றப்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. தேவகோட்டையில் இருக்கிற சப்கோர்ட், முன்சிப் கோர்ட் ஆகியவை காரைக்குடிக்கு மாற்றப்படும் சூழ்நிலை இருப்பதாகத் தெரிகிறது. அதனால் அங்குள்ள மக்கள் மிகுந்த கவலைப்படுகிறார்கள். ஏனென்றால் இதற்கு முன்னாலே இ.பி. அக்கவுண்ட்ஸ் ஆபீஸ், கல்வித் துறை தலைமை அலுவலகம், டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஆகியவை சிவகங்கைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. இதைப் பார்த்தபிறகு, மற்ற அலுவலகங்களையும் காரைக்குடிக்கும் மற்றும் சிவகங்கைக்கும் மாற்றக்கூடிய நிலைமையிருக்கிறது. எனவே அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

என்னுடைய திருவாடானை தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதி. அங்கே விவசாயத்தைத் தவிர வேறு எந்தவிதமான தொழிலும் கிடையாது. எனவே அந்தப் பகுதியிலே தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு சலுகை அளிக்கின்ற இந்த அரசு நல்ல பல திட்டங்களை அறிவித்து இருக்கிறது. அதேநேரத்தில் திருவாடானை பகுதி மிகவும் வானம் பார்த்த பூமியாக இருப்பதாலும், அடிக்கடி மழை பொய்த்துவிடுவதாலும், அங்கே உள்ள மக்கள் சோழ நாட்டை நோக்கிச் செல்லுகின்ற நிலைமையிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கான, திருவாடானை, தேவகோட்டை ஒன்றியங்களில் ஆழ்குழாய் விவசாயக் கிணறு



1985 மார்ச் 29] [திரு. கா. சொர்ணலிங்கம்]

களையும், சமுதாய கிணறுகளையும் அதிகமாக வெட்டி, அங்கே உள்ள மக்களுக்கு நீர்ப்பாசனத்திற்கு எந்தவிதமான தடையும் இல்லாமல் இருப்பதற்கு ஆன வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு தற்போது பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது. இதனால் சாதாரண ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். சாராயத்திற்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இதனாலே, சாராயத்தை எதிர்க்கின்ற எங்களது கட்சி நிச்சயமாக அதை வரவேற்கிறது. ஏன் என்றால், சாராயத்தை வாங்கிக் குடிப்பவர்கள் குறைந்த விலையிலே விற்பதாலே, அதை அதிகமாக வாங்கிக் குடித்து அவர்களுடைய உடல் நிலையைக் கெடுத்துக் கொள்கிறார்கள். இப்படி சாராயத்தின் விலையை அதிகமாக்கியதால், குடிப்பவர்களின் எண்ணிக்கை கொஞ்சம் குறையும் என்று நம்புகிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் உள்ள தேவகோட்டை ஒன்றியத்திலும்; கண்ணங்குடி ஒன்றியத்திலும் ஒரு மேல்நிலைப் பள்ளிக்கூடம் அமையவேண்டும். கண்ணங்குடி ஒன்றியத்திலே அமைந்துள்ள சிறுவாச்சியிலும், அனுமந்தக்குடியிலும், மங்களக்குடியிலும், தலா ஒரு உயர்நிலைப் பள்ளிக் கூடம் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் தேவகோட்டை ஒன்றியத்திலே இருக்கக்கூடிய புளியால், மற்றும் திருவேகம்பத்துக்கும் தலா ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் அமைத்துத் தரவேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சியைப் பொறுத்தவரையிலும், அது நீண்டகாலமாக இருந்து வருகிறது. நகராட்சி நிர்வாகம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. கிட்டத்தட்ட 2 ஆண்டுகளுக்கு முன்பு நகராட்சி மருத்துவமனை கட்டுவதற்காக ஏலம் விட்டு, கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்து, அது இன்னும் முடிக்கப்படாத நிலையில் இருந்து வருகிறது.

அதேபோல் பேருந்து நிலையம் ஒன்று கட்டுவதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு ஏலம் விட்டு, டெண்டர்விட்டு, அதைக் கட்டுவதற்கு முயற்சியை எடுத்தார்கள். ஆனால் அடிப்படை வேலைகள் இன்று கூட ஆரம்பிக்கவில்லை. நமது மின்துறை அமைச்சர்

[திரு. கா. சொர்ணலிங்கம்] [1985 மார்ச் 29

அவர்களும், மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்களும் தான் அடிக்கல் நாட்டு விழாவிற்கு வந்திருந்தார்கள். ஆனால் இதுவரையிலும் எந்தவிதமான வேலையும் நடைபெறவில்லை. நகராட்சியிலே இருக்கிற கழிவு நீரை, சாக்கடை நீரை முறையாக அகற்றுவதற்கு எந்தவிதமான வழிமுறையும் நடைபெறவில்லை. நகராட்சியில் இருக்கக்கூடிய ரோடுகள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. குண்டும் குழியுமாக இருக்கிறது. அங்கே சாக்கடை வசதிகள் முறையாக இல்லை. எனவே, அந்த பள்ளங்களில் அந்த நீர் தங்கி கொள்கின்றன. அதனால் பல்வேறு நோய்கள் பரவக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அந்தத் தண்ணீரிலே சிறு பிள்ளைகள் காகிதக் கப்பல்களை விட்டு விளையாடுகிற தன்மைகள் இருக்கிற அளவிற்கு அந்த ரோடுகள் இருக்கின்றன. எனவே இந்த அரசு நகராட்சி மீது தனிக் கவனம் செலுத்தி, அதை மேலோங்கச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேவகோட்டையில் இருக்கக்கூடிய அரசு மருத்துமனைக்கு கிட்டத்தட்ட 50 ஆயிரம் மக்களைக் கொண்ட அந்த தேவகோட்டையிலிருந்தும், மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள கண்ணங்குடிப் பகுதியில் இருந்தும், தேவகோட்டை நகராட்சிக்கு வந்துதான் வைத்தியம் செய்து கொள்ளவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே அங்கே ஒரு பெண் டாக்டரும், நான்கு உதவி டாக்டர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பகுதி வீளிலே சென்று விடுகிறார்கள். நகராட்சி ஆஸ்பத்திரியில் பெரும்பகுதி ஒரு டாக்டர், அல்லது இரண்டு டாக்டர்கள்தான் இருக்கிறார்கள். அதனாலே வெளிநோயாளிகளும் உள்நோயாளிகளும் பாதிக்கப் படுகிறார்கள். அந்த அரசு மருத்துவமனையிலே 50 படுக்கைகள் தான் இருக்கின்றன. அதிகமாக உள் நோயாளிகள் வருவதால், அங்கே 100 படுக்கை வசதிகளை ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு மருத்துவமனைக்குத் தேவையான சில காரியங் களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். தினந்தோறும், வெளி நோயாளிகள் ஆயிரம் பேர்கள் வருகிறார்கள். உள்நோயாளிகள் குறைந்தது 100 பேர்கள் வைத்தியம் செய்து கொள்ள வருகிறார்கள். ஆனால் அங்கே இரண்டு டாக்டர்கள்தான்



1985 மார்ச் 29] [திரு. கா. சொர்ணலிங்கம்]

வைத்தியம் பார்ப்பதற்காக இருக்கிறார்கள். தேவகோட்டை நகரப் பகுதியைச் சுற்றி நிறைய கிராமங்களாக இருப்பதால், அடிக்கடி கலவரங்களும், விபத்துக்களும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. எனவே அப்படிப்பட்ட சமயத்தில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான ஆம்புலன்ஸ் வண்டிகள் எதுவும் கிடையாது. ஆனால் ஆம்புலன்ஸ் வண்டியை வைப்பதற்காக ஒரு அறையும் கட்டப்பட்டிருக்கிறது. எனவே தேவகோட்டை நகருக்கு ஒரு ஆம்புலன்ஸ் வண்டி கட்டாயம் தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மருத்துவமனையில் உள்ள எக்ஸ்ரே கருவி 15 எம்.ஏ. திறன் உள்ள எக்ஸ்ரே கருவி இயந்திரமாக உள்ளது. இது கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு முன்பாக கொண்டு வரப்பட்டது. எனவே 100 எம்.ஏ. இயந்திர சக்தி கொண்ட ஒரு எக்ஸ்ரே கருவியை அவசியம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இம் மருத்துவமனையில் அதிகமாக இதய நோயாளிகள் வந்து சிகிச்சைப் பெற்று செல்வதால், இதய நோயை பரிசோதனை செய்கிற ஈ.சி.ஜி. இயந்திரம் ஒன்றையும் வாங்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இம்மருத்துவ மனையைச் சுற்றிலும் கிராமப் பகுதிகள் அதிகமாக நிறைந்திருப்பதால், கிராம மக்களுக்கு சித்த வைத்தியத்தில் மிகுந்த நம்பிக்கை உள்ளதால், சித்த வைத்தியப் பிரிவு ஒன்றை அங்கே ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்மருத்துவமனைக்கு எல்லா வசதிகளுடன் கூடிய கண் சிகிச்சைப் பிரிவு ஒன்றையும், எல்லா வசதிகளுடன் கூடிய காது, மூக்கு, தொண்டைப் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் 20 படுக்கைகள் அடங்கிய எல்லா வசதிகளுடன் கூடிய அறுவை சிகிச்சை அரங்குடன், வார்டு ஒன்றையும் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மகப்பேறு பயிற்சி பெற்ற டி.ஜி.ஓ. உதவி மருத்துவரும், குழந்தைகளுக்கான பட்டப் படிப்புப் பெற்ற டி.ஜி.எச். உதவி மருத்துவர் ஒருவரும், எம்.என். பட்டம் பெற்ற ஒரு உதவி மருத்துவரும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே உள்ள கிராமங்களிலே ரோடுகள் முறையாக இல்லை. கோயில்களிலே வேலை செய்கிற பணியாளர்களுக்கு மிகவும் குறைந்த ஊதியம் கொடுக்கப்படுவதால், கோயில்களிலே நடைபெறுகிற பூசைகளும் சரிவர நடப்பதில்லை. எனவே கோயில்களிலே வேலைப் பார்க்கிற ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கோவாப்பிரேட்டிவ் சொசைட்டியிலே வேலை பார்க்கிற ஊழியர்களுக்கு மாதம் 150 ரூபாய்தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதுதான் அவர்கள் அங்கே ஊழல் செய்வதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகையினால் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட விளையாட்டு திடல் ஒன்றை தேவகோட்டையிலே அமைத்துத் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் மாநிலத்திலே முதன்மையாக வருடா வருடம் எங்கள் பகுதியிலே உள்ள மாணவர்கள் தாம் விளையாட்டிலே வெற்றி பெற்று வருகிறார்கள். அந்த விளையாட்டுகளுக்கு பயிற்சி அளிக்கின்ற பயிற்சியாளர்களும் தேவகோட்டையிலேதான் இருக்கின்றார்கள். எனவே மாவட்ட விளையாட்டு பயிற்சி திடலை தேவ கோட்டையிலே அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியிலே பனை மரம் அதிகமாக இருக்கின்றது. அந்தப் பனை மரங்களை உபயோகப்படுத்தி சிறு சிறு தொழில்களில் ஈடுபடுத்துகின்ற தொழிற்சாலையை உருவாக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அதை அரசு பரிசிலனை செய்ய வேண்டும். அத்தோடு எங்கள் பகுதியில் காட்டுக் கருவை மரம் மிகுதியாக இருக்கின்றது. நிலக்கரிக்குப் பதிலாக இந்தக் காட்டுக்கருவை மரங்களை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் சொல்லுகிறார்கள். அத்தோடு இந்தக் காட்டுக் கருவையை வைத்து பேப்பர் தொழிற்சாலையை உருவாக்கலாம் என்றும் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால், அந்தத் தொழிற்சாலையை எங்கள் பகுதியிலே உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





கண்ணங்குடி அருகிலே உள்ள ஓரியூரில், அது மாண்புமிகு அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் படித்த ஊர் என்ற காரணத் தினாலே அங்கே ஒரு விசைத் தறி நிலையம் அமைக்கப்படும் என்று கூறினார்கள். அப்படி அறிவிக்கப்பட்டதற்குப் பின்னாலே எந்த விதமான அடிப்படை வேலையும் அதற்காக நடைபெறாமல் இருக்கிறது. எனவே அதையும் விரைவில் அங்கே கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்த மட்டில், அவர்களுக்கு அளிக்கின்ற சலுகையை ஒருபோதும் நாங்கள் மறுத்தது இல்லை. ஆனாலும் அவர்கள் பெறக்கூடிய சலுகைகளைப் பெற்றுக் கொண்டு, முறையாகச் செயல்படுவதில்லை, என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும். தேவகோட்டையிலிருந்து கிட்டத் தட்ட 15 மைல் தொலைவில் இருக்கிற கண்ணங்குடியிலே ஒரு போலீஸ் நிலையம் அமைக்கப்பட வேண்டும். இப்போது துணை போலீஸ் நிலையமாக இயங்கக் கூடிய ஆராவயல், வேலாயுதப் பட்டணம் ஆகிய போலீஸ் நிலையங்களை தலைமை நிலையமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இருபது அம்சத் திட்டத்தின் கீழ் நிலச் சீர்திருத்தம் செய்யும் பணிக்காக நில அளவைச் செய்கிற ஒரு அமைப்பு ஏற்படுத்தி கிராமங்களிலே இருக்கிற நிலங்களில் உள்ள சிக்கல்களை தீர்ப்பதற்கு சர்வேயர்களை நியமித்து வருகிறார்கள். அந்த திட்டம் இன்னும் தேவகோட்டை பகுதிக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தேவகோட்டையில் ஒரு அரசாங்க இலவச மாணவர் விடுதி இருக்கிறது. அங்கேயிருக்கிற மாணவர்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் வீதம்தான் உணவு அளிக்கப்படுகிறது. அதனால் அவர்களுக்கு போதிய உணவு கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகையினால் அவர்களுக்கு ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய்க்கு கொடுக்கக்கூடிய அளவுக்கு உணவு வழங்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு என்ற திட்டத்தைச் செயலாக்குவதற்காக மத்திய அரசு எவ்வளவோ உதவிகளைச் செய்துக் கொடுத்தாலும் அவைகள் முறையாக கிராமங்களில் செயல்படுவதில்லை.

[திரு. கா. சொர்ணலிங்கம்] [1985 மார்ச் 29

(பிற்பகல் 1-20)

மாவடுத்துப்பட்டியிலே இருக்கின்ற பாதுகாக்கப்பட்ட குடிநீர் 20 மைல்களுக்கு மேல் உள்ள ஊர்களுக்குச் செல்கின்றது. ஆனால் முறையாக வாட்டர் டாங்கியிலே அந்த நீரை ஏற்றி பயன்படுத்துவதற்கு வழிவகைகள் இன்னும் செய்யவில்லை. அந்த ஊர்களுக்குச் செல்லுகின்ற பைப்புகளை இடையில் உள்ள கிராமங்களில், அந்த பைப்புகளை உடைத்து, அங்கங்கே உள்ள தண்ணீரை உபயோகப்படுத்துகிறார்கள். இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பினை அளித்த இந்த பேரவைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. இரா. அரிக்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு நல்கிய மாண்புமிகு பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்த நிலைக்கு ஆளாக்கிய என்னுடைய தொகுதிவாழ் மக்களுக்கும், குறிப்பாக ஆதிதிராவிடர் மக்களுக்கும், என்னை உருவாக்கிய உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்களுக்கும் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாதம் 26-ந் தேதி இந்த மாமன்றத்திலே மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்த 1985-86 வது ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது கலந்து கொண்டு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை பொறுத்தமட்டில் உண்மையிலேயே வரவேற்க வேண்டியது. இதில் அடங்கியுள்ள பல்வேறு திட்டங்களினால் ஏழை எளிய மக்கள் பயனடையவும் வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படவும், விவசாய பெருமக்களின் குறையை போக்கவும் இது வழிவகை செய்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக ஆதி திராவிடர்களுக்கு வீட்டு வசதி, மனைப்பட்டா மற்றும் பல்வேறு சலுகைகள் அளிக்க இந்த அரசு முன் வந்துள்ளது. ஆகவே இந்த அரசைப் பாராட்டுகிறேன். அதே போல் என் தொகுதியிலே மக்களுக்கு சில தேவையான அத்தியாவசிய அடிப்படை வசதிகளை செய்துத்தர இந்த அரசு முன்வரவேண்டுகிறேன்.



1985 மார்ச் 29] [திரு. இரா. அரிக்குமார்]

வட ஆற்காடு மாவட்டத்தின் எல்லையிலும், தென் ஆற்காடு மாவட்டத்தின் எல்லையிலும் அமைந்துள்ளது பெரணமல்லூர் தொகுதி. இது மிகவும் பின் தங்கிய தொகுதியாக உள்ளது. மேலும் விவசாய மக்கள் வாழும் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், சேத்துப்பட்டு ஒன்றியத்திலே இருக்கக்கூடிய கரைபூண்டி கிராமத்திற்கு செய்யாறு ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றின் கரைமீது ஒரு கரும்பு ஆலையை அமைத்துத் தந்தால் சுற்றுப்புறத்திலுள்ள விவசாயிகள் தாங்கள் பயிர் செய்யும் கரும்பினை போக்குவரத்து சிரமம் இல்லாமல் எடுத்துவர உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக சேத்துப்பட்டை மையமாகக்கொண்டு செஞ்சி, போளூர், ஆரணி, வந்தவாசி போன்ற ஊர்கள் ஒவ்வொன்றும் 30 கி.மீ. தூரத்தில் உள்ளது. ஆகவே இங்கு ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தந்தால், நான்கு சாலையிலும் சுற்றியுள்ள கிராமங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

தற்போது சேத்துப்பட்டு தேர்வு நிலை பேரூராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. இங்கு மக்கள் தொகை 20,000 பேர்கள் வாழ்கின்றனர். மேலும் சுற்றுப்புறத்தில் கிராமங்கள் அதிகமாக இருப்பதால் தற்சமயம் இயங்கி வரும் அரசினர் மருந்தகத்தை, அரசினர் மருத்துவமனையாக மாற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதோடு இரண்டு ஆண்டுகளுக்குமுன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் வருகை தந்தபோது இங்கு 10 படுக்கை வசதி செய்துதர ஏற்பாடு செய்வதாக சொன்னார்கள். ஆனால் இதுவரை வரவில்லை. குறிப்பாக தாய்மார்கள் பிரசவ நேரத்தில் பாதிக்கப்படுகிறார்கள்.

அடுத்தபடியாக சேத்துப்பட்டில் பெண்கள் ப்ளஸ் 2 படிப்பதற்கு வாய்ப்பு இல்லை. பெண்கள் ஆரணி சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே இங்கு உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியை ப்ளஸ்2வாக கொண்டு வந்தால் அங்குள்ள பெண்கள் படிக்க ஏதுவாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை இதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் இங்கு சுற்றுப்புறத்தில் கல்லூரிகள் எதுவும் இடையாது. ஆகவே, ஒரு பெண்கள் கல்லூரி அல்லது ஒரு பொறியியல் கல்லூரி ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. அரிக்குமார்] [1985 மார்ச் 29

அதோடு ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டுக்கொண்டிருந்த போது சேத்துப்பட்டில் தாலுக்கா அலுவலகம் இருந்திருக்கிறது. சுதந்திரம் அடைந்த பிறகு அந்த அலுவலகத்தை போளூருக்கு மாற்றியுள்ளார்கள். சேத்துப்பட்டிலிருந்து போளூருக்கு சுமார் 30 கி.மீ. ஆகவே மீண்டும் சேத்துப்பட்டில் தாலுக்கா அலுவலகம் ஏற்படுத்தித்தர வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பொன்னூர், நெடுங்குணம், வடபாதிமங்கலம், மன்சுராபாத், தேவிகாபுரம், கீழ்பட்டு போன்ற ஊர்களில் அதிக அளவு நெசவாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே தொகுதியில் ஏதேனும் ஒரு இடத்தில் ஒரு நூற்பு ஆலையை அமைத்துத் தந்தால் நெசவாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும்.

அதோடு சேத்துப்பட்டு துணை மின் நிலையம் 33/11 கே.வி. சப்-ஸ்டேஷன் உள்ளது. இங்கு மின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள காரணத்தினால் அதை விரிவுபடுத்தி 110 கே.வி. சப்-ஸ்டேஷன் ஏற்படுத்தித்தரவேண்டுகிறேன். இது ஏற்கனவே அரசின் பரிசீலனையில் உள்ளது.

பெரணமல்லூர் பேரூராட்சியில் சுமார் 10,000 பேர்கள் வாழ்கிறார்கள். இங்கு இருக்கக்கூடிய மேநீர் தேக்கத்தொட்டி மிகவும் சிறிய அளவாக இருக்கிறது. பழமையானது. ஆகவே அருகே உள்ள ஆவனியாபுரம் ஆற்றங்கரையிலிருந்து பெரணமல்லூருக்கு நீர் கொண்டுவந்து ஒரு புதிய, பெரிய மேநீர் தேக்கத்தொட்டி கட்டித்தந்து இங்குள்ள மக்களின் குறையை போக்க வேண்டுகிறேன். அதேபோன்று பெரணமல்லூர் நகராட்சியிலே இருக்கிற மருந்தகத்தை மாற்றி அரசு மருத்துவ மனையாக உயர்த்திக் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக தொகுதி முழுவதும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஜல்லி சாலைகள் போடப்பட்டன. ஆனால் 3 மாதங்களில் அவை மிகவும் மோசமான நிலையில் உள்ளன. இதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் டவுன் பஸ் விடுவதற்கு தற்போது சாலை சரியில்லாமல் இருக்கிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே இந்த சாலையை அமைத்த ஒப்பந்தக்காரர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 29] [திரு. இரா. அரிக்குமார்]

சேத்துப்பட்டு ஒன்றியத்தில் இருக்கும் சானா பாளையத்தில் இருக்கிற அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் போதுமான கட்டட வசதி இல்லாத காரணத்தினால் அங்கு படிக்கும் மாணவ, மாணவிகள் புளியமரத்தடியில் உட்கார்ந்து படிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல் மழை காலங்களில் விடுமுறை விட்டுவிடுகிறார்கள். இதனால் படிப்பு பாதிக்கப்படுகிறது. ஆகவே கூடுதல் கட்டடம் கட்டித்தந்தால் ஏதுவாகயிருக்கும். அதேபோல் தொகுதி முழுவதும் உள்ள பள்ளிக் கட்டடங்களை உடனடியாகப் பழுதுபார்த்தால் வரக்கூடிய மழைகாலப் பாதிப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு முக்கியமான விஷயத்தை இந்த மாமன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். பொதுவாக உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பியர்லஸ் ஸ்கீமில் பல்வேறு பொறுப்புகளை வகித்து கேன்வாசிங்கில் அதிக அக்கறை கொண்டுள்ளனர். அதன்மூலமாக அதிக வருவாய் அவர்களுக்குக் கிட்டுகிறது. இதனால் பள்ளிகளுக்கு சரிவர வருவது கிடையாது. ஆகவே மாணவர்கள் படிப்பு மிகவும் பாதிக்கப்படுகிறது. அரசு தலையிட்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தெள்ளார் ஒன்றியத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். இந்த ஒன்றியம் மிகப் பெரிய ஒன்றியம். சுமார் 65 பஞ்சாயத்துக்கள் இருந்து வருகின்றன. ஆகவே இதனை இரண்டாகப் பிரித்து தேசூரை மையமாகக் கொண்டு தேசூர் ஊராட்சி ஒன்றியம் என்று தனியாகப்பிரித்துத் தந்தால் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அடுத்தபடியாக தற்போது தேசூரில் புறக்காவல் நிலையம் இயங்கி வருகிறது. இதனை மாற்றி நிரந்தரக் காவல் நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தேசூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

[திரு. இரா. அரிக்குமார்] [1985 மார்ச் 29

நெடுங்குணம் கிராமத்திலே ஸ்ரீராமச்சந்திர பெருமாள் திருக்கோயில் உள்ளது. இது மிகவும் பிரசித்தி பெற்ற கோயில். இது மிகவும் பழுதடைந்துள்ளது. இந்தக் கோயில் பற்றி ஒரு சரித்திரம் உள்ளது.

ஸ்ரீராமபிரான் அயோத்தி மாநகருக்குச் செல்லும்போது இந்த நெடுங்குணத்தில் தங்கி ஓய்வு எடுத்துவிட்டுச் சென்றதாக சரித்திரம் கூறுகிறது. ஆகவே இந்தக் கோயிலைப் பழுதுபார்த்து இந்தக் கோயிலுக்குண்டான பெரிய தேர் ஒன்று இருக்கிறது, இதையும் சீர்செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் சென்னையிலிருந்து வந்தவாசிக்கு 104, 130 போன்ற பேருந்துகள் அதிக அளவிலே செல்கின்றன. சேத்துப்பட்டிலிருந்து சென்னைக்கு பேருந்துகள் கிடையாது. ஆகவே வந்தவாசியில் தங்கும் பேருந்துகளை சேத்துப்பட்டு வரை நீட்டம் செய்து அங்கு தங்குவதற்கு ஏற்பாடு செய்யவும், அதோடு சேத்துப்பட்டில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்று கட்டினால் சேத்துப்பட்டு வழியாகச் செல்லும் சுமார் 20 பேருந்துகளுக்குப் பழுதுபார்ப்பதற்கும் தங்குவதற்கும் வசதியாக இருக்கும்.

என்னுடைய தொகுதியில் அமைச்சர்களோ, மற்றும் முக்கியஸ்தர்களோ, வி.ஐ.பி.-க்களோ வந்தால் தங்குவதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே சேத்துப்பட்டில் ஒரு பயணியர் விடுதி அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (30—3—1985) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



1985 மார்ச் 29]

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

135. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசு பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது . குறித்து பணியாளர்-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 30—11—1982 ஆம் நாளிட்ட 1139 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பெற்ற அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

136. வெங்காயத்தை பொறுத்தமட்டில் திருநெல்வேலி மாவட்டத்தை அறிவிக்கப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 18—1—1985 ஆம் நாளிட்ட 57 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

137. கோயம்புத்தூர், பல்லடம் மற்றும் மலையாடிபாளையத்தைச் சேர்ந்த அறிவிக்கப்பட்ட அங்காடிகள் பகுதிகளிலிருந்து சில கிராமங்களை நீக்கம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 2—1—1985 ஆம் நாளிட்ட 10 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

138. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் மற்றும் சாராய கடைகள் (ஏலத்தில் தீர்வு செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 20—10—1984 ஆம் நாளிட்ட 1476 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1985 மார்ச் 29

* 139. ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)].

140. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)].

141. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)].

142. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது. (ஆங்கிலம்)]

**(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்**

ஏதுவுமில்லை.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-16.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-12.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.

## உள்ளடக்கம்.


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | வினாக்கள்—விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 425—442 |
| 2 | இந்தியக் கிரிக்கெட் அணியினர் ஷார்ஜாவில் நடைபெற்ற ரோத்மன்ஸ் கோப்பை போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளதற்குப் பாராட்டுகள். | 442 |
| 3 | பால், சர்க்கரை, பஸ் கட்டண உயர்வு பற்றி அவையில் அறிவிக்காது பத்திரிகையில் வெளியிட்டுள்ள அறிவிப்பு. | 443—446 |
| 4 | அறிவிப்பு— | |
| | சென்னை பெருநகர் நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் (திருத்த) சட்ட முன்வடிவு 1985 (மே. செ.). | 446 |
| 5 | கவன ஈர்ப்புகள்— | |
| | (அ) மின்வெட்டு காரணமாக விவசாய, தொழில் துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்பு. | 446—452 |
| | (ஆ) கோவை அரசினர் மருத்துவமனையில், நோயாளிகளையே மருந்து வாங்கி வரும்படி சொல்வதாகக் கூறப்படுவது. | 452—456 |
| 6 | வரவு-செலவுத் திட்டம் 1985-86 பொது விவாதம்—தொடர்ச்சி .. | 456—461 |
| | திரு. மெ. ஆண்டி அம்பலம் .. .. | 461—467 |
| | திரு. கோ. பாவாஜி .. .. .. | 468—473 |
| | திரு. ஆர். செங்காளியப்பன் .. .. | 473—480 |
| | திரு. ச. கோவிந்தசாமி .. .. | 480—483 |
| | திரு. ம. நா. ராமஜெயம் .. .. | 484—494 |
| | திரு. ஆ. நடராசன் .. .. .. | 494—501 |
| | திரு. சோ. கலிதீர்த்தான் .. .. | 501—506 |
| | திரு. சே. இரத்தினவேலு .. .. .. | 506—512 |
| | திரு. வி. கோ. செல்லப்பா .. .. | 512—517 |
| | திரு. எஸ் பாலசுப்பிரமணியன் .. .. | 517—521 |
| | திரு. சு. திருமலைச்சாமி கவுண்டர் .. | 521—528 |
| | திரு. பூ. மு. நரசிம்மன் .. .. | 528—534 |
| | திரு. எம். செல்லமுத்து .. .. | 534—538 |
| | திரு. ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி — .. | 538—543 |
| | திரு. ஜெ. ராஜாபாபு .. .. .. | 543—555 |
| | திரு. மா மீனாட்சிசுந்தரம் .. .. | 556—559 |
| | திரு. அ. பெரியசாமி .. | |
| 7 | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 559—560 |


டி 2 எ 56—1

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, மார்ச் 30, சனிக்கிழமை.

பங்குனி 17, ரக்தாட்சி, திருவள்ளுவர் ஆண்டு-2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு".

குறைகூறுவோரின் சொற்களைச் செவி கைக்கும் நிலையிலும் பொறுக்கின்ற பண்பு உடைய அரசனது குடைநிழலில் உலகம் தங்கும்.

## 1. வினாக்கள் — விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சைதை அரசு பொது மருத்துவமனை

32 — (*வினா எண். 308) திரு. சா. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை அரசு பொது மருத்துவமனையை நூறு படுக்கைகள் கொண்டதாக மாற்றவும், மற்றும் அனைத்து வசதிகளும் கொண்ட மருத்துவமனையாக விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

வதை அரசு அறியுமா? அப்படி அங்கே அரசுப் பொது மருத்துவமனையைக் கட்டுவதற்கான திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு பகுதியிலேயும் நாம் அப்படி மருத்துவ மனையைத் துவக்குவது என்பது முடியாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்தப் பகுதியிலே இடமிருக்கிறது என்று ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, அதற்காக நடவடிக்கை எடுத்து அவர்களுடைய யோசனையை அரசாங்கத்திற்கு அனுப்பினால் அந்த யோசனையைப் பரிசீலிப்பதில் எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, தற்போது பொது மருத்துவ மனையானாலும் அல்லது ஸ்டான்லி மருத்துவமனையானாலும் பழைய படுக்கைகளைப் பயன்படுத்துகிறார்கள். அது நோயாளிகளுக்கு வசதிக் குறைவாக இருக்கிறது. அப்படிப்பட்ட படுக்கைகளை புதியதாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். முதல் வகுப்பானாலும். பிறவகுப்பானாலும் ஏழைகள் படுக்கின்ற வகுப்பானாலும் பழைய கட்டில்களைப் பயன்படுத்துகிறார்கள். அதையெல்லாம் எடுத்துவிட்டு புதுக் கட்டில்களைப் போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே இந்தப் பழைய கட்டில்களை — ஓல்ட் காட்ஸ் — இவைகளைப் பயன்படுத்தவே முடியாது என்று அதிகாரிகள் மட்டுமல்லாமல், ஒரு கமிட்டியையே நியமித்து, அவைகளையெல்லாம் உடனடியாகப் பழுது பார்க்கக் கூடியவைகளைப் பழுது பார்த்துவிட்டு, பழுது பார்க்கவே முடியாது என்று இருப்பவைகளைக் கண்டேம் செய்யக்கூடிய நிலையில் அதைக் கொள்கை ரீதியாகக் கடைப்பிடித்து வருகிறோம். அந்த வகையிலே ஏறக்தாழ 5 சதவீதத்திலிருந்து 6 சதவீதம் கட்டில்கள் பழுது பார்க்கப்பட முடியாமல் கண்டெம் செய்ய வேண்டியவைகளைக் கண்டேம் செய்துவிட்டு உடனடியாகப் புதிக் கட்டில்களை நிரப்ப இருக்கிறோம்.



**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** பேரவைத் தலைவரவர்களே, சைதை அரசு பொது மருத்துவ மனையிலும் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள அரசாங்க மருத்துவமனைகளிலும் அறுவை சிகிச்சை பகுதிகளில் ஜெனரேட்டர் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எல்லாயிடங்களிலும் ஜெனரேட்டர்களைப் பொருத்துவது என்பது சாத்தியமாகாது. முதலிலே மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலே—டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடல்களிலே—நாம் ஜெனரேட்டர்களை ஏற்படுத்தி, பிறகு ஒரு சேஸ்ட் ப்ரோகிராமாக 100 படுக்கைகளுக்கு மேற்பட்ட தாலூகா மருத்துவமனைகளுக்கு அந்த ஏற்பாட்டைச் செய்வது என்று இப்படிப் படிப்படியாகத்தான் செய்ய முடியும்; நிதிநிலைமையினுடைய அந்த எல்லைக்குள்ளேயிருந்துதான் நாம் செயலாற்ற முடியும் என்பதையும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காஞ்சீபுரம் தலைமை அரசு மருத்துவமனையில் புதிதாக ஒரு கட்டிடம் கட்டி அங்கே படுக்கை வசதியில்லாமல் அங்கே வரும் நோயாளிகள் தரையில் படுக்கிறார்கள். அந்தக் கட்டிடம் கட்டப்படுகின்ற நேரத்தில் அங்கே படுக்கை வசதிகள் செய்யப் பட்டதா அல்லது வசதி இல்லாமல் அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டதா என்பதை அறிய விரும்புவதோடு மட்டுமல்லாமல், அப்படி இல்லை என்றாலும் அங்கே படுக்கை வசதிகளை உடனடியாக அரசு செய்து தருமா என்பதை அறிய விரும்புவதோடு மட்டுமல்லாமல், எங்களுடைய மாவட்டத் தலைமை மருத்துவமனையிலே இன்றுவரையிலே ஜெனரேட்டர் காரணத்தாலே அங்கே அறுவை சிகிச்சை செய்ய முடியாமல் சென்னை மருத்துவமனைக்கு நாங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறோம், இந்தக் குறைபாடுகள் உடனடியாகப் போக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் காஞ்சீபுரம் பாலாஜி அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன், அவர்கள் முதல் இரண்டு கேள்விகளைச் சேர்த்துக் கேட்டிருக்கின்றார்கள்.

காஞ்சீபுரம் மாவட்ட மருத்துவமனையில் ஜெனரேட்டர் வைப்பதற்கு உத்தரவு போடப்பட்டு, ஜீ.ஓ. பிறப்பித்தாகி விட்டது. வெகு விரைவிலே ஜெனரேட்டர் அங்கே இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, காஞ்சீபுரத்தில் உள்ள புற்றுநோய் மருத்துவமனையைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். ஏற்கனவே பல ஆண்டுகளாக இயங்காமல் இருந்த அந்த மருத்துமனை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இயங்க ஆரம்பித்திருக்கிறது. இப்பொழுது 150 படுக்கைகளுடன் அந்த மருத்துவமனை இயங்கி வருகிறது. இப்படி அங்கே 150 படுக்கைகள் வைத்தால் போதுமான அளவிற்கு வருவார்களா என்ற அச்சத்தில் இருந்தோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லக்கூடிய நிலையில் 150 படுக்கைகள் போதாது என்று சொல்லுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இரண்டாவது புரோகிராமாக—பேஸ்ட் ப்ரோகிராமாக இன்னும் 150 படுக்கைகளுக்கான கட்டிடம் கட்டி முடிக்கப் பட்டிருக்கின்றது. வெகு விரைவில் படுக்கைகளுடன் அந்தக் கட்டிடத்தை நாம் திறக்க இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. செ. **தங்கராசு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையில் பணியாற்றுகிற டாக்டர்கள் தனியாக டிஸ்பென்சரி வைத்துக் கொண்டு அரசு மருத்துவ மனைக்கு வருகின்ற நோயாளிகளைத் தங்களுடைய டிஸ்பென்சரிக்கு வரவேண்டும் என்ற ஆலோசனையை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மூலக் கேள்விக்குத் தொடர்புடைய துணை வினாக்கள்தான் கேட்கப்பட வேண்டும்.

**திரு. செ. தங்கராசு**: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையில் பணியாற்றுகின்ற அந்த டாக்டர்கள் தனியாக டிஸ்பென்சரி நடத்தக் கூடாது என்று அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே**: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஆணையிடப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்லாமல் நம்முடைய கவனத்துக்கு அப்படிக் கொண்டு



வருகின்ற நேரத்தில் கடுமையான நடவடிக்கை பல நேரங்களில் எடுத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு ஏதாவது தனியாக இப்படிப்பட்ட தகவல் வந்திருக்குமேயானால் தாராளமாக எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் எழுதினால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. தங்கவேலு**: மாமன்றத்தின் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்துகளே கிடையாது. அங்கே மருந்துகள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே**: தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டுமல்ல. மருத்துவ மனைகளில் பல வேன்கள் இருக்கின்றன. அந்த வேன்கள் பல்வேறு சப் சென்டர்களுக்குப் போய் நோயாளிகளைப் பார்ப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். மேலும் கூடுதலாக 15 ஆயிரம் ரூபாய் அளவுக்கு மருந்துகள் வாங்கலாம் என்று நாம் உத்தரவு போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே பொதுவாக முன்பு இருந்ததை விட இப்போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏராளமாக மருந்துகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பல நேரங்களில் நாம் கூட போய் ஸ்டாக் செக் பண்ணுகிறோம். எவ்வளவு மருந்துகள் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். எனவே எந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தில் மருந்துகள் இல்லை என்று அந்தக் குறிப்பினைக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. தெ. பெருமாள்**: பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் சித்தா பிரிவு என்ற ஒரு பிரிவு இருக்கிறது. அங்கே அந்தப் பிரிவுக்கான படுக்கைகள் எதுவும் இல்லாத நிலைமை இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 16 படுக்கைகள் கொண்ட சித்தா பிரிவுக்கு தொகை ஒதுக்கி அதற்கென்று தனியாக டாக்டர்களை நியமித்து தேவையானவற்றைச் செய்ய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 மார்ச் 30

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** பேரவைத் தலைவர் அவர்களே, சித்தா பிரிவைப் பொறுத்தவரையில் நாம் ஏராளமான இடங்களில் ஏறத்தாழ 185 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா அவுட் பேஷண்ட் பிரிவை ஏற்படுத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக் கூடியது இன் பேஷண்ட் பிரிவைப் பற்றி. அவ்வாறு மாவட்ட மருத்துவமனைகளில் ஏற்படுத்தி இருக்கிறோம். சிதம்பரம் தாலுகா மருத்துவமனையிலும் ஏற்படுத்தியிருக்கிறோம். இப்படி மேலும் சில தாலுகா மருத்துவமனைகளில் சித்தா பிரிவைப் பொறுத்தவரையில் படுக்கைகள் கொண்ட பிரிவை ஏற்படுத்த இருக்கிறோம். அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய யோசனையைக் கவனிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருப்பதோடு தண்ணீர் வசதியும் இல்லாமல் இருக்கின்றது. அதற்காகப் போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. எனவே மின் இணைப்பு தருவதற்கும் தண்ணீர் வசதி ஏற்படுத்துவதற்கும் இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக எழுதிக் கொடுத்தால் உடனடியாகக் கவனிக்கலாம். ஆகவே இவ்வாறு கேட்கப்பட்ட இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத காரணத்தால் பயனில்லாமல் போய்விடக்கூடாது. எனவே பயன் தர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். குறிப்பிட்டு அப்படிப் பட்ட குறைபாடுகள் இருக்கின்றன என்று தெரிவித்தால் உடனடியாக கவனிக்க சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது ஜெனரேட்டர் பொறுத்துவது என்பது ஃபேஸ்ட் ப்ரோகிராமாகத்தான் செய்ய முடியும் என்றும் குறிப்பிட்ட எண்ணிக்கை உடைய மருத்துவமனையில் தான் அவ்வாறு ஜெனரேட்டர் வைக்க முடியும் என்று சொன்னார்கள். ஆனால் ஆண்டிலே நான்கு மாதங்களுக்கு மேல் மின்வெட்டு இருப்பதன் காரணத்தால் போதிய வெளிச்சமும், மின்விளக்கு வசதியும்



1985 மார்ச் 30]

இல்லாத காரணத்தால் நோயாளிகள் பாதிக்கப்படக்கூடிய அளவில் மருந்துகளைத் தவறாகக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுவதோடு, ஆப்பரேஷன் செய்யும்போது நோயாளிகளின் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை இருப்பதன் காரணத்தால் இந்தத் துறையினை மிக முக்கியமாகக் கருதி அரசு அதிகமான ஜெனரேட்டர் வாங்கிக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அளவிற்கு ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும் ஜெனரேட்டர்ஸ் பொருத்துவதே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களே நேரடியாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்ன காரணத்தினால்தான் நம்மால் செய்ய முடிந்தது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் எல்லா மாவட்டங்களிலும் ஜெனரேட்டர்ஸ் இடையாது. மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டிருக்கக் கூடிய 115 மருத்துவமனைகளிலே மெடிக்கல் காலேஜ் ஹாஸ்பிட்டல்களிலே பாதி இடங்களில்தான் ஜெனரேட்டர்ஸ் இருக்கின்றன. எதற்காகச் சொல்கிறேன் என்றால், Thanks to the Hon. Chief Minister's direct intervention. அதைச் செய்ய முடிந்தது. ஆகவேதான் நிதிநிலையினுடைய எல்லைக்குள்ளே தான் நாம் செயலாற்ற முடியும். (within the policy of taxation) பீகார் மாநிலத்திலே 4.5 சதவீதம் தான் மொத்தம் பட்ஜெட்டிலே செலவு செய்கிறார்கள். நாம் 9 சதவீதத்துக்கு மேலே செலவு செய்கிறோம். ஆகவே, அதற்கு மேலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்கின்ற உணர்விலே நமக்கு முழுக்க, முழுக்க உடன்பாடு உண்டு. எவ்வளவு வேகமாக நாம் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் கே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகின்றபொழுது 185 இடங்களில் சித்த மருத்துவ ஆரம்பச் சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த 185 டாக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிற இடங்களிலே சித்த மருத்துவப் பிரிவில் ஓரிடத்தில் கூட [illegible] அளவு மருந்துகள் கொடுக்கவில்லை. நானே [illegible] சித்த மருத்துவப் பிரிவில் டாக்டராகப் பணியாற்றியவன்.

[1985 மார்ச் 30

**திரு. சா. துரைசாமி:** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்ற நெசவாளர்களை விட தனியாரிடம், மாஸ்டர் வீவரிடம் பணியாற்றுகிறவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே மாஸ்டர் வீவர்சை கட்டாயப்படுத்தி நெசவாளர்கள் கட்ட வேண்டிய பங்குத்தொகையான வைப்பு நிதி மற்றும் ஆயுள் காப்பீட்டு நிதிக்கு தேவையான பங்கு தொகைகளைக் கட்டாயப்படுத்தி வசூல் செய்தாவது, அரசாங்கம் இந்தத் திட்டத்தை செயல் முறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமா? கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்ற நெசவாளர்களுக்கு வயது வரம்பு நிர்ணயித்திருப்பது 55 என்று இருப்பதை மாற்றி 60 வயதாக நிர்ணயிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே; தமிழ்நாட்டில் மொத்தம் 13.34 லட்சம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் கூட்டுறவுத் துறையில்தான் 8.86 லட்சம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். தனியார் துறையில் 4.46 லட்சம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, வைப்பு நிதி மற்றும் ஆயுள் காப்பீட்டு நிதித் திட்டத்தின்கீழ் தனியார் துறையில் பணியாற்றுகின்ற நெசவாளர்களுக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படாது என்று கூறினேன். இதற்கு தனியாக ஒரு திட்டம் இருக்கிறது. கூட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவி சிறப்புத் திட்டம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தத் திட்டத்தின்கீழ் தனியார் துறையில் பணியாற்றுகிற நெசவாளர்களுக்கும் பயன்படுகிற வகையில் திட்டத்தை அமல்படுத்தலாம். அதிலே பணியாற்றுகிற நெசவாளர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு முன்வரவேண்டும்.

**திரு. சா. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின்கீழ் வருகிற நெசவாளர்கள் இறந்துவிட்டால் அந்த நெசவாளர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்படுகிற உதவித் தொகை எவ்வளவு? அது எப்போதிலிருந்து அமலாக்கப்படுகிறது? கவர்னர் அவர்கள், உரையில் நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தருகிற திட்டம் பற்றி சொல்லப்பட்டிருக்கிறதே, அந்தத் திட்டம் சென்னை மாநகரிலுள்ள நெசவாளர்களுக்கும் செயல்முறைப்படுத்தப்படுமா?



1985 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நெசவாளர் ஒருவர் இறந்துவிட்டால் 1—3—1980 க்குப் பிறகு அந்தக் குடும்பத்திலுள்ள வாரிசுதாரர்களுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அந்த உறுப்பினருக்குச் சேரவேண்டிய தொகையுடன் ரூபாய் 3,000 ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டம் தீட்டி இது வரையில் 1,06,500 பேர்கள் அதன் மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள்.

**திரு. கு. ரமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் சொல்லும்போது தனியார் துறையில் இருக்கும்படியான கைத்தறித் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைவு என்று குறிப்பிட்டார்கள். 13.34 இலட்சம் பேர்களில் இவர்கள் 4 இலட்சத்திற்கு உட்பட்டவர்கள்தான் என்று சொன்னார்கள். எண்ணிக்கை எவ்வளவு என்பதல்ல பிரச்னை. ஒரே தொழில் செய்கிற, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், அவர்கள் கூட்டுறவுத் துறையில் இருந்தால் மட்டுமே அவர்களுக்கு வைப்பு நிதி போன்ற வசதிகள் கிடைக்கும் என்று சொல்வது, தொழில் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமை இது அந்த உரிமையை இவர்களுக்கு மட்டும் கொடுக்க முடியாது என்று சொல்வது உண்மையிலேயே இரண்டு பகுதிகளாக தொழிலாளர்களைப் பிரித்து வைக்கும்படியான அளவிற்கு ஒரு டிஸ்க்ரிமினேஷன் என்ற அளவிற்கு வந்து சேரும். ஆகவே அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து இவர்களுக்கும் இந்த மாதிரி சட்டங்களில் வரக்கூடிய, பொதுவான நலச் சட்டங்களின் கீழ் வரக்கூடிய உரிமைகளைக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் விஸ்தரிக்கப்படும் உத்தேசம் இல்லை என்று சொன்னேன். நிச்சயமாக உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, நெசவாளர்கள் எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களில்தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட நெசவாளர்கள், பெரும் முதலாளிகள், மாஸ்டர் வீவேர்ஸ் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள, நெசவாளர்களை ரூ. 500, ரூ. 1,000 என்று கொடுத்து அவர்களை

[1985 மார்ச் 30

கொத்தடிமைகளாக வைத்துக்கொண்டு அவர்களிடமிருந்து மீள முடியாத வகையில் வைத்துக்கொள்கிறார்கள். இதனால் அந்தச் சங்கங்கள் இயங்க முடியாமல் போகிறது. அந்த நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் மூலதனத்தை, நூலை எடுத்து சாப்பிட்டுவிடுகிறார்கள். ஆகவே மாஸ்டர் வீவர்களிடம் கொத்தடிமைகளாக இருக்கும் நெசவாளர்களை மீட்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது? கூட்டுறவுச் சங்கங்களில் எவ்வளவு நெசவாளர்கள் இருக்கிறார்கள்? தனிப்பட்டவர்களிடம் எவ்வளவு பேர்கள் நெசவுத் தொழில் செய்கிறார்கள், தமிழ்நாடு மட்டத்தில் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்** : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் எவ்வளவு நெசவாளர்கள் பணியாற்று கிறார்கள், தனியார் துறையில் எவ்வளவு நெசவாளர்கள் பணி யாற்றுகிறார்கள் என்பதுபற்றி ஏற்கனவே பதில் சொல்லியிருக் கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதில் உண்மை இல்லாமல் இல்லை. அடிமைத்தனத்தில் உள்ள நெசவாளர்களை மீட்பதற்காக தனியாக உதவி இயக்குநர்களை தமிழக அரசு நியமித்து அவர்களுக்கு கூட்டுறவுத் துறையில் வேலை கொடுப் பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கு. சுப்பராயன்** : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை யில் வைப்புநிதி மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழக நிதித் திட்டத் தால் பயன் அடைந்துள்ள நெசவாளர்களின் எண்ணிக்கை என்ன என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்** : தலைவர் அவர்களே, 1,06,500 பேர்கள் என்று ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. கே. பாலாஜி** : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை யில் பணி செய்கிற அந்த நெசவாளர்களுக்கு நாம் வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் சங்கத்தின் வாயிலாக. அதேபோல் தனிப்பட்ட முதலாளிகளிடத்தில் நெசவு செய்கிற நெசவாளர்களுக்கும் வீடு களை குறைந்த வட்டியில் கட்டிக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்** : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை, தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கலாம்.



1985 மார்ச் 30]

**திரு. அ. பாலுசாமி** : தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு கூட்டுறவுத் துறை மூலம் வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுகிறது. அதைத் திருப்பி அளிக்கும்போது அரசாங்கம் பங்குத்தொகை எனதயும் சேர்த்து அளிக்கிறதா? அல்லது அவர்கள் செலுத்திய தற்கு வட்டியுடன் சேர்த்து, அளிக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்** : மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, சேமிப்பு, மற்றும் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நெசவாளித் தொழிலாளரும் தன் கூலியில் ரூபாய்க்கு ஆறு பைசா இந்த நிதியில் செலுத்த வேண்டும். மாநில அரசு மூன்று பைசாவை தன் பங்காகக் செலுத்தும். இந்தத் தொகைக்கு மாநில அரசு வருஷத்திற்கு 7½ சதவீதம் வட்டி செலுத்தும். இந்த மொத்த நிதி அரசு கரு வூலகத்தில் வைக்கப்படும். 1—3—1983-ல் ஏற்கனவே சொன்ன படி, ஒரு நெசவாளர் இறந்து விட்டால், அவர் குடும்பத்திற்கு ஏற்கனவே சேர்ந்த தொகை அல்லாமல் ரூ. 3,000 கொடுக்கப்படும்.

(முற்பகல் 9-30)

**திரு. செ. தங்கராசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, கவர்னர் உரையில் நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்ட மிருக்கிறது. அந்தத் திட்டம் சென்னையிலுள்ள நெசவாளர் களுக்கும் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனி கேள்வி போட வும். சென்னை தமிழகத்திலிருந்து பிரிக்கமுடியாத ஒரு பகுதி. ஆகவே, இதன் பலனை சென்னையில் உள்ளவர்களும் அனுபவிப் பார்கள்.

**திருமதி பா. வளர்மதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்ற நெசவாளர் களுக்கும், தனியாரிடத்தில் பணிபுரியும் நெசவாளர்களுக்கும் ஓரே சம்பள விகிதத்தில் செயல்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்**: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**2. இந்திய கிரிக்கெட் அணியினர் ஷார்ஜாவில் நடைபெற்ற ரோத்மன்ஸ் கோப்பை போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளதற்குப் பாராட்டுகள்.**

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஐக்கிய அரபு எமரேட்டுகளில் உள்ள ஷார்ஜாவில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி பந்தயத்தில் நம் கிரிக்கெட் வீரர்கள் மூன்று விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மீண்டும் வெற்றி கண்டு, ரோத்மன்ஸ் கோப்பை பெற்று கிரிக்கெட் வானில் நம் புகழ் கொடியை பறக்கவிட்டு, நாட்டிற்குத் தொடர்ந்து பெருமையை சேர்த்துக் கொண்டிருக்கிற நம்முடைய விளையாட்டு வீரர்களுக்கு இந்த மன்றத்தின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் தாங்கள் வாழ்த்தினால் அது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, ஐக்கிய அரபு எமரேட்டில் நடைபெற்ற கிரிக்கெட் பந்தயப் போட்டியில், இந்திய அணி மீண்டும் வெற்றிக் கொடியை நாட்டியிருப்பது நமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும். அண்மையில் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியிலும் நல்ல புகழையும், பெருமையும் நிலைநாட்டத்தக்க அளவுக்கும், அதிலே கலந்து கொண்ட விளையாட்டு வீரர்கள் அனைவரும் எல்லோராலும் பாராட்டத்தக்க அளவுக்கு சிறப்பான வெற்றியைத் தேடித் தந்தார்கள். இதையடுத்து, இப்போது அரபு நாட்டிலே நடைபெற்ற போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி சிறப்பான வெற்றியைப் பெற்றிருப்பது நமக்கு எல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கக் கூடிய ஒன்று என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து. இந்த வெற்றியைத் தேடித் தருவதற்கு காரணமாக இருந்த இந்திய கிரிக்கெட் வீரர்கள் அத்தனை பேர்களையும் இந்தப் பேரவை பாராட்டுகிறது; போற்றுகிறது; வரவேற்கிறது; வாழ்த்துகிறது.





(அனைவரும் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில் மேசையைத் தட்டி, கரவொலி எழுப்பினர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையின் சார்பிலும், என் சார்பிலும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் இந்திய கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேமாதிரி, எல்லா விளையாட்டுத் துறைகளிலும் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென்று, இந்த நேரத்தில் நான் வாழ்த்துகிறேன்.

**3. பால், சர்க்கரை, பஸ் கட்டண உயர்வு பற்றி அவையில் அறிவிக்காது பத்திரிகையில் வெளியிட்டுள்ள அறிவிப்பு.**

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, பாலின் விலை லிட்டர் ஒன்றுக்கு 65 பைசாவும், சர்க்கரையின் விலையில் கிலோவுக்கு 40 பைசாவும், பஸ் கட்டண உயர்வும் செய்து பத்திரிகைகளிலே அறிவிப்பு வந்திருக்கிறது. அதைச் சட்டமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமா, வேண்டாமா என்ற அவசியம் இல்லை. இது முக்கியமாக மக்களை பாதிக்கக்கூடியது. இன்னும் சொல்லப் போனால், இது பாலிசி மேட்டராக இருக்கலாம். சட்டமன்றம் இங்கே நடந்துகொண்டிருக்கும்போது, வெளியில் அறிவிப்பது என்பது 'இட் இஸ் இம்பிராபர்'. அது மட்டுமல்ல. சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமான அறிக்கையை மறு பரிசீலனை செய்து, விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, பஸ் கட்டணம் உயர்வை பாலிசி மேட்டர் என்று சொல்லிவிட முடியாது. ஏற்கனவே ஏறத்தாழ இரண்டாண்டு காலமாக பஸ் கட்டண உயர்வு பரிசீலனை செய்யும் நிலையில் இருந்துகொண்டிருந்தது. இதைப்பற்றி ஏறத்தாழ நான்கைந்து மாதங்களுக்கு முன்பு, அதுவும் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பேகூட இதைப் பற்றி பேசி, உள்துறை செயலர் அறிவிப்புகள் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டது. அன்றைக்கு பொதுமக்களிடமிருந்து

பெற்ற மனுக்களைப் பரிசீலனை செய்து, ஒரு முடிவு செய்து வைத்திருந்தார்கள். இதை ஏப்ரல் 1 ஆம் தேதி அமுலாக்க வேண்டுமென்று ஏற்கனவே பத்திரிகைகளில் வெளிவந்து, இப்போது ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து அமுலாக்க இருக்கிறோம்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, அவைக்கு ஒரு தவறான தகவலைச் சொல்கிறார்கள். அதனால் ஒரு நிமிஷம் அனுமதிக்க வேண்டுகிறேன். தலைவரவர்களே, ஒரு கமிட்டி உருவாக்கப் பெற்று, பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டுமா, வேண்டாமா என்று பொது மக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு, பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டில் பஸ் கட்டணத்தை உயர்த்துவோம் என்ற வாசகம் இல்லை. பஸ் கட்டணத்தை உயர்த்துவது என்பது ஒரு பாலிசி மேட்டர்தான். ஆனால் இது ஒரு அதிகாரி மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது சரியான நடவடிக்கையா என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, பஸ் கட்டணத்தை உயர்த்துவது பற்றி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இரண்டாண்டு காலமாக அதுபற்றி பரிசீலனை செய்து, 30 நாள் அதற்கென்று இடைவெளி தந்து, பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் மற்றவைகள் வந்து, அவற்றை ஆராய்ந்த பிறகு அரசு முடிவு செய்து 1—4—1985 முதல் பஸ் கட்டணம் உயரும் என்று சொல்லி, உயர்த்தக்கூடாது என்று கருத்து சொல்லியிருந்தாலும், 1—4—1985-லிருந்து பஸ் கட்டணம் உயர்த்தப்படும் என்று அரசின் சார்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அது பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, இந்தச் சபையில் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லவில்லை. அது மட்டுமல்ல. பால் கட்டணம் உயருகிறது. சர்க்கரை கிலோவுக்கு 40 பைசா உயருகிறது . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, பஸ் கட்டணத்தைப் பொறுத்தவரை ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். இந்த பஸ் கட்டணத்தை உயர்த்துவது என்பது 'குவாஸி ஜுடிஷியல் ஃபங்ஷன்'. அதனால் ஹோம் செக்ரட்டரி





இரு பக்கமும் விசாரித்து பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தாலும், அதைக் கேட்டு, அவரே எடுக்கின்ற முடிவு. இன்னும் சொல்லப் போனால் அரசாங்கத்தின் நேரடி பொறுப்பு இதில் வருவதில்லை. Because, it is a quasi-judicial function அதை அவர் வெளியிடுவதற்கு உரிமை உண்டு. (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, அப்படி ஒரு அறிக்கை சபையில் வைக்கப்படவில்லை. அந்த அறிக்கையை கேட்க உரிமை இருக்கிறது. அது ஏன் வைக்கப்படவில்லை? மிஸ் லீடிங் தி ஹவுஸ் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வராது. மிஸ்லீடிங் என்றால் எழுதிக் கொடுங்கள்.

**திரு. வி. பி. சிந்தன்:** தலைவரவர்களே, அறிக்கை வெளியிட்டதாகச் சொன்னார்கள். அந்த அறிக்கையை இந்தச் சபையில் வைக்க வேண்டும். Should not run away from this responsibility.

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி:** பொறுப்பு இல்லாமல் பேசுவதாகக் கூறுவது அவ்வளவு முறையானது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொறுப்போடுதான் பேசுகிறோம்; பொறுப்போடுதான் செய்கிறோம். ஏற்கெனவே அமைச்சரவைக் கூட்டத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டுமா, வேண்டாமா என்று பரிசீலனை செய்து, இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து பார்த்து, மீண்டும் ஒருமுறை பேச வேண்டுமென்று தள்ளிவைத்து, அதன் பிறகு மீண்டும் அமைச்சரவைக் கூட்டத்தில் பேசி, அதன் பிறகு ஹோம் செக்ரட்டரியிடம் சொல்லி—அவர்கள்தான் முறைப்படி செய்ய வேண்டும்—அவர்கள் செய்திருக்கிறார்கள். கமிட்டி போட்டாலும் அந்தக் கமிட்டியினர் நேரடியாகச் செய்ய முடியாது. அமைச்சரவை முடிவு செய்தாலும் அமைச்சரவையே கட்டணத்தை உயர்த்த முடியாது. ஹோம் செக்ரட்டரி விதிப்படி, பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெற்று, மக்கள் சொல்லுகின்ற அப்ஜக்ஷன்ஸ் மற்றும் கருத்துக்களைக் கேட்டு, ஆராய்ந்து முடிவு செய்ய உரிமை இருக்கிறது. அதன்படி அவர் செய்திருக்கிறார். தேர்தலுக்கு முன்பே இதுபற்றிய 'ஹியரிங்' முடிந்துவிட்டது. இப்போது கட்டண உயர்வு அமுலுக்கு வருகிறது. (குறுக்கீடு).

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'இர்ரெஸ்பான்சிபிள்' என்று பொருள்படும் வார்த்தையைச் சொல்லியிருந்தால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கிடு).

It is not unparliamentary. But let us use a polite language.

## 4. அறிவிப்பு.

### சென்னை பெருநகர் நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985 (மே.செ.).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 1985 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் (திருத்தச்) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1985 திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) மின் வெட்டு காரணமாக விவசாய, தொழில் துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் சுப்பராயன், கு. ரமணி, கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, ஜே. ஹேமச்சந்திரன், வி. பி. சிந்தன், டாக்டர் தே. குமாரதாஸ், திருவாளர்கள் அ. ரகுமான்கான், மா. மணிமாறன், ஆ. நடராசன், இரா. தாமரைக்கனி, ப. பொன்னுரங்கம், சோ. மா. இராமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்டுள்ள மின்வெட்டு காரணமாக விவசாயம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

## அறிக்கை.

கீழ்க்கண்ட காரணங்களால் தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது :—

1. பருவமழை பொய்த்ததனால் நீர் மின் நிலையங்களுக்கு நீர்வரத்து குறைந்துள்ளது.
2. பருவமழை பொய்த்ததன் காரணமாக டிசம்பர் மாதம் முதல் கேரளாவிலிருந்து மின்சாரம் கிடைக்கவில்லை.
3. கல்பாக்கம் அணு மின் நிலையம் ஆண்டு பராமரிப்புப் பணிகள் நிமித்தம் 7—12—1984-லிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யவில்லை.
4. நேரிடையாக மின் அனுப்பும் வசதியில்லாததால் ராமகுண்டத்திலிருந்து போதுமான மின்சாரம் கிடைக்கவில்லை.
5. தூத்துக்குடி அனல்மின் இயந்திரம் 1—2—1985 முதல் ஹைட்ரஜன் வாயு கசிவு காரணமாக பழுது அடைந்ததால் மின் உற்பத்தி செய்யவில்லை.
6. நெய்வேலியிலுள்ள 9-வது பிரிவு ஆண்டு பராமரிப்பு பணிகள் காரணமாக 22—2—1985 முதல் 7—3—1985 வரை மின் வழங்குதல் குறைந்துள்ளது.

2. தூத்துக்குடி 3-வது பிரிவு பழுது பார்த்தலுக்குப் பிறகு நடப்பாண்டு மே மாதத்தில் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 6—3—1985 அன்று உற்பத்தியைத் தொடங்கிய கல்பாக்கம் அணு மின் நிலையம் 235 மெகாவாட்டிற்கு பதிலாக 100 மெகாவாட் மின்சாரம் அளித்து வருகிறது. கூடிய சீக்கிரம் முழு அளவு மின்சாரம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. மேலே கூறியவற்றின் காரணமாக உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு 30 சதவீதம் மின் வெட்டு உச்சத் தேவையிலும், மின் அளவிலும் 1—2—1985 முதல் அமுல்படுத்தப்பட்டது.

மேலும் 1—3—1985-லிருந்து மின் வெட்டு, மின்சாரத்தை அதிக மாகப் பயன்படுத்தும் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு 50 சதவிகிதமாகவும், இதர உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு 40 சதவிகிதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் இதே தேதியி லிருந்து கிராமப்புற மின் தொடர்கள் 3 பகுதிகளாகப் பிரிக்கப் பட்டு இரண்டு பிரிவுகள் பகல் நேரத்தில் 6 மணி நேரமும், இரவில் 3-வது பிரிவிற்கு 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஞாயிறு தோறும் இப்பிரிவுகள் முறை மாற்றம் பெறும். இதற்கு முன்பு கிராமப்புற மின் தொடர்கள் இரண்டு பிரிவுகளாக்கப்பட்டு பகலில் 6 மணி நேரம் இரவில் 2 பிரிவிற்கும் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. வீட்டிற்கும் வணிகத்திற்கும், குறைந்த அழுத்த தொழிற்சாலைகளுக்கும் மற்றும் அத்தியாவசிய பணிகளுக்கும் மின் வெட்டு தற்போது அமலில் இல்லை. இது சென்ற ஆண்டிற்கு மாறுபட்டது ஆகும். இவ்வாண்டு, கடந்த ஆண்டுகளைப்போல் அல்லாமல், தொழிற் சாலைகளுக்கு உச்ச நேர கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. 1—2—1982 முதல் மின்சாரம் அளிக்கப்பட்ட உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளைப்போல் அல்லாமல் புதிய தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் தற்போது தடை ஏதும் கிடையாது.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் பருவ மழை தவறுதல், பராமரிப்புப் பணிகளின் காரணமாக மின் உற்பத்தி நிலத்தார், இயந்திரங்கள் பழுதடைதல் போன்ற பல காரணங்களினாலே, மின்வெட்டு ஏற்பட்டு இருக் கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது நியாயத்தின் அடிப்படையில், காரணங்களின் அடிப்படையில் சரியாக இருந் தாலும், இது பிரச்சினைக்கு உரிய தீர்வாக அமையாது என்ப தாலும், இவற்றால் ஏற்பட்டு இருக்கிற பிரச்சினைகளை நடை முறையிலே தீர்க்க வேண்டிய மிகுந்த பொறுப்பு நமது மாநில அரசுக்கு இருக்கிறது என்பதாலும், தொடர்ந்து வருடா வருடம் இத்தகைய அடிப்படையில் மின்வெட்டு அறிவிப்புகள் நடை பெற்றுக்கொண்டு இருக்கிறது. இந்த நிலையின் அனுபவத்தி லிருந்து நாம் புரிந்துகொண்டு தமிழகத்தின் தேவைக்கான மின் சாரத்திற்கு மேம்பாடு செய்து. திட்டமிட்டு, அவற்றை உற்பத்தி செய்வதற்கு, ஏதாவது மின் திட்டங்களை அரசு வைத்திருக்





கிறதா? பழுதடைதல், பருவமழை தவறுதல் போன்ற பலவி ளங்கள் வருகிற காரணத்தால், வரக்கூடிய பிரச்சனைகளைச் சமாளிப்பதற்கு உரிய நடைமுறைச் சிக்கலைத் தீர்ப்பதற்கு என்ன திட்டங்களை நமது மாநில அரசு வைத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் இத்தகைய பிரச்சினைகள் ஏற்படுவது இயற்கை. அதே பிரச்சினையைத் தான் நாமும் சந்தித்து வருகிறோம். இருப்பினும் உற்பத்தியை அதிகரிக்க பல திட்டங்கள் அரசால் மேற்கொள்ளப்பட்டு இருக் கின்றன. அவற்றைப் பற்றி மின் வாரிய நிதிநிலை அறிக்கையின் போது நாம் விரிவாக ஆராயலாம். (குறுக்கீடு).

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வைத்திருக்கும்படியான அறிக்கை, பல விளக்கங்களை தந்திருக் கக்கூடிய அறிக்கை. ஆனால் அமைச்சர் அவர்கள் மின்சாரம் தாவில்லை. மின்சாரம் வேண்டும் என்பதுதான் இப்போது இருக்கும்படியான பிரச்சனை. அதற்காகத்தான் கவன ஈர்ப்பு வந்திருக்கிறது. இருக்கும் நிலைமை இன்னும் மோசமாக இருக் கிறது என்று அவருடைய அறிக்கையிலேயிருந்து தெரிகிறது. அணு மின் உற்பத்தியில் கிடைக்கவில்லை. அதுவும் ரிப்பேர். தூத்துக்குடியில் ரிப்பேர், நெய்வேலியில் ரிப்பேர். இந்த நிலைமை யிலே பெரிய பெரிய அணு மின் உற்பத்தி நிலையங்கள் எல்லாம் ரிப்பேராக இருக்கும்போது, 30 சதவீதம் வெட்டு என்பதை, இப்போது 50 சதவீதமாகக் கொண்டுபோய், அதற்கு மேலும் போகிறது. சாதாரணமாக வீடுகளிலே மின்சாரத்தை உபயோகப்படுத்துகிறவர்களுக்கு வெட்டு இல்லை என்று இங்கே சொன்னாலும், பல மணி நேரங்கள் வீடுகளுக்கு மின்சாரம் கிடைப்பது இல்லை. எனவே ஏதாவது எமர்ஜென்சி திட்டம் ஒன்றை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து, சீக்கிரமாக ரிப்பேர் செய்து முடிக்கும் வரையில் உள்ள இடைக்காலத்தில் மின் சப்ளைக்கு ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்பதை உருப் படியாக எங்களுக்குச் சொல்லும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உருப்படியாகச் சொல்லப்போனால், இப்போது நிலைமை சரியாக இருக்கிறது. ஏன் என்றால், குறிப்பாக அணு மின்

களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மின் வெட்டின் காரணமாக அவர்களால் அந்தப் பட்டறைகளில் சரியாக வேலை செய்ய முடியாமல், கடன்களை திருப்பி அளிப்பதற்குக் கூட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு பாதிக்கப்பட்டிருக்கிறார்களே அவர்களுக்கு அரசு ஏதாவது சலுகைகளை கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த நியாயத்தின் அடிப்படையில்தான், புதியதாக தொழில்களைத் துவங்கியவர்கள், அவைகள் சிறியவையாக இருந்தாலும், பெரிய தொழில்களாக இருந்தாலும் 3 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு மின் வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் மின் வெட்டுக் காலங்களில், மின் வெட்டை ஈடு செய்யக்கூடிய ஜெனரேட்டர் போன்றவற்றை வைத்துக் கொள்வதற்கு அரசாங்கத்தின் அனுமதி வாங்கவேண்டியிருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறதே. ஆகவே அரசினுடைய அனுமதி அதற்குத் தேவைதானா என்பதை பரிசீலித்து அந்த விதி தளர்த்தப்படுமா? அத்தோடு தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு வெளிநாட்டிலிருந்து நிலக்கரி ஏதேனும் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அரசு அந்த விதியை தளர்த்துவது பற்றி ஆலோசிக்கும். ஜெனரேட்டரை அவர்கள் வைத்துக் கொள்வதற்கு மின் வாரியத்தினுடைய அனுமதி வேண்டும் என்கிற வகையிலே ஒரு விதி இருக்கிறது. ஆனால் அந்த விதி எந்த அளவிற்கு காலதாமதத்திற்கு காரணமாகிறது என்பதைப் பார்த்துத்தான், அந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு மைய அரசு அனுமதி தந்து 3 ஆயிரம் டன் நிலக்கரி ஏற்கெனவே கப்பலில் ஏற்றப்பட்டு விரைவிலே தூத்துக்குடி வந்து சேரும் நிலையில் உள்ளது.





## (ஆ) கோவை அரசினர் மருத்துவமனையில், நோயாளிகளையே மருந்து வாங்கி வரும்படி சொல்வதாக கூறப்படுவது.

**திரு. மு. இராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை அரசினர் மருத்துவமனையில் நோயாளிகளுக்கு உரிய மருந்துகள் கையிருப்பில் இல்லாத காரணத்தினால் நோயாளிகளிடமே உரிய மருந்து வாங்கி வரும்படி சொல்லுகின்ற நிலையையும் இதன் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டு வருவதும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

### அறிக்கை.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரையில் பொதுவாக நோயாளிகளுக்கு உரிய எல்லா மருந்துகளுமே போதிய அளவில் கையிருப்பில் இருந்து வருகின்றன. ஆகவே நோயாளிகளிடம் மருந்துகளை வெளியில் வாங்கி வரும்படி சொல்ல அவசியம் ஏற்படவில்லை. தவிர்க்க முடியாத சமயங்களில் சில உயிர்காக்கும் மருந்துகள் குறிப்பிட்ட நோயாளிகளுக்குத் தேவைப்படுகிறதென்று, அந்த நோயாளியைக் கவனிக்கும் மருத்துவர் கேட்டால், உடனே அந்த உயிர் காக்கும் மருந்துகள் கோவையிலேயே உள்ள மருந்துக் கடைகளில் இருந்து வாங்கிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து எந்த உள்நோயாளியிடமிருந்தோ அல்லது வெளிநோயாளியிடம் இருந்தோ அவர்களை வெளியில் இருந்து மருந்துகள் வாங்கும்படி சொன்னதாக கல்லூரி மருத்துவமனை முதல்வருக்கு நேரிலேயோ அல்லது எழுத்துமூலமோ இதுவரை எந்த சந்தர்ப்பத்திலும் புகார்கள் வரவில்லை. மேலும் இம்மருத்துவமனைக்கு நடப்பு ஆண்டுக்கு மருந்துகள் வாங்க மட்டும் ரூ. 45 லட்சங்கள் அரசால் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மேலும் 9 லட்சங்களுக்கு அதிகப்படியான மருந்துகள் வாங்கி அதற்குரிய பட்டியல்களையும் நிவர்த்தி செய்யக் கூடுதல் ஒதுக்கீடு கேட்கப்பட்டுள்ளது. ஆகவே எந்த மருந்துகளையும் நோயாளிகளிடம் வெளியில் வாங்கி வரும்படி சொல்வதற்குக் காரணமேயில்லை.

[1985 மார்ச் 30

(முற்பகல் 9-50)

**திரு. மு. இராமநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்தேன். ஆனால் விவர அறிக்கையிலே குறிப்பிட்டு சொல்லியிருப்பது போல், சிகிச்சை பெறக்கூடிய நோயாளிகளுக்கு உரிய மருந்து இல்லை என்று தெரிகின்றபோது அவர்களை கவனிக்கின்ற டாக்டர்கள் வெளியிலே அந்த மருந்து கிடைக்காததால் அதை எழுதி வாங்கி வரும்படி செய்து அவர்களுக்குத் தருகிறார்கள் என்றும் அதே போல வெளி நோயாளியோ உள் நோயாளியோ பாதிக்கப்படாத நிலையிலே கவனிக்கப்படுகிறது என்றும் விளக்கம் இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புவது, சாதாரணமாக புகார்கள் வரவில்லை. அப்படி அரசு மருத்துவ மனையில், நோயாளிகளுக்குத் தேவையான, உயிர் காக்கும், அத்தியாவசியமான மருந்துகள் கிடைக்கவில்லை என்று எந்தப் புகாரும், மருத்துவ முதல்வர் மூலமோ, உரிய டாக்டர்கள் மூலமோ வரவில்லை என்று அமைச்சர் அவர்களின் விளக்கம் இருக்கிறது. ஆனால் எந்த நோயாளியும் அப்படி ஒரு புகார் எழுதி கொடுப்பதற்கு சந்தர்ப்பம் கிடையாது. உயிர் பிழைத்தால் போதும் என்ற நிலையே தவிர வேறு அல்ல. நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புவது, ஸ்டெப்டோமைசின் இன்ஜெக்ஷன் மருந்து இல்லை என்றும், குளுகோஸ் டிரிப்ஸ் இல்லை என்றும், டையாபெட்டிக் இன்சுலின் இல்லை என்றும் புகார்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் 11-ந்தேதி அன்று மானியத்தின் மீது விரிவாகப் பேசலாம். கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. மு. இராமநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இந்த மருந்துகள் எல்லாம் கிடைப்பதற்கும், நோயாளிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் ரூ. 45 இலட்சம் அந்த மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கூடுதலாக ரூ. 7.92 இலட்சம் கூடுதலாக மருந்திற்காகவும், மற்ற செலவிற்காகவும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மொத்தமாக கோயம்



புத்தூர் மருத்துவ மனையை பொறுத்தவரையில் ரூ. 52 இலட்சத்து 2 ஆயிரம் இந்த ஆண்டு அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், லைப் சேவிங் டிரக்ஸ்—திடீரென்று ஒரு மருந்து தேவையென்றால் உடனடியாக அந்த மருந்தை வாங்கிக் கொடுப்பதற்கு ஒரு நாளைக்கு 200 ரூபாய் டிஸ்கிரீஷனரி கிராண்ட் என்று ஏற்படுத்தி இருக்கிறோம். எல்லா மருந்துகளும், எல்லா மருத்துவ மனையிலும் இருக்க முடியாது. சில நேரங்களில், சில மருந்துகள் திடீரென்று தேவைப்பட்டால் உடனடியாக வாங்கிக் கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சனை வரக்கூடாது என்பதற்காகத்தான் ரூ. 200 அதற்காக ஏற்படுத்தி இருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் இன்று படிப்படியாக நம் செலவு ஜாஸ்தியாக இருப்பதால் அதற்கு பணம் ஒதுக்கியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், ஸ்டெப்டோமைசின் பொறுத்தவரையில், எனக்கு திட்டவட்டமாகத் தெரியும். அது அங்கே இருக்கிறது. அந்த மருந்து இல்லாத மருந்தாக வருவதற்கு எந்த நேரத்திலும் வாய்ப்பு இல்லை. சில நேரங்களில் என்ன ஆகும் என்றால் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த அளவிற்கு உணர்ச்சிவசப்பட்டு சிந்திக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். சில நேரங்களில் சில பிராண்ட்தான் வேண்டும் என்று கேட்பார்கள். மீண்டும் மீண்டும் சொல்கிறேன். காம்போஸ் என்ற ஒரு மருந்து இருக்கிறது. அதற்கு ஈக்குவலண்ட்டாக டைசோபாம் என்ற மருந்து இருக்கிறது. காம்போஸ்தான் எழுதி கொடுக்க வேண்டுமென்று நோயாளிகள் வற்புறுத்துவார்கள். அந்த டாக்டர்கள் அதற்கு ஒத்துக்கொண்டு எழுதி கொடுத்துவிடுகிறார்கள். மருத்துவ துறையில் அந்த கெமிக்கல் நேமில் 10 கம்பெனிகள் தயார் செய்கின்றன. ஒரு குறிப்பிட்ட கம்பெனி தயார் செய்வது காம்போஸ் என்று இருக்கும். வேறொரு கம்பெனி தயார் செய்வது வேலிம் என்று இருக்கும். ஆனால் நோயாளிகள் அதே பிராண்ட் தான் வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். டாக்டர்களும், அதுவும் இதுவும் ஒன்றுதான் என்று சொல்ல பொறுமை இல்லாமல், அதுதான் வேண்டுமா என்று எழுதிக் கொடுத்துவிடுகிறார்கள். அப்படிச் செய்யக்கூடாது. அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அப்பொழுது தான் ஒரு நோயாளிக்கு எல்லா மருந்துகளும் இருக்கிறது என்கின்ற தைரியம் ஏற்படும். இதை நாங்கள் அவ்வப்போது

கண்காணித்து வருகிறோம். அந்தப் பிரச்சனையை அவர்கள் சொல்லித்தான் நாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது அல்ல. நாங்களே திடீர் சோதனை மூலமாக, அந்தப் பகுதியிலே டெபுடி டைரக்டர் மற்றும் ஜாயிண்ட் டைரக்டர் இவர்களை அனுப்பி, அந்த மருந்துகள் ஸ்டாக் இருக்கிறதா என்று பார்த்து, இந்த ஸ்டாக் இல்லை என்ற பிரச்னை எழாமல் செய்து வருகிறோம், என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. இராமநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அரசினர் மருத்துவ மனையில் எதிர்காலத்தில் ஏழை எளிய தொழிலாளர்களின் எக்ஸ்ட்ரார்டினரி சிச்சுவேஷனுக்குரிய மருந்து இல்லை என்கின்ற நிலை வரும்போது டாக்டர்கள் அந்த மருந்துகளை வாங்கி அந்த நோயாளிகளுக்கு பயன்படக்கூடிய நிலையில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்திரவு பிறப்பிக்கப்பட வேண்டும். உத்திரவு பிறப்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர்கள் பொறுத்தவரையில் அந்த இடத்திலே சிங்காநல்லூரில் ஏற்கனவே ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை இருக்கிறது. ஈ.எஸ்.ஐ. எல்லைக்குள்ளே வராத தொழிலாளர்கள் யாராவது வருவார்களானால்—தொழிலாளர்கள் மட்டும் அல்ல, எல்லா வகை ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய பிரச்சனை எழாமல் உடனடியாக வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தத் தயாராக இருக்கிறோம்.

**6. வரவு-செலவுத் திட்டம், 1985-86 பொது விவாதம் (தொடர்ச்சி).**

* **திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இன்று 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுக் கணக்கின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நான்காவது முறையாக நத்தம் தொகுதியிலிருந்து இந்தப் பேரவைக்கு 39,000-க்கு மேற்பட்ட வாக்கு வித்தியாசத்தில் தேர்ந்தெடுத்த நத்தம் தொகுதி வாக்காளர் பொதுமக்களுக்கு என்னுடைய இதயம் கனிந்த நன்றியை இந்தப் பேரவையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்த உரையில் தெரிவித்த நல்ல திட்டங்களை வரவேற்று ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வறட்சியாகக் நத்தம் தொகுதியைப் பொறுத்தவரையிலும் காரண காட்சியளிக்கிறது. குறிப்பாக பருவ மழை பொய்த்ததன் கஷ்டப்படு மாக அங்கே இருக்கிற விவசாய பொதுமக்கள் மிகவும் போன்ற கிறார்கள். அங்கே கடலை, சோளம், கேழ்வரகு கால்நடை புஞ்சைத் தானியங்கள் விளைச்சலே இல்லை. குடிதண்ணீர் களுக்குத் தீவனம் இல்லாத அவல நிலை உள்ளது. மதுரை வசதி இல்லாமலும் பொதுமக்கள் கஷ்டப்படுகிறார்கள். நத்தம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுக்களைக் கொடுத்து வேண்டுமென்றும், தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வைக்கவேண்டும் ஓராண்டுக்கு அரசுக் கடன்களைத் தள்ளி கேட்டுக் என்றும், கிஸ்தியை வஜா செய்ய வேண்டுமென்றும் செலுத்தி கொண்டிருக்கிறோம். அரசு அதிலே கவனம் கேட்டுக் அவற்றைச் செய்ய உடனே உத்திரவிட வேண்டுமென்று கொள்கிறேன்.

அடுத்து அரிசன மக்களுக்காக வீடு கட்டுவதற்காக தலா ரூ. 6,000 மானியமாகக் கொடுக்கப்படுகிறது. 6,000 ரூபாய்க்கு மண் சுவற்றை வைத்து கீற்றுக்கொட்டகை கட்டுவதற்குக்கூட முடியாது, தற்போது விலைவாசி ஏற்றத்தால் இந்த ரூபாய் போதுமானதாக இல்லை. எனவே மேலும் 2000 ரூபாய் கூடுதலாக அதற்காகக் கொடுத்து அந்த அரிசன மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நத்தத்தைப் பொறுத்தவரையில் தீயணைப்பு நிலையம் ஒன்று இருக்கிறது. அது பல வருடங்களாக கீற்றுக் கொட்டகையிலே இயங்கி வருகிறது. கட்டடங்கள் கட்டப்படவில்லை. தீயணைப்பு நிலையம் தீப் பிடித்தால்கூட தீயை அணைப்பதற்கு தண்ணீர் தொட்டி—டாங்க்—இணைக்கப்படாத வெறும் வண்டி தான் அங்கே இருக்கிறது. பக்கத்திலே ஒரு வீட்டிலே நெருப்பு பற்றிக்கொண்டால்கூட தீயணைப்பு வண்டி [illegible] உள்ள அந்த வண்டிதான் வந்து நிற்கிறது. அதைச் [illegible]

[திரு. மெ. ஆண்டி அம்பலம்] [1985 மார்ச் 30

பொதுமக்கள் எல்லாம் ஆத்திரப்படுகிறார்கள். அதனால் அதிகாரிகள் மீது குறை கூறுகிறார்கள். ஒரு டாங்க் வண்டிகூட வைக்கக் கூடாதா என்று கேட்கிறார்கள். ஆகவே பையர் சர்வீசஸ் அதிகாரிகள் தண்ணீர் உள்ள வண்டியை அங்கே கொண்டு வருவதற்கும் அந்தக் கீற்றுக் கொட்டகையில் இயங்கும் தீயணைப்பு நிலையத்தை மாற்றி கட்டடம் கட்டித் தருவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே கறந்த மலை, சிறுமலை, அழகர்மலை ஆகிய மலைகள் உள்ளன. மழை காலத்திலே வெள்ளம் பெருக்கெடுத்து தண்ணீர் வீணாக சமுத்திரத்திற்குப் போய்ச் சேருகிறது. ஆகவே அங்குள்ள விவசாயிகள் நலன் கருதி செந்துறை அருகே பஞ்சந்தாங்கி அணையையும் புதுக்கோட்டை அருகே பெத்தாங்குளி அணையையும், திருமணி முத்தாறு அருகே சுங்கு சக்கரை பாறை அணையையும் மணக்காட்டூர் அருகே அய்யனார் அருவி அணையையும் கோணம்பட்டி அருகே நொச்சி ஆறு அணையையும் கட்டுவது சம்பந்தமாக ஆய்வில் உள்ளது. அவைகளை உடனடியாகக் கட்டித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதைச் செய்தால் தண்ணீர் தேங்கி கேணிகளுக்கு ஊற்றெடுத்து தண்ணீர் பெருகி ஏழை எளிய மக்கள் பயன்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் விவசாயத்திற்கும் பயனளிக்கும்.

என் தொகுதியிலே காட்டிலாகாவிற்குச் சொந்தமான நிலங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அங்கே அவைகள் எல்லாம் எந்தவிதமான மரங்களும் இல்லாமல் சமவெளியாகக் காட்சியளிக்கின்றன. தேத்தாம்பட்டி, சக்கபிச்சன் பட்டி, நல்லூர் ஆகிய ஊர்களிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலத்தை ஏழை எளிய விவசாயிகளுக்கு ஐந்து ஏக்கர் வீதம் ஒதுக்கி பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாஜி இராணுவ வீரர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படவேண்டும். அண்டை மாநிலங்களிலே கொடுக்கப்படுவதைப் போன்று அவர்களுக்கு தம்முடைய மாநிலத்திலேயும் [illegible] [illegible] [illegible] செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. மெ. ஆண்டி அம்பலம்]

அடுத்து கறந்தமலையில் வலசை, புதூர், மலையூர் ஆகிய மூன்று ஊர்கள் மலை உச்சியில் இருக்கின்றன. அங்கே ஆயிரம் ஜனத்தொகை உள்ளது. அவர்கள் சாலை வசதியின்றி கஷ்டப் படுகிறார்கள். அவர்களுக்கு சாலை வசதியும், தண்ணீர், மருத்துவ வசதிகளையும் செய்து கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

லிங்கவாடி மலையூரிலும் சுமார் 500 மக்கள் மலை உச்சியில் வசிக்கிறார்கள். அவர்களுக்கும் சாலை வசதி, தண்ணீர் வசதி, மருத்துவ வசதி செய்து கொடுக்க அரசு முன்வரவேண்டும்.

(முற்பகல் 10-00)

தொழில் துறையைப் பொறுத்தவரையில் மிக பின்தங்கிய பகுதியாக நத்தம் இருக்கிறது. எந்தவிதமான தொழில்கூடமும் அங்கே இல்லை. அங்கே பருத்தி அதிகமாக விளைகின்ற காரணத்தால் அங்கே நூற்பாலை ஒன்றை அரசு கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேம்பார்பட்டி, கோபால்பட்டி, கொசவப்பட்டி போன்ற பெரிய மேஜர் பஞ்சாயத்துக்கள் போல் இருக்கின்றன. அங்கே 10 ஆயிரம், 20 ஆயிரம் ஜனங்கள் இருக்கிறார்கள். அங்கு குடிநீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு குடிநீர் வசதி செய்து தர துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இதைப்பற்றி பல தடவை இதே சட்டமன்றத்தில் பேசப்பட்டு இருக்கிறது. அங்கே இருந்து தேர்ந்து எடுத்து அனுப்பும் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் நாம் வோட்டுபோட்டு அனுப்பிய சட்டமன்ற உறுப்பினர் அங்கே சட்டசபையில் பேசினார் அதனால் உடனே எல்லாம் கிடைத்து விடும் என்று நினைக்கிறார்கள். ஆகவே இந்த அரசு உடனடியாக அதைத் துரித நடவடிக்கையாக எடுத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நத்தம் தாலுக்காவில் ஒரு பயணியர் விடுதி இருக்கிறது. அதில் இரண்டு அறைகள்தான் இருக்கிறது. இரண்டு பேர்தான் தங்கலாம். பிரிட்டிஷ் [illegible] காலத்தில் கட்டப்பட்டது அது. ஒரு அதிகாரி [illegible] அதில் தங்க முடியவில்லை. ஆகவே அந்த [illegible] [illegible] அறைகள் சேர்த்துக் கட்டிக் [illegible] கேட்டுக்கொள்கிறேன். நத்தத்தைப் பொறுத்த [illegible]

[திரு. மெ. ஆண்டி அம்பலம்] [1985 மார்ச் 30

வரையில் எந்தவிதமான கல்லூரியும் கிடையாது. அங்கே உள்ள
மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்து வாழக்கூடிய மக்கள்.
அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் ஏழை விவசாயி
களாக இருக்கிறார்கள். ஆகவே அங்கே ஒரு தொழில்நுட்பக்
கல்லூரி நிறுவித் தர வேண்டும் என்று இந்த அரசை கேட்டுக்
கொள்கிறேன். எனது தொகுதியில் சமுத்திரப்பட்டி பகுதியில்
உள்ள உயர் துவக்கப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக
மாற்ற வேண்டும் என்பதற்காக அங்குள்ள பொது மக்கள்
25 ஆயிரம் ரூபாய் வசூல் செய்து கட்டி பல வருடங்கள் ஆகின்றன.
அதனுடைய வேலை இன்னும் நடைபெறவில்லை. ஆகவே அரசு
உடனடியாக நடவடிக்கை எடுத்து அதை உயர்நிலைப் பள்ளியாக
மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடியிலிருந்து திண்டுக்கல் வழியாக பழனி செல்லும்
வட்டாரம் சாலையில் ஒரு ஆறு இருக்கிறது. அதிலும் குறிப்பாக
சந்தானம் வர்த்தினி ஆறு கன்னியாபுரம் அருகே ஓடுகிறது. அந்த
ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டவேண்டும். இது பல ஆண்டு
களாக இந்தச் சட்டமன்றத்தில் பேசப்பட்டது. மழை காலங்
களில் வெள்ளப்பெருக்கு எடுத்து குறிப்பாக குடகனாறு உடைந்த
தற்கே இந்த ஆறு தான் காரணம். இதுபற்றி ஏற்கனவே
நான் இந்தச் சட்டமன்றத்திலே பேசியுள்ளேன். இந்த ஆற்றில்
வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது போக்குவரத்துக்கு இடைஞ்ச
லாக இருக்கிறது, மக்கள் அவ்வழியே செல்ல இயலவில்லை.
இதுநாள் வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத்
தெரியவில்லை. ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுத்து
அந்தப் பாலத்தைக் கட்டித் தர வேண்டும் என்று நான்
வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சமுத்திரப்பட்டிக்கு பக்கத்தில்
திருமணிமுற்றாறு இருக்கிறது. பல வருடங்களாக பொது
மக்களும், வாகனங்களும் போகமுடியவில்லை. அந்த இடத்தில்
பாலம் கட்டித் தரவேண்டும் என்று இந்த அரசை வற்புறுத்தி
கேட்டுக்கொள்கிறேன். அது மட்டும் அல்ல, விவசாயிகளுக்கு மின்.
இணைப்பு சீராக கொடுக்கவேண்டும் என்று பல சட்டமன்ற
உறுப்பினர்கள் இங்கே பேசுகிறார்கள். இரவு நேரங்களில் விவசாயி
களுக்கு மின் இணைப்புத் தந்தால் நெற்பயிர், கேழ்வரகு, கம்பு,
மரும்பு போன்றவைகளை எல்லாம் விவசாயம் செய்ய முடிய
வில்லை. காரணம் கரும்புக்கு இரவு நேரங்களில் தண்ணீர் பாய்ச்ச



1985 மார்ச் 30] [திரு. மெ. ஆண்டி அம்பலம்]

போனால் விவசாயிகளை பாம்புகள், விஷ ஜந்துக்கள் தீண்டி
இறந்து போகிறார்கள். இதை எல்லாம் நாம் பார்க்கிறோம்.
அரசுக்கு அலுவலர்கள் திசை திருப்பும் வகையில் சொல்லி
இவ்வாறு இரவு நேரங்களில் மின்சாரம் தரப்படுவதாக
நினைக்கிறேன். ஆகவே இதை மாற்றி காலையில் கொடுக்க
வேண்டும். ஆறு மணி நேரம் என்பதை இன்னும் இரண்டு மணி
நேரம் நீட்டித்து எட்டு மணி நேரம் ஆக ஆக்கி விவசாயிகளின்
பிரச்னையில் உடனடியாகக் கவனம் செலுத்தி இதற்குத் தீர்வு
காண வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காமராஜர் பல்கலைக் கழகத்திலே பணியாற்று
கின்ற ஆசிரியர்களுக்கு 55 வயது என்று வரம்பு வைத்திருக்
கிறார்கள். ஆனால் வெளி மாநிலங்களில் 60 வயது என்று உயர்த்தப்
பட்டிருக்கிறது. எனவே, அதையும் இந்த அரசு நீட்டித்துக்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், காட்டிலாக்காவிற்குச் சொந்தமான பல
ஆயிரக்கணக்கான, நிலங்கள் — பிரயோஜனம் இல்லாமல்
இருக்கின்ற நிலங்களை ஏழை எளிய விவசாயிகளுக்குப் பட்டா
செய்து கொடுக்க வேண்டும். எதற்காகச் சொல்கிறேன் என்றால்,
என்னுடைய தொகுதி மலைப் பிரதேசமான பகுதி; எந்த
மரங்களோ செடிகளோ அந்த நிலத்தில் கிடையாது. காட்டிலாக்
காவிற்குச் சொந்தமான அந்த நிலங்களை ஏழை எளிய விவசாயி
களுக்கு ஐந்து ஏக்கர் வரை பட்டா கொடுக்க இந்த அரசு முன்வர
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை
முடித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. கே. பாலாஜி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்
மீது பேசுகின்ற நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த எங்களுடைய
இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்
களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் உரித்தாக்குகின்றேன்.
இன்றைக்கு வளர்ச்சித் திட்டங்களுக்காகப் பல்வேறு நலத்
திட்டங்களை இந்த நிதி நிலை அறிக்கையிலே மாண்புமிகு
நிதியமைச்சரவர்கள் இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களை ஏழ்மைக்
கோட்டிற்கு மேலே கொண்டு வருவதில் தமிழகத்தின் முதல்வர்
மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்கள் எந்த

[திரு. கே. பாலாஜி] [1985 மார்ச் 30

அளவிற்கு முன்னுரிமை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலே நான் பார்க்கின்றேன். இங்கே பேசிய பல எதிர்க்கட்சித் தலைவர்கள் தொழில் வளர்ச்சி பற்றியே இங்கு கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். நம்முடைய தமிழகம் தொழிலிலே மூன்றாவது இடத்திலே இருக்கின்ற அளவிற்கு இந்த ஏழாண்டுக் காலத்திலே நாங்கள் தொழிலில் பல பெரிய முன்னேற்றங்களை உருவாக்கியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற சில கோடி மக்களை மேலே கொண்டு வருவதற்கு என்னுடைய இதய தெய்வம் தானைத் தலைவர் புரட்சித் தலைவரவர்கள் கிராமப்புற நிலமற்ற விவசாயிகளுக்கு வேலைகள் கொடுக்கவும், உபரி நிலங்களை ஏழை எளிய விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கவும், ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்களுக்கு நல்ல குடிதண்ணீர், வீட்டு வசதி போன்ற இப்படிப்பட்ட பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்கின்ற நல்ல பல திட்டங்களைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே நான் பார்க்கிறேன்.

பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரம் தொகுதியைச் சேர்ந்தவன் நான். என்னுடைய தொகுதி பெரும்பாலும் கிராமங்களைக் கொண்ட பகுதியாகும். அந்தக் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு நல்ல பல திட்டங்களை இதிலே அறிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், மறுவாழ்வுத் திட்டங்களில், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு இந்த ஏழாண்டுக் காலத்திலே 40 கோடி ரூபாய்க்கும் மேலாக கடனாகவும் மானியமாகவும் நாம் அளித்திருப்பதைப் பார்க்கின்றபொழுது அந்த அளவிற்கு உலகத்திலே எங்கே தமிழர்கள் இருந்தாலும் அவர்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்கள் அந்தத் தாயுள்ளத்தோடு கவனிக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்ற நேரத்தில், பேச்சளவில் இல்லாமல் செயலளவில் அவர்கள் செயல்படுவதை நான் இங்கே உணர்கின்றேன்.

வேளாண்மைத் துறையில் இன்றைக்குக் கிராம நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறு குட்டைகளை உருவாக்கி. அதன்மூலம் கிராமங்களில் உள்ள தண்ணீர்த் தட்டுப்பாடு போகும்



1985 மார்ச் 30] [திரு. கே. பாலாஜி]

அளவிற்குக் கிட்டத்தட்ட 1,000 கசிவு நீர்க் குட்டைகளும், 500 தடை அணைகளும் கட்டுவதற்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதை, எங்களைப்போன்ற அந்தச் சிறு நகரங்களையும், கிராமங்களையும் சேர்ந்தவர்கள் வரவேற்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய விவசாயிகளுக்காகப் பல்வேறு திட்டங்களை, குறைந்த செலவில் நிறைய உற்பத்தி செய்யும் அளவிற்குப் பல்வேறு திட்டங்களை இங்கே உருவாக்கியிருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பலப்படுத்துவதற்கான ஒரு சூழ்நிலையை இன்றைக்கு இந்த மானியக் கோரிக்கையிலே நாம் பார்க்கிற நேரத்தில் தனிப்பட்ட முதலாளிகளைக் கட்டுப்படுத்துகின்ற நல்ல திட்டத்தை நான் வரவேற்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

அதுமட்டுமல்லாமல் 1985-86-ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 10 கால்நடை மருத்துவமனைகளை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதில் ஒன்றை எங்களுடைய காஞ்சிபுரத்திலே காவல் கிராமத்திலே ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1985-86 ஆம் ஆண்டில் செயல் இழந்த சங்கங்களைப் புதுப்பித்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை மாற்றுவதற்கு 4.24 இலட்சம் வழங்குவதற்கு அரசாங்கம் இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்து இருப்பதை என்னைப்போன்று உள்ள கிராம விவசாயிகளின் சார்பாக நான் வரவேற்கிறேன்.

நுகர்வோர் பாதுகாப்புக்கு இங்கே பல செய்திகள் விவசாயிகளுக்காக இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருப்பது குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தைத் தொழில் மையம் ஆக்குவதற்காக ஓரிக்கை என்ற கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே தொழில்களைச் செய்வதற்கு இனாமாக நிலங்கள் கொடுப்பதற்கும், மின்சாரம் தண்ணீர் வசதி ஆகியவற்றைக்

கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்தார்கள். அண்ணா அவர்கள் மறைந்துவிட்ட காரணத்தால் அது இராணிப்பேட்டைக்கு அருகாமையிலே கொண்டு செல்லப்பட்டுவிட்டது. அதை மீண்டும் காஞ்சிபுரத்திற்கு மாற்றி அங்கே தொழில்களை உருவாக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் தொகுதி செங்கற்பட்டு மாவட்டத்தில் அடங்கி இருப்பதால் வளர்ச்சி அடைந்த மாவட்டமாக உள்ள எங்கள் மாவட்டத்திலே காஞ்சிபுரம் இருக்கின்றது. எனவே அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து எங்களுடைய மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு காஞ்சிபுரம் தாலுக்காவை உடனடியாக பிற்பட்ட தாலுக்காக்களிலே சேர்த்து அங்கே நெசவாளர்கள் வாழ்வு பெற அங்கே தொழில்களை உருவாக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை காஞ்சிபுரத்தில் உருவாக்கித் தரவேண்டும் என்று 1979-80-ல் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டார்கள். அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீர் வசதியைப் பொறுத்தவரையில் 100 கோடிக்கு மேலாக இங்கே செலவு செய்ய அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் தமிழகத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ள குடிதண்ணீர் மேல்நிலைத் தொட்டிகளும், கைப்பம்புகளும் சரியாகப் பாமரிக்கப்படுவதற்காக ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு குழு அமைத்து அதைப் பாமரித்தால் நூற்றுக்கு 80 சதவீதம் தண்ணீர்ப் பிரச்சினை உடனடியாகத் தீரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் காஞ்சிபுரத்தில் பல கிராமங்களில் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகளில் முழுமையாகத் தண்ணீர் ஏற்ற முடியவில்லை. அரைத்தொட்டி அளவுக்குத்தான் தண்ணீர் ஏற்றுவதால் அங்கே இருக்கின்ற கிராம மக்களுக்குத் தேவையான தண்ணீரை வழங்க முடியவில்லை





என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அரசும் கண்காணித்து அங்கே அந்த நிலைமைகளைப் போக்க வேண்டும் என்று நான் எடுத்துக் கூறுகிறேன்.

கிராம வளர்ச்சித் திட்டத்துக்காக 100 நாட்களுக்குக் குறையாமல் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்கவேண்டும் என்ற திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள். இதற்காக 44.50 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். நாங்கள் பெரும் பாலானவர்கள் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் இந்தத் திட்டத்தின் வாயிலாகக் கிராமங்களில் பல்வேறு நன்மைகள் ஏற் படும் என்பதற்காக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய பகுதி கைத்தறி நெசவாளர்கள் ஏராளமாக வாழ் கின்ற பகுதியாகும். கைத்தறிக்கென்று தனியாக ஒரு துறையை உருவாக்கி அதற்கு ஒரு செயலாளரையும் ஏற்படுத்தி கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாக்கின்ற திட்டத்தை அறிவித்திருக் கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக் கின்ற அந்த நெசவாளர்களைப் பொறுத்தவரையில் ஒரு குறிப் பிட்ட அளவுக்கு குறியீடு நிர்ணயம் செய்து கொண்டு வீடுகளைக் கட்டித் தருகிறோம். அந்தக் குறியீடு இல்லாமல் கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாக இருக்கிற அனைத்து நெசவாளர் களுக்கும் நாம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய வேண்டுகோளாக வைக்கின்றேன்.

அதோடு தனிப்பட்ட முதலாளிகளிடத்தில் நெசவுத் தொழில் செய்கின்ற நெசவாளர்களைக் கூடுமான வரையில் கூட்டுறவுச் சங்கங்களிலே கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்படி முடியவில்லையென்றால் அவர்களுக்குக் கூட அந்தக் குறைந்த வட்டியில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவோ அல்லது குடிசை மாற்று வாரியத் தின் மூலமாகவோ அதைத் தமிழகம் முழுவதும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, என் தொகுதியைப் பொறுத்தவரையில் பல திட்டங் களை 1979—80-லே ஆய்வு செய்தார்கள். முடிக்கப்பட்ட அந்த ஆய்வுகள் இன்றுவரையில் செயல்படுத்தப்படவில்லை. பேரறிஞர்

[திரு. கே. பாலாஜி] [1985 மார்ச் 30

அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தைச் சுற்றுலா நகரமாக்க, சுற்றுலா பயணிகளைக் கவர்கிற வகையில் அங்கு போதிய, பெரிய ஓட்டல்கள் இல்லை, அதிகப் படுக்கை வசதிகள் கொண்ட தங்கும் விடுதிகள் இல்லை. அவற்றைக் கட்டித் தர வேண்டுமென்று 1979—80-லே நான் கேட்ட நேரத்தில் ஆய்வு செய்யப்பட்டு அதற் குண்டான இடங்கள்கூட வாங்கப்பட்டு இன்றுவரையில் அந்தக் கட்டிடங்கள் அங்கே கட்டப்படவில்லை. அதை உடனடியாகக் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள் கிறேன்.

என்னுடைய காஞ்சிபுரம் பகுதி நெசவாளர்கள் ஏராளமாக வாழ்கின்ற பகுதி. அவர்கள் மாலை நேரத்தில் பொழுதைக் கழிக் கின்ற அளவுக்கு அங்கே வசதிகள் இல்லை. சென்னை நகரத் திலே கூவம் ஆறு ஓடுவதைப் போல, காஞ்சிபுரத்திலே மஞ்சள் நீர் கால்வாய் ஒன்று நகரத்தின் மையப் பகுதியிலே செல்கிறது. அந்தக் கால்வாயை ஆழப்படுத்தி, இரு புறமும் கரைகளை நல்ல முறையிலே அமைத்து, நெசவாளர்கள் ஓய்வு பெறுவதற்கு 1979—80-ல் ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் ஆய்வு செய்யப் பட்டு, அந்தத் திட்டம் இன்று வரையில் பொதுப் பணித் துறை யினரால் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறது. அதை எடுத் துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகம் அமைந்துள்ள வேகவதி ஆறு என்கின்ற ஆற்றினுடைய கரையில் நாளந்தா பல்கலைக் கழகம் இருந்தது. அந்தப் பல்கலைக் கழகம் சமஸ்கிருதத்திற்காகப் பணியாற்றியது. ஆகவே, காஞ்சி புரத்தில் ஒரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த வேகவதி ஆற்றை ஆழப் படுத்தி, அங்கங்கே குட்டைகளை உருவாக்கி, அதிலே தண்ணீரைத் தேக்கி, ஆற்றின் இரு கரைகளிலே பூங்காக்களை உருவாக்கி, அங்கே நெசவாளர் குடும்பங்கள் பொழுதைப் போக்க ஏற்பாடு செய்வதற்கு, கிட்டத்தட்ட ரூ. 50 இலட்சத்திலே திட்டத்தைத் தீட்டி அந்தத் திட்டம் இன்று செயல்படாமல் இருக்கிறது. அதை யும் செயல்படுத்த வேண்டுமென்று நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. கே. பாலாஜி]

காஞ்சிபுரம் செங்கை மாவட்டத்தினுடைய தலைநகரம். அந்தத் தலைநகரத்தில் தீயணைப்பு வண்டி இல்லை, தீயணைப்பு நிலையம் இருக்கிறது. அங்கே தண்ணீரைத் தேக்கிவைத்திருக்கக் கூடிய டாங் பொருத்தப்பட்ட வண்டி இல்லாத காரணத்தால், தீ விபத்து ஏற்படுகின்ற நேரத்தில், அருகாமையில் உள்ள 20 மைலுள்ள அரக்கோணத்திலிருந்து நாங்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு, வண்டியைக் கொண்டு வருவதற்குள்ளாக வீடுகள் எரிந்து சாம்பலாகி விடுகின்றன. ஆகவே, அதற்கு ஒரு நவீன வண்டியை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல பாலாற்றிலே வேகவதி ஆற்றிற்கு ஒரு கால் வாயைப் பிடித்து, பாலாற்றிலே உள்ள தண்ணீரை வேகவதி ஆற்றிற்கு உத்தரவாக்கம் கிராமத்திற்கு அருகாமையில் செல்கின்ற கால்வாயின் மூலமாக, கொண்டு சென்று வேகவதி ஆற்றிலே கலக்கவேண்டும். அதற்காக ரூ. 6 இலட்சத்திலே ஒரு திட்டத்தை ஆய்வு செய்து, அந்தத் திட்டம் இன்று வரையில் நிறைவேற்றப் படாமல் இருக்கிறது; அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், எங்களுடைய நெசவாளர்கள் ஏராளமாக வாழ்கின்ற அந்தப் பகுதியில் பட்டுக்காக ஒரு டிசைன் சென்டர் இருக்கிறது. அதைப் போலவே நூலுக்கும் ஒரு டிசைன் சென் டரை ஏற்படுத்தி நவீன முறை கைத்தறி துணிகளை உற்பத்தி செய்வதற்கு நாம் ஏற்பாடு செய்யவேண்டும். மேலை நாடுகளை நீங்கள் பார்ப்பீர்களானால் 6 மாதத்திற்குப் பின்னால் எந்த அள விற்கு முன்னேற்பாடாக இருப்பார்களோ அந்த வகையிலே வண்ணங்களிலே பல டிசைன்களிலே உற்பத்தி செய்வதைப் போல, கைத்தறியிலே கூட நாம் 6 மாதத்திற்குப் பின்னால் வருகின்ற டிசைனுக்கு உகந்த முறையில் துணியைத் தயார் செய்வதற்காக அப்படிப்பட்ட ஒரு டிசைன் சென்டரை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு புரட்சித் தலைவர் எங்களுடைய இதய தெய்வம் அவர்கள் இன்றைக்குப் பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். அதை நான் பாராட்டி வரவேற்று விடைபெறு கிறேன். வாழ்க அண்ணா நாமம்.

[1985 மார்ச் 30

(முற்பகல் 10-20)

* திரு. ஆர். செங்காளியப்பன் : துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் பல திட்டங்கள் சொல்லப்பட்டிருந்த போதிலும் இன்றைக்கு விவசாயிகள் மிகுந்த தொல்லைகளுக்கும், கஷ்டங்களுக்கும் ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதை முதலில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எல்லா இடங்களிலும் விவசாயிகள் வாங்கிய கடனை திருப்பி கட்ட முடியாத நிலையில் இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த நிலையில் இன்றைக்கு ஜப்தி செய்வோம் என்ற முறையில் நோட்டீஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கோவை ஜில்லாவில் பெரும்பாலும் சரியான முறையில் விளைச்சல் இல்லாத காரணத்தாலும், கிணற்றில் தண்ணீர் இல்லாத காரணத்தாலும் விவசாயிகள் வாங்கிய கடன்களை கட்ட முடியாத நிலையில் இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்நிலையில் அந்த விவசாயிகளை கடன் தொல்லைகளிலிருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், கடமையும் அரசாங்கத்திற்கு உண்டு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய கடன்களை எல்லாம் நீங்கள் கொஞ்ச நாட்களுக்கு ஒத்திவைத்து, அவர்களுக்கு தண்ணீர் கிடைத்து நல்ல விளைச்சல் கிடைக்க பின்னர் அந்தக் கடன்களை தவணை முறையில் வசூல் செய்கிற நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயம் செய்வதற்கு கொஞ்சம் தண்ணீர் இருந்தாலும் கூட அந்தத் தண்ணீரை இறைப்பதற்கு இரவிலே தான் கரண்ட் கொடுக்கிறார்கள். அதன்காரணமாக அந்த இருட்டு நேரத்தில் தண்ணீரை சரியாக வயலுக்கு பாய்ச்ச முடியவில்லை. தண்ணீர் எங்கெங்கோ சென்று விடுகிறது. ஆகவே பகல் நேரத்தில் கரண்ட் கொடுத்து அவர்கள் தண்ணீர் பாய்ச்சுவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் பெரிய விவசாயிகள் என்றும், சிறிய விவசாயிகள் என்றும் இன்றையதினம் பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள். பெரிய விவசாயிகள் என்றால் 5 ஏக்கருக்கு மேலே இருக்கக்கூடியவர்கள், சிறிய விவசாயிகள் என்றால் 2½ ஏக்கருக்கு உட்பட்டவர்கள் என்று அரசால் சொல்லப்பட்டிருக்கிறது. சிறிய விவசாயி



1985 மார்ச் 30] [திரு. ஆர். செங்காளியப்பன்]

களுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். பெரிய விவசாயிகள் என்று சொல்லக்கூடியவர்கள், பல்லடம், தாராபுரம், அவிநாசி ஏரியாக்களில் இதுவரையிலும் மீட்டர் சார்ஜ் தான் கட்டிக்கொண்டிருந்தார்கள். இப்போது இந்தத் திட்டத்தின் கீழ் அவர்கள் பெரிய விவசாயிகள் என்று அறிவிக்கப்பட்ட காரணத்தினால் அவர்கள் ஹார்ஸ் பவர் ஒன்றுக்கு 75 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. 5 ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்திருக்கிற விவசாயி 375 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறதை நாம் பார்க்கிறோம். இந்தத் திட்டத்தின் பயனாக ஒரு சிலர் பலன் அடைந்திருந்தாலும் பெருவாரியாக மக்கள் பாதகம் அடைகிற நிலைமையிருப்பதை அரசு பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 5 ஏக்கர் அல்லது 2½ ஏக்கர் என்று வைத்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் 5 ஏக்கர் வைத்திருப்பவர்கள் கிணற்றில் தண்ணீர் இருக்கிறதா, அவர்கள் விவசாயம் செய்து அதன் மூலம் வருமானம் வருகிறதா, என்பதை பரிசீலனை செய்து அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு நீங்கள் சலுகையளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய கோயம்புத்தூர் ஜில்லாவில் குறிப்பாக என்னுடைய தொகுதியில் குளங்கள் எல்லாம் பல்லாண்டு காலமாக தூர் எடுக்கப்படாமல் பூமி மட்டத்திற்கு வந்துவிட்டன. அவற்றை சில பேர்கள் ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே முக்கியமாக மூன்று குளங்கள் இருக்கின்றன. அதிலேயிருந்து சுமார் 2,600 ஏக்கர் நஞ்சை பூமிக்கு தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. தமிழ் நாட்டில் மழை இல்லாவிட்டாலும் கூட கேரளாவில் மழை பெய்யும் போது நொய்யல் ஆற்றின் மூலம் தண்ணீர் வந்து விழுந்து இந்த மூன்று குளங்களும் நிரம்பி விடும். அந்தவகையில் அங்கேயிருப்பவர்கள் இந்த மூன்று குளங்களின் மூலமாக பாசனம் பெற்று விவசாயம் செய்துகொண்டிருந்தார்கள். இப்போது தூர் எடுக்கப்படாமல் இருப்பதால் தண்ணீர் குளத்தில் சேராமல் மீண்டும் ஆற்றுக்கே திரும்பி போய்விடுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே இந்தக் குளங்களை நல்லமுறையில் ஆழப்படுத்தி, தண்ணீர் தேக்கி வைத்தால் 2,600 ஏக்கர் நிலத்தில் விவசாயிகள் நல்லமுறையில் நெல், கரும்பு போன்ற பயிர்

களை சாகுபடி செய்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே அந்தக் குளங்களை ஆழப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று என்னுடைய தொகுதியில் கோவில்பாளையம் பஞ்சாயத்து யூனியனில் சின்னவேடம்பட்டி என்ற கிராமத்தில் 100 ஏக்கர் பரப்பளவில் ஒரு சிறிய குளம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை நீண்ட நெடு நாட்களாக பொதுப்பணித் துறையில் இருக்கிறது. என்ன காரணத்தாலோ அது இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அந்த குளம் அமைக்கப்பட்டால் அதன் மூலம் சுமார் 800 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாயும். அது மட்டுமல்ல. 15 மைல் சுற்றளவில் உள்ள கிணறுகளுக்கு தண்ணீரும் கிடைக்கும். கிணறுகள் சுமார் 150 அடி, 170 அடி ஆழத்தில் தான் அந்தப் பகுதியில் தண்ணீர் கிடைக்கிறது. சில இடங்களில் அதுவும் இல்லை. அந்த குளம் அமைக்கப்படுவதன் மூலமாக விவசாயத்திற்கு தண்ணீர் பாய்வது மட்டுமல்லாமல் கிணறுகளுக்கும் தண்ணீர் கிடைக்கிறது என்பதால்—இப்போது அந்தப் பகுதி விவசாயிகள் இரண்டு மோட்டார் வைத்துதான் தண்ணீரை வெளியே எடுக்கின்ற அளவுக்கு அவ்வளவு ஆழத்தில் தண்ணீர் இருக்கிறது—அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, பல கிராமங்களில் குடிதண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சாதாரண ஏழை எளிய மக்கள், அரிசனங்கள் எல்லாம் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் குடத்தை எடுத்துக்கொண்டுபோய், எங்காவது மோட்டார் ஓடிக்கொண்டிருக்கும் விவசாயக் கிணற்றிலிருந்து தண்ணீர் பிடித்துக் கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை கோவில் பாளையம் பகுதியில் அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்க உடனடியாக துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கிராமங்களுக்கு சாலை வசதி சரியாக இல்லை. நீண்ட நெடுநாட்களுக்கு முன்னால் அமைக்கப்பட்ட சாலைகள் சரியான பராமரிப்பு இல்லாமல் குண்டும் குழியுமாக இருக்கின்றன. அதனால் மாட்டு வண்டிகள் போக முடியவில்லை; கார் போக முடியவில்லை; சைக்கிள் ஓட்ட முடியவில்லை; கிராம மக்கள் நடந்து செல்லவும் கஷ்டமாக இருக்கிறது.





எனவே கிராமச் சாலைகளை அரசாங்கம் நல்லமுறையில் பராமரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஹைவெய்ஸ் டிபார்ட்மென்டில் இந்தச் சாலைகளை பராமரிக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்துக்களிடம் போதுமான நிதிவசதி இல்லை. அதனால் அரசாங்கம் பஞ்சாயத்துக்களுக்கு அதிகமான நிதியை ஒதுக்கிக் கொடுத்து, நல்லமுறையில் சாலை வசதியும், குடிநீர் வசதியும் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று ஆதிதிராவிடர்களுக்கு அரசாங்கத்திலிருந்து வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் இருக்கிறது. அதன்படி வீடுகளும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வீட்டுக்கு 6000 ரூபாய் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அது போதாது. இன்று இருக்கக்கூடிய விலைவாசியில்—சிமின்ட் விலை எக்கச்சக்கம், செங்கல் விலை, மணல் விலை ஏறியிருக்கிறது—6000 ரூபாயில் வீடு கட்ட முடியவில்லை. இருந்தாலும் கூட நானே நேரடியாகச் சென்று பார்த்தேன். அரிசன மக்கள் யார், யார் வீடு வேண்டுமென்று சொல்கிறார்களோ அவர்களையும் அழைத்து, பஞ்சாயத்து அதிகாரிகளுடன் பேசி, வீடு கட்டும்போது அந்த மக்கள் தங்களுடைய உடல் உழைப்பை நல்க வேண்டுமென்று சொல்லி, அதன்படி அவர்கள் உடல் உழைப்பு அளித்தாலும் கூட 6000 ரூபாயில் வீடு கட்ட முடியவில்லை. எனவே இந்த 6000 ரூபாயை 10,000 ரூபாயாக உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோவை பஞ்சாலை மூடப்பட்டிருக்கிறது. அது கிட்டத்தட்ட இரண்டாண்டுகளுக்கு மேலாக மூடிக்கிடக்கிறது. அதைத் திறப்பதற்கான முயற்சியில் அரசாங்கம் இன்னும் ஈடுபடவில்லை. நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், நான் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத் தலைவர். தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கும் பகுதியில் இருக்கிறேன். அதனால் எனக்கும் கஷ்டம் இருக்கிறது. தொழிலாளர்களும் கஷ்டப்படுகிறார்கள். தொழிலாளர்கள் உண்ண உணவில்லை. அதனால் அவர்கள் எல்லாம் ஒன்று நலுங்குகிறார்கள். எனவே அந்த ஆலையை விரைவிலே திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. ஆர். செங்காளியப்பன்] [1985 மார்ச் 30

அது மட்டுமல்ல. எந்த ஆலை நலிவுற்று மூடப்படும் சூழ்நிலை வருகிறதோ அதற்கு முன்பே அந்த ஆலை நிர்வாகத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆலைகள் நலிவுறக் காரணம் பெரும்பாலும் ஆலை முதலாளிகள் அந்த ஆலையில் சம்பாதிக்கிற பணத்தை எல்லாம் வேறு பெரிய தொழில்களில் மூலதனம் செய்கிறார்கள். அவ்வாறு செய்து, இந்த ஆலையை நலிந்த ஆலையாக ஆக்கிவிடுகிறார்கள். அதற்கு நம்முடைய அரசாங்கத்திலேயிருந்து தகுந்த அதிகாரியை அனுப்பி, நஷ்டம் வருகிறது என்று சொல்கிறார்கள், அதை மூடுவதற்கு முன்னாலே அந்த ஆலையை எடுத்துக்கொள்வதற்கு உண்டான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

அதேநேரத்தில் நம்முடைய அரசாங்கமானது, அப்பரன்டிஸ் தொழிலாளர்களுக்கு நல்ல சட்டத்தை இயற்றியிருந்தார்கள். இரண்டு ஆண்டுக்காலத்திலே 480 நாட்கள் வேலை பார்த்தால், அவர்களை எல்லாம் பெர்மனென்ட் செய்யவேண்டும் என்ற ஒரு சட்டத்தை சென்ற ஆண்டு கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தை எதிர்த்து ஆலை முதலாளிகள் கோர்ட்டுக்குச் சென்று அந்தச் சட்டம் செல்லாது என்று ஆக்கிவிட்டார்கள். ஆகையினாலே நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டமன்ற தொடர் கூட்டத்திலே எந்த பாயின்ட்டிலே நம்முடைய சட்டத்தை செல்லாது என்று கோர்ட் அறிவித்ததோ, அதற்கு புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் ஆலை முதலாளிகள் 10 ஆண்டுக்காலம், 15 ஆண்டுக்காலம் என்று அவர்கள் வேலை செய்தாலும் 5 ரூபாய், அல்லது 6 ரூபாய்தான் அவர்கள் கூலியைக் கொடுக்கிறார்கள். அரசாங்கம் சொன்னாலும் கேட்காமல், சட்ட விரோதமாக அவர்கள் குறைந்த கூலியைக் கொடுக்கிறார்கள். பேக்டரி இன்ஸ்பெக்டரும் சரியான நடவடிக்கை எடுப்பதில்லை. எனவே இந்தச் சட்டத்தை உடனடியாக திருத்தி அவர்களை எல்லாம் பெர்மனென்ட் ஆக்குகின்ற முறையிலே, சட்டம் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது நிரந்தரத் தொழிலாளியாக இருப்பவர்களுக்கு எப்படி 45 ரூபாய் தினக் கூலி கிடைக்கிறதோ, அதைப்போல, இந்தத் தொழிலாளர்களுக்



1985 மார்ச் 30] [திரு. ஆர். செங்காளியப்பன்]

கும், 5 ரூபாய் 6 ரூபாய் கூலி பெறுகின்றவர்களுக்கும், அதிக
ஊதியம் கிடைக்கத்தக்க அளவிற்கு சட்டத்தைக் கொண்டு வர
வேண்டும். தினக்கூலியாக வேலை செய்பவர்களை ஆலை
முதலாளிகள் கொடுமைப்படுத்துகிறார்கள். அதற்கு நம்முடைய
அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன். அதற்காகவாவது இந்தச் சட்டத்தை
திருத்தியாக வேண்டும். அதிலும் குறிப்பாக, கோயம்புத்தூரி
லும், தென் மாவட்டங்களிலும் மிகப் பெரிய கொடுமைகள் நடக்
கின்றன. நிரந்தரத் தொழிலாளிகளுக்கு 45 ரூபாய் சம்பளம்
தினமும் கிடைக்கிறது. அதுமட்டுமல்லாமல், 100 ரூபாய் பிரா
விடன்ட் பண்ட் நிதியில் மாதாமாதம் சேர்கிறது. ஆனால் இவர்
களுக்கோ, பிராவிடன்ட் பண்ட் கிடையாது. சுகாதார வசதியும்
கிடையாது. ஒன்றும் இல்லாமல், தினக்கூலி 5 ரூபாயை வாங்கிக்
கொண்டு இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பேக்டரி இன்ஸ்
பெக்டர் கவனிக்காத நிலைமையில் இருக்கிறார். என்ன காரணம்
என்று தெரியவில்லை. நான் இதைப்பற்றி அமைச்சர் அவர்
களிடத்திலே நேரடியாகச் சொன்னேன். அவர்களும் இதைக்
கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். எனவே இதற்கு தக்க
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் வரக்கூடிய காலங்களில் இந்த ஆலைகள்
நசித்துப் போகாமல் பார்த்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு
தனியதிகாரிகளைப் போட்டு, கண்காணிக்கவேண்டும் என்று
நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். எனவே நம்முடைய
அரசாங்கம் இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் போக்கி,
நல்ல முறையில் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு நீங்கள்
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு என்னுடைய
பேச்சை முடிக்கிறேன்.

* **திரு. ச. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு என்னை தேர்ந்
தெடுத்து அனுப்பிய எடப்பாடி தொகுதி வாக்காளப் பெரு
மக்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொண்டு,
நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கும், அன்னை
இந்திரா காந்தி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைக் கூறி
என்னுடைய பேச்சை தொடங்குகிறேன். இந்த நிதி நிலை
அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் பல திட்டங்களை

அறிவித்திருந்தாலும், இன்று தமிழகத்திலே இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதாக இல்லை. வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதாகவும் இல்லை. மேலும் கிராமப் புறத்திலே இருக்கிற ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான பொருளாதார அம்சங்களையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் இது அமையவில்லை.

அதோடு இந்த வரவு செலவு திட்டத்தில் சேலத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரியையும், ஒரு கால்நடைக் கல்லூரியையும் அமைத்துக் கொடுத்த இந்த அரசுக்கு என்னுடைய நன்றியறிதலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சாராயத்தின் மீதும் பேருந்துகளின் இருக்கையின் மீதும் வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. பேருந்துகள் மீது விதிக்கப்பட்டு இருக்கின்ற வரியானது ஏழை எளிய மக்களை பாதிக்காத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். வரவு செலவுத் திட்டத்திலே குறிப்பிட்டு இருப்பதை விட இன்று சாராயம் நம்முடைய தமிழகத்திலே அதிகமான அளவிலே புழங்கப்பட்டு வருகிறது. இதனால் நம்முடைய ஏழை எளிய மக்கள் வாழ்க்கைத் தரம் பாதிக்கப் படுகிறது. எனவே இந்த சீரிய திட்டத்தை எண்ணியாவது மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்று இந்த அரசை மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே சத்துணவுத் திட்டத்தைப் பற்றி சிறப்பாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஏழை எளிய மக்களுக்கு, சமுதாயத்திலே நலிவடைந்த மக்களுக்கு இது ஒரு நல்ல திட்டம். அந்தக் குழந்தைகளுக்கு சத்துணவு அளிப்பதன் மூலம், ஏழை எளிய குழந்தைகள், பல லட்சம் குழந்தைகள் பயனடைகிறார்கள். எனவே இந்த சத்துணவுத் திட்டம் நல்லமுறையிலே செயல்பட, அதில் எந்தவிதக் கோளாறுகளும வராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஏழை எளிய பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டத்தையும் இந்த அரசு அறிவித்திருக்கிறது. இது ஒரு நல்ல திட்டம். இந்த திட்டத்தை அமல் படுத்துவதினால் கிராமங்களிலே இருக்கிற பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே கிராமத்திலே இருக்கிற





பெண்கள் அந்தச் சீருடைகளை தைப்பதற்கு மெஷின்கள் போன்றவைகளை வாங்கிக் கொடுப்பதான வழி வகைகளைப் பற்றி இந்த அறிக்கையிலே எதுவும் சொல்லப்படவில்லை. அதைத் தெளிவு படுத்த வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் அதை நடைமுறைப்படுத்திச் சொன்னால் இது ஒரு நல்ல பாராட்டத்தக்க திட்டமாகவும் இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அரிசி. அரிசி மலிவு விலையிலே வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இது ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிக்கிற ஒரு நல்ல திட்டம். சமுதாயத்திலே மிகவும் அடித்தளத்திலே இருக்கிற, மிகவும் பின் தங்கிய மக்களுக்கு, இந்த திட்டத்தின் மூலமாக ஓரளவு வறுமையிலே இருந்து விடுபடுகிற வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே இந்தத் திட்டத்திற்காக 90 கோடி ரூபாயை ஒதுக்கியிருந்தாலும் அதனால் பரவாயில்லை, பயன் உள்ள திட்டம் தான். என்பதைக் கூறி அதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் இந்த நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய தமிழகத்திலே இருக்கிற கடுமையான வறட்சியைப் பற்றியோ அல்லது அதற்கு பொறுப்பேற்று செய்ய வேண்டிய திட்டங்களைப் பற்றியோ எதுவுமே குறிப்பிடாததைக் கண்டு நான் மிகவும் வருத்தத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே மிகவும் கடுமையான வறட்சி ஏற்பட்டு, இன்று மக்கள் குடிதண்ணீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். குடிதண்ணீருக்காக பல மைல்கள் நடந்து சென்று, குடிதண்ணீர் கொண்டு வரும் நிலைமை இருக்கிறது. இதைப் போக்குவதற்கு, அரசு தீவிரமாக துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு ஏழை விவசாயிகளுக்கும், கிராமத் தொழிலாளர் களுக்கும் வறட்சி நிவாரணம் அளிக்கின்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு, சுதந்திரம் அடைந்து கிட்டத்தட்ட 37 ஆண்டுகள் ஆகியும் கூட, அவர்களுக்கான இருப்பிடமோ, குடியிருப்பு வசதிகளோ இன்னமும் செய்துக் கொடுக்க முடியாமல் இருப்பது வருத்தத்திற்குரியது ஒன்று என்று மெத்த

[திரு. ச. கோவிந்தசாமி] [1985 மார்ச் 30

வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். ஆதிதிராவிட மக்கள் நான்கு, ஐந்து குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரு சிறு குடிசையிலே குடும்பம் நடத்துகின்ற அவல நிலைமையிலே வாழ்ந்து வருவதைப் பார்க்கிறோம். அவர்களுடைய நிலையை மேம்படுத்த அரசு கிட்டத்தட்ட 150 கோடிக்கு மேலே ஒதுக்கியிருந்தாலும் கூட அவர்களுக்கென்று ஒரு வரையறை செய்து ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்தனை குடியிருப்புகள் என்று நிர்ணயித்து அமைத்துக் கொடுப்பது என்ற ஒரு நிலையை தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அதற்கு ஒரு வரையறையை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட அரிசன மக்களின் நலனுக்காக வேலை வாய்ப்புகளை அவர்களுக்கென்று நல்ல முறையில் உருவாக்கி கொடுப்பதற்கு இந்த அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கல்விக்கு 468 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்று நம்முடைய ஆரம்பக் கல்வியினுடைய தரம் மிகவும் குறைவாக இருக்கிறது. அந்த ஆரம்பக் கல்வியினுடைய தரத்தை பாதுகாக்க வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமை. அதை மிக உரிய கவனத்தோடு பரிசீலிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். பல பகுதிகளிலே ஆசிரியர்கள் ஒழுங்காக பாடங்களை நடத்துவதே இல்லை. ஒழுக்கக் கேடான பல ஆசிரியர்கள் பணி புரிகிறார்கள், அவர்கள் பல ஊழல்களைச் செய்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10-40)

அதே நேரத்தில் மேலும் பாலிடெக்னிக், என்ஜினியரிங் போன்ற கல்வியகங்களில் எல்லாம், சாதாரண ஏழை எளியவர்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவிற்கு 10,000, 20,000-க்கு அதிகமான ரேட்டிற்கு இன்றைக்கு விலை போகின்ற ஒரு நிலையை பார்க்கிறோம். கல்விக்கு விலை கொடுக்கின்ற இந்த நிலைமையானது, தமிழகத்தின் எதிர்காலத்திற்கு இருள் சூழச் செய்யும் என்பதை அரசு கவனத்தில் கொண்டு ஏழை எளிய மக்களுக்கு கல்வியிலே உரிய வாய்ப்புகளை கொடுப்பதற்கு இந்த அரசு உரிய கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்.



1985 மார்ச் 30] [திரு. ச. கோவிந்தசாமி]

அதோடு, ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி. மற்றும் ஆர். எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்கள் எல்லாம் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு உதவுகின்ற திட்டங்கள். இவைகள் நல்ல முறையிலே செயல்பட வேண்டும். ஐ.ஆர்.டி.பி. திட்டத்தை பொறுத்த வரையில் ஏழை எளிய மக்களுக்கும் சிறு விவசாயிகளுக்கும் கொடுக்கின்ற மானியங்களை வட்டார அளவில் இருக்கின்ற அதிகாரிகள் பங்கு போட்டுக் கொண்டு குறைந்த வட்டிக்கு கொடுக்கிறார்கள் என்ற காரணத்தை சொல்கிறார்கள். இந்த அரசினுடைய நோக்கம் நிறைவேறாமல் அதனுடைய பயன் ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேராவண்ணம் செய்கிறார்கள். எனவே, இந்தத் திட்டங்களை அரசு மிக உன்னிப்போடு கவனித்து அதில் உள்ள குறைபாடுகளை அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆர்.எல்.இ.ஜி.பி. என்.ஆர்.ஈ.பி. திட்டங்களின் மூலமாக ரோடு வசதிகளும், பாலம் வசதிகளும் செய்யப்படுவதால் கிராம சேவக்குகள் காண்ட்ராக்டர்களை வைத்து செயல்படுகிறார்கள். அரசினுடைய நோக்கமானது வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை மக்கள் பயனடைய வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டம் போடப்பட்டது. இதற்காக பல கோடி ரூபாயை நம்முடைய அரசும் மத்திய அரசும் செலவு செய்து வருகிறது. ஆனால் அந்தத் திட்டத்தினுடைய பயன்கள் ஏழை எளியவர்களுக்கு போய்ச் சேரவில்லை. அதற்கு மாறாக காண்ட்ராக்டர்களும், இடையிலே இருக்கின்ற வட்டார அளவிலே இருக்கின்ற அதிகாரிகளும் அதனுடைய பயனை அடைகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையிலே இன்று அந்தப் பகுதி கிராம மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற ஒரு அங்கமாக இருந்தது. அதை இன்று மாற்றி, இன்று ஊராட்சி ஒன்றியங்கள் ஏதோ சாலைகளுக்கும் மற்ற அபிவிருத்தி வேலைகளுக்கும் பணம் கொடுக்கின்ற ஒரு இலாக்காவாக இருக்கின்றதே ஒழிய அந்தப் பகுதி மக்களுடைய ஒட்டுமொத்தமான குறைபாடுகளை, தேவைகளை பூர்த்தி செய்கின்ற ஒரு அமைப்பாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ச. கோவிந்தசாமி] [1985 மார்ச் 30

பேரூராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கென்று தனி அமைப்புகள் இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் அந்த அமைப்புகளோடு, பொது மக்களோ மற்றவர்களோ தொடர்பு கொள்ள முடியாத ஒரு நிலை இருக்கிறது. எனவே அவைகள் அந்தப் பகுதி மக்களுடைய குறைபாடுகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், தேர்தலை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்த கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு சிறிய குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டங்களை இந்த அரசு செய்துள்ளது. இது ஒரு நல்ல காரியம். இந்தத் திட்டத்தை நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கும் கொடுக்க வேண்டும். நகராட்சியிலே இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக வறுமைக் கோட்டின் கீழுள்ள ஏழை எளிய, குடிசையிலே உள்ள மக்களுக்கு விளக்கு வசதி செய்து கொடுக்காதது மிகவும் ஏமாற்றத்தை அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. இது பகல் நேரத்திலே வழங்கப்பட வேண்டும். அதிகப்படியான நேரங்கள் வழங்கப்பட வேண்டும். மின்சாரத்திற்கு ஏழை விவசாயிகளுக்கும், சிறிய விவசாயிகளுக்கும் சலுகை அளித்துள்ளது பாராட்டத்தக்கது. நடுத்தர விவசாயிகளுக்கும் அளித்துள்ள சலுகையானது, அதாவது, இன்று கட்டி வருகின்ற கட்டணத்தை விட அதிகமாக கட்டணம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. எனவே அதனை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிணறுகளுக்கு 10, 15 ஆண்டுகளாக மின்சாரம் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. அதிகமான மின் இணைப்புகளை கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இடைப்பாடி நகராட்சி பகுதியிலே தற்போது வழங்குகின்ற குடிநீர் திட்டம், 25 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டது. அந்த நகராட்சிக்கு குடிநீர் பற்றாக்குறை



1985 மார்ச் 30] [திரு. ச. கோவிந்தசாமி]

இருக்கிறது. அதோடு அடிக்கடி மோட்டார்களும் பழுது அடைந்து அந்த நகராட்சி மக்களுக்கு மிகவும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. எனவே அங்கே ஒரு மேல்நிலைத் தொட்டியை சர்க்கார் அமைத்துத் தர வேண்டும். அதற்காக அந்த நகராட்சியிலே போதிய பணம் இல்லாத காரணத்தினால் அமைக்க முடியாமல் இருக்கிறது. அதை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு அந்த நகராட்சிக்கு உதவி செய்து அந்த மேல்நிலைத் தொட்டியைக் கட்டிக் கொடுத்து இடைப்பாடி மக்களுக்கு உதவி செய்ய வேண்டும். இடைப்பாடி தொகுதியிலே மகுடஞ்சாவடி, ஆட்டையாம்பட்டி, வெண்ணாந்தூர், கொங்கணாபுரம், வேம்படிதாளம், எளம்பிள்ளை போன்ற பேரூராட்சிகளுக்கு ரூ. 11 கோடி செலவில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் இருக்கின்றன. அதனை விரைவாகச் செயல்படுத்தி அந்த மக்களுடைய குடிநீர் கோரிக்கையை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பெரும்பான்மையான மக்கள் கைத்தறித் தொழிலை நம்பியிருக்கிறார்கள். கைத்தறி துணியின் தேக்கத்தால் அந்த மக்கள் மிகுந்த துன்பப்படுகிறார்கள். அவர்களுக்கு மாடர்ன் கைத்தறிகள் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களுடைய குறைபாடுகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இடைப்பாடி தொகுதியைப் பொறுத்தவரையில் சிறு கிராமங்களுக்கு பேருந்துகள் விடப்பட்டு ஏழை எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. அதோடு மேலும் பல கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இடைப்பாடியிலிருந்து சென்னைக்கும், கும்பகோணம், மதுரை, திருச்சிக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக பேருந்துகளை விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போதுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மருந்துகள் இல்லை, கால்நடை மருந்தகங்களில் மருந்துகளும் விந்துகளும் இல்லை. எனவே தக்க முறையில் ஆரம்பச் சுகாதார நிலையத்திலே மருந்துகளும் கால்நடை மருந்தகங்களிலே விந்துகளும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. ச. கோவிந்தசாமி] [1985 மார்ச் 30

இடைப்பாடியிலே அரசினர் மருத்துவ மனை இருந்து வருகிறது. கடந்த 30 ஆண்டுகளாக அது அப்படியே எந்தவிதமான அபிவிருத்தியும் இல்லாமல் படுக்கை வசதிகளும் அதிகரிக்கப்படாமல் இருந்து வருகிறது. அந்த நகராட்சியிலே உள்ள மருத்துவ மனையை விரிவுபடுத்தி நல்ல முறையில் மக்களுக்குப் பயன்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ம. நா. ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது கருத்துத் தெரிவித்துப் பேசுவதற்கு முன்னால் எனக்கு இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், வானூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது இதயப் பூர்வமான நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன் ஏழையினுடைய சிரிப்பிலே இறைவனைக் காண முடியும் என்ற உன்னதமான கருத்தினை மனதில் வைத்து எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குழந்தைகளின் பசியை நீக்க இலவசமாக சத்துணவு அளிக்கும் இந்த நேரத்திலே அதே குழந்தைகளுக்கு 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகளுக்கு இலவசமாக சீருடை, மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்குவதற்காக 25 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கின்ற நிலையை எண்ணி நான் இதயப் பூர்வமாகப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உணவுத் துறையைப் பொறுத்தவரையில் ஏழை எளிய மக்களின் கஷ்டங்களை உணர்ந்த டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரிசிக்கு அவதிப்படும் நிலைமையை மாற்றி, இன்றைக்கு நியாய விலைக் கடைகள் மூலமாக ஒரு கிலோ ரூ. 1.75 வீதம் ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி வழங்கி



1985 மார்ச் 30] [திரு. ம. நா. ராமஜெயம்]

இருக்கும் வகையில் மக்களின் துயரத்தைத் துடைத்த டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம வளர்ச்சியைப் பொறுத்தவரையில் கிராமப்புற மக்களின் நலனை மனதில் கொண்டு கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 65 கோடி ரூபாய் ஒதுக்கி இணைப்புச் சாலைகள், சிறுபாசனப் பணிகள், ஏழைகளுக்கு வீடுகள் கட்டுதல் ஆகியவை சிறப்பு அம்சமாகும். மேலும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 54 கோடி ரூபாய் ஒதுக்கி பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், கிராம வீடுகள் ஆகியவை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது பாராட்டத் தக்கதாகும்.

அரசு ஊழியர்களின் நலன் கருதி குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களுக்கு ரூ. 10 ஆயிரமாக இருந்ததை 20 ஆயிரமாக உயர்த்தியிருப்பது பாராட்டுக்குரிய செயலாகும். மேலும் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் பகுதி நேர எழுத்தர் மற்றும் சத்துணவு அமைப்பாளர்களின் வேலையை நிரந்தரமாக்கி, அவர்களுடைய சம்பளத்தையும் 150-லிருந்து 300 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

சிறு விவசாயிகளின் நலன் கருதி இயற்கை உரங்களின் மீது 5 சதவீதம் பல முனை வரியை தள்ளுபடி செய்திருப்பதற்கு நான் இதய பூர்வமாக என்னுடைய பாராட்டை தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து ஆதி திராவிடர் நலன். ஆதி திராவிட மக்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டும் என்று எண்ணி எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ரூபாய் 125½ கோடியை அவர்கள் பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்கு ஆதி திராவிடர் சிறப்பு அம்ச திட்டத்தின் கீழ் Adi-Dravidar Welfare Schemes in R.L.E.G.P N.R.E.P., போன்ற திட்டங்களின் மூலமாக கிராமங்களில் கட்டிடங்களும் வீடுகளும் கட்டிக் கொடுத்து இருக்கிறோம்.

[திரு. ம. நா. ராமஜெயம்] [1985 மார்ச் 30

இங்கே வரவேற்கக்கூடிய ஒன்றாக அது இருக்கிறது. அதே நேரத்தில் வீட்டு மனைக்கு நில ஆர்ஜிதம் வேண்டு அக்கியூசேஷன் செய்கின்ற நேரத்தில் நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றங்களுக்கு சென்று விடுகிற காரணத்தால் பல பேர்களுக்கு இலவச வீட்டு மனை நிலப் பட்டாக்கள் கொடுக்க முடியாத அளவுக்கு பல ஆண்டு கால தாமதம் ஆகிவிடுகிறது. அந்த நில ஆர்ஜிதத்தைப் பொறுத்தவரை மாவட்ட தலைநகரில் தனி நீதிமன்றம் ஒன்றை இன்றைக்கு அமைத்து தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதி தொடர்ந்து 25 வருடமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக இருந்தது. இந்த முறை அ.இ.அ.தி.மு.க. சார்பில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருக்கிற காரணத்தால் தொகுதி மக்கள் பலவித நன்மைகளை எதிர்பார்க்கிறார்கள். என் தொகுதி மக்களுக்கு குறிப்பிடப்பட்ட தேவையான நன்மைகளை செய்து தரவேண்டும் என்று இந்த மாமன்றத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வானூர் தொகுதியைப் பொறுத்தவரை தனி அந்தஸ்து பெற்ற தாலுக்கா அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் இதுவரையில் இல்லை. அதேநேரத்தில் மருத்துவ வசதியும் தாலுக்கா அந்தஸ்த்தில் உள்ள வானூர் தொகுதியில் இதுவரையில் இல்லை. ஆகவே அங்கே 100 படுக்கைகள் கொண்ட நவீன அரசு பொது மருத்துவ மனை ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று நான் இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை இன்ஸ்பெக்டர் ஆபீஸ், ஆய்வாளர் அலுவலகம் 20 கி.மீ. தூரத்திலுள்ள விக்கிரவாண்டிக்கு செல்கின்ற காரணத்தால் தாலுக்கா அந்தஸ்து பெற்ற வானூரில் ஒரு காவல் நிலைய ஆய்வாளர் அலுவலகத்தை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வானூர் தொகுதியில் மரக்காணம் பகுதியில் ஒரு தீ அணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று மிக பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். வானூரிலிருந்து சென்னைக்கும், மரக்காணத்திலிருந்து சென்னைக்கும் பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் போக்குவரத்து வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்



1985 மார்ச் 30] [திரு. ம. நா. ராமஜெயம்]

கொள்கிறேன். மீனவர்கள் அதிகமாக எங்கள் தொகுதியில் இருக்கிறார்கள். அவர்கள் நலன் கருதி மீன்கள் கெட்டுவிடாமல் இருப்பதற்காக, அதை பாதுகாப்பாக குளிர் சாதனத்தில் வைத்து இருப்பதற்காக மீன் துறையின் மூலம் நவீன ஒரு ஐஸ் பேக்டரி ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள திருவக்கரை வக்ர காளியம்மன் கோயிலுக்கு பௌர்ணமிதோறும் பக்தர்கள் ஆயிரக்கணக்கில் அதிகமாக வருகிறார்கள். அந்தக் கோயில் பழுதடைந்து இருக்கிறது. அதை புதுப்பித்துத் திருப்பணி செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள திருவக்கரை, பொம்மையார் பாளையம், கோனாக்கேணி நல்லாவூர், பந்தாடு, கொஞ்சிமங்கலம் போன்ற கிராமங்களில் மழைக் காலங்களில் போக்குவரத்து செல்ல முடியாமல் தடை இருக்கிறது. அதற்கு போக்குவரத்து செய்து கொடுப்பதற்கு உடனடியாக பெரிய அளவில் மேம்பாலம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள மரக்காணத்தில் உப்பு, கிளிஞ்சல் போன்ற மூல தாதுப் பொருள்கள் அதிகமாக கிடைக்கிறது. அந்த மூலப் பொருட்களை வைத்து என்ன தொழிலை ஆரம்பிக்க முடியுமோ அதற்கேற்ப் பெரிய அளவில் தொழிற்சாலையை அந்தப் பகுதியில் ஆரம்பித்தால் பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகவே அதை உருவாக்கித் தர அரசை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மரக்காணம் பேரூராட்சியில் இதுவரையில் வசதி வாய்ப்புடன் கூடிய ஒரு பஸ் நிலையம் கூட இல்லை. கழிப்பிட வசதி இல்லை. 12 ஆயிரம் வாக்காளர்கள் மரக்காணப் பகுதியில் இருக்கிறார்கள். அந்த பகுதிக்கு ஒரு சிறந்த பேருந்து நிலையமும் கழிப்பிட வசதியும் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை உங்கள் முன்னால் எடுத்து வைக்க விரும்புகிறேன். இங்கே இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏசுவதற்காகத்தான் பயன்படுத்தினார்களே தவிர இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கின்ற திட்டங்களை எடுத்து சொல்வதற்கு அவர்களுக்கு வழி இல்லாமல் இருந்தது. காரணம், இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டுகளிலே எதைச் செய்தோமோ அவைகளையெல்லாம் வரிசைப்படுத்தி அவைகளைத்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர புதிய திட்டமாக எந்தத் திட்டத்தையும் அறிவிக்காத காரணத்தினால் அவைகளையே திரும்பத் திரும்பச் சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், அந்த இடைப்பட்ட காலத்தில் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் தவறுகள் நடந்தன, காரியங்கள் செய்யப்படவில்லை, நாங்கள் தேர்தலிலே தோற்றுவிட்டோம், 48 இடத்திலே இருந்தவர்கள் 38 ஆக ஆகி, பிறகு 22 ஆக மாறி விட்டோம் என்றெல்லாம் எங்களைக் குறித்துச் சொல்லிக் கொண்டிருந்தார்களே தவிர நிதிநிலை அறிக்கையிலே நல்ல பல காரியங்கள் இருக்கின்றன என்று அவர்களாலே சொல்லி வாதிட முடியவில்லை.

இன்றைக்கு நாங்கள் எண்ணிக்கையிலே குறைந்தவர்களாக இருந்தாலும் எங்களுடைய தலைவர்கள் சொன்னதைப்போல நாட்டு மக்களுடைய ஆதரவைப் பெற்ற இயக்கமாக, ஏற்பட்டு விட்ட மாபெரும் அலையில் நாங்கள் தோற்றுவிட்டாலும் கூட, பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, சிறந்த எதிர்க் கட்சியாகப் பணியாற்றக் கூடியவர்களாக இருந்து வருகிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாங்கள் சொல்லுகின்ற கருத்துக்களை மறுக்க முடியாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே தவறுகள் நடைபெற்றன என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரையில் நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த அந்த



நேரத்திலே—மூன்று ஆண்டுக் காலம், ஊழல் ஊழல் என்று பேசினீர்கள்; இலஞ்ச இலாவண்யத்தைப் பற்றி உரத்த குரலிலே பேசினீர்கள்; ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை? ஜனதாக் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப் போல, உங்களாலே ஊழலற்றவர்கள் என்று நிரூபிக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். இங்கே காங்கிரஸ் கட்சி, மற்றக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள்.

* *

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஊழலைப் பொறுத்த மட்டிலும் ஏற்கனவே அது நிரூபிக்கப்பட்டது என்பது மட்டுமல்லாமல், ஊழல் பற்றிய வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு வரவில்லை; முந்தைய அரசுக்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் பேசியதற்கு அமைச்சர் சொல்கிறார்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கின்ற பொழுது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற்றோம் என்று சொன்னார்கள். நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், நியாய உணர்வு படைத்த மாண்புமிகு உறுப்பினர்களிலே ஒருசில பேர் நியாயமாக,

* *

* *

இருந்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒட்டுமொத்தமாகச் சொல்லக் கூடாது. குறிப்பிட்டு இன்னார் என்று சொன்னால் சம்பந்தப்பட்டவர் அதற்குப் பதில் அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கும். அப்படியின்றி ஒட்டுமொத்தமாகச் சொல்லுகின்றபொழுது எல்லா உறுப்பினர்களும் பதில் சொல்வதற்கு எழுந்து விடுகிறார்கள். (குறுக்கீடுகள்) எல்லா உறுப்பினர்களும் உட்கார வேண்டும்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

எனவே, உறுப்பினர் ஒட்டு மொத்தமாகச் சொன்ன குற்றச் சாட்டை நீக்கி விடுகிறேன். திரு. நடராசன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. ஆ. நடராசன்:** திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டுகள் இருக்கின்றனவே அந்தக் குற்றச்சாட்டுகளை அவர்கள் நிரூபித்திருக்கின்றார்களா என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெட்டி பெட்டியா வாங்கினார்கள் என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு மிகத் தெளிவாகச் சொல்லுகிறேன். ஆதாரபூர்வமாகக் குற்றச் சாட்டுகளைச் சொல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள்.

* *

(குறுக்கீடுகள்)

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறுபடியும் பொதுப்படையான குற்றச்சாட்டுதான் சொல்லப்படுகின்றது. தாங்கள் ஏற்கெனவே அளித்த தீர்ப்பு மீறப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசும் போது மீண்டும் அவ்வாறு குறிப்பிட்டது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றது. இது சட்ட மன்றம்; பொதுக்கூட்டத்தில் பேசுவது போன்று பேசக்கூடாது. குற்றச்சாட்டுகள் சொல்வதாக இருந்தால் முன்கூட்டியே அதற்கான ஆதாரத்தை என்னிடம் காட்டி, என் அனுமதி பெற்றுப் பேசவேண்டும்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பற்றி, பொதுவான நிகழ்ச்சி களைப் பற்றி, திட்டவட்டமான நிகழ்ச்சிகளைப் பற்றி இங்கே பேசுகின்றபோது நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சி என்று

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



சொல்வதுதான் பொருத்தம் என்று கழகத்தின் சார்பாக என்னுடைய கட்சி உறுப்பினருக்கு நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டு குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும் என்று நீங்கள் சொன்னீர்கள். நான் தயாராக இருக்கிறேன். ஆனால். . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் நேரிடையாகப் பேசக் கூடாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மீதுதான் பேசுகிறார்கள். மற்றவர்கள் எல்லாம் நிதிநிலை அறிக்கையின் மீது பேசவில்லை என்று சொல்லிவிட்டு அவர்கள் பேச ஆரம்பித்தவுடனே இவர் நிதிநிலை அறிக்கையைப் பற்றித்தான் பேசப் போகிறார் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்தேன். ஆனால் அவரும் வேறு எங்கெங்கோ போய்ப் பேசுகிறார். அப்படிப் பேசாமல் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் அவர்கள் சொல்வது போன்று குற்றச்சாட்டுக்களைப் பற்றிச் சொல்லக் கூடாது என்றில்லை; சொல்கிற குற்றச்சாட்டைத் திட்டவட்ட மாகவும், தெளிவாகவும் சொல்லவேண்டும். இந்த அவை கடைப்பிடித்து வருவதைப் பொறுத்தவரையில் நிதிநிலை அறிக்கையைப் பற்றி குறை சொல்லுங்கள், இதை, இதைச் செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். ஆனால் பொதுப்படையாக ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டை வாரி வீசுவதன் மூலம் அவையின் பெருமை கெடுகிறது, என்பதோடு உறுப்பினர்கள் ஒருவரையொருவர் மதிக்கத் தவறுகிறோம் என்றும் ஆகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல முறையினைப் பின்பற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களும், கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களும் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு உடன்படுகின்ற

[திரு. ஆ. நடராசன்] [1985 மார்ச் 30

வகையிலே நான் சொல்கிறேன். ஆனால் இங்கே பேசிய கருத்துக்கள் இந்த பட்ஜெட் பற்றி இல்லை என்ற காரணத்தால் தான் நானும் பட்ஜெட்டை விட்டு வெளியே சென்று பேச வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கை யைப் பொறுத்தவரையில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இப்படிப்பட்ட குற்றச்சாட்டு களைச் சொல்வதற்குக் காரணம் இந்தக் குற்றச்சாட்டுகளிலே ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்பதைக் காட்டிலும் ஒரு அரசாங்கம் திருத்தவேண்டிய குறைபாடுகளைப்பற்றி திருத்த வேண்டும் என்ற நோக்கத்தில் நான் சொல்கிறேன். அதே நேரத்தில் நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு காரியங்களுக்காக நிதி ஒதுக்கி இருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு ஏராளமான நிதியினை முதியோர் ஓய்வூதியத் திற்காக நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்று நிதிநிலை அறிக்கை யிலே நிதியமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் பல ஆண்டுக் காலமாக எங்களுடைய பகுதியில் பல முதியவர்கள் விண்ணப்பித்து அவர்கள் இறந்துகூட போய்விட்டார்கள். மேலும் இதுவரை பல பேருக்கு முதியோர் உதவித் தொகை கிடைக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்கெல்லாம் நீங்கள் உதவுகின்றவகையில் விண்ணப் பிக்கின்ற அத்தனை பேர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் மக்கள் நல்வாழ்வுத்துறையைப் பொறுத்தவரையில் ஒரு கருத்துச் சொன்னார்கள்.

கி.பி. 2000 ஆவது ஆண்டுக்குள்ளாக மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு அளிப்பதாக இந்த அரசு முடிவு செய்திருக்கின்றது என்று சொன்னீர்கள். உள்ளபடியே அதை நான் பாராட்டு கிறேன். ஆனால் நிதியமைச்சர் அவர்கள் அப்போது நிதியமைச் சராக இருக்கமாட்டார்கள். நாங்களும் கேட்க வாய்ப்பு இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால் 15 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் அந்த காரியத்தைச் செய்ய முடியும் என்று நீங்கள் சொல்லியிருப்பது நியாயமான காரிய மல்ல. இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னபோது அவற்றிற்குப் பதில்



1985 மார்ச் 30] [திரு. ஆ. நடராசன்]

சொன்னீர்கள். ஆனால் ஒவ்வொரு மருத்துவ மனையும் இன்றையதினம் நரகமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்ற காட்சியைத் தான் நாம் பார்க்க வேண்டியிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 1984-ஆம் ஆண்டில் டிசம்பர் வரை 2343 துணை சுகாதார நிலையங்களை உருவாக்கத் திட்ட மிட்டு அதிலே 2254 துணை நிலையங்களை நாங்கள் உருவாக்கி இருக்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். என்னுடைய பேரூர் தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு சுகாதார நிலையம் கூட, அதாவது 5,000 பேருக்கு ஒருவர் என்று சொல்கின்ற அந்த வகையிலே கூட துணை நிலையம் ஒன்று கூட துவக்கப்பட வில்லை. அதைப்போல, என்னுடைய தொகுதியிலே இருக்கிற அரிசிபாளையம் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் இல்லை, மருந்து இல்லை. அந்த மருத்துவர்களுக்குக் கொடுக்கப் படுகிற சம்பள அளவிலே கூட மருந்துகள் கிடைக்காத நிலையை நாம் பார்க்கிறோம். இவற்றை எல்லாம் சீர்படுத்த வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப் பவர்களுக்கு வீட்டுவசதி அளிப்பதற்காக மேலும் 5,000 வீடு களைக் கட்டுவதற்குத் திட்டமிட்டிருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதி யிலே இருக்கிற வேலாண்டிபாளையம், சீரநாய்க்கன்பாளையம், குப்பிச்சிபதி, ஒக்கிலிபாளையம் ஆகிய ஊர்களிலே இந்த 5,000 வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், அப்பகுதிகளுக்குத் தேவையான வீடுகளை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்த அளவில் 850 ஆசிரியர்களை நியமிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றையதினம் 4,000 ஆசிரியர்கள் தேவை என்கிற அளவிற்கு நிலைமை இருக்கிறது. 4,000 ஆசிரியர்கள் என்று சொன்னால் ஒரு ஆசிரியருக்கு 50 பிள்ளைகள் என்று நிர்ணயித்தால்கூட 2 இலட்சம் பிள்ளைகள் இன்றைய தினம் ஆசிரியர்கள் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதை பார்க்கிறோம். இந்த நிலைமையை மாற்றுவதற்கு அதிகப்படியான ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆ. நடராசன்] [1985 மார்ச் 30

அதைப்போல வேலாண்டிப்பாளயம் பகுதியிலே இருக்கிற ஆயிரக்கணக்கான மக்கள் பள்ளிக்காக வெகு தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே ஒரு உயர் நிலைப் பள்ளியைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குனியமுத்தூர் பகுதியிலே இருக்கிற மேல்நிலை பள்ளியும் மதுக்கரை மேல்நிலைப் பள்ளியும் கட்டிடங்கள் இல்லாமல் பல்லாண்டுக் காலமாக இருக்கின்றன. 7 ஆண்டுக் காலமாக அமைச்சரிடத்திலே மனுக்கள் கொடுத்தும் அதற்கு மக்களுடைய பங்குத் தொகை கட்டப்பட்டும் இன்னும் அங்கே கட்டிடங்கள் கட்டப்படவில்லை. அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குனியமுத்தூரில் இருக்கிற மேல்நிலைப் பள்ளியில் சைக்கிள் ஸ்டாண்டிலே வகுப்புகள் நடத்தப்படக்கூடிய பரிதாபமான நிலைமை இருந்து வருகிறது. அது மாத்திரமல்ல, படிக்கட்டி லிருந்து இறங்குகிற இடத்திலும், மரத்தடியிலும் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அவற்றை நீங்கள் மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுக்கரையை ஒட்டிய பகுதியிலும் பொங்களூர், பல்லடம் வட்டாரத்திலும் இருக்கக்கூடிய விவசாயிகள் தங்களுடைய நிலத்திற்கு நீர் வேண்டுமென்பதற்காக நீண்ட காலமாக நீராறு திட்டம், சோலையாறு திட்டம், பாண்டியாறு, புன்னம்புழா திட்டம் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று விவசாயிகள் கேட்கிறார்கள். அதைச் செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். மேற்கு நோக்கி போகின்ற ஆற்றுநீர் வீணாகப் போய் கடலிலே வீணாகின்ற காட்சியைப் பார்க்கிறோம். அந்த நிலைமையை மாற்றுவதற்குக் கோள அரசாங்கத்திடம் மத்திய அரசாங்கத்திடம் பேச்சு வார்த்தை நடத்தி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஆம் ஆண்டிலே மத்திய அரசு அதை ஆராய்வதற்காக ஒரு கமிட்டிக்கு ஏற்பாடு செய்தது. அந்த கமிட்டியின் அறிக் கையின் அடிப்படையிலே விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டு கிறேன். முன்னாள் இராணுவத்தினரைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாங்களும் இன்னொரு நல வாரியத்தை உருவாக்கப் போகிறோம், வெல்பேர்



1985 மார்ச் 30] [திரு. ஆ. நடராசன்]

போர்டை உருவாக்கப் போகிறோம், அதன்மூலம் பல காரியங் களைச் செய்யப் போகிறோம், கடன் தரப் போகிறோம், தொழில் களை உருவாக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன், ஏற்கனவே முன்னாள் இராணுவத்தினர் குடியிருந்து வருகிற விடுகளுக்கு வீட்டு வரியிலேயிருந்து விலக்கு அளிப்பதற்கு அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்று 1981 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, இப்பொழுது இருக்கிற எக்ஸ் சர்வீஸ்மென் வெல்பேர் போர்டில் விண்ணப்பங்கள் எல்லாம் வாங்கப்பட்டு 4 ஆண்டுக்காலமாகப் பயனற்று இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல பல மாண்புமிகு உறுப்பினர்கள் சத்துணவிலே நாங்கள் சரித்திரத்தைச் சமைக்கப் போகிறோம் என்று குறிப் பிட்டார்கள். ஆனால், நான் உங்களிடத்திலே கேட்கிறேன், அமைப்பாளருக்கு ரூ. 150 ஆயாவுக்கு ரூ. 30, ரூ. 60 சம்பளம். அங்கே கொடுக்கப்படுகிற உணவுப் சம்பளம் என்று கொடுத்தால், அமைப்பாளர்கள் வீடுகளுக்கும் பொருள்கள் ஆயாக்களுக்கும் போய்ச் சேராது என்பதை போகுமே தவிர, குழந்தைகளுக்குப் விரும்புகிறேன். எனவே, அங்கே பணி நான் சுட்டிக்காட்ட நியாயமான ஊதியத்தைத் தர யாற்றக் கூடிய ஊழியர்களுக்கு மினிமம் வேஜஸ் ஆக்ட் கூட அந்தத் அரசாங்கத்தினுடைய அங்கே பணியாற்றக் கூடியவர்களுக்கு தொழிலாளர்களுக்கு, ஒரு காரியம் என்பதைக் இல்லை என்பது வருந்தக்கூடிய குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப் போல கயிறு தொழிற்சாலை துவங்குவதற்காகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பேரூர் பகுதியிலே ஏராளமான தென்னை மரங்கள் இருக்கின்றன. அந்தத் தென்னந் தோப்பு கவில் கிடைக்கிற மட்டைகளைப் பயன்படுத்துகிற வகையிலே ஒரு கயிறு தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

10 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உருவாக்க இருப்பதாகவும், மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. 1974-75 ஆம் ஆண்டில் கூட்டுறவு ஆலைக்காக கோவை புதூரில் ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கான காரியங்கள்

[திரு. ஆ. நடராசன்] [1985 மார்ச் 30

நிறைவேற்றப்பட்டதற்கு பின்னாலும், கோவை மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை என்கிற அமைப்பை கலைத்து பங்கு பணத்தை திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் மீண்டும் கூட்டுறவு அமைப்பிலே ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கோவையிலிருந்து பாலக் காட்டிற்குச் செல்லும் வழியில் கந்தேகவுண்டன்சாவடியில் என். எச். 47 நெடுஞ்சாலையில் நூற்றுக்கணக்கான வீடுகளை நியாயமற்ற முறையில் இடித்து தள்ளியிருக்கிறார்கள். மத்திய அரசு ஒரு பை-பாஸ் ரோடு அங்கே போடுகிறது. சென்னைக்கு போகிற அந்த பை-பாஸ் ரோடு மதுக்கரையில் பிரிந்து நீலாம்பூர் போய் சேர்கிறது. பல்லாண்டு காலமாக பணம் ஒதுக்கப்பட்டும் அந்த நேஷனல் ஹைவேஸ் என். எச். 47-ல் ரோடுகள் இன்னும் போடப்படவில்லை. ஆனால் அதேநேரத்தில் கந்தேகவுண்டன் சாவடியில் இருக்கக்கூடிய நூற்றுக்கணக்கான வீடுகளை அதிகாரிகள் முறையான அறிவிப்பு செய்யாமல் இடித்து விட்டார்கள். இடித்து ஒரு ஆண்டிற்குப் பின்னாலும் மீண்டும் இடிக்கவேண்டும். முதலில் தவறாக இடித்துவிட்டோம். இப்போது இன்னும் 100 அடி, 120 அடி இடிக்க வேண்டுமென்று இன்றையதினம் அளந்து கொண்டிருக்கிறார்கள். இது நியாய மற்ற காரியம். முதலில் இடித்ததுபோக மீதி இடங்களில் ஆயிரக் கணக்கான ரூபாய்களை போட்டு மக்கள் வீடுகளை கட்டி விட்டார்கள். எனவே மீண்டும் அந்தப் பாதையை அகலப் படுத்துகிற காரியத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து; எனக்கு முன்னாலே பேசிய ஜனதா கட்சி உறுப் பினர் கூறியதைப் போல எங்களுடைய மாவட்டத்தில் ஸ்ரீஹரி மில்ஸ், ஜனார்த்தனா மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், பத்மா மில்ஸ், ஜோதி மில்ஸ், ஜெயலஷ்மி மில்ஸ், மது ஸ்பின்னிங் மில்ஸ், ஆகிய பஞ்சாலைகளிலும், இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் என்கிற பொறியியல் தொழிற்சாலையிலும் பணியாற்றக்கூடிய ஏறத்தாழ 2,500 தொழிலாளர்கள் அந்த நிறுவனங்கள் மூடப் பட்டு இருப்பதால் இரண்டு ஆண்டு காலமாக பஞ்சத்தோடும், பட்டினியோடும் பரிதவிக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. ஆ. நடராசன்]

அடுத்து அரிசன நலத்துறையைப் பொறுத்தவரையில் அங்கே மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா கொடுக்கப்படவில்லை. அதனால் அவர்கள் பெறவேண்டிய கடன் தொகையை பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அதை உடனடியாக பட்டா தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கோவை குமாரசாமி ஏரி பகுதியில் 1,500 குடும்பங்கள் பல ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை, கூடைய முடையக்கூடிய மக்களுக்கும் உடனடியாக பட்டா வழங்கி அவர்களுக்கும் கடன், பெறுகிற வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அரிசன மக்களுக்கு கலைஞர் அவர்கள் காலத்தில் 40 ஆயிரம் கான்கிரிட் வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் இவ்வரசு ஒரு வீட்டைக் கூட கட்டவில்லை. மத்திய அரசின் நிதியுதவியின் மூலமாக என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலம் சில வீடுகளை கட்டியிருந்தாலும் கூட, கலைஞர் அவர்களுடைய காலத்தில் 40 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டன. அந்தத் திட்டத்தை தொடர்ந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் பல கிராமங்களில் கழிப்பிட வசதி இல்லை. அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செட்டிப்பாளையத்திலிருந்து வடசித்தூர் போகிற வழியில் மணல்துறை என்ற ஆறு இருக்கிறது. அந்த ஆற்றின் வழியாக ஏறத்தாழ அரை கிலோமீட்டருக்கு பேருந்துகளும், மற்ற வண்டி களும் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே ஒரு பாலத்தை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல குமிட்டிபதி ஆற்றில் ஒரு பாலத்தை கட்டித்தர கேட்டுக்கொள்கிறேன்.

குட்டைகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படுகிறது. எங்கள் பகுதியில் 5 ஆண்டுகளுக்கு முன்னால் இடிந்துபோன மதுக்கரை குட்டையையும், ஈச்சநாரி குட்டையையும் உடனடியாக கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல புதிய குட்டைகளாக கந்தேகவுண்டன் சாவடியிலும், குமார பாளையத்திலும், குமிட்டிபதியிலும், மதுக்கரையிலும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் சமுதாயத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கு வதைவிட்டு, கிராமங்களில் இருக்கிற வளங்களை அடிப்படையாகக் கொண்டு, உற்பத்தி நோக்கத்தைக் கொண்ட திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். அதனால் கிராமங்களில் வேலை வாய்ப்பு பெருகும். மேலும் கிராமங்களில் எரிசக்தி திட்டங்களை அதிகமாகப் போட வேண்டும்.

இந்திய பொருளாதாரம் மழையினை மட்டும் நம்பிக்கொண்டி ராமல் ஆண்டு முழுவதும் நீர் கிடைக்கும் வகையில் நீர்வளத் திட்டங்களைப் பெருக்க வேண்டும்.

தென்னாற்காடு, வடாற்காடு, சேலம் போன்ற மாவட்டங்கள் திருச்சி, தஞ்சை மாவட்டங்களைப்போல் இல்லாமல் கிணற்று நீர்ப் பாசனத்தையே நம்பியுள்ளதால், இந்த நிலையை மாற்றி யமைக்க சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டங்களை பெரு மளவில் அரசு கொண்டுவந்து, அந்த மாவட்டங்களில் நீர்ப்பாசன வசதியைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்னாற்காடு, வடாற்காடு, சேலம் மாவட்டங்களில் பெரு மளவுக்கு வேர்க்கடலை பயிரிடப்படுகிறது. அதை கச்சாப் பொருளாகக் கொண்டு அங்கே ஒரு எண்ணெய் பிழியும் தொழிற் சாலையை அரசாங்கம் ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

கல்ராயன் மலைப் பகுதியில் அரசு உயர்நிலைப்பள்ளி ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்து, மலைவாழ் மக்கள் பயனடைய ஏற்பாடு செய்ய வேண்டும். கள்ளக்குறிச்சி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றியமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமப்புறங்களில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள் பல இடங்களில் நீர் இல்லாமல் வறண்டிருக்கிறது, பல இடங்களில் போதிய அளவுக்கு நீர் கிடைக்கவில்லை. மக்களின் தேவைக்கு ஏற்ப நீர் கிடைக்கும் வகையில் வறட்சி கண்ட குழாய்க் கிணறுகளை மாற்றி வேறு இடங்களில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சோ. கலிதீர்த்தான்] [1985 மார்ச் 30

செயற்கை மழைத் திட்டம் நிறைவேற்றப்பட்ட இடங்களில் நீர் வளம் நிறைந்திருக்கிறது. அதனால் கிராமப்புறங்களில் இந்தத் திட்டத்தை கொண்டுவந்து, கிராம மக்களின் தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்த்துவைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் நிதி உதவியிலிருந்து தமிழக அரசு நிறைவேற்றும் பல திட்டங்கள் கிராமப்புறங்களில் எதிர்பார்த்த பலன் ஓரளவுக்கு கிடைக்கிறது என்றாலும் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற அதிகாரிகள் அந்தப் பகுதிகளிலிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை கலந்தாலோசிக்காமல் செய்கிறார்கள்; சட்டமன்ற உறுப்பினர்களை கலந்தாலோசித்து செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 3,000 பேர்களுக்கு ஒரு சுகாதார நிலையம் அமைப்பதாக அறிவித்திருப்பதை நான் வரவேற்கின்றேன். இதனால் மலைவாழ் மக்களுக்கு நல்ல பயன் ஏற்படும். 30,000 மக்கள் வாழ்கிற கல்ராயன் மலைப் பகுதியில் இப்போது மூன்று சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அங்கே ஏழை எளிய மக்கள் மலைவாழ் மக்கள் சுகாதார வசதி போதுமான அளவுக்கு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தை போக்க இன்னும் ஒரு துணை சுகாதார நிலையத்தை அங்கே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அரசை நான் கேட்டுக்

(முற்பகல் 11-20)

கொள்கிறேன். பெரும்பாலான ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் புளி, மஞ்சள், மிளகு ஆகியவற்றின் விலையைக் குறைக்கும் வகையில் திட்டம் உள்ளது, வரவேற்கத்தக்கது. அதேபோல் எண்ணெய், வெங்காயம் ஆகியவற்றின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சங்கராபுரத்தை ஒரு தலைமையிட வட்டாரமாக அறிவிக்க வேண்டும். நான் ஏற்கெனவே இதுபற்றி இந்தச் சட்டமன்றத்திலே பேசும்போது, கள்ளக்குறிச்சி பெரிய வட்டாரமாக இருக்கிறது, எனவே அதைப் பிரித்துக் கொடுத்து, நிர்வாகத்தை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு, சங்கராபுரத்தை ஒரு தனி வட்டாரமாக ஆக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன்.



1985 மார்ச் 30] [திரு. சோ. கலிதீர்த்தான்]

அதற்கு எந்தவிதமான அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கை
யிலே இல்லை. எனவே பின்வாலேயாவது அதைத் தொடங்கு
வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல சங்கராபுரத்திலே அரசு மருத்துவ மனை ஒன்று
உள்ளது. அங்கே நோயாளிகள் தினமும் அதிகமாக வருகி
றார்கள். ஏன் என்றால், அது பேரூராட்சியாக இருக்கிறது.
எனவே நோயாளிகள் வந்து தங்கி சிகிச்சை பெறுவதற்கு
முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் சுமார் 40, 50 கி.மீ.
தூரத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இல்லை என்றால்,
அவர்கள் சேலம், கடலூர் போன்ற இடங்களுக்குச் செல்ல
வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. எனவே இந்த நிலை
மையை மாற்ற, அங்கே படுக்கை வசதிகள் கொண்ட ஒரு
மருத்துவமனையாக அதை மாற்றிக் கொடுக்கவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சர்க்கராபுரம் பேரூராட்சி மிகவும் பின்தங்கி
யிருப்பதால் அதை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்ராயன் மலைப்பகுதியில் இயற்கை வளம் அமைந்துள்ள
மேகம் என்ற இடத்திலே நீர் வீழ்ச்சிகள் இருக்கின்றன. இன்று
நம்முடைய நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற
காரணத்தால், அங்கே நீர் மின்சாரம் தயாரிக்கக்கூடிய
திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். ஏற்கனவே இதுபற்றி நான் இந்த அவை
யிலே பேசி இருக்கிறேன். நம்முடைய மின்சாரத் துறை
அமைச்சர் அவர்கள் கூட இங்கே 10 மெ. வாட் மின்சாரம் தயாரிக்
கக்கூடிய நிலையத்தை அமைக்கலாம் என்று கூறியிருந்தார்கள்.
எனவே அந்தத் திட்டத்தை இப்போது செயல்படுத்தவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்
காக அரசு நிதியை வழங்கி இருக்கிறது, அதற்கு முதல் அமைச்சர்
அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த நிலையம் அமைப்ப
தற்கு வேண்டிய இடத்தை கையகப்படுத்தி, விரைவிலே அமைக்

[திரு. சோ. கலிதீர்த்தான்] [1985 மார்ச் 30

செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், மலைப் பகுதிகளிலே மின்சாரம் செல்ல வேண்டியிருக்கிற காரணத்தால், அதை விரைவாகச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய கல்ராயன் மலைப் பகுதி மிக உயரமான இடத்திலே, அதாவது 4,500 அடி உயரத்திலே உள்ளது. எனவே அங்கே ஒரு தொலைக்காட்சி நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்தால், அந்தப் பகுதியைச் சுற்றியிருக்கிற, விழுப்புரம் மற்றும் ஆத்தூர், அந்தப் பக்கத்திலே இருக்கிற அரூர் மற்றும் இந்தப் பகுதியிலே இருக்கிற திருவண்ணாமலை போன்ற இடங்களில் இருக்கின்ற மக்கள் எல்லாம் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கும் மிகவும் வசதியாக இருக்கும். கல்ராயன் மலைப் பகுதியிலே வாழ்கின்ற அந்தப் பகுதி மக்களுக்கும் அது வாய்ப்பாக இருக்கும். எனவே அங்கே ஒரு தொலைக்காட்சி நிலையத்தை அமைக்க ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கல்ராயன் மலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக ஆக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஆட்சியிலேதான் அங்கே சாலைகள் எல்லாம் அமைக்கப்பட்டன. போக்குவரத்தும் இப்போது ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. எனவே அங்கே உள்ள நீர் வீழ்ச்சியை எல்லாம் சென்று பார்ப்பதற்கு வசதியாக இருக்கும் வகையிலே, அதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே உள்ள மூங்கில் துறைப்பட்டு என்ற இடத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்று இருக்கிறது. அங்கே ஏராளமான தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். எனவே அது நிறைய பொதுமக்கள் வாழ்கின்ற இடமாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு அங்கே குடிநீர் வசதி இல்லாத நிலைமையிருப்பதால், அவர்கள் மிகவும், கஷ்டப் படுகிறார்கள். எனவே அவர்களுக்காக ஒரு பெரிய திட்டத்தை இட்டு அங்கே உள்ள தொழிலாளர்களுக்கும், அந்தப் பகுதியில் வாழ்கிற பொது மக்களுக்கும் வேண்டிய குடிநீர் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான்



1985 மார்ச் 30] [திரு. சோ. கலிதீர்த்தான்]

கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், அது மிகவும் மலைப் பாங்கான மேட்டுப் பகுதி. எனவே உடனடியாக அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய சங்கராபுரம் பகுதியில் உள்ள மக்களுக்கு வேண்டிய குடிநீர் வழங்கும் திட்டத்தை இப்போது ஆரம்பித்து, அதைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டம் இன்னும் முடிவு பெறாமல் இருக்கிறது. அது ஒரு பெரிய பேரூராட்சியாக இருக்கின்ற காரணத்தால், விரைவிலே அதைச் செயல்படுத்துவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து குடிநீர் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கல்ராயன் மலைப்பகுதியிலே மைக்கா போன்ற தாதுப் பொருள்கள் எல்லாம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே அதை ஆய்வு செய்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் முல்குந்தா நதியிலே — நான் ஏற்கனவே இதைப்பற்றி பல முறை இங்கே சொல்லியிருக்கிறேன்—ஒரு அணைக்கட்டு கட்டி, அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு விவசாயம் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கனவே சொல்லியும், இதுவரையிலும் அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப் படவில்லை. இந்தத் திட்டத்தை ஆய்வு செய்ததாகத் தெரிகிறது. எனவே விரைவாக அதை ஆய்வு செய்து, இந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் உள்ள கோமுகி அணை, மணிமுத்தாறு அணைகளில் இரண்டு ஆண்டுக்காலமாக தூர் எடுக்காமல் இருக்கிறது. அந்த அணையிலேயிருந்து வெளியிலே பாசனத்திற்கு செல்லுகின்ற அந்த தண்ணீர் சேதம் அடையாமல் இருப்பதற்கு, கால்வாய்களின் ஓரத்தில் லைனிங் செய்து கொடுத்து, அந்தப் பகுதி விவசாய மக்களின் பயிர்களை பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், கல்ராயன் மலையிலே செயலற்றுப் போய் ஏற்கனவே இருந்த அந்த ஊராட்சி மன்றத்தினை, இப்போது

[திரு. சோ. கலிதீர்த்தான்] [1985 மார்ச் 30

புதிதாக ஊராட்சி ஒன்றியத்தை தொடங்கிக் கொடுத்து, அந்த மலைவாழ் மக்களுக்கு நல்ல திட்டங்களை எல்லாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஊராட்சி மன்றத்திற்கு கூடுதலாக நிதி ஒதுக்கி மலைவாழ் மக்களுடைய மேம்பாட்டு திட்டங்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கல்ராயன் மலையிலிருந்து வெள்ளிமலை வரையிலும் சாலை போட 5 கோடி ரூபாயை நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதி தந்து, சாலையை செப்பனிட்டுக் கொண்டிருக் கிறார்கள். அந்தச் சாலை மலைச்சாலையாக இருப்பதினால் மழைக் காலங்களில் தண்ணீர் எடுத்து ஓடி, சாலைகள் கரைந்து போகிற நிலையிலே இருக்கின்றன. விரைவிலே அவைகளுக்கு ஜல்லி போட்டு, தார் போட்டும் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அந்த ரோடுகளில் பேருந்து களை விட முடியும். அதற்கு வழி வகை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கள்ளக்குறிச்சியிலேயிருந்து திருவண்ணாமலை செல்லும் சாலையை தேசீய நெடுஞ்சாலையாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அங்கே மூங்கில்துறைப்பட்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு கரும்பை எடுத்துச் செல்ல விவசாயிகள் மிகவும் துன்பப்படுகிறார்கள். அதேபோல வேலூர், திருப்பதி போன்ற இடங்களுக்கெல்லாம் செல்வதற்கு, அதுதான் பெருவழித்தடமாக இருப்பதால், அதை தேசீய நெடுஞ்சாலையாக மாற்றிக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள மாத்தூரில் இருந்து செல்லம்பட்டு வரை செல்லும் சாலை ஏற்கெனவே கிராமச் சாலைத் திட்டத்தின் மூலம் செப்பனிடப்பட்டு, ஜல்லி போட்டு விட்டுவிட்டார்கள். மேற்கொண்டு தார் போட்டு கெட்டிப்படுத்தாமல் விட்டு விட்டதனால் அந்தச் சாலை பழுதடைந்து இப்போது பேருந்து செல்வதற்கு வழி இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அந்தச் சாலையை இந்த நடப்பு ஆண்டு திட்டத்திலேயே எடுத்துக் கொண்டு, நல்ல தார் சாலையாக செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் முஷ்குந்தா நதியிலிருந்து, ராவப்பதூர், [illegible]குண்டம் வரை செல்லும் சாலையிலுள்ள ஆற்றிலே ஒரு



1985 மார்ச் 30] [திரு. சோ. கலிதீர்த்தான்]

பாலம் கட்டிக் கொடுத்து, அங்கே கரும்பு விவசாயம் செய்யும் விவசாயிகள் தாங்கள் விவசாயம் செய்த கரும்புகளை எடுத்துச் செல்ல வழி வகை செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கள்ளக்குறிச்சியிலிருந்து பம்பாப்பட்டு வழியாக கச்சிராப்பாளையம் வழியாக தந்தை பெரியார் நகரப் பேருந்து ஒன்று ஓடவிட்டு, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்து, 10 கிராம மக்கள் இதனால் பலன் அடையக் கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தித் தருமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையிலிருந்து மூங்கில்துறைப்பட்டு வரை வரு கின்ற நகரப் பேருந்துகளை எனது தொகுதியில் உள்ள மேல்பெண் ணூர் கூட்டு ரோடு வரை நீடித்துக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல சங்கராபுரத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். கள்ளக்குறிச்சியிலே காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஒன்றும், கள்ளக்குறிச்சியிலே ஒரு கோட்ட வளர்ச்சி அதிகாரி அலுவலகம் ஒன்றும், கள்ளக்குறிச்சியிலே ஒரு வருவாய் கோட்ட அலுவலகம் ஒன்றும், கள்ளக்குறிச்சி பகுதியிலே மலைவாழ் மக்கள் அதிகமாக இருப்பதினால், ஒரு கல்லூரியையும் ஏற்படுத்திக் கொடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, ஒரு தொழில் நுட்பக் கல்லூரியையும் அரசின் சார்பாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு வாய்ப்பினை தந்த தலைவருக்கும், இங்கே பேசுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும், நன்றி கூறி, அண்ணா நாமம் வாழ்க என்று கூறி முடிக்கிறேன்.

*திரு. செ. இரத்தினவேலு: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் பேரில் நடக்கக் கூடிய விவாதத்தில் கலந்துக் கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அடுத்து, முப்பிறவி கண்டு மூன்றாம் முறை பதவி ஏற்றிருக்கிற, வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று பாடிய வள்ளலாரின் வழி நின்று வாடிய பிஞ்சு முகங்களைக் கண்டு, மனம் வாடி, சிறு வயதில் தான் இருந்த

[திரு. செ. இரத்தினவேலு] [1985 மார்ச் 30

மீண்டும் நாங்கள் வலியுறுத்தி, திருச்சியினை தமிழகத்தினுடைய தலைநகரமாக மாற்றித் தர வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியிலே பாரதிதாசன் பல்கலைக் கழகம், கண்ட தமிழக அரசு, மருத்துவ மனை கல்லூரியையும் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாவட்டத்தில் நகரத்தின் மையத்தில் மட்டும் இரண்டு மூன்று மகளிர் கல்லூரிகள் இருக்கின்றன. திருச்சி அல்லாத வேறு பகுதியிலே மகளிர் கல்லூரிகள் இல்லை. இந்த நிலையை மாற்றி முசிறியில் மகளிர் கல்லூரியை அமைக்க வேண்டும். அதனால் அருகில் உள்ள தாலுக்காக்களிலும், அருகில் உள்ள கிராமத்திலே யுள்ள மகளிர், கல்லூரிக்கு சென்று படிப்பதற்கு ஏதுவாகும்.

அதுபோல குடிநீர் பிரச்சனையைப் போக்குவதற்கு அரசு போர்க் கால நடவடிக்கை எடுத்து வருகிறது. என்னுடைய தொகுதியில் காவேரிக் கரையை ஒட்டியுள்ள பகுதிகள் தவிர எஞ்சியப் பகுதிகளில் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முசிறி தாலுக்கா தொழிற் துறையில் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப் பட்டுள்ளது. எனவே முசிறியில் ஒரு தொழிற்பேட்டையை துவங்க அரசு ஆவன செய்ய வேண்டும். தமிழகத்தில் 10 இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைப்பதில் முசிறிக்கு முன்னுரிமை அளித்து அங்கு ஒரு சர்க்கரை ஆலை அமைக்க வேண்டும். அங்குள்ள கரும்பு விவசாயிகள் இதனால் பயன் அடைவார்கள். கணிசமான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அந்த வேலைக்கு தேவையான கரும்பை உற்பத்தி செய்யக் கூடிய நஞ்சை நிலங்கள் அங்கே இருக்கின்றன. முசிறிக்கு அருகில் உள்ள புகளூர் பேப்பர் மில்லுக்குத் தேவையான மூலப் பொருளான கரும்புச் சக்கையை இந்த ஆலையின் மூலம், அங்கிருந்து புகளூருக்கு அனுப்ப முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடிக்கடி தமிழகத்தில் வழக்கறிஞர்களுக்கும், காவல் துறையினருக்கும் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை அவ்வப்போது தீர்வு காண, மாவட்ட நீதிபதி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள், மாவட்ட வழக்கறிஞர் சங்கத்



1985 மார்ச் 30] [திரு. செ. இரத்தினவேலு]

தலைவர் கொண்ட ஒரு உயர் மட்டக் குழுவினை அமைத்து ஆங்காங்குள்ள பிரச்சனைகளை தீர்வு காண நமது அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான முசிறிக்கு அருகில் தொட்டியம் தொகுதிக்கும் விவசாயத்திற்கு நீர் வரக்கூடிய வடக்கு கால்வாயில் கோடை காலத்தில் நீர் வருவதில்லை. காவேரிக் கரைக்கு அருகில் உள்ள ஸ்ரீராமசமுத்திரத்தில் தற்காலிகமாக கரம்பை கட்டி பாசனத்திற்கு நீர் கொண்டு வருவார்கள். கரம்பை கட்டுவதற்கு ஒரு ஆண்டிற்கு ரூ. 1 இலட்சம் ஆகும். அந்த கரம்பையை நிரந்தரமாக சிமெண்ட்டினால் கட்டினால் அரசுக்கு ஆக வேண்டிய செலவு குறையும். இதனால் முசிறி, தொட்டியம் தொகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள், எப்போது தண்ணீர் வரும். எப்போது தண்ணீர் வராது என்ற பயம் இன்றி விவசாயம் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து முசிறியிலே இருக்கக்கூடிய அந்த மருத்துவமனைதான் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு பெரிய மருத்துவ மனையாக விளங்குகிறது. அங்கே படுக்கை வசதிகள் அதிகமாக இல்லை. படுக்கை வசதிகள் அதிகமாகக் கொண்ட மருத்துவ மனையாக அதை ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உத்தமர்சீலி, கோட்டாத்தூர் அருகிலே ஒரு காட்டாறு ஓடுகிறது. அங்கே மழை பெய்தால் 3 நாட்களுக்குத் தொடர்ந்து வெள்ளம் வரும். அப்போது அந்தப் பகுதியிலே எந்தவிதமான போக்குவரத்தும் நடத்த முடியாது. அந்த இடத்திலே ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுத்தால்--25 ஆண்டுக் காலமாக அந்தக் கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிற — அந்த மக்களுக்குக் கட்டிக் கொடுத்தால் இந்த அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அரிசி ஆலைகள் அதிகமாக இருக்கக்கூடிய மண்ணச்சநல்லூர் பகுதியை தாலுக்காவாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே காவிரியிலிருந்து முள்ளுப்பாடி ஏரிக்கு வரக்கூடிய நீரை தேய்வேலி வரை கொண்டுவர அரசு உதவுமானால்

[திரு. செ. இரத்தினவேலு] [1985 மார்ச் 30

திட்டத்தட்ட 10 ஆயிரம் ஏக்கர் வரை பாசனத்திற்கு நீர் கிடைக்கும். அப்போது அங்கே இருக்கின்ற நிலங்கள் எல்லாம் விவசாயத்திற்கேற்ற நிலங்களாக மாறி பசுமைப் புரட்சி ஏற்படும் என்று சொல்லி அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு மீண்டும் ஒரு முறை என்னைப் பேச அனுமதித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இங்கே அங்கம் வைத்துப் பேச உறுதுணையாக இருந்த எங்களை வழிநடத்திச் செல்லக்கூடிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் நான் பேசுவதற்கு முன்பு என்னை ஆளாக்கி இந்த அளவுக்கு உருவாக்கிய எங்கள் இயக்கத்தினுடைய பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கும் அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கும் அஞ்சலியைச் செலுத்திப் பேச விரும்புகிறேன். எனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும் ஆருயிர் அண்ணன் சிவாஜி அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்து பேசத் தொடங்குகிறேன்.

நான் முதன்முறையாகப் பேசுகின்ற காரணத்தினால் என் தொகுதியைப் பற்றிப் பேசுவதற்கு முன்பு நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேச விரும்புகிறேன். பள்ளி பிள்ளைகளுக்கு சீருடை வழங்குவதும், பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்குவதும் ஆகிய திட்டங்களை நாங்கள் வரவேற்கிறோம். ஏனென்றால் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பள்ளிப் பிள்ளைகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற முறையிலே ஏழை எளிய பிள்ளைகள் படிப்பதற்காக வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார்கள், இன்றைய தினம் அந்தத் திட்டத்தை விரிவாக்கி இருக்கிற முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சாராயத்திற்கு வரியை உயர்த்தியிருப்பதையும் நாங்கள் வரவேற்கிறோம். காரணம், இந்த நாட்டிலே பல [illegible] பிரச்சினைகள் இருக்கின்ற நேரத்திலே சாராயத்தைக் [illegible] விட்டு அதன் மூலமாக சமுதாயத்தை அழித்துக்



1985 மார்ச் 30] [திரு. வி. கோ. செல்லப்பா]

கொண்டிருக்கிறவர்கள்—அதன் விலை உயர்கிற காரணத்தினால் அந்தத் தீய பழக்கத்திலிருந்து விடுபடுவார்கள் என்ற காரணத்தினால்—அந்த ஏழை எளியவர்களாக இருந்து குடிக்கின்றவர்கள் நிலை மாறும் என்பதால் நாங்கள் அதை வரவேற்கிறோம்.

அதேபோன்று ஒருமுனை வரியை அறிவித்திருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சில முக்கியமான பொருள்களுக்கு ஒருமுனை வரி விதித்திருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று எல்லாப் பொருட்களுக்கும் ஒருமுனை விற்பனை வரியை விதிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலமாக ஏழை எளிய மக்கள் நல்வாழ்வுக்கு உதவி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் கடலூர் பகுதியில் சிப்காட் தொழிற் பேட்டை ஒன்று இருக்கிறது. அது முன்பே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அதை விரிவுபடுத்துவதற்கு உதவி செய்வதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

சத்துணவு மையக் கூடங்கள் நன்றாகச் செயல்படுகின்றன. என் தொகுதியிலே சத்துணவு மையக் கூடங்களுக்குத் தனியாகக் கூடங்கள் இல்லை. இதனால் அவர்களிடம் வழங்கப்படுகிற உணவு, அரிசி, பருப்பு பொருட்களைப் பாதுகாப்பதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. அதன் காரணமாக பல தவறுகள் ஏற்படுகின்றன. எனவே அதைத் தடுப்பதற்காக தனியாகக் கூடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்வித் திறனை பெருக்க வேண்டும். கல்வித் திறன் திறனைப் பெருக்கினால் தான் நன்றாக இருக்கும். கல்வித் திறன் வளர வேண்டுமானால் அங்கு இருக்கின்ற பள்ளிகளை சீர்திருத்தம் செய்ய வேண்டும். [illegible] இருக்கின்ற பள்ளிக் கட்டிடங்களை நல்ல முறையில் கட்டித்தர வேண்டும். அதே சமயத்தில் சத்துணவு அளிப்பதன் மூலம் பல பிள்ளைகள் பள்ளிகளில் படிக்கின்ற பிள்ளைகள் அதிகமாகிக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் ஆரம்பப் பள்ளிகளில் [illegible] கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அங்கே ஆசிரியர்கள் குறைவாக இருக்கிறார்கள். ஆசிரியர்களை அதிகமாக நியமிக்க இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வி. கோ. செல்லப்பா] [1985 மார்ச் 30

ரேஷன் கடைகளுக்கு பல திட்டங்கள் போட்டு நல்ல வேலைகளை செய்து கொண்டு வருகிறீர்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் ரேஷன் கடைகளின் மூலம் இந்த அரசு கொடுக்கின்ற பொருட்கள் அந்த மக்களுக்கு கிடைக்கின்றதா என்று பார்த்தால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இன்று போய் நாளை வா என்று சொல்லுகின்ற நிலைமை தான் அங்கே இருக்கின்றது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த எந்த பொருட்கள் கார்டில் பதிவு செய்யப்படாமல் இருக்கிறதோ அந்தப் பொருட்களை எல்லாம் அரசுக்கு திருப்பித் தர வேண்டும் என்று சட்டத்தின் மூலமாக செய்ய வேண்டும். அப்போது தான் இதுபோன்ற தவறுகளை நீக்குவதற்கு வசதியாக இருக்கும்.

எங்கள் தொகுதியில் உள்ள கால்நடை மருத்துவ மனையில் சரியான முறையில் மருந்துகள் இல்லை. அங்கே கொண்டு செல்லும் கால்நடைகளுக்கு சரியான முறையில் மருந்து கொடுக்கப்படாமல் கால்நடைகள் மடிய நேரிடுகின்றன.

மற்றும் கடலூரை தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கவில்லை. கடலூர் தொகுதியின் வட பகுதியில் முன்னேற்றம் காணவில்லை. ஏன் என்றால் வட பகுதியைப் பொறுத்தவரையில் பாண்டிச்சேரி மாநிலமும், தமிழக மாநிலமும் விட்டு விட்டு வருகின்ற காரணத்தால் அங்கே முன்னேற்றம் காணவில்லை. குறைந்தது 20 ஆண்டுகளுக்கு முன்பாக போட்ட ரோடுகள் தான் அங்கே உள்ளன. அவைகளில் மாட்டு வண்டிகள் கூட செல்ல முடியாத நிலையில் உள்ளன. அதைப் போக்குவதற்கு கடலூர் தொகுதியை தன்னிறைவுத் திட்டத்தில் சேர்ப்பதன் மூலமாக பல நன்மைகள் ஏற்படுத்த முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு விவசாயிகளுக்காக கரும்புக்கு 185 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். எங்கள் பகுதியான நெல்லிக்குப்பத்திலும், முண்டியம்பாக்கத்திலும் அந்த விலை கொடுக்கவில்லை. ஆனால் அரசால் நடத்தப்படுகின்ற அந்த கூட்டுறவு கரும்பு ஆலையில் 213 ரூபாய் என்று கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஒரே ஆலை தான் பக்கத்தில் இருக்கின்றது. அந்த கூட்டுறவு ஆலை இப்போது தான் ஏற்பட்டு இருக்கிறது. முன்பு அங்கு இருந்தவர்கள்



1985 மார்ச் 30] [திரு. வி. கோ. செல்லப்பா]

முண்டியம்பாக்கத்திற்கும், நெல்லிக்குப்பத்திற்கும் அந்த கரும்பை அனுப்பிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் இப்போது கூட்டுறவு ஆலை ஏற்பட்ட உடன் அவைகளை பிரித்து இதில் கொஞ்சம் அதில் கொஞ்சம் எடுத்து அந்தக் கூட்டுறவு ஆலைக்கு கரும்பை அனுப்புகிறார்கள். அவர்கள் 213 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் தனியார் நடத்துகின்ற அந்த ஆலைகளில் அரசு நிர்ணயித்து இருக்கிற அந்த 185 ரூபாய் கொடுக்க மறுக்கிறார்கள். இந்த அரசு அதை கவனித்து விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த கரும்பு விவசாயிகளுக்கு முக்கியமாக அந்த 185 ரூபாய்க்கு குறையாமல் கிடைக்க நீங்கள் வழிவகை செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் பத்திரிகையில் பார்த்தால் முக்கியமாக மக்களுக்கு பெரும் பீதியை ஏற்படுத்தும். கடலூரில் அரசு வேலை வாய்ப்பு நிறுவனத்தில் ஏற்பட்டு இருக்கிற தவறை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடலூர் என்னுடைய சட்டமன்ற தொகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே வேலைவாய்ப்பு நிறுவனத்திற்குப் போட்டியாக ஒரு வேலைவாய்ப்பு நிறுவனம் நடைபெற்று இருக்கிறது. விழுப்புரம் கல்வி மையத்திலிருந்து 6 ஆட்கள் தேவை என்று அந்த வேலை வாய்ப்பு நிறுவனத்திடம் கேட்டு இருக்கிறார்கள். அதற்கு ஒரு பெயரை மட்டும் அங்கிருந்து வந்ததன் காரணத்தால் அந்த கல்வி மையத்தின் டி.இ.ஓ. அவர்களுக்கு சந்தேகம் வந்து அந்த வேலை வாய்ப்பு நிறுவனத்திடம் கேட்ட நேரத்தில் இந்தக் குற்றச்சாட்டு தெரிய வந்திருக்கிறது. இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்கு மேலும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் என்றால் ஏழை எளிய மக்கள் வேலை வாய்ப்பு நிறுவனத்தை நம்பியிருக்கிறார்கள். தங்களுக்கு அரசு மூலமாக வேலை பெற முடியும் என்று நம்பியிருக்கிற அந்த ஏழை எளிய மக்களுக்கு இந்தத் தவறுகள் தெரிய வருமானால் தங்களுக்கு வேலை வாய்ப்பு நிறுவனம் மூலம் வேலை கிடைக்காது என்ற சந்தேகமும் ஐயப்பாடும் ஏற்படும். ஆகவே அங்கே தவறு செய்து இருக்கிறவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும். மேலும் இதுபோன்ற தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய கடலூர் தொகுதியில் நான் வோட்டு கேட்க சென்ற நேரத்தில் பலயிடங்களில் நாங்கள் வோட்டு அளிக்க மாட்டோம் என்று கூறி அவர்கள் நோட்டீஸ் போஸ்டர் எல்லாம் அடித்து இருந்தார்கள். ஏன் என்றால் இதுவரையில் அந்தத் தொகுதியில் இன்றும் நிலப்பரப்போடு தொடர்பு கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு பாலம் இல்லை. அங்கே கார்கள் செல்வதற்கு முடியவில்லை. ஏன் என்றால் அங்கே பால வசதி இல்லை. குறுக்கே ஆறு இருக்கிறது. மக்கள் அங்கே காரில் சென்று பார்க்க முடியவில்லை. அந்தத் தொகுதியில் உள்ள குண்டுஉப்பலவாடி, தாழங்குடா, நானபேடு போன்ற ஊர்களுக்கு மக்கள் நடந்து தான் செல்ல வேண்டும். கட்டை வண்டி கூட செல்வதற்கு லாயக்கு அற்ற முறையில் அவைகள் இருக்கின்றன. அங்கே ஒரு தரை பாலம் கூட இல்லை. தற்சமயம் அதை நீங்கள் அமைத்துத் தருவதற்கு முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய கடலூரிலே பழைய நகர் என்று இருக்கிறது—கடலூர் ஓ.டி. என்று இருக்கிறது. அங்கிருந்து அக்கரையான மறுபுறத்தில் ஒரு ஆறு இருக்கிறது, கடலும் இருக்கிறது. இப்படித் தண்ணீரால் சூழப்பட்ட அந்த இடம் ஒரு தீவுத் திடலாகத் தனியாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அங்கே யார் செல்ல வேண்டுமென்றாலும் போட்டில்தான் செல்ல வேண்டும். ஏனென்றால் அது அவ்வளவு ஆழமான பகுதியாகும். அங்கே பாலம் கட்டுவதற்காக 1975 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் அது கட்டப் படாமல் நிறுத்தப்பட்டதற்கான காரணம் புரியவில்லை. இந்த அரசு ஏழைகளுக்கும், மீனவர்களுக்கும் நன்மை செய்கின்ற அரசாக இருப்பதால் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்றும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வேலைவாய்ப்பிற்காக 15 இலட்சம் பேர்களுக்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கான வேலை வாய்ப்பிற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்தத் திட்டத்தையும் தெரிவிக்காமல் இருப்பதைக் கண்டு வேதனைப் படுகிறேன்.





கடலூர்ப் பெருநகரமானது ஒரு நகராட்சியாகும். அங்கே சரியான ரோடுகள் இல்லை. அங்குள்ள ஆணையாளரிடம், இவ்வாறு ரோடுகள் இல்லை என்று கேட்டால் அவர்கள் நிதி இல்லை என்று சொல்கிறார்கள். பெரிய பேக்டரிகளைப் பொறுத்தவரையில் சொல்வார்களே, சிக் பேக்டரி என்று, அதைப் போல, இந்த நகராட்சி சிக் நகராட்சியைப் போல இருக்கிறது. அந்த நகராட்சியில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. அங்குள்ள ஏழை எளிய மக்களுக்குக் குடிதண்ணீர் வசதிகூடச் செய்து கொடுக்க முடியாத நிலையில் அந்த நகராட்சி உள்ளது. என்னுடைய தொகுதியில் தண்ணீர் நிறையக் கிடைக்கும்; ஆனால் அதை உபயோகிக்க முடியாது. ஏனென்று கேட்டால், அது கடல் பகுதியாக இருப்பதால் அங்குள்ள தண்ணீர் உப்புக் கரிக்கிறது. ஆகவே, நல்ல தண்ணீரைக் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்கள் மிகுதியாக வாழும் இடத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் பல நன்மைகளைச் செய்வதற்கு இந்த அரசு முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலூர் தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கிருக்கின்ற ஆசிரியப் பெருமக்கள் சம்பளம் பெறுவதில் கஷ்டங்கள் இருக்கின்றன. ஒரு மாதம் கழித்துக் கூட சம்பளம் பெறுகின்ற அவல நிலைமை இருக்கிறது. இதனால் இளஞ்சிறார்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கின்ற அவர்கள் நிம்மதியாக வாழ முடியாததால் கல்வித் தரம் மிகவும் குன்றந்து வருகிறது. எனவே, அரசாங்கம் இது குறித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள மக்களுக்கு ரோடு வசதி, தண்ணீர் வசதி போன்றவைகளைச் செய்து, பாலம் கட்டித் தந்து, அதைச் சிறப்பானதொரு தொகுதியாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டமான தென்னார்க்காடு மாவட்டத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் சேர்ந்த கூட்டணியாக 21 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டோம்; அந்த 21 சட்டமன்றத் தொகுதிகளிலேயும் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். நம்மை

[திரு. வி. கோ. செல்லப்பா] [1985 மார்ச் 30

நம்பி அந்த மாவட்டத்து மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். எனவே, அந்த மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்து, தொழில் முன்னேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்து, அந்த மாவட்டத்திற்கு நல்ல வடிவம் கொடுப்பார்கள் என்று நம்பி இந்தக் கூட்டணிக்கு அந்த மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். எனவே, அந்த மாவட்டத்து மக்களுக்கு நல்லது செய்து தாருங்கள் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு நல்கிய துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், ஜெய்ஹிந்த்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: வணக்கத்துக்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு அனுமதித்த உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அறிஞர் பெருமக்களும், சான்றோர்களும் மிக்க அமைந்திருந்து ஆட்சி நடத்திய இந்த மாமன்றத்திலே சாமான்யமான என்னையும் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி அழகு பார்க்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய இதயங்கலந்த நன்றியினை முதலில் காணிக்கையாக ஆக்கிக் கொள்ளுகின்றேன்.

திராவிட இயக்கம் தொடங்கிய காலந்தொட்டு, அண்ணாவின் தம்பிகளை சட்டமன்ற உறுப்பினர்களாக ஆக்கிப் பார்க்க முடியாத அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி இந்த முறை முதன் முதலாக என்னைத் தேர்ந்தெடுத்துள்ளது. அவ்வாறு தேர்ந்தெடுத்து இந்த மாமன்றத்திற்கு அனுப்பிய அம்பாசமுத்திரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு முதலில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல ஏழை எளிய மக்கள் பயன் பெறும் அளவில் பல நல்ல திட்டங்கள் உள்ளன. முதலில், ஏழை எளிய பள்ளி மாணவ மாணவியர்களுக்குச் சீருடை வழங்குதல், இலவச புத்தகங்கள் வழங்குதல் ஆகியவை உள்ளன.



1985 மார்ச் 30] [திரு. எஸ். பாலசுப்பிரமணியன்]

(முற்பகல் 11-50)

ஆதி திராவிடர் நலனுக்காக 20 அம்சத் திட்டத்தின் கீழ் 183 கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளது. கைத்தறி நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்கள் போன்றவர்களின் பாதுகாப்புத் திட்டத்திற்காக தமிழக அரசு அனுமதி அளித்திருக்கின்றது. எனது தொகுதியிலுள்ள சேர்வலாறு புனல் மின் திட்டம் இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தொழிலாளர் நலனுக்காக பல திட்டங்கள் கூறப்பட்டுள்ளது. கிராம நகர பகுதிகளில் உள்ள மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது. இவ்வாறு 'பல நல்ல' திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே காண முடிகிறது. மேலும் பல நல்ல திட்டங்களைப் புரட்சித் தலைவர் அரசு செயலாற்ற இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதியைப் பொறுத்தமட்டில் அது மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அந்தத் தொகுதி விவசாயப் பெருங்குடி மக்களும், ஆலைத் தொழிலாளர்களும், நெசவாளர்களும் அடங்கிய ஒரு தொகுதியாகும். இந்தத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கின்றது. ஆனால் எனது தொகுதியின் தேவைகள் மிக அதிகம். அவை அனைத்தும் புரட்சித் தலைவர் அவர்களின் அரசால் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று நான் உளமாற நம்புகிறேன்.

எனது தொகுதியில் பெண்களுக்கென்று ஒரு கல்லூரி வேண்டும். குற்றாலத்திலிருந்து புறப்பட்டால், பாளையங்கோட்டையில்தான் பெண்களுக்கான தனிக் கல்லூரி இருக்கின்றது. அதற்கு இடைப்பட்ட தொகுதியான அம்பாசமுத்திரம் தொகுதியில் பெண்களுக்கான கல்லூரி தனியாக இல்லை. அவ்வாறு ஒரு தனிக் கல்லூரி பெண்களுக்காக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று குடிதண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எனது தொகுதியில் நிறைய கிராமங்களில் குடிதண்ணீர் இல்லாமல் இருக்கின்றது. குறிப்பாக வெள்ளாங்குளி, மாதாபுரம், ஆர்வாதபுரம், வெள்ளிகுளம் ஆகிய கிராமங்களில் குடிநீர் இல்லை. எனது தொகுதியில் தாமிரபாணி ஆறு ஓடுகின்றது.

[திரு. எஸ். பாலசுப்பிரமணியன்] [1985 மார்ச் 30

இந்த ஆற்றிலிருந்து எனது தொகுதியிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுக்கலாம். ஆனால் இநத ஆண்டு கொடுக்கப்படவிலலை. இவைகள் எல்லாம் நிச்சயமாக வரககூடிய காலத்திலேயாவது கொடுக்கப்படும் என்று நான் நம்புகிறேன். அதேபோல் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுத்தும் ஏறததாழ 94 தெருக்கள் விடுபட்டிருக்கின்றன. அவ்வாறு விடுபட்டுப் போன தெருக்களுக்காகத் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. அதை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டும என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதியில் போக்குவரத்து அதிகமாக இருக்கின்றது. ஆனால் சாலைகளை நீண்டகாலமாகச் செப்பனிடப்படாததன காரணத்தால் பெருத்த சிரமங்கள் ஏற்படுகின்றன. உடனடியாக அந்தச் சாலைகளைப் பழுது பார்க்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதியில் பாபநாசத்தையும், அகஸ்தியர் அருவியையும், மாவட்ட சுற்றுலா மையமாக அரசு அறிவித்துள்ளது. அங்கு பிரயாணிகள் தங்குவதற்காக சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலா விடுதி கட்ட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடையம் வட்டாரத்தில் கடனாநதி அணைக்கட்டு ஒன்று இருக்கின்றது. அந்த அணையைக் கட்டும்போது பெரியதாகக் கட்ட வேண்டும் என்று திட்டம் போட்டார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அதைக் கட்டும்போது சிறியதாகக் கட்டியிருக் கிறார்கள். அதன் காரணத்தால் ஒரு வார மழை பெய்தாலும் கூட அந்த அணை நிரம்பிவிடும். மீதித் தண்ணீர் எல்லாம் ஆற்றிலே வீணாகப்போய் கடலிலே சேர்கின்றது. அந்த அணையை விரிவாக்குவதற்கான வாய்ப்புள்ளது. அந்த அணையையும் இராமநதி அணையையும் ஒன்றாக இணைக்க வேண்டும். அப்படி இணைத்தால் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தண்ணீர் தட்டுப்பாடு வராது. அப்படி இரண்டையும் ஒன்றாக இணைக்காவிட்டாலும் கூட கடனா நதி அணையை நிச்சயமாக விரிவுபடுத்த வாய்ப்பிருக்கின்றது. அவ்வாறு விரிவு



1985 மார்ச் 30] [திரு. எஸ். பாலசுப்பிரமணியன்]

படுத்துவதன் மூலம் ஏறத்தாழ பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு மேலே பாசன வசதி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விக்கிரமசிங்கபுரத்திற்கு மேற்கே செட்டிப்பணங்காட்டில் ஒரு சிறிய காட்டாறு இருக்கின்றது. அங்கே மழைக்காலங்களில் தண்ணீர் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும். அதன் காரணத்தால் சுற்றியுள்ள நிலங்களில் அரிப்பு ஏற்படுகிறது. எனவே அந்தப் பகுதியிலே சிறிய நீர்த்தேக்கத்தைக கட்டினால் அந்தப் பகுதியில் உள்ள ஆயிரம் ஏககர் நிலங்கள் பாசன வசதி பெறும். அதை உடனடியாக அரசு நிறைவேற்றித்தர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் கடையம் வட்டாரம் மிகவும் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியிலே பல சிறு தொழில்கள் நிறுவ அரசு முன் வரவேண்டும். குறிப்பாக, ஒரு தொழில் பேட்டையைக் கடையம் வட்டாரத்திலே நிறுவவேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் எந்த வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் வீடுகளும் கட்டப்படவில்லை. அரசு அலுவலர்களுக்கு எனது தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எனது தொகுதியில் ஆதி திராவிட மக்களுக்குக் கழிப்பிட வசதி செய்து தரவேண்டும். குறிப்பாக, விக்கிரம சிங்கபுரம் போன்ற ஜனநெருக்கம் உள்ள நகரங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கழிப்பிட வசதி உடனடியாக செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சிவந்திபுரம் கிராமத்தில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டும் அங்கு வீடுகளுக்கு கனெக்ஷன் கொடுக்காமல் அப்படியே உள்ளது. அதை உடனடியாக மறுபரிசீலனை செய்து, வீடுகளுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய அளவுக்கு அந்தத் திட்டம் மாற்றப்பட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள் கிறேன். அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு தண்ணீர் வேண்டு மானாலும் தாமிரபரணி ஆற்றிலிருந்து பெற வாய்ப்பு உள்ளது. அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் எவ்வளவு தண்ணீர்

வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, அந்தத் திட்டத்தை பற்றி அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் அளவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து இல்லாத எல்லா கிராமங்களுக்கும் நகரப் பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். விக்கிரமசிங்கபுரம் மணிமுத்தாறு சாலையில் தாமிரபரணி நதியின் மீது ஒரு பாலம் கட்டப்பட வேண்டும். ஆலைத் தொழிலாளர்கள் தற்போதுள்ள இரும்புப் பாலத்தின் வழியாக—சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்ட பாலத்தின் வழியாக—தான் போகிறார்கள். அது இப்பொழுது பழுதடைந்திருக்கிறது. அந்தப் பாலத்தின் மீது ஏறத்தாழ தினமும் 10,000 மக்கள் போகிறார்கள், வருகிறார்கள், நிறைய வாகனங்கள் செல்கின்றன. ஆகவே, அந்தப் பாலத்தை உடனடியாக மாற்றி, நல்ல பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சேர்வலாறு நீர் மின் திட்டத்தை சீக்கிரம் நிறைவேற்றப் போவதாக பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதையும் சீக்கிரம் முடித்துத் தர பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பாபநாசம் சுற்றியுள்ள காடுகளில் மரங்கள் கூடுமான வரையில் இன்னும் நிறைய நட வேண்டும். அவை தற்போது மரங்கள் இல்லாமல் பொட்டல் நிலமாகக் காட்சியளிக்கின்றன. அந்தக் காடுகளில் மரங்கள் நட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் விக்கிரமசிங்கபுரம் ஏறத்தாழ 60,000 மக்கட் தொகை உள்ள நகரமாகும். அதிலே சிறிய மருத்துவ மனைதான் உள்ளது. அதை விரிவுபடுத்த வேண்டும். அதுபோல பொட்டல்புதூர் கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். வேறு எந்த விதமான பெரிய மருத்துவமனையும் இல்லை. அங்கு ஒரு மருத்துவமனை வேண்டும்.

அதேபோல், விக்கிரமசிங்கபுரத்தில் கால்நடை மருத்துவமனை இல்லை. எனது தொகுதியிலே நகரத்தில் மட்டும்தான் கால்நடை மருத்துவ மனை உள்ளது. ஆகவே, விக்கிரமசிங்கபுரம், ஆழ்வார்குறிச்சி, கடையம் போன்ற நகரங்களில் கால்நடை மருத்துவ மனை வேண்டும்.





மாஞ்சோலை எஸ்டேட்டில் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியின்
கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அந்தக் கட்டி
டத்தைப் பழுது பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய
நகரப் பஞ்சாயத்துக்கள் ஜன நெருக்கம் உள்ள பகுதி. அந்த
நகர பஞ்சாயத்துக்களை நகராட்சிகளாக மாற்றக்கூடிய ஒரு
திட்டம் முன்பு அரசு பரிசீலனையில் இருந்தது. அதை உடனடி
யாக பரிசீலித்து இரண்டு பேரூராட்சிகளையும் நகராட்சிகளாக
ஆக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணி
வன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுக் கட்சி உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசும்
பொழுது தொழிற்சாலைகள் அடைக்கப்பட்டுள்ளன என்று கூறி
னார்கள். ஆனால், எனது தொகுதியிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் நிர்வாகத்தில் சுமார் ரூ. 10 இலட்சத்துக்கு வரவு-செலவு
நடத்தக்கூடிய கூட்டுறவுப் பண்டகசாலை ஒன்று உள்ளது.
பண்டகசாலை ஊழியர்கள் நீண்ட காலத்திற்குப் பின் சம்பள
உயர்வு கேட்டதற்காக அந்தப் பண்டகசாலையை மூடினார்கள்.
ஏறத்தாழ 85 நாட்களுக்குப் பிறகு அந்தப் பண்டகசாலை
அரசுத் தலையீட்டின் பேரில் திறக்கப்பட்டுள்ளது. அந்தப்
பண்டகசாலைக்கு ஏறத்தாழ 3 ஆண்டுக்காலம் நிர்வாகம்
நடத்தத்தான் தொழிலாளர்கள் வாக்களித்தார்கள். ஆனால் 4½
ஆண்டுக் காலமாக அந்த நிர்வாகப் பொறுப்பிலே அவர்கள் இருக்
கிறார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை. அது சம்பந்த
மாக ஏதாவது உத்தரவு போடப்பட்டிருந்தாலும் கூடிய விரை
விலே அந்தப் பண்டகசாலைக்குத் தேர்தலோ அல்லது தனி
அதிகாரி மூலமாகவோ அந்த நிர்வாகத்தை நடத்த அரசு உத்தர
விட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணி
யடிக்கப்பெற்றது.)

(நண்பகல் 12-00)

**திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்:** மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, எனக்கு இந்த மதிப்பிற்குரிய பேரவையில்
பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரி
வித்துக் கொள்கிறேன். என்னை இந்தப் பேரவைக்கு தேர்ந்
தெடுத்து அனுப்பிய என்னுடைய உடுமலைப்பேட்டை தொகுதி

மக்களுக்கு இந்தப் பேரவையின் மூலம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களின் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வழி வந்த நான் இந்தப் பேரவையில் இந்த அளவிற்கு நாங்கள் 62 பேர்கள் வெற்றி பெற வாய்ப்பளித்த மாண்புமிகு இராஜீவ் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

1985-86 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திலுள்ள முக்கிய அம்சங்களை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களை குறிப்பிட விரும்புகிறேன். கம்போஸ்ட் உரங்கள் மீது வரி ரத்து செய்துள்ளதை நான் பாராட்டுகிறேன்.

1977 ஆம் ஆண்டில் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பழனி பாராளுமன்ற தொகுதியில் நின்று வெற்றி பெற்ற போது மேற்கு நோக்கி கேரளாவிற்கு செல்லும் மூணாறு திட்டத்தை நிறைவேற்றினால் திருமூர்த்தி அணைக்கும், அமராவதி அணைக்கும் நீர்வரத்து அதிகமாக கிடைக்கும்; இதனால் உடுமலை, தாராபுரம், பழனி, ஒட்டன்சத்திரம், மூலனூர், பல்லடம், அவிநாசி போன்ற வறட்சிப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்கப் பெற்று, சுமார் 5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடையும்; மேலும், குடிதண்ணீர் வசதியும் ஏற்படும்; பல லட்ச மக்கள் பயனடைவார்கள்; வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும் என்று தெரிவித்தார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றி இந்திரா அம்மையார் அவர்கள் பழனி கூட்டத்தில் தெரிவித்தார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதாக வாக்குறுதியும் கொடுத்தார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகுறித்து மனு ஒன்றை மாண்புமிகு புரட்சித் தலைவரிடம் கொடுத்துள்ளேன். நம்முடைய மாண்புமிகு உப ஜனாதிபதி வெங்கட்ராமன் அவர்களிடத்திலும் மகஜர் ஒன்றை இதற்காக கொடுத்திருக்கிறேன். கேரள அரசிடமும், மத்திய அரசிடமும் பேசி கலந்து இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுத்து மக்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான உடுமலைப்பேட்டையில் குடிதண்ணீர் கிடைக்க மானுப்பட்டி, பூலாங்கிணறு ஆகிய இரண்டு கூட்டு குடிநீர்த் திட்டம் வேலை ஆரம்பிக்கப்பட்டு ஒரு ஆண்டு





காலமாக பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டத்தில் விடுபட்ட பாக்கி கிராமங்களையும் சேர்த்து இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வரும்படியாக கேட்டுக் கொள்கிறேன். அதன்மூலம் இந்தப் பணிகள் உடனடியாக முடித்து வறட்சிப் பகுதியாக இருக்கிற உடுமலைப்பேட்டைத் தொகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும்படியாக இந்த மகாசபையை கேட்டுக் கொள்கிறேன்.

திருமூர்த்தி மலையை சுற்றுலா மையமாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னாலே என்னுடைய தொகுதியில் இரண்டு மந்திரிகள் இருந்தும்கூட இன்னும் பல திட்டங்கள் நிறைவேறாமல் இருக்கின்றன. வல்லக் குண்டாபுரத்தில் தாய்-சேய் நல விடுதி பழுதடைந்திருக்கிறது. அதனை செப்பனிட்டுக் கொடுக்கும்படி கோருகிறேன். மடத்துக் குளம் பஞ்சாயத்து யூனியன் நடத்தி வரும் மடத்துக்குளம் தாய்-சேய் நல விடுதியை அரசே எடுத்து விரிவுபடுத்தித் தருமாறு கோருகிறேன். காரணம், 1967 ஆம் ஆண்டிற்கு முன்னால் நான் மடத்துக்குளம் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்தபோது கட்டியது அந்த தாய்-சேய் நல விடுதி. இப்போது ஜனத்தொகை அதிகமாகி இருக்கிறது. அங்கே மூன்று பேப்பர் மில்லும், ஒரு நூல் மில்லும் உள்ளன. ஆகவே மக்கள் தொகை அதிகமாகி இருப்பதால் அந்த தாய்-சேய் நல விடுதியை அரசாங்கமே எடுத்து அரசு மருத்துவ மனையாக கட்டித்தருமாறு இந்த மகாசபையின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கணியூரிலுள்ள பிரைமரி சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் குடியிருப்பு கட்டிடங்கள் அமைத்து சீராக நடைபெற ஏற்பாடு செய்ய கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அந்தக் கட்டிடம் பழுதடைந்து சரியாகச் செயல்படாமல் இருக்கிறது. அதனை சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் உள்ள மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள ரோடுகளை செப்பனிட்டுத் தர கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக கின்னபொம்மன்சாலை, சடுக்கம்பாளையம், [illegible]னூர், பகார், பண்டியார் போன்ற கிராமங்களுக்கு ரோடு [illegible]கள் சரியாக இல்லை. ஆகவே இப்படிப்பட்ட கிராமங்களுக்கும் ரோடு வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்] [1985 மார்ச் 30

அடுத்து அமராவதி பழைய ஆயக்கட்டில் உள்ள 12 வாய்க்கால்களைச் செப்பனிட்டுத் தரும்படியாக கேட்டுக் கொள்கிறேன். அதன் காரணமாக தண்ணீர் சுலபமாக வந்து பாசனம் செய்வதற்கு வசதியாக இருக்கும்.

அமராவதி புதுக்கால்வாய் பாசனப் பகுதியை கரும்பு அபிவிருத்தி பகுதியாக அறிவித்து அதற்கேற்ற முறையில் அமராவதி அணையில் இருந்து ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் இரண்டு தண்ணீர் வீதமும் பாசன முறையை மாற்றி அமைத்து அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நல்ல முறையில் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை உள்ளது. அது நலிவடைந்த நிலையில் உள்ளது. அது நலிவடைந்த நிலையில் ஆறு கோடி ரூபாய் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. காரணம் அமராவதி அணையில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதால் அதிகம் கரும்பு பயிரிட முடியவில்லை. ஆகையால் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில் மாதம் இருமுறை தண்ணீர் கொடுத்தால் பயிரிட முடியும். செப்டம்பரிலிருந்து ஐந்து மாதங்களுக்கு தொடர்ந்து தண்ணீர் கொடுத்தும் கடைசியில் மார்ச், ஏப்ரல் இரண்டு மாதங்களுக்கு மாதம் இருமுறை தண்ணீர் கொடுத்தும் உதவினால் தொழிலும் நல்ல முறையில் ஆறு மாதங்களுக்குமேல் ஓடும் என்பதை இந்த அவையில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

உடுமலைப் பகுதியிலுள்ள திருமூர்த்தி அணையை பாசனத்திற்குட்பட்ட திருமூர்த்தி அணை வாய்க்காலில் வருடம் நான்கு மாதங்கள் தண்ணீர் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, உடுமலை வாய்க்காலிலும் புலாங்கிணறு வாய்க்காலிலும் தண்ணீர் கொடுத்து உதவினால் சர்க்கரை ஆலைக்கு 5,000 ஏக்கர் கரும்பு உற்பத்தி செய்து, ஆலைக்குக் கொடுப்பதாக அக்ரிமெண்ட் கொடுத்துள்ளார்கள். இந்தத் திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றிக் கொடுத்தால் நல்லமுறையில் வேலை கிடைக்கும். பத்து மாதங்கள் அந்த ஆலையும் வருஷம் முழுவதும் ஓடும். ஆகையால் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் நிற்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்]

உடுமலையில் தற்போது குடிதண்ணீர் சரியானபடி கிடைப்பதில்லை. கமிஷனரைக் கேட்டதில் திருமூர்த்தி மலை டேமில் இருந்து அடிஷனல் ஸ்கீம் ஒன்று தயார் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதாகக் கூறினார். ஆகையால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து குடிதண்ணீர் பஞ்சத்தை போக்கும்படி இந்த சபையின்வாயிலாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி புதுவாய்க்கால் பாசனத்திற்குட்பட்ட, 1966 ஆம் ஆண்டு திரு. இராமய்யா அவர்கள் பி.டபிள்யூ.டி. மினிஸ்டராக இருந்தபோது, வாய்க்காலில் காங்கிரீட் போட்டு உடுமலை தாராபுரம் இரண்டிலும் விட்டுப்போன நிலங்களை ஆயக்கட்டில் செலுத்தி தண்ணீர் கொடுத்துவிட்டு, இன்னும் கீழ்பகுதிக்கு தண்ணீர் கொடுப்பதாக ஒரு ஒப்பந்தம் செய்தும், 1966-லிருந்து 19 ஆண்டுகளாக காங்கிரீட் வேலை முடியவில்லை. ஆகையால் மேற்படி வேலையை சீக்கிரம் முடித்துவிட்டு, பிரிவு வாய்க்காலுக்கும் காங்கிரீட் போட்டு முடிக்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி ஆயக்கட்டுப் பகுதிக்கு ஆகஸ்ட் மாதத்தில் கொடுக்க வேண்டிய தண்ணீரை அக்டோபர் மாதத்தில் கொடுத்து, விவசாயிகள் எல்லாம் கரும்பும் நெல்லும் பயிரிட்டதில் ஜனவரி மாதத்தில் 42 அடி தண்ணீர் அணையில் இருந்ததை இடைவிடாது மேல்பகுதிக்கு தண்ணீரை எடுத்துவிட்டதன் காரணமாக தண்ணீர் குறைவு ஏற்பட்டு, இரண்டு தண்ணீர் பற்றாக்குறையினால் நெல் பயிர்கள் கதிர்வாங்கிக் காய்த்துவிட்டபடியால், மேற்படி ஆயக்கட்டுப் பகுதிக்குட்பட்ட நிலங்களுக்கு தண்ணீர் தீர்வையை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சபையில் என்னை பேசுவதற்கு அனுமதித்த மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் சபையின் உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பு நல்கியதற்கு முதலில் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்னால் இந்த அளவுக்கு என்னை ஆளாக்கிய [illegible] முதல்வர், என் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர்

[திரு. பூ. மு. நரசிம்மன்] [1985 மார்ச் 30

அவர்களுக்கும் இரண்டாவது முறையாக என்னை பவானிப்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருமக்களுக்கும் முதலில் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது சட்டமன்றத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததில் மகிழ்ச்சி அடையவில்லை; இந்த ஆட்சி கிடைத்துவிட்டதே என்ற ஏக்கம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது என்று அண்ணா அவர்கள் இந்த சட்டமன்றத்தில் முழங்கினார்கள். அந்த முழக்கத்தின்படி தான் இன்றைக்கு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏக்கத்தோடு நாம் பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற வகையிலே நல்ல பல திட்டங்களை இந்த நாட்டு மக்களுக்காக நிறைவேற்றி வருகிறார்கள். மூன்றாவது முறையாக இந்த நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பை புரட்சித் தலைவர் அவர்களுடைய கரத்திலே இந்த நாட்டு மக்கள் ஒப்படைத்து இருக்கிறார்கள் என்றால், இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளியவர்களுக்காக நல்ல பல திட்டங்களை புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையிலேதான் மூன்றாவது முறையாக இந்த நாட்டிலே இருக்கிற 4½ கோடி மக்களும் புரட்சித் தலைவரிடம் ஆட்சியை ஒப்படைத்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஒரு ஜனநாயக நாட்டில் அரசியல் கட்சிகளின் செல்வாக்கை கணக்கிடுவது தேர்தல். அந்தத் தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது என்றால், இந்த அரசினுடைய கொள்கைக்கும் திட்டங்களுக்கும் இந்த நாட்டு மக்கள் அங்கீகாரம் அளித்து இருக்கிறார்கள் என்பதைத்தான் அது எடுத்துக்காட்டுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆட்சிக்கு வர வேண்டும் என்று யார் யாரோ ஆசைப் பட்டார்கள். ஆனால் அப்படிப்பட்ட எண்ணங்கள் எல்லாம் பகல் கனவாகப் போய்விட்டது என்பதை நான் இந்த நேரத்திலே



1985 மார்ச் 30] [திரு. பூ. மு. நரசிம்மன்]

சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் பேசுகின்றபோது, ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் ஆணவமாகப் பேசக்கூடாது என்றும், மணி மகுடங்கள் எல்லாம் மண் மேடானது என்றும், அதேநேரத்திலே நிதிநிலை அறிக்கையிலே எந்த திட்டமும் இல்லை என்றும் எட்டாத கனி புளிப்பு என்று சொல்வது குறிப்பிட்டார்கள். போன்றுதான் அவர்களுடைய உரை இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல, மணி மகுடங்கள் எல்லாம் மண் மேடானது உண்மை, அது பழைய வரலாறு, ஆனால் புதிய வரலாற்றை நாம் பார்த்தால், மவுண்ட் ரோடு மகாகவி கிட்டங்கள் எல்லாம் இன்று மாயமாக மறைந்து விட்டது என்பதுதான் இந்தத் தேர்தல் நமக்கு எடுத்துக்காட்டுகிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் சாதாரண மக்கள் பாதிக்காத வகையிலே பல்வேறு திட்டங்களை எல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் நல்ல பல திட்டங்களை, ஏழை எளியவர்கள் ஏற்றம் பெறுகின்ற வகையிலே நல்ல பல திட்டங்களை எல்லாம் இந்த நாட்டுமக்களுக்கு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். திட்டப் பணிகளை நிறைவேற்றுவதிலே நம்முடைய தமிழகம் இன்று சாதனை படைத்து வருகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 1985-86 ஆம் ஆண்டு திட்டத்தில் எஞ்சிய திட்டங்களை நிறைவேற்றவும், புதிய திட்டங்களை நிறைவேற்றவும், நிதி ஒதுக்கம் செய்து இருப்பதை நான் இந்த நேரத்திலே மனதாரப் பாராட்டுகிறேன்.

பொருளாதார வளம் பெருமளவிலே முன்னேற வேண்டுமானால் மின்சக்தி நமக்குத் தேவைப்படுகிறது. அந்த மின்சக்தியை அதிக அளவில் பெறுவதற்கு நிதி ஒதுக்கம் செய்து இருப்பதை நான் இந்த நேரத்திலே மனதாரப் பாராட்டுகிறேன். அதேநேரத்தில், 20 அம்ச திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலே தமிழகம் இன்றையதினம் முன்னோடியாக இருந்து வருகிறது. உணவு தானிய உற்பத்தி, ஊரக வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டம், தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், கிராமப்புற நிலமற்றோர்

வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், உபரி நிலங்களை நிலமற்றோருக்கு அளித்தல், கொத்தடிமை ஒழிப்பு, ஆதரவற்றவர்களுக்கு, பழங்குடியினருக்கு நல்ல குடிநீர் வழங்கல், வீட்டு மனைகள் வழங்கல், நெசவாளருக்கு வீட்டு வசதி அளித்தல், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல், ஆகிய திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழகம் இந்திய முதலிடத்திலே இருக்கிறது. குறிப்பாக இந்த ஆட்சி மீண்டும் மலர்ந்ததற்குக் காரணம் தாழ்த்தப்பட்ட மக்கள், மற்றும் நெசவாளர்களும்தான். எனவே கிராமப்புறங்களில் உள்ள அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் சில இடங்களில் வீட்டுமனைகள் கூட பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால், ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைகள் கொடுப்பதற்காக நிலங்களை கையகப்படுத்த வேண்டும் என்றால், புஞ்சை நிலத்தை மட்டும்தான் கையகப்படுத்தவேண்டிய நிலைமையிருக்கிறது. நஞ்சை நிலங்களை கையகப்படுத்த வேண்டுமானால் அதற்கு முடியாத ஒரு சூழ்நிலை அரசாங்கத்திலே சட்டமாக இருந்து வருகிறது. எனவே தேவைப்பட்டால், ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்க நஞ்சை நிலங்களைக் கூட கையகப் படுத்தக்கூடிய அளவிற்கு சட்டத்தை திருத்தி அமைக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே நம்முடைய அரசை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்துள்ளவர்களுக்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் தாய் உள்ளத்தோடு, ஆதரவு தந்து பண உதவி, மற்றும் சில உதவிகளை அளித்து வருவதை நான் இந்த நேரத்திலே மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆக இப்படிப்பட்ட விவகாரத்திலே மத்திய அரசு ஒரு தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

வேளாண்மை நம்முடைய பொருளாதாரத்தின் அடித்தளமாகும். எனவே நாம் நீர்வளத்தை பெருக்கியாக வேண்டும். என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியிலே கூட வாக்குகளை சேகரிக்கின்றபோது, சில இடங்களிலே நீர்வளத்தை, பாசன வசதியை மேம்படுத்த வேண்டும் என்றெல்லாம் வாக்காளர்கள் முறையிட்டார்கள். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால்





எரும்பி கிராமத்திலே இருக்கின்ற ஏரிக்கும், பெரியராமபுரம், பெத்தநாதபூண்டி, வெடியங்காடு, தேவளாம்பாபுரம் போன்ற ஏரிகள் எல்லாம் 15 ஆண்டு காலமாக வறண்டு காணப்படுகிறது. அந்த கிராமத்திலே வாழ்கின்ற விவசாயிகள் எல்லாம் பாய்ச்சுவதற்கு தண்ணீர் இல்லாமல் அவர்கள் வறுமையிலே வாடுகிறார்கள். அந்த விவசாயிகளுடைய வாழ்க்கை உயர வேண்டுமானால் பொன்னை ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டி அந்த ஏரிகளை நிரப்ப வேண்டும், அப்படிப்பட்ட நல்ல பல வசதிகளை இந்த அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று, இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதி திட்டத்திலே ஒரு சில பணிகளை சென்ற ஆண்டில், எடுக்க வேண்டுமென்று நம்முடைய பொதுப் பணித் துறையிலே ஏறக்குறைய ஐந்து பணிகள் அரசு ஒப்புதல் அளித்து உள்ளது. அங்கே பொதுப் எடுக்க வேண்டுமென்று ஒப்புதல் அளித்தும் பொறியாளர்கள் அந்தப் பணித்துறையிலே பணியாற்றக்கூடிய பணிகளை எடுக்காமலேயே காலத்தை கடத்தி வருகிறார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமானால், மேல்பாலாபுரம், கரிம்பேடு புதிய ஏரி, குமாரராஜபேட்டை புதிய ஏரி, பொம்மராஜபேட்டை புதிய ஏரி, வேணுகோபாலபுரம் புதிய ஏரியையும் சென்ற ஆண்டு நம்முடைய அரசு ஒரு ஒப்புதலை துவங்க வேண்டுமென்று அளித்து இருந்தாலும் அந்த பொறியாளர்கள் அந்தப் பணிகளை துவங்காமல் இருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட பணிகளை விரைவிலேயே தொடங்கி, அதன் மூலமாக அந்தப் பகுதியில் உள்ள ஏழை எளிய விவசாயிகளுக்கு நன்மை அடையச் செய்ய அப்படிப்பட்ட பணிகளை விரைவிலே தொடங்க வேண்டும். வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே நம்முடைய அரசை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கல்வி மேம்பாட்டிற்காக கல்வி மானியம் உயர்ந்து 1985-86-ம் ஆண்டில் ரூ. 468 கோடியாக உயர்ந்து வந்துள்ளது. அனைவர்க்கும் தொடர் கல்வி அளிக்கும் திட்டத்தின்கீழ் உள்ளது. நம்முடைய அரசு அடைந்துள்ள சாதனை மிகவும் போற்றுதற்குரிய ஒன்றாகும். 1985-86ஆம் ஆண்டில் கூடுதலாக 500 இடைநிலை

[திரு. பூ. மு. நரசிம்மன்] [1985 மார்ச் 30

ஆசிரியர்கள், 75 தமிழாசிரியர்கள் 50 உடற்பயிற்சி ஆசிரியர்கள், 150 பட்டதாரி ஆசிரியர்கள், 75 பட்ட மேற்படிப்பு ஆசிரியர்கள் பதவிகளை ஏற்படுத்த அரசு திட்டமிட்டு உள்ளதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஆர். கே. பேட்டை, அம்மையார் குப்பம், பள்ளிப்பட்டு மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு பள்ளி வகுப்பறைகள் இல்லாமல் மரங்களின் கீழே படிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட மேல்நிலை பள்ளிகளுக்கெல்லாம் கட்டிட வசதி உடனடியாக செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் உள்ளவர்கள் தொழில் நுட்ப படிப்பை கற்கவேண்டுமானால் ஏறக்குறைய 200 கி.மீ. தூரத்தில் உள்ள சென்னைக்கோ, மற்ற பெருநகரங்களுக்கோ சென்று படிக்க வேண்டியிருக்கிறது. என்னுடைய தொகுதியில் இதுவரையில் எந்த கல்லூரியுமே இல்லாமல் இருக்கின்ற ஒரு குறை இருக்கிறது. என்னுடைய தொகுதியின் மையப் பகுதியாகிய ஆர். கே. பேட்டையில் ஒரு தொழில் நுட்ப கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தொழில் துறையை பொறுத்தமட்டில், என்னுடைய தொகுதியில் 4, 5 பேர்கள் சேர்ந்து செய்யக்கூடிய தொழில் ஒன்றும் இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை. எனவே அந்த பள்ளிப்பட்டு வட்டத்தை தொழில் துறையிலே பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அரசுக்கும் அந்த தீர்மானத்தை அனுப்பி வைத்திருக்கிறோம்.

(பிற்பகல் 12-20)

எனவே பள்ளிப்பட்டு வட்டத்தை பிற்பட்ட பகுதியாக அறிவித்து பல தொழிற்சாலைகளை என்னுடைய பகுதியிலே உருவாக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு. மேலும் என்னுடைய தொகுதிக்கு அருகாமையிலே உள்ள திருத்தணியிலே சர்க்கரை ஆலை ஒன்று ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. அங்கே வீணாக இருக்கிற சக்கைகளை வைத்து என்னுடைய தொகுதியிலே ஒரு காகிதத் தொழிற்சாலையை ஆரம்பித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. பூ. மு. நரசிம்மன்]

அடுத்தபடியாக விவசாயத்திற்கு அடுத்தபடியான தொழிலாகிய நெசவுத் தொழிலைச் செய்யும் நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதியாக என்னுடைய தொகுதி இருப்பதால், என்னுடைய பகுதியிலே ஒரு நூற்பு ஆலையை உருவாக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் புரட்சித் தலைவர் அவர்கள் எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதியைச் செய்துக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அப்படி வருகிறபோது என்னுடைய தொகுதியில் இரண்டு பேரூராட்சிகள் இருக்கின்றன. ஒன்று பள்ளிப்பட்டு, இன்னொன்று பொதட்டூர்பேட்டை, இந்த இரண்டு பேரூராட்சி களுக்கும் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிக் கட்டிக் கொடுத்து உதவ வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் 1 வகுப்பு முதல் 8 வகுப்பு வரையிலும் தகுதியுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் இலவசமாக சீருடைகள் வழங்கவும் பாடபுஸ்தகங்கள் வழங்கவும் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு திட்டம் தீட்டி இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக் கிறது. இந்த அறிக்கையிலே இது மிக நல்ல அம்சமாகும். மேலும் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் எல்லா கிராமங்களுக்கும் பேருந்து வசதிகள் செய்து தரப்படு கின்றன. என்னுடைய தொகுதியில் திருத்தணியிலிருந்து சுரக் காய்ப்பேட்டைக்கும், பள்ளிப்பட்டிலிருந்து சோளிங்கர் வரைக்கும் நகரக் கட்டணப் பேருந்துகளை விட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் போக்குவரத்துக் கழகம் ஒன்றை புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் செங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு போக்குவரத்துக் கழகமும் இல்லை. எனவே காஞ்சிபுரத்தை தலைமை இடமாகக் கொண்டு ஒரு போக்குவரத்துக் கழகத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பள்ளிப்பட்டு வட்டத்திற்கும், திருத்தணி வட்டத்திற்கும் சேர்த்து திருத்தணியிலே நீதிமன்றங்கள் இருக்கின்றன. இந்த நீதிமன்றங்கள் 25 ஆண்டுகளாக கட்டிடமே இல்லாமல் நடந்து வருகின்றன. அங்கேயுள்ளவர்கள் இதனால் பெரும் அவதிப்படுகிறார்கள். என்னைப் போன்ற வழக்கறிஞர்களும்,

[திரு. பூ. மு. நரசிம்மன்] [1985 மார்ச் 30

அந்த நீதிமன்றத்திலே பணியாற்றுகின்ற மற்றவர்களும், அந்த நீதிமன்றத்திற்கு கட்டிடங்களை அமைக்க வேண்டும் என்று பல முறை கோரிக்கைகள் விடுத்திருக்கிறார்கள். வழக்கறிஞர் சங்கமும், அந்தப் பகுதி மக்களும் கூட அந்த நீதிமன்றத்திற்கு கட்டிடத்தை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதை உடனடியாக உருவாக்கித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு, புரட்சித் தலைவர் அவர்களுடைய நல்ல பல திட்டங்களால் இந்த நாட்டு மக்கள் நன்மை அடைவார்கள் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறவிரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் தஞ்சை மாவட்டத்தினுடைய பாசன வசதிக்காக 102 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டுக்காக இந்த நிதி நிலை அறிக்கையிலே 2½ கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை படிப்படியாக நிறைவேற்றாமல், அதை ஓரளவு விரைவுபடுத்திச் செய்வதற்காக குறைந்தபட்சம் 10 கோடியாவது ஒதுக்கி அந்தப் பாசன வசதிப் பணிகளைச் செய்தால்தான் தஞ்சை மாவட்டத்தினுடைய வாய்க்கால்கள், வடிகால்களை சரி செய்ய முடியும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் மழைக் காலங்களிலும் வெள்ளக் காலங்களிலும் விவசாயிகள் பல்வேறு தொல்லைகளுக்கு தற்போது ஆளாகிறார்கள். உதாரணமாக அவர்கள் உற்பத்தி செய்த நெல் எல்லாம் வெள்ளத்தால் மூழ்கி, தண்ணீர் வடியாத நிலையில், அழிந்து போகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகையினால் விரைவாக அந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல திருவாரூர் தொகுதியில் சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே அறிவிக்கப்பட்டு பணம் ஒதுக்கப்பட்ட வெட்டாற்றுப் பால[illegible]மைப்பதற்கான வேலை இன்னும் அங்கே துவக்கப்படவே[illegible] அதை விரைவாகச் செய்து தர வேண்டும் என்று



1985 மார்ச் 30] [திரு. எம். செல்லமுத்து]

கேட்டுக் கொள்கிறேன். திருவாரூர் ரயில்வே மேம்பாலம் 1975
லேயிருந்து கட்டப்பட்டு வருகிறது. இன்னமும் அது முடிவடை
யாமல் இருப்பதன் காரணமாக போக்குவரத்து இடைஞ்சல்,
நெருக்கடி அதிகமாக ஏற்படும் சூழ்நிலை இருக்கிற காரணத்தால்
அந்தப் பால வேலையையும் சற்று விரைவு படுத்தி உடனடியாக
முடித்துக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன். அதேபோல திருவாரூரிலே இருக்கும் பள்ளிக் கூடங்கள்
எல்லாம் பழமையானதாகவும் இடிந்த நிலையிலும் இருக்கிற
கட்டிடங்களிலே செயல்பட்டு வருகின்றன. அந்தப் பள்ளிக்கூட
கட்டிடங்களை எல்லாம் சீர் செய்து செம்மைப்படுத்திக் கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக் கட்டிடங்
களைக் கட்டுவதற்காக 1 கோடி ரூபாயைத்தான் இந்த நிதிநிலை
அறிக்கையின் மூலமாக அரசு ஒதுக்கியிருக்கிறது. தமிழகம் முழு
வதும் இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் ஆயிரக்கணக்கில் இருக்
கிறபோது இந்த ஒரு கோடி ரூபாய் போதுமானதாக இருக்காது
என்று நினைக்கிறேன். ஆகவே, இதற்கு முன் உரிமை கொடுத்து
இன்னும் அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்து அனைத்துப் பள்ளிக்
கூடங்களுக்கும் நல்ல கட்டிடங்களைக் கட்டித் தருமாறு நான்
கேட்டுக்கொள்கிறேன். அதேபோல திருவாரூரிலே வடபாதி
மங்கலம் நிர்வாகத்தில் மேல்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது.
அது சரிவர நடப்பது இல்லை. அதன் கட்டிடம் 1914 ஆம்
ஆண்டிலே கட்டப்பட்ட கட்டிடம். அதிலே ஏறக்குறைய 1,800
மாணவர்கள் படித்து வருகிறார்கள். அங்கே போதுமான கட்டட
வசதி இல்லை. நல்ல சுகாதார வசதிகள் இல்லை. கட்டங்கள்
இடிந்து விழக்கூடிய சூழ்நிலை இருக்கிறது, இப்படிப்பட்ட சூழ்
நிலையில் அந்த நிர்வாகம் சரிவர அதை நடத்தாத காரணத்தி
னால் அந்தப் பள்ளியினுடைய நிர்வாகத்தை அரசே எடுத்துக்
கொள்ளவேண்டும்.

திருவாரூரிலே இருக்கிற மருத்துவமனை மிகப் பெரிய மருத்துவ
மனையாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே
கட்டப்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கையிலே அங்கே இரத்த
சேமிப்பு நிலையமும், எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவும்
உருவாக்க இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக
நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிகப் பெரிய
அந்த மருத்துவ மனையிலே அதிகமான படுக்கை வசதிகளை
ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு சேமநலத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே சத்துணவுத் திட்டம்; இப்போது பள்ளி மாணவர்களுக்கு சீருடையும் புத்தகங்களும் வழங்கும் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், விவசாயத் தொழிலாளர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

இன்றைய தினம் இந்தியாவிலுள்ள அரசியல் பொருளாதார நிலைமைகளைப்பற்றி சில நிலைமைகளை இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நேற்றைய தினம் பேசிய எங்கள் கட்சி உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் முதலாளித்துவ வளர்ச்சியைப்பற்றிச் சொன்னார்கள். முதலாளித்துவ வளர்ச்சியினால் இன்றைக்கு ஏழை எளிய தொழிலாளர்கள், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை; வறுமையில் வாடும் உழைப்பாளிகளுக்காக அறிவிக்கப்படுகிற திட்டங்கள் எல்லாம் யானைப் பசிக்கு சோளப் பொரிபோல் தான் அமையுமே தவிர நீங்கள் போடுகிற திட்டங்களின் பலன்கள் அந்த மக்களுக்கு போய்ச் சேரவில்லை. குறிப்பாக விவசாயத் தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்படுகிற பணம் காண்ட்ராக்டர்கள் மூலம் கட்டடங்கள் கட்டப்படுகிறபோது காண்ட்ராக்டர்கள், அதிகாரிகள், புரோக்கர்கள் போன்று செயல்படக் கூடியவர்கள் ஆகியவர்கள் தான் அதை சுருட்டிக் கொண்டு போகிறார்களே தவிர உண்மையிலேயே விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்தத் திட்டத்தின் பலன்கள் போய்ச் சேரவில்லை என்பதை யாரும் மறுக்கமுடியாது. அந்தத் திட்டங்களின் பலன்கள் விவசாயத் தொழிலாளர்களுக்குப் போய்ச் சேருகிற வகையில் அந்தத் திட்டங்களை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

20 அம்சத் திட்டம் 1976 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 20 அம்சத் திட்டத்தினால் கிராமத்திலே உள்ள வறுமை நிலை மாறிவிட்டதா என்று பார்க்கிறபோது மேன்மேலும் வறுமையில்தான் மக்கள் உழல்கிறார்களே தவிர முன்னேறவில்லை. மக்கள் முன்னேறவேண்டுமென்றால் அவர்களிடம் வாங்கும் சக்தியை உருவாக்கவேண்டும். வாங்கும் சக்தியை உருவாக்கிட வேண்டுமென்றால் அடிப்படையாக நிலச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவந்து நிலங்களை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.



ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சட்டம் இந்திய ஜனாதிபதிக்குச் சென்று திரும்பி வந்துவிட்டது. இப்போது காங்கிரஸோடு நீங்கள் நல்லுறவு கொண்டிருக்கின்ற காரணத்தினால் பினாமி நில ஒழிப்புச் சட்டத்தையும் நிலச் சீர்திருத்தத்தைப்பற்றியும் எடுத்துச்சொல்லி அதைக் கொண்டுவர வேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு ஒரு சிறிய திருத்தம்தான் செய்ய வேண்டும். அதனைச் செய்வதற்காக இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருக்கிறது. அது நிலத் தீர்வையை வைத்துக் கணக்கிடுகின்ற காரணத்தினாலே 60 ஏக்கர் நிலத்தைக்கூட சுருட்டிக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே 10 சாதாரண ஏக்கர் என்ற முறையிலே வரம்பு கட்டி அந்த நிலங்களையெல்லாம் எடுத்து உழைப்பாளிகளுக்குக் கொடுத்து, விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுத்து, ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுத்து அவர்களை நிலச்சொந்தக்காரர்களாக மாற்றி அவர்கள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றையதினம் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கோயில் நிலங்களைப்பற்றிச் சொல்கிறபோது எங்கள் கட்சி உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் திரு. உக்கிராபதி அவர்கள் பேசிய நோக்கிலும் குறுக்கிட்டுச் சொன்னார்கள். கோயில் நிலங்களை எடுத்து அதிலே விவசாயம் செய்யக்கூடிய மக்களுக்குத் தருவது தான் எங்கள் கொள்கை என்று சொன்னார்கள். அப்படித் தருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதை எப்படிச் செய்வது என்பதிலேதான் பிரச்சினை என்றார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம் நீங்கள் நிலச் சீர்திருத்தத்தைக்கொண்டுவந்து எப்படி நிலம் எடுத்து விநியோகிக்கப்பட்டதோ அதே முறை இதற்கும் பொருந்தும் அந்த முறையிலே 5 லட்சம் ஏக்கர் நிலத்தையும் 5 லட்சம் குடும்பங்களுக்குக் கொடுப்பதற்கு அந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து] [1985 மார்ச் 30

(பிற்பகல் 12-30)

அதேபோல் விவசாயிகளுடைய கடன்கள் தீராத பிரச்சினையாக இருக்கிறது. கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது ஏதோ 450 கோடி ரூபாய்க்கு சலுகை கோருவதாக, உயர்மட்டக் குழு சிபாரிசு செய்து இருப்பதாகச் சொன்னார்கள். இருக்கிற கடனே ரூபாய் 450 கோடி இருக்காது என்று கருதுகிறேன். அவர்கள் கோருவது எல்லாம் வட்டி, அபராத வட்டி, தண்டத் தீர்வை இவைகளை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்கிறார்கள். முதலைவிட வட்டிகள், அபராத வட்டிகள் அதிகமாக இருக்கிற ஒரு சூழ்நிலையில் ஏறத்தாழ 70 கோடி, 100 கோடி அளவுக்குத் தான் சலுகை கோருகிறார்கள். விவசாயிகள் அந்த 450 கோடி சலுகை கேட்பதாக எனக்கு ஞாபகம் இல்லை. அந்த அளவுக்கு அந்தக் கடனை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கிராமப்புறத்தில் மிகப் பெரிய நெருக்கடியில் அதாவது கட்டுப்படியான விலை கிடைக்காமல் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள அந்த விவசாயிகளின் கடனை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும். அந்த கூட்டுறவுக் கடனை முழுமையாக அசலைத் தவிர வட்டி, அபராத வட்டி, இவைகளை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், கிராமப்புறத்தில் உழைக்கக் கூடிய மக்கள், உணவு உற்பத்தியை பெருக்கக் கூடியவர்கள் விவசாயத் தொழிலாளர்கள்தான். அவர்கள் சேற்றில் கையை வைத்தால்தான் நாம் சாப்பிட முடியும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கக்கூடிய லட்சக் கணக்கான தொழிலாளர்களின் பிரச்சினை கூலி உயர்வுகள். இந்த அரசு முன்னால் அறிவித்து இருந்தாலும் அவைகளை அமல் படுத்துவதற்கு ஒரு சீரான ஏற்பாட்டை—நிர்வாக ஏற்பாட்டுக்கு உத்திரவாதம் இல்லாமல் இருக்கிற சூழ்நிலையில் இன்றைக்கும் தமிழ்நாட்டில் பல கிராமங்களில் 2 ரூபாய், 3 ரூபாய் என்ற அளவுக்கு கூலி பெறக்கூடிய ஒரு கட்டாயச் சூழ்நிலையில் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு [illegible] விலைவாசிக்கு ஏற்ப அவர்களின் கூலி உயர்வை



1985 மார்ச் 30] [திரு. எம். செல்லமுத்து]

திருத்தி அமைத்து அந்தக் கூலிக்கு உத்தரவாதம் கிடைப்பதற்கு நிருவாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குடியிருப்பு மனைச் சட்டம் பலவகையில் இருந்தாலும் இன்றைக்கு குடியிருப்பு மனை கோரி மனுக்கள் செய்தாலும் அவைகள் எல்லாம் கிடப்பில் இருக்கிறதே தவிர குடியிருப்பு மனை சொந்தமாகக்கப்படவில்லை. இன்றைக்கு குடியிருப்பு மனை என்று சொல்லுகிறபோது நஞ்சை நிலத்தை ஜாரி செய்யக் கூடாது என்று சொல்லுகிறார்கள்.

அதைப்போல் மந்தை நிலத்தை ஜாரி செய்யக் கூடாது என்று சொல்லுகிறார்கள். ஒரு காலத்தில் பி.டபுள்யூ.டி. க்கு சொந்தமாக இருந்து அதில் குடியிருந்தால் கூட இன்றைக்கு அவைகளுக்கு பட்டா கொடுக்கப்படவில்லை. பல்வேறு கிளாரிபிகேஷன் என்று சொல்லி குடியிருப்பவர்களுக்கு குடியிருப்பு மனையைச் சொந்தமாக்காமல் இன்னும் பல்வேறு தடங்கல் இருக்கின்றன. இன்றைக்கு அரசு சலுகை பெற வேண்டும் என்றால் அவர்களுக்கு குடியிருப்பு மனையை சொந்தம் ஆக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட கால அளவை நிர்ணயித்து அத்தனை பேருக்கும் குடியிருப்பு மனையைச் சொந்தமாக்கக்கூடிய காரியத்தை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தமிழகம் முழுவதும் வறட்சி நிலவக்கூடிய ஒரு சூழ்நிலையில் உடனடியாக வறட்சிப் பணிகளைத் துவக்க இந்த அரசு வறட்சி நிவாரணப் பணிகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலுள்ள செங்கிப்பட்டி போன்ற பகுதிகளில் வறட்சி கோர தாண்டவம் ஆடுகிறது. அதேபோல் மதுரை மாவட்டத்தில், நம்முடைய பேரவைத் துணைத் தலைவராக இருக்கக்கூடியவர் தொகுதியில் வறட்சி நிலவுகிறது. அதேபோல் தர்மபுரி மாவட்டத்தில் வறட்சி நிலவுகிறது. இங்கு எல்லாம் உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்து அவர்களுக்கு உதவுகின்ற வகையில் ஏற்பாடுகளை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக நிலச் சீர்திருத்தச் சட்டத்தையும், குத்தகை விவசாயிகள் நிலம் பற்றியும் நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வடபாதிமங்கலத்தில் தமிழ்நாடு கரும்புப் பண்ணைக்

கழகம் என்று ஒன்று இருக்கிறது. அதுவும் 4,050 ஏக்கர் நிலப் பரப்பில் இருக்கிறது. அது 1975 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதில் சென்ற ஆண்டில்கூட 1 கோடியே 18 லட்ச ரூபாய் நஷ்டம் என்று சொன்னார்கள். இன்றைக்கு அதிலே வேலை நடைபெறாமல் மிகப் பெரிய நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கிறது. இந்த துறை மானிய அறிக்கையில் கூட 25 லட்ச ரூபாய் அரசு கொடுத்து இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு அதிலே 2 போனி, 3 போனி கூட விளையாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய அந்த கரும்புப் பண்ணைக் கழகம் அதுவும் நடவுதான் செய்யப்படுகிறது. நெல்தான் உற்பத்தி ஆகிறது. ஆனால் கோடிக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் வருகின்றபொழுது, 4,050 ஏக்கர் நிலங்களைக் கொண்ட அந்தக் கரும்புப் பண்ணைக் கழகத்தைக் கலைத்துவிட்டு உடனடியாக அந்தப் பகுதியில் உள்ள ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்கு, அந்த நிலத்தில் பாடுபடுகின்ற, உழுகின்ற உழைப்பாளிப் பெருமக்களுக்கு அந்த நிலத்தைச் சொந்தமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்யும் பொழுது, இப்பொழுது பண்ணைக் கழகத்தில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு மாற்று வேலை அளிக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்

நம்முடைய அரசாங்கத்திலே போடப்படக்கூடிய திட்டங்களையெல்லாம் அமல் நடத்துகின்றபொழுது, குறிப்பாக திருவாரூர் ஒன்றியத்தினை எடுத்துக் கொண்டாலும் சரி அல்லது தஞ்சை மாவட்டம் முழுமையுமே எடுத்துக் கொண்டாலும் சரி, அவைகளெல்லாம் காண்ட்ராக்ட் மூலம் நடைபெறுவதால் பல பேர் பணத்தைச் சுருட்டிக் கொள்ளுகின்ற சூழ்நிலை உருவாகின்றது. அப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்காமல், அந்தப் பயன்கள் மக்களுக்கு நேரடியாகக் கிடைப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி** : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தின் நடவடிக்கைகளில் இன்றையதினம் நான் கலந்துகொண்டு, என்னுடைய [illegible] பேசுவதற்கு வாய்ப்புத் தந்த எங்களின் இதய தெய்வம்,





[illegible] கோடி மக்களின் தளநாயகன், புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு முதற்கண் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, இந்த மாமன்றத்தில் கலந்து கொள்ளுகின்ற ஒரு வாய்ப்பினைத் தந்த எங்கள் அன்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்கும் உரிய மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. நல்லுச்சாமி அவர்களுக்கும், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அருமை அண்ணன், பாசத்திற்கும் மரியாதைக்கும் உரிய அண்ணன் திரு. ஆர். எம். வீ. அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடலேறுகளுக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த அருமை நண்பர்களுக்கும், பெரியவர்களுக்கும், குறிப்பாக எங்களையெல்லாம் இன்றைக்கு வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற தாய்க் குலத்திற்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு நான் முற்படுகின்றபொழுது, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய ஒருசில பிரச்சனைகளை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய நீங்காத கடமை என்றே நான் கருதுகின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பள்ளிச் சிறுவர்களுக்குச் சீருடை வழங்குவதும், அதன் மூலமாக நெசவாளர்களின் பிரச்சனை தீர்க்கப்படும் வகையில் திட்டங்களைத் தீட்டியிருப்பதும் பாராட்டுதலுக்கும் வரவேற்பிற்கும் உரியதாகும். மேலும், [illegible] உரங்களின் மீதான வரிகளைக் குறைத்திருப்பது [illegible] நம்பியிருக்கக்கூடிய தமிழக ஏழை மக்களின் [illegible] வகையில் இருக்கும். எனவே, இத் [illegible] பாராட்டுதலுக்குரியதாகும். இதுபோன்ற [illegible] இந்த ஆண்டு நிதிநிலை [illegible]

[திரு. ஆதிமூலம் என்கிற இல்லை காந்தி] [1985 மார்ச் 30

அறிக்கையில் அறிவித்திருப்பதை குறித்து மீண்டும் பாராட்டி, என்னுடைய தொகுதியினுடைய ஒரு சில பிரச்சினைகளை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

திருச்சி மாவட்டத்தையும், தென்னார்க்காடு மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்கின்ற ஆறு வெள்ளாறு என்ற ஒரு ஆறு. அந்த ஆற்றுக்கு வடக்குப் பகுதியில் உள்ள சௌந்தரசோழபுரம் என்ற இடத்தையும், தெற்குப் பகுதியில் உள்ள கோட்டைக்காடு என்ற இடத்தையும் இணைத்து தரைப் பாலம் ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய தொகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்து வருகிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மேலும், இப்பாலம் மூன்று பெரும் மாவட்டங்களாகிய தென்னார்க்காடு மாவட்டம், திருச்சி மாவட்டம் மற்றும் தஞ்சை மாவட்டத்தை இணைக்கும் பாலமாக இருக்கும். அதோடு மட்டுமல்லாமல், இந்த மாமன்றத்திலே எனக்கு முன்னால் இந்தப் பொறுப்பை ஏற்றிருந்த அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் இக்கோரிக்கையினை வலியுறுத்தி ஒவ்வொராண்டும் இங்கே—இந்த மாமன்றத்தில் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தக் கோரிக்கை இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொல்லப்படுவது இதுவே இறுதியானதாக இருக்கும் என்கின்ற வகையில் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்து எனது தொகுதியைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலைகளோ அல்லது பாசன வசதியோ இல்லாத ஒரு மிக வறண்ட பகுதியாக இருப்பதாலும், அங்கே முந்திரி அதிகமாகச் சாகுபடி செய்யப்படுகின்ற காரணத்தாலும் அங்கே ஒரு முந்திரித் தொழிற்சாலையை அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதிவாழ் மக்களின் வேலைவாய்ப்பு பெருகி முன்னேற்றம் ஏற்படும்.

அதோடு மட்டுமல்லாமல் முந்திரியிலிருந்து விளையும் பழங்கள் அங்கே அதிக அளவில் வீணாக்கப்படுகிறது. அந்தப் பழங்களைக் கொண்டு இரசாயன முறையில் சோதனை செய்து அந்தப்



1985 மார்ச் 30] [திரு. ஆதிமூலம் என்கிற இல்லை காந்தி]

பழங்களைப் பயன்படுத்துகிற வகையில் ஆல்கஹால், மதுபான வகைகள் போன்றவற்றைத் தயாரித்தால் அந்தப் பகுதி மக்களுக்கு பயன்தரத்தக்க வகையில் அமையும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் அன்றாடம் ஏரி, குளங்களை அதிகமாகப் பயன்படுத்தும் மக்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் வயதான ஏழையெளிய மக்களும், பள்ளிச் சிறுவர்களும் ஏரி இறங்குகின்றபோது மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே ஏரி குளங்களில் படித்துறைகளைக் கட்டிக் கொடுத்து அந்த ஏழை எளிய மக்களின் குறையைப் போக்குகின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைச் சேர்ந்த தளவாய், சன்னாசிநல்லூர், தத்தனூர் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த கிராமங்களுக்கு சாலை வசதி இல்லாத நிலைமை இருக்கின்றது. மேலும் அந்தப் பகுதிகளில் மழை பெய்துவிட்டால் தெருக்களில் நடமாடக்கூட முடியாத நிலை ஏற்படுகின்றது. அந்தப் பகுதிகளுக்கு சாலைவசதிகளை ஏற்படுத்தித் தருகின்ற வகையில் அதற்கான நிதி ஒதுக்கீட்டைத் தந்து அந்தப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களைப் பொறுத்தவரையில் இதுவரையிலும் எந்த அரசும் செய்திராத சலுகைகளை இன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு செய்து வருகின்றது. உதாரணமாக ஆடுமாடுகள் வாங்கக் கடன் வசதி, கிணறு வெட்ட கடன் வசதி, தொழில் மையங்கள் அமைக்க முன்னுரிமை இப்படிப் பல நல்ல திட்டங்களை புரட்சித்தலைவரின் அரசு செய்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் பல சலுகைகளைச் செய்து வருகின்ற நேரத்தில் ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்துகின்ற வகையில் ஆதிதிராவிட குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்தை அமல்படுத்த அனைத்து திராவிட மக்களுக்கும் வீடுகளைக் கட்டித் தருகின்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி] [1985 மார்ச் 30

அடுத்து எங்கள் பகுதியில், பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் அரியலூரில் அரசினர் கலைக் கல்லூரி இருந்துகொண்டிருக்கிறது. அது தொடங்கப்பட்டு 18 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இதுவரையில் அங்கே பட்ட மேற்படிப்பும், பி.காம்., பட்டப்படிப்பும் கொண்டுவரப்படவில்லை. மேலும் அக்கல்லூரியில் இடவசதி இல்லாமல் இருக்கின்றது. இந்தக் குறைகளை எல்லாம் நீக்குகின்ற வகையில் அந்தக் கல்லூரியில் பட்டமேற்படிப்புக்கும், பி.காம். பட்டப்படிப்பிற்கும் அனுமதி வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடி-நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அது எங்கும் இருந்து கொண்டிருக்கின்ற பிரச்சினையாக இருக்கின்றது. புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அந்தக் குறையினைப் போக்குகின்ற வகையில் அதி தீவிரமான திட்டங்களை எல்லாம் தீட்டி இன்றைக்குச் செயல்படுத்தி வருகிறது. இருந்தாலும் கூட முழுமையாக அந்தக் குறையினைத் தீர்க்க முடியாமல் இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக எங்களை எல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற தாய்மார்கள் அந்தக் குறைகளை வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தத் தாய்மார்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில் மேன்மேலும் அந்தக் குடிநீர்த் திட்டங்களைத் தீட்டுகின்ற வகையில் அந்தத் திட்டங்கள் சீரோடும், சிறப்போடும் செயலாற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பினை நல்கிய புரட்சித்தலைவர், பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி இந்த அளவில் அமைகிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. ஜெ. ராஜாபாபு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வணக்கம். ஆசியாவின் ஜோதி பண்டித நேரு பெருமகனார் ஈன்றெடுத்த வீரப் புதல்வி, இந்திய மக்களின் இதயத் தலைவி இந்திரா காந்தி அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி புதிய பாரதத்தைப் படைக்கின்ற பொறுப்பேற்றிருக்கும் இளைய தலைமுறையின் தானைத் தலைவர் பிரதமர் ராஜீவ் காந்தியின் கமல பாதங்களுக்கு என் நன்றியினைச் செலுத்தி என் தொகுதி மக்களுக்கும் நன்றி தெரிவித்து, என் கன்னிப் பேச்சைப் பேச அனுமதித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. ஜெ. ராஜாபாபு]

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர் குலைந்து விட்டது.
அண்மைக் காலமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கொலை,
கொள்ளை, கற்பழிப்பு நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாகி விட்டன.
தவறு செய்வோர் முழுமையாகத் தண்டிக்கப்படாததன் விளை
வாகத் தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நினைவு
படுத்த விரும்புகிறேன். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க
வேண்டிய அதிகாரிகள் சில தவறுகளுக்குத் தூண்களும்
உடந்தையாக இருப்பதையும் பார்த்து அரசும் மௌனம்
சாதிப்பதேன்.

கண்ணகி பிறந்த தமிழகம், கற்புக்குப் பெருமை பெற்ற
தமிழகம், மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கிக்
கொண்டிருந்த தமிழகம் இன்றைக்குத் தலைகுனிந்து பல
அபலைப் பெண்களின் கற்பு சூறையாடப்பட்டும், பல பெண்களைப்
பலவந்தப்படுத்தி வீடியோ மூலம் படமெடுத்து கற்பைக் காசாக்கு
கின்ற சூழ்நிலையும் தமிழகத்தின் தலைநகரில் நடந்து கொண்
டிருக்கின்றன. இச்செய்திகளை கடந்த வாரம் செய்தித்தாள்
களில் பார்க்கும்போது வேதனையாக உள்ளது.

இந்தியாவிற்குப் பெருமை சேர்த்த தமிழகம் பல முதல்வர்
களைக் கண்டாலும் இன்றைக்கு முதலமைச்சராகப் பொறுப்பேற்
றிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர்மீது தமிழகத்து
அனைத்து மக்களும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள்
என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதிலும் குறிப்பாக
இன்றைக்கு தாய்க்குலம் பரிதவிக்கின்ற சூழ்நிலையில் சட்டம்,
ஒழுங்கைப் பேணிக்காக்க முடியாமல் அவல நிலையில் இருப்பதை
இந்த மாமன்றம் எண்ணிப் பார்க்க வேண்டுமென நான் கேட்டுக்
கொள்கிறேன். சட்டம், ஒழுங்கை மீறுபவர்கள் யாராக இருந்
தாலும், செல்வமும், அதிகாரமும் தவறுக்கு உடந்தையாக இருப்
பதைத் தகர்த்து எறிந்து சட்டத்தையும், ஒழுங்கையும் பேணிக்
காக்க காவல்துறை பொறுப்பேற்று இருக்கும் மாண்புமிகு முதல்
வரைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பல்வேறு தலைவர்களுக்கு நினைவகங்கள்
கட்டப்பட்டு உள்ளன. மேலும் பல தலைவர்களுக்கு
நினைவகங்கள் கட்டப்பட உள்ளன. இதை வரவேற்பதுடன்
பாரதத்தின் நலனுக்காக தன்னையே அர்ப்பணித்த அன்னை

[திரு. ஜெ. ராஜாபாபு] [1985 மார்ச் 30

இந்திரா காந்திக்கும் சென்னை மாநகரில் ஒரு நினைவகத்தை ஏற்படுத்தவும் அன்னையின் பெயரால் ஒரு போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்க வேண்டுமெனவும் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன மக்களுக்கு இப்பொழுது ஓட்டு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இந்த ஓட்டு வீடுகள் நீண்ட நாட்களுக்குப் பயன் தரவில்லை. அதைப் பராமரிக்கக்கூடிய வசதியும் அரிசனமக்களுக்கு இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு சிமெண்ட் கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை உள்ளது. மலை வாழ் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் 500 குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கடை வீதம் ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு குடும்பக் கார்டுகள் மூலம் மாதம் 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. இது அவர்கள் தேவையை நிறைவு செய்வதில்லை என்ற காரணத்தினால் மாதம் ஒன்றுக்கு 30 கிலோ அரிசி வீதம் வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1970 ஆம் ஆண்டிற்குப் பிறகு உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாமல் இருப்பதால் கிராமப் பகுதிகள் வளர்ச்சி அடையாமல் இருக்கின்றன. மேலும் கிராமப்புற மக்களின் தேவைகளை நிறைவு செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, பஞ்சாயத்து, நகராட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி முழுக்க முழுக்க விவசாயத்தை மட்டுமே தொழிலாகக் கொண்டது. இப்பகுதிகளில் பெரிய நீர்நிலைகள் கிடையாது. எனவே, செண்பகத் தோப்பு அணைத் திட்டத்தைத் துவக்கி, அதற்கான ஆய்வு வேலைகள் அத்தனையும் செய்து 1977 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் இதுவரையில் வேலைகள் துவக்கப்படவில்லை. எனவே, இந்த ஆண்டிலாவது அவசியம் செண்பகத்தோப்பு அணைத் திட்டத்தைச் செயல்படுத்தும்படி



1985 மார்ச் 30] [திரு. ஜெ. ராஜாபாபு]

சுமார் 5,000 கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் ஏக்கர் நிலம் சாகுபடி நிலமாகப் பயன்படும் என்று கூறிக்கொள் கிறேன்.

இது தேர்வுநிலை போளூர் நகரம் வட்டாட்சித் தலைநகராம். பல ஆண்டுகளாக அபிவிருத்தி அடை பேரூராட்சியாக உள்ளது. யாமல் இருக்கும் இந்நகர மேம்பாட்டுக்காக இதை நகராட்சியாக மாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சரியான போளூரில் உள்ள பிரசவ விடுதியில் போதுமான, மருத்துவ வசதிகள் இல்லை, படுக்கை வசதிகளும் இல்லை. இதை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு பிரசவத்திற்குச் சரியான வசதி செய்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

வனவிலங்கு ஜவ்வாது மலையிலுள்ள அமிர்தி காட்டில் சரணாலயம் உள்ளது. அதை விரிவுபடுத்தி சுற்றுலாமையமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அங்கு வாழும் மலைவாழ் மக்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள் சரியான முறையில் அளிக்கப்படவில்லை என்பதையும் நினைவு படுத்த விரும்புகிறேன்.

கிராமங்கள் நிறைந்த இப்பகுதியில் போக்குவரத்து வசதிகள் சரியாக இல்லை. குறிப்பாக ஆரணி—போளூர் டவுன் பஸ் விட அனுமதியளித்து பல ஆண்டுகளாகியும் இதுவரை பஸ் விடப்பட வில்லை. அதற்கான காரணமும் மர்மமாகவே உள்ளது. எனவே, உடனே பஸ் விட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஆரணி-படவேடு, ஆரணி-ஆத்தாம்பாடி, போளூர்-காலசமுத்திரம் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அந்தச் சாலைகளை செப்பனிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போளூர்-சேத்துப்பட்டு, போளூர்-காலசமுத்திரம், போளூர்-மலைக்காடு ஆகிய பகுதிகளுக்கு பேருந்து வசதிகள் இல்லாத காரணத்தால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் சிரமப் படுகின்றனர்.

[திரு. ஜெ. ராஜாபாபு] [1985 மார்ச் 30

போளூர் பகுதியில் பெருவாரியான விவசாயிகள் கரும்பு பயிர் செய்கின்றனர். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பத்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே போளூரில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் ஏரி இப்பகுதியிலேயே பெரிய ஏரி. அதை ஆழப் படுத்த அரசு திட்டம் தீட்டி நீண்டகாலம் ஆகிறது. ஆனால் இது வரை செயல்படுத்தவில்லை. இப்போது அந்த ஏரி மண்மேடிட்டு இருப்பதால், கால்வாய்கள் சரியாக இல்லாததன் காரணமாக நீர் வரத்து சரியாக இல்லை. ஆகவே ஏரியையும், கால்வாய்களையும் தூர் எடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கஸ்தம்பாடி பகுதியில் அரசு சார்பில் விதைப் பண்ணை அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. அந்த விதைப் பண்ணையை விரைவில் ஏற்படுத்த கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து மின்சாரத்தைப் பொறுத்தவரையில் அது விவசாயத் திற்கு உயிர்நாடியாக இருக்கிறது. எங்கள் பகுதியில் விவசாயிகள் நிலத்தடி நீரையே நம்பி இருப்பதால் தேவையான மின்சாரம் கிடைக்காத காரணத்தால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே விவசாயத்திற்கு முழு நேரமும் மின்சாரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் பாலாறு திட்டம் இருப்பதால் விவசாயத்திற்கு பம்ப் செட்டு களுக்கு புது மின் இணைப்புகள் பெறுவதில் பல இடையூறுகள் இருக்கின்றன. இந்த நிலையைப் பரிசீலித்து அப்பகுதியில் பம்ப் செட்டுகளுக்கு இணைப்பு கொடுப்பதற்கு இடையூறு இல்லாமல் செய்து இருக்கிற தடைக்கு விலக்கு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக வடாற்காடு மாவட்டத்தில் தான் நெல் உற்பத்தி அதிகம். எனவே வடாற் காடு மாவட்ட விவசாயிகளுக்கும் தஞ்சையில் வழங்குகின்ற 15 ரூபாய் போனஸ் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 30]

வடாற்காடு மாவட்டத்தில் மக்கள் அதிகமாக விவசாயத்தை நம்பி வாழ்கிறதால் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை எங்கள் மாவட்டத்தில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து எங்கள் மாவட்டத்தில தொலைக்காட்சி நிலையம் ஒன்று இருக்கிறது. எங்கள் பகுதியில் உள்ள கிராம மக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் அந்த நிலையத்தை அமைக்கும்படி கேட்டுக்கொண்டு இந்த மன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கைமீது எங்கள் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையில் இருக்கிற கொள்கை விளக்கங்கள் பற்றியெல்லாம் எங்கள் தலைவர்கள் இங்கே பேசுவதற்கு இருக்கிறார்கள். நான் என்னுடைய தொகுதியில் இருக்கிற பிரச்னைகளைச் சொல்வதற்கு முன்பாக, பேரவையின் மூலமாக இந்த அமைச்சரவைக்கு ஒரு வேண்டு கோளை வைக்க விரும்புகிறேன். நாங்கள் எல்லாம் தேர்ந்தெடுக் கப்பட்டு இந்த மன்றத்தின் உறுப்பினர்களாக இருக்கிறோம். நாங்கள் இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகிறபோது ஏதோ பேசுகிறோம் என்று இல்லாமல் எந்தக் கட்சி உறுப்பினராக இருந்தாலும், நாங்கள் வைக்கிற அனைத்து கோரிக்கைகளையும் உங்களால் நிறைவேற்ற முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. ஆனாலும் தேர்தலில் வெற்றி பெற்று வந்திருக்கிற எங்களால் வைக்கப்படுகிற பல கோரிக்கைகளில் ஏதாவது ஒன்றை யாவது நீங்கள் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு, ஏதாவது ஒரு திட்டத்தையாவது ஒவ்வொரு தொகுதிக்கும் அறிவித்து செயல் படுத்தினால் அந்தத் தொகுதி மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும். நாங்களும் தேர்தலில் வெற்றிபெற்று தொகுதிக்கு நன்மை செய்ததற்கு அடையாளமாக இருக்குமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே சட்ட மன்றத்தில் பேசாமல் கூட இருக்கலாம். இருந்தாலும் ஊருக்குப் போன உடனே சட்ட மன்றத்திலே என்ன பேசினீர்கள் என்று கேட்கிறார்கள். அதற்காக வேண்டி நாங்கள் ஏதோ சொல்லுகின்ற வகையிலே சொல்லுகிறோமே தவிர இந்தச் சட்ட மன்றத்திலே பேசுவதினாலே

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1985 மார்ச் 30

காரியங்கள் நடைபெறுகின்றன என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. இருந்தாலும் ஒரு வேண்டுகோளாக உங்களிடம் சொல்கிறேன். அதை ஏற்று, மனப்பூர்வமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதி கடைக்கோடியாக இருக்கிறது; அது வானம் பார்த்த பூமி. அங்கே ஆற்றுப் பாசனம் சீராக இல்லை; பாலங்கள் வசதியும் இல்லை. நாங்கள் எல்லாம் மக்களைச் சந்தித்து ஓட்டு கேட்கப்போகும்போது நடந்துதான் போக வேண்டும். நடந்து செல்வது மட்டுமல்லாமல் சில இடங்களில் போட்டில் போய் கரையைக் கடந்து செல்லக் கூடிய ஒரு அவல நிலை அந்தத் தொகுதியில் இருக்கிறது. அதற்குக் காரணம் பாலங்கள் இல்லை.

அங்காடி பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லும் போது, 500 பேர்களுக்கு ஒன்று என்று சொல்லியிருக்கிறீர்கள். நகரப் பகுதிகளிலே 500 பேர்களுக்கு ஒன்று என்று வைத்துக் கொள்ளலாம், பரவாயில்லை. கிராமப்புறங்களிலும் இந்த 500 பேர்கள் என்ற கணக்கை வைத்துப் பார்த்தால் 3 மைல், 4 மைல் தூரத்திலுள்ள கிராமங்களை சேர்த்துப் பார்த்தால் இந்த 500 எண்ணிக்கை வரும். பொதுவாக கிராமப்புறங்களில் பெரியவர்கள் எல்லாம் வேலைக்குப் போய்விட்டு, மாலையில் அல்லது இரவில் தான் வீட்டுக்கு வருவார்கள். அதனால் வீட்டில் இருக்கிற குழந்தைகள் தான் கடைக்கு வந்து சாமான்கள் வாங்க வேண்டும். அப்படி என்றால், 3, 4 மைல் வந்து அவர்கள் சாமான்கள் வாங்க சிரமம் ஏற்படுகிறது. ஆகவே கிராமப்புறங்களில் தூரத்தைக் கணக்கிட்டு, அங்காடிகளைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த அங்காடிகள் எப்படி நடக்கின்றன என்றால் உங்களுக்கே தெரியும். நாங்கள் ஏதாவது சொன்னால் எதிர்க்கட்சிகள் குறை சொல்கிறார்கள் என்று கூக்குரலிடுகிறீர்கள். ஆனால் அங்கே என்ன நடக்கிறது, எப்படி நடக்கிறது என்ற உண்மை அத்தனை பேர்களுக்கும் தெரியும். அப்படித் தெரிந்தாலும் உண்மையை மறைத்துப் பேசுவதில் பயனில்லை. அந்த அங்காடிகளில் ஊழல் நடைபெறாமல், அவை ஒழுங்காக நடக்க அரசு தகுந்த கண்காணிப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

சத்துணவுக்கு அதிகப் பணம் இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் சத்துணவுத் திட்டம் எப்படி நடக்கிறது? ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசும் போது ஏதோ சத்துணவுத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பதைப் போலவும் அது தேவையில்லாத திட்டம் என்று சொல்வதைப் போலவும் கற்பனையாகச் சொல்கிறார்கள். இந்தத் திட்டம் நல்லமுறையில் நடக்க வேண்டுமென்றுதான் எங்கள் கட்சி விரும்புகிறது. இதில் நடைபெறுகின்ற ஊழலைக் களையவேண்டும். ஆயிரம் மாண வர்கள் ஒரு பள்ளியில் படிக்கிறார்கள் என்றால் அவர்கள் எல்லோ ரும் சத்துணவு சாப்பிடுவதில்லை. உயர்ந்த ஜாதி, பணக்காரர் வீட்டுப் பிள்ளைகள் சாப்பிடுவதில்லை. அப்படி எடுத்துக் கொண்டால் 100 பேர்களுக்கு 10, 20 பேர்கள் சாப்பிடுவதில்லை. ஆனால் அந்தக் கணக்கையும் சேர்த்துதான் சத்துணவு போடப் படுகிறது. ஆகையால் இதிலே தவறு நடக்க வழி இருக்கிறது. சாப்பிடாத பிள்ளைகளின் கணக்கை எடுத்து, அந்த எண்ணிக்கை யைக் குறைத்து, அந்தப் பணத்தையும் சேர்த்து சாப்பிடுகின்ற பிள்ளைகளுக்கு சத்துணவு போட்டால் உண்மையிலேயே அது சத்தான உணவாக இருக்கும். அதை இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ விளம்பரத்திற்காக 10 இலட்சம் பிள்ளைகளுக்குப் போடுகிறோம், 15 இலட்சம் பிள்ளைகளுக்குப் போடுகிறோம் என்பதற்குப் பதி லாக உண்மையிலேயே சாப்பிடுகின்ற பிள்ளைகளின் கணக்கை எடுத்து, அவர்களுக்கு நல்லமுறையில் சாப்பாடு போடுகின்ற வகை யில் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நாங்கள் எல்லாம் ஓட்டு கேட்க கிராமங்களுக்குப் போகும் போது பார்த்தோம். சத்துணவு போடும்போது அந்த இடத்திலேயும் பார்த்தோம். பாதி உணவைக் கூட அந்தப் பிள்ளைகள் சாப்பிடவில்லை. மரம், மட்டை, வேலி ஓரங்களில் உணவைக் கொட்டியிருப்பதையும் பார்த்தோம். எனக்கு வைதீகத்தில் நம்பிக்கை கிடையாது. ஆனால் வைதீகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் சொல்வார்கள். அறுவடைக் காலத்தில் களத்து மேட்டில் காலில் செருப்பு போட்டுக்கொண்டு போகக் கூடாது என்று சொல்வார்கள். நெல் இருக்கும் இடம், சோறு

இருக்கும் இடங்களில் செருப்பு போட்டுக்கொண்டு போனால் புனிதத்தன்மை கெட்டுவிடும் என்பார்கள். அப்படி அவை புனிதமானவை என்று கருதப்படுவதால் அவர்களுடைய மனம் புண்படக்கூடாது என்பதற்காக நாங்கள் செருப்பை கழற்றி வைத்துவிட்டு போவோம். ஏனென்றால் அவர்களிடம் ஓட்டு வாங்கவேண்டும். அதற்காக கழற்றி வைத்துவிட்டுச் செல்வோம். இப்படி எல்லோரும் புனிதமாகக் கருதுகின்ற சோறு வீணாகப் போய் பிள்ளைகள் சாப்பிட முடியாத அளவுக்கு இருக்கிறது என்பது உங்களுக்கும் தெரியும். நடைமுறையில் இருப்பதைத் தான் நான் உங்களுக்குச் சொல்கிறேன். இதை எல்லாம் நீங்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து நல்லமுறையிலே செயல்படுத்த வேண்டும் என்று நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

அடுத்தபடியாக தொழில்துறையிலே நிறைய பணங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே உப்பளங்கள், சதுப்பு நிலம் அதிகமாக இருக்கின்றது. அதிலே கூட தி.மு.க. காலத்திலே நாவலர் அவர்கள் அமைச்சராக இருக்கிறபோது மாருதிகன்ஸ்ட்ரக்சன் என்ற பெயராலே ஒரு சர்வே செய்து, 100 கோடி அளவிற்கு உப்புத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ஒரு திட்டத்தைச் சர்வே செய்து, அது அரசினிடத்திலே கிடப்பிலே இருக்கிறது. அதை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அமைச்சர் அவர்கள் தொழில் துறையிலே 108 கோடி ரூபாய் திட்டத்திலே ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்போவதாகவும் அதிலே 300 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் சொல்கிறார்கள். அடுத்தபடியாக 20 கோடி ரூபாயிலே ஒரு திட்டம் ஆரம்பித்து, அதிலே 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொல்கிறார்கள். இதிலே இருக்கிற ஏற்றத்தாழ்வை நாம் பார்க்க வேண்டும். 108 கோடி ரூபாயிலே ஆரம்பிக்கிற தொழிற்சாலையில் 300 பேர்களுக்கு வேலை, 20 கோடி சொச்சத்திலே ஆரம்பிக்கிற திட்டத்தில் 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு என்று இருக்கிற விகிதாசாரத்தை எண்ணிப் பார்க்கிறபோது, இந்த மனித சக்தியை அதிகமாகப் பயன்படுத்துவதற்கு இந்த அமைச்சரவை முன்வரவேண்டும். இதனால் நாங்கள் எல்லாம் இந்த





எலக்ட்ரானிக்ஸை எல்லாம் எதிர்க்கிறோம் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. அந்த அளவிற்கு இந்த நாடு இன்னும் முன்னேறியதாகத் தெரியவில்லை. ஆகவே மனித சக்தியை அதிகமாகப் பயன்படுத்துவதற்கு நீங்கள் முன்வரவேண்டும். முதலீடு செய்கிறபோது எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதை எண்ணிப் பார்த்து தொழிற்சாலையை ஆரம்பித்தால், நம்முடைய தமிழ்நாடு தொழிற்துறையிலே முன்னேறும்; வறுமைக்கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்கள் நல்லமுறையிலே வாழமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்த வேதாரண்யம் பகுதியிலே இருக்கிற உப்பளங்களை வைத்து தொழிற்சாலையை ஆரம்பித்தால், அங்கே சோடா ஆஷ், காஸ்டிக் சோடா போன்றவற்றைத் தயாரிக்கலாம். இன்னும் பல தனியார்களுடைய முதலீட்டையும் பயன்படுத்துவதற்கு இந்த அமைச்சரவை முன்வந்தால், நிச்சயமாக 100 கோடி ரூபாய் அளவிற்கு திட்டம் தீட்டினால், அது தனியாராக இருந்தாலும், அல்லது அரசுத் துறையாக இருந்தாலும், கிட்டத்தட்ட 5 ஆயிரம் பேர்களுக்கு, வேலைவாய்ப்பு கிடைக்கும். அவர்களை நம்பி இருக்கிறவர்களுக்கும் நாம் உதவி செய்தமாதிரி இருக்கும். சென்னையிலேயிருந்து வந்திருக்கிற ரசாயன பிரிவு தொழில்துறை இணை இயக்குநர் அவர்கள் கூட ஒரு கருத்தரங்கு வைத்து, அவர்கள் அரசுக்கும் கலெக்டருக்கும் அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே எங்குமே தொழிற்சாலை கிடையாது. எனவே அந்தப் பகுதியில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மருத்துவத்திற்கு அதிகமாக பணம் ஒதுக்கி இருக்கிறீர்கள் என்று சொல்ல முடியாது. ஏன் என்றால் கால நிலைமையை எண்ணுகிறபோது மக்களுடைய ஜனத்தொகையை பார்க்கிறபோது, மருத்துவத் துறை இன்னும் நல்லமுறையிலே இயங்கவேண்டும். என்னுடைய வேதாரண்யம் தொகுதியிலே ஒரு மருத்துவமனை இருக்கிறது. அது சுகாதார நிலையமாகத்தான் இருக்கிறது. வேதாரண்யம் இரண்டு, மூன்று வட்டங்களுக்கு பிரிக்கப்பட்டது. அது இன்னும் அரசு மனை தாலுக்காவாக ... அதிலே ஆறு டாக்டர்கள் ... மருத்துவமனையாக ஆகவில்லை.

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1985 மார்ச் 30

இருக்கிறார்கள், அதிலே எம்.எஸ். படித்தவர், ஆப்பரேசன் செய்வதற்குத் தேவையான டாக்டர் கூட இருக்கிறார். ஆனால் ஆப்பரேசன் தியேட்டர் இல்லை. டாக்டர் இருக்கிறாரே தவிர தியேட்டர் இல்லை. பஞ்சாயத்து யூனியனிலே கொடுக்கக்கூடிய அந்தப் பணத்திலேயிருந்துதான் இன்னும் மருந்து வாங்கி சிகிச்சையை செய்து கொண்டு இருக்கிறார்கள். இதனால் பல பேர்களுக்கு இந்த மருத்துவமனையிலே வைத்தியம் செய்வதற்கு முடியவில்லை. எனவே தாலுக்கா தலைநகரத்துக்கு ஒரு அரசு மருத்துவமனை வேண்டும் என்று எடுத்த முடிவுப்படி, இப்போது இருக்கிற ஆரம்ப சுகாதார மருத்துவமனையை அரசு மருத்துவ மனையாக ஆக்கித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பக்கத்திலே 10 மைல் தொலைவிலே இருக்கிற இடத்தில் கரியாப்பட்டினம் என்று ஒரு கிராமம் இருக்கிறது. தி.மு.க. காலத்திலே மருத்துவமனை ஆரம்பிப்பதாகச் சொல்லி, அங்கே தற்காலிக கட்டிடங்கள் எல்லாம் கட்டுவதற்காக, 2, 3 ஏக்கர் நிலங்கள் எல்லாம் வாங்கிக் கொடுத்து பணம் எல்லாம் அரசுக்கு கட்டிக் கூட இன்றுவரையில் அது அப்படியே இருக்கிறது. எனவே அந்த கரியாப்பட்டினத்திலே சுகாதார மருத்துவமனை ஒன்றையும், வேதாரண்யத்திலே ஒரு அரசு மருத்துவமனையையும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பாசனம் பற்றியெல்லாம் பேசினால் அது நீண்ட நேரம் ஆகும். காவிரி நீர்ப் பிரச்சனை இன்னும் தீரவில்லை. அதனால் பாசனம் அதிகமாகத் தரமுடியாத நிலைமையிருக்கிறது. காவிரி நீர்ப்பிரச்சனைக்கு ஏதாவது ஒரு முடிவு எடுத்தால்தான் தஞ்சை மாவட்டம் செழிப்பாக இருக்கும். தஞ்சை மாவட்ட மக்கள் அதை நம்பியிருக்கிறார்கள்.

கிராம வளர்ச்சி மிகவும் சீர்கேடான நிலைமையில் இருக்கிறது. தன்னிறைவுத்திட்டம், என்.ஆர்.இ.பி. திட்டம் என்று நாம் செயல்படுத்தினாலும் கூட நடைமுறையிலே பார்த்தால் ரோடுகள் எல்லாம் செப்பனிடப்படாமல் இருக்கிறது. கிராமப்புற இணைப்புச் சாலைகளை எல்லாம் எப்படி காண்ட்ராக்டர்கள் போடுகிறார்கள் என்பதைக் கண்காணிக்க ஒரு குழு போடவேண்டும். நாம் செலவு செய்கிற பணம் மக்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேர



1985 மார்ச் 30] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

இல்லை. இடையிலே இடைத்தரகர்கள், அதிகாரிகள், காண்ட்ராக்டர்கள் இருப்பதால், அவைகள் சரியாக நடைபெற வில்லை. இதையெல்லாம் ஆளும் கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் கூடப் பேசினார்கள். ஆனால் நாங்கள் பேசுகிறபோது, நீங்கள் வேறு மாதிரியாக நினைக்கிறீர்கள். ஆனால் உண்மையிலே 25 சதவீதம் பணம் கூட இந்த மக்களுக்குப் போய் சேருவதில்லை. அதிலே பல ஊழல்கள் நடைபெறுகின்றன. அப்படிச் சொல்லவேண்டும் என்றால் நிறையச் சொல்லலாம். அது தனிப்பட்டவர்களுடைய குற்றச்சாட்டாக முடியும். அது பிரச்சனைக்குரிய விஷயமாகிவிடும். எனவே அது தேவையில்லை. ஆனால் நாம் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளை மனச்சாட்சியோடு செய்ய வேண்டும். அதைத்தான் நான் கேட்டுக் கொள்கிறேன். வேதாரண்யத்திற்கு குடிநீர் பிரச்னையைப் போக்குவதற்காக ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டு நீண்ட நெடுங்காலமாகிறது. 2, 3 ஆண்டுகளாகவே வருகிறது வருகிறது என்று அடிக்கடிச் சொல்லப்பட்டு வருகிறது. பத்திரிகையிலேயும் பார்த்தோம். ஆனால் இன்னும் அந்தத் திட்டம் செயல்படவில்லை. கிட்டத்தட்ட 30 மைல், 40 மைல், 50 மைலுக்கு அப்பால் இருக்கிற கிராமங்களின் வழியாகத்தான் அந்தக் குடிதண்ணீர் திட்டம் வர இருக்கிறது. அப்படிக் கொண்டு வரும் போது வழியில் இருக்கும் எல்லாக் கிராமங்களுக்கும் அதன் மூலம் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். உடனடியாக அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி கடலோரப் பகுதியில் உள்ள மக்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யவேண்டும் என்று பணிவோடு இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வேதாரண்யம் பகுதியிலே ஒரு காடு இருக்கிறது. அதைச் சுற்றுலா மையமாகக் கூட அறிவித்திருக்கிறார்கள். அந்தக் காடு இன்னும் கொஞ்சம் நாளில் அழிந்து போய் விடும் நிலையில் இருக்கிறது. ஏனென்றால் சில சமூக விரோதிகள் அந்தக் காட்டிலே உள்ள மான்களை வேட்டையாடி சுட்டு ருசித்துச் சாப்பிடுகிறார்கள். அதை அதிகாரிகளும் தடுப்பது இல்லை. அதிகாரிகளே அங்கு சரியில்லை. காடுகளிலே இருக்கிற பெரிய மரங்களை எல்லாம் வெட்டி, பலகைகளாக அறுத்துக் கொண்டு போகிறார்கள். அங்கேயே அந்தக் காட்டுக்

குள்ளேயே பலகைகளாக அறுத்து எடுத்துக் கொண்டு போகிற அளவுக்கு நிலைமை வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதைக் கவனித்து வேண்டியதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழகத்திலேயே உப்பு உற்பத்தி செய்கிற இடங்களில் தூத்துக்குடிக்கு அடுத்ததாக வேதாரண்யம் இருக்கிறது. அந்தப் பகுதியில் நிறைய தனியார்கள் பி. மெமோ என்ற பெயராலே ஆக்கிரமித்து அந்த நிலங்களில் உப்பு உற்பத்தி செய்கிறார்கள். அப்படி உப்பு உற்பத்தி செய்யப்படுகிற நிலங்கள் எல்லாம் புறம்போக்கு நிலங்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை தவிர்ப்பதற்கு, நிரந்தரமாக அங்கே உப்பு உற்பத்தி செய்யும் வகையில் இந்த அரசு அந்த நிலங்களை லீசுக்கு தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வேளாண்மை சம்பந்தமாக இந்த அறிக்கையிலே பல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையாகவே பாராட்டப்பட வேண்டிய திட்டங்களாகக் கூட அவை இருக்கின்றன. ஆனால் இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் உண்மையாகவே அந்த மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று கேட்டால், போகவில்லை. உதாரணமாக, பூச்சி மருந்து, உரம் போன்றவைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் இப்படிப்பட்ட என்னென்ன திட்டங்கள் அவர்களுக்காகப் போடப்பட்டிருக்கின்றன. திட்டங்கள் இருப்பதாகவே மக்களுக்குத் தெரியவில்லை. என்று அவர்களுக்கே தெரியாது. இதனால், அந்த டெப்போவில் யாராவது போய் கேட்டால் அவர்களிடம் 10 கையெழுத்து வாங்கிக் கொண்டு அந்தச் சலுகைகளை தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் உண்மையாகவே அந்தச் சலுகைகள், தேவைப்படுகிற ஏழை எளிய மக்களுக்கு அந்த திட்டங்களின் பலன் போய்ச் சேருவதில்லை. ஆகவே, கூடியவரையில் என்னென்ன திட்டங்கள் செய்திருக்கிறீர்கள் என்பதை விளம்பரப்படுத்தி அந்தத் தகவல்களை எல்லா கிராம மக்களும் கேட்குமாறு செய்யுங்களேன். ஒவ்வொரு தாலுக்கா விலோ அல்லது ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலே அந்த ஒரு சரியான ஏற்பாடு செய்தால், உரிய விளம்பரமாக ஏற்பாடு செய்தால், உங்களுக்கும் ஓட்டு வாங்க அது பயன்படும்,



மக்களுக்கும் அது பயன்படும். ஆகவே, அத்தகைய விளம்பரங்களை முறையாகச் செய்ய வேண்டும். எது எதற்கோ விளம்பரம் செய்கிறீர்கள், மக்களுக்குப் பயன்படுகிற இவைகளுக்குச் செய்யக்கூடாதா? செய்தால் நலமாக இருக்கும். அப்படிப்பட்ட விளம்பரங்கள் கொடுத்தால்தான் மக்கள் நேரிடையாக இந்தத் திட்டங்களின் பயனை கேட்டு வாங்க முடியும், அது அவர்களுக்கு உதவியாக இருக்கும். ஆகவே அதில் நேரிடை கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிக்கூடங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், எல்லாப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் மரத்தடியில் தான் உட்கார்ந்திருக்கிறார்களே தவிர, இதில் மேல்நிலை உயர்நிலை என்ற வித்தியாசம் இல்லை. சில இடங்களில் அந்த மரத்தடியும் சரியாக இல்லை என்றால், அட்டென்டென்ஸ் எடுத்துவிட்டு, வீட்டுக்குப் போங்கடா என்று அனுப்பிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் என்ன செய்யப்போகிறீர்கள் என்று தெரியவில்லை. பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். அந்த ஒரு கோடியை வைத்துக் கொண்டு என்ன பண்ணப்போகிறீர்கள்? ஒரு ஜில்லாவுக்குக் கூட முறையாக செய்ய முடியாது. இந்தக் குறையை எப்படி நீங்கள் நிவர்த்தி செய்யப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. இந்தப் பள்ளிகளுக்கு தற்காலிகமாக கூரை வேய்ந்துக் கொடுத்தோ அல்லது தற்காலிக கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்தால்தான் நீங்கள் சமாளிக்க முடியும்.

சில சத்துணவு மையங்களில் சமைக்கக் கூட இடம் இல்லாமல் இருக்கிறது. கத்திரிபுலம் என்ற ஊரிலே சத்துணவுக் கூடத்திற்கு சமைக்க இடம் இல்லை. இப்படி நிரந்தரக் கட்டிடம் இல்லாத கத்திரிபுலம், செட்டிபுலம், தரியாப்பட்டினம், செம்பட்டை, *தகட்டூர் போன்ற ஊர்களில் இவைகளையெல்லாம் கட்டிடம் கட்ட கவனத்திலே எடுத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்துப் பாலங்கள். இந்தப் பால வசதி இல்லாமல் பல இடங்களில் போக்குவரத்தே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஒரு பர்லாங் கடந்து செல்லவேண்டிய இடத்தில்

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1985 மார்ச் 30

மழை அல்லது வெள்ளக் காலங்களில் 4 மைல் சுற்றிக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் உள்ள பாலங்களை எல்லாம் உடனடியாக கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த தேர்தலில் ஓட்டுப்போட மாட்டோம் என்று 10, 12 கிராமங்களில் சொல்லிவிட்டார்கள். உங்களுக்கு ஓட்டு போட்டு எங்களுக்கு என்ன உபயோகம்? எங்களுக்கு பாலம் இல்லை, ரோடு இல்லை, தண்ணீர் இல்லை, லைட் இல்லை, நாங்கள் ஏன் உங்களுக்கு ஓட்டு போடவேண்டும் என்று ஒரேயடியாக ஸ்டிரைக் செய்தார்கள். அப்புறம் நாங்களும் சில அதிகாரிகளும் அங்கே போய் நயம்செய்து கண்டிப்பாக ஓட்டுப் போடுங்கள், நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே சட்டமன்றத்திற்குப் போய் உங்கள் குறைகளை எடுத்துச் சொல்லி, உங்களுக்கு இவைகளை எல்லாம் செய்து தருகிறோம் என்று சொல்லிவிட்டு வந்தோம். அது நடக்கப்போகிறதோ இல்லையோ அவர்களிடம் சொல்லி விட்டு வந்து விட்டோம். இப்படியெல்லாம் எங்கெங்கே மக்களுடைய குறைகள் இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். பாலம் இல்லாததினால் ஓட்டுப் போட மாட்டேன் என்று சொன்ன முக்கியமான கிராமங்களாகிய, நாலுவேலம்பதி, திருவிடைமருதூர் ஆகிய ஊர்களுக்கு பாலம் கட்டிக் கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

அரசு ஊழியர்களுக்கென்று நடத்தை விதிகள் இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் அரசு ஊழியர்கள் வேஷம் போடுகிறார்கள். இதை அவர்களைப் புண்படுத்துவதற்காக சொல்லவில்லை. வெளியிலே பேசுகின்றபோது, பெரியார் வழி, அண்ணா வழி என்று பேசிக்கொண்டு இருக்கிறோம். தனிப்பட்ட முறையில் யாரையும் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. நடைமுறையிலே நாம் எப்படி இருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எங்கே பேசினாலும் கொள்கையை வலியுறுத்துகின்றமாதிரி பேச வேண்டும். இந்த சட்டமன்றத்திலே பேசுகின்றபோது பல உறுப்பினர்களின் பேச்சில் கடவுள், தெய்வம் போன்ற வார்த்தைகள் அதிகமாக நடமாடுகிறது. அது எப்படி? பெரியார் கொள்கைக்கும், அண்ணா



1985 மார்ச் 30] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

கொள்கைக்கும் ஒத்துவருமா, சாத்தியப்படுமா என்ற வகையில் நாம் ஓரளவிற்கு மனச்சாட்சியோடு நடக்கின்ற மாதிரி ஒரு உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். அங்கே இருக்கின்ற ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்கள் அந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆளும் கட்சியில் பல உறுப்பினர்கள் நாம் வேடிக்கை பார்க்கிறோம். பொட்டு வைத்துக்கொண்டு வருகிறார்கள், நாமம் போட்டுக்கொண்டு வருகிறார்கள். அதிகமாக கடவுள் நம்பிக்கை இருக்கிற மாதிரி வருகிறார்கள். எங்கள் கட்சியிலும் ஒன்று, இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. இருந்தாலும், ஆளும் கட்சியினர் தங்களுடைய கொள்கையை நடைமுறைப்படுத்துகின்றமாதிரி அவர்களுடைய நடவடிக்கை இல்லை.

பெரியாரைப் பற்றி பேசினால் உடனே சங்கராச்சாரியாரை பார்க்க வேண்டும். ஏனென்றால் அது புண்ணியாதானம் பண்ணுகின்ற மாதிரி இப்படி ஒரு உறுதியான சுய மரியாதைக் கொள்கையில் இந்த அரசுக்கு நம்பிக்கை இல்லை என்று தான் நான் நினைக்கிறேன். ஏதோ மக்களிடம் ஓட்டு வாங்கலாம். இப்போது கடவுள் இல்லை என்று சொல்வதைவிட, கடவுள் இருக்கிறார் என்று சொன்னால் உங்களுக்கு ஓட்டு கேட்டால் அதிகமாக ஓட்டு கிடைக்கும். ஓட்டு வாங்குவது நமக்கு முக்கியம் இல்லை. நம்முடைய கொள்கை என்ன என்பதை எண்ணிப் பார்த்து ஓரளவிற்கு நாணயமாக, எடுத்த கொள்கையிலே நாம் உறுதியாக இருக்கிறோம் என்ற நம்பிக்கையை நாம் நடைமுறையிலே காட்டவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

நம்முடைய அமைச்சரவையில் மூத்த அமைச்சர்கள் இருக்கிறார்கள். சுய மரியாதை கொள்கையில் நம்பிக்கை உள்ள அமைச்சர்கள் ஒரு சில பேர் தான் இருக்கிறார்கள். அது எனக்குத் தெரியும். மற்றவர்கள் உண்மையிலேயே மனச்சாட்சியை எங்கேயோ வைத்துவிட்டு வந்துவிட்டார்கள் என்று தான் நாம் நினைக்க வேண்டும். இதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும், அண்ணா கொள்கை, பெரியார் கொள்கை ஓரளவிற்கு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டி. 2 எ 56—18

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1985 மார்ச் 30

அதோடு, இப்போது ரோடுகளிலே எங்கே பார்த்தாலும் நடை பாதை கோயில்கள் அதிகமாக இருக்கின்றன. அதனால் விபத்துக்கள் ஏற்பட்டு மக்கள் இறந்து போகிறார்கள். ஆகவே, கோயில்கள் உற்பத்தியில் இந்த அரசு அச்சவரம்பை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவனவன் ஒரு ஒரு கோயிலிலே ஒரு சாமியையோ, ஒரு சிலையையோ வைத்துக் கொள்கிறான். அல்லது படத்தை வைத்துக்கொள்கிறான். அதற்கு ஒரு உண்டியலை எடுத்துக்கொண்டு வந்து குலுக்க ஆரம்பித்து விடுகிறான். போகின்ற பஸ்களையெல்லாம் மறித்து உண்டியலை குலுக்க ஆரம்பித்துவிடுகிறான். இவையெல்லாம் எவ்வளவு மூடநம்பிக்கை. மக்களுடைய மனப்பக்குவம் மிகவும் மோசமாகிக்கொண்டே போகிறது. இவையெல்லாம் தடுக்கப்பட வேண்டும்.

அரசு அலுவலகங்களில் உள்ள ஊழியர்கள் அவர்கள் இஷ்டப் பட்ட சாமியை வணங்க வேண்டும். அதனைத் தடுக்கவில்லை. எங்களுக்கும் சாமிக்கும் சண்டை இல்லை. போலீஸ் துறை யிலே இருப்பவன் ஷேவ் பண்ணிக்கொண்டு வரவேண்டும். ஆனால் முடியை வளர்த்துக்கொண்டு வருகிறான். கேட்டால் ஏதோ ஒரு கோயிலுக்குப் போகின்றேன் என்கிறான். அப்ப என்ன அர்த்தம்? அந்த மதத்தை அவன் பரப்புகிறான் என்று அர்த்தம். எனவே அலுவலக நேரங்களில் அம்மாதிரி செய்வதை நிறுத்த வேண்டும். அண்ணா அவர்கள் காலத்திலே அப்படி ஒரு சர்க்குலர் போட்டார். அந்த சர்க்குலரைப் படித்துப் பார்த்து, இந்த அரசு ஊழியருக்கு உள்ள விதிமுறைகளை நிறைவுபடுத்த வேண்டும். தண்டனை கொடுக்க வேண்டும் என்பது அல்ல. இப்படி ஒரு மதச் சார்பற்ற அரசு என்று நாம் சொல்லிக் கொள்கிறோம். ஒரு மதத்தைப் பரப்புவதற்கு, மூடத்தனங் களை அதிகமாகப் பரப்புவதற்கு அரசு ஊழியர்கள் ஒரு பங்காக இருப்பதைத் தடுக்க வேண்டும். அந்த வகையில் இவற்றை நீங்கள் கண்காணிக்க வேண்டும். சின்ன விஷயமாக இருந்தாலும் கண்காணிக்க வேண்டும். அப்பொழுதுதான் எதிர்காலம் நல்ல எதிர்காலமாக இருக்கும். இப்போது எதிர்காலம் ஒரு மாதிரி யாக போய்க்கொண்டிருக்கிறது. ஜாதிச் சங்கங்கள் அதிகமாகிக் கொண்டு இருக்கின்றன. எந்த ஜாதிச் சங்கமாக இருந்தாலும்



1985 மார்ச் 30] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

விருந்துக்கு கூப்பிடுகிறான். நாங்களும் அப்படி போய்க் கொண்டிருக்கிறோம். ஓட்டு வாங்க வேண்டியதற்காக போக வேண்டியிருக்கிறது.

இப்போது பெரியார் காலத்தில் இல்லாத, ராஜாஜி காலத்தில் இல்லாத, அண்ணா காலத்தில் இல்லாத ஜாதிச் சங்கங்கள் நாட்டில் அதிகமாக பெருத்துக்கொண்டு போய்விட்டது. என்ன வென்று உங்கள் மனசாட்சிக்கே அதை விட்டுவிடுகிறேன். 7, 8 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இத்தகைய நிலைமை இருக்கிறது. அதற்கு மறைமுகமாக உங்களுடைய உதவி இருப்பதால்தான் இத்தகைய நிலைமை. அந்தச் சங்கங்களுக்கு நீங்கள் ஊக்கம் தருவதால்தான் அத்தகைய நிலைமை. பக்தி, கடவுள் நம்பிக்கை இவற்றிற்கு ஏதாவது ஒரு முடிவு கட்டவேண்டும்.

ரேடியோ, டெலிவிஷன் இவற்றை எடுத்துக்கொண்டால், மூட நம்பிக்கையுள்ள கதைகளை அதிகமாக ஒளிபரப்புகிறார்கள். தமிழ் மொழியை ஒழுங்காகப் பேசுவதில்லை. ரேடியோ, டெலிவிஷனில் ஒரு தனி மொழி இருக்கிறது. ஒரு ஜாதிக்குரிய மொழிகள் அதிகமாக நடமாடுகின்றன. இதையெல்லாம் கண் காணிக்க வேண்டும். ஏனென்றால் நம் நாட்டிற்கு தேவை யானவற்றை ஒளிபரப்பத்தான் டி.வி. இருக்கிறது. இதில் நாம் கவனமாக இருந்தால் எதிர்காலம் சுபிட்சமாக இருக்கும்.

பெரியார் பிறந்த பூமி இந்த பூமி. பெரியாருக்கு நினைவா லயம் கட்டுகிறேன் என்று முதலமைச்சர் இரண்டு மூன்று வருடத் திற்கு முன்னால் சொன்னதாக ஞாபகம். அந்த நினைவாலயம் என்னாச்சு என்று எனக்குத் தெரியவில்லை. கட்டினால் ஏதாச்சும் மோசம் வந்துவிடுமோ என்று பயந்து கொண்டு இருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. பெரியாருக்கு மணிமண்டபம் கட்டிவிட்டால் வேறு யாருக்காவது கட்டவேண்டும் என்ற பிரச்னை வருமோ என்ற ஒரு தடுமாற்றமான கொள்கை இந்த அரசுக்கு இருக்கிறது. அவற்றையெல்லாம் மறுபரிசீலனை செய்து இந்த தமிழ்நாட்டு மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் [1985 மார்ச் 30
தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின்மீது பேச
எனக்கு வாய்ப்பு அளித்ததற்கும் எனக்கு வாக்களித்த எனது
தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் மாண்புமிகு தமிழக
முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் முதற்கண்
எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது
உயிரினும் மேலான அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக உடன்பிறப்புகளுக்கும் தேசிய காங்கிரஸ்
உறுப்பினர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் 1982 ஆம்
ஆண்டு ஜூலையில் கொண்டுவரப்பட்டு நம் மாநிலத்தில் மட்டு
மன்றி, பிறமாநிலங்களும், பிறநாடுகளும் பாராட்டத்தக்க
வகையில் 2 முதல் 15 வயது வரை உள்ள சுமார் 80 லட்சம்
பிள்ளைகள் பயன் அடைந்து வருகின்றனர்.

சத்துணவுத் திட்டத்தின் மூலமாக பள்ளிசெல்லும் குழந்தை
களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதோடு குழந்தைகள் திடகாத்திர
மாகவும் ஆரோக்கியமாகவும் இருந்து வருகின்றனர்.

இவர்களுடன் முன்னாள் இராணுவத்தினர், முதியோர்கள்,
உதவித் தொகை பெறுகிறவர்கள் ஆகியோருக்கும், மேலும் 1985
ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் 10 முதல் 15 வயது
வரை உள்ளவர்களுக்கும் சத்துணவுத் திட்டத்தை நீட்டித்த
தற்கும் எட்டாம் வகுப்புவரை உள்ள தகுதியுள்ள ஏழைக்
குழந்தைகளுக்கு 15—9—1985 முதல் இலவசப் பாடப்புத்தகங்கள்,
சீருடைகள் வழங்கும் திட்டத்தையும் கொண்டுவந்த இந்தத்
தமிழக அரசையும் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும்
நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலமாக பல பெண்களுக்கும்
விதவைத் தாய்மார்களுக்கும் வேலைவாய்ப்பு இடைத்ததோடு
தற்சமயம் சீருடையை வழங்கும் திட்டத்தின் மூலம் பல கிராமப்
புறப் பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க உள்ளதை நான்
பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதற்காக நான்
இந்தத் தமிழக அரசையும் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்
களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. அ. பெரியசாமி]

உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறு உழவர்கள்
கட்டுமானத் தொழிலாளர்கள் ஆகியோர்கள் அவரவர்கள்
தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது இறக்க நேரிட்டால்
கொடுக்கும் இழப்பு ஈட்டுத் தொகை ரூ. 5,000-லிருந்து 10,000
ஆகவும், அரசுப் பணியாளர்களுக்கு குடும்ப நல நிதி ரூ. 10,000த்தி
லிருந்து ரூ. 20,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளதற்கும் நான்
தமிழக அரசையும் டாக்டர் புரட்சித் தலைவரையும் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிசைக்கு மின் விளக்கு அமைக்கும் திட்டத்தின் கீழ் ஒரு
குடிசைக்கு ஒரு விளக்கும், சிறு உழவர்களுக்கு இலவசமாக
மின்சாரம் வழங்கும் திட்டம், விவசாய விளைப்பொருட்களின்
உற்பத்தியைப் பெருக்குதல், சிறு சொற்ப நில உழவர்களுக்கு
உதவி செய்யும் வகையில் இயற்கை உரங்களின் மீதான 5 விழுக்
காடு பலமுறை வரியை ஒட்டு மொத்தமாக தள்ளுபடி செய்ய
உத்தேசித்துள்ளதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். அதற்காக நான் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே புளி, மஞ்சள், கொத்தமல்லி, மிளகாய் ஆகிய
உணவுப் பொருட்களுக்கு தற்போதுள்ள 5 விழுக்காடு பலமுனை
வரியை 8 விழுக்காடு ஒருமுனைவரியாக மாற்ற உத்தேசித்து
இந்தப் பொருட்களின் விலைகளைக் குறைக்கவும் வியாபாரி
களின் பிரச்சினைகள் குறையவும் ஏற்பாடு செய்த மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

(பகல் 1-20)

1985-86 ஆம் ஆண்டில் சமவெளிப் பகுதியில் 5,000
பேர்களுக்கு ஒன்று வீதத்திலும் மலைப் பகுதியில் 3,000
பேர்களுக்கு ஒன்று என்ற வீதத்திலும் துணைச் சுகாதார
நிலையங்கள் ஏற்படுத்துவதையும் பள்ளி செல்லும் குழந்தை
களின் எண்ணிக்கை அதிகமாகி வரும் இந்த வேளையில் 1985-86
ஆம் ஆண்டில் இடைநிலை ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள்,
பட்டதாரி ஆசிரியர்கள், பட்டமேற்படிப்பு ஆசிரியர்கள் ஆகிய
பதவிகளை ஏற்படுத்தக் கருதியுள்ள நம் தமிழக அரசையும்
மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும் நான்
பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. அ. பெரியசாமி] [1985 மார்ச் 30

ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கும், தாழ்த்தப்பட்டோரின் துயரங்களைத் துடைப்பதற்கும் வேலையின்மையை நீக்குவதற்கும் நம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பாடுபட்டு வந்தார்கள். மீண்டும் நம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்தான் நமக்காகப் பாடுபட இயலும் என்ற எண்ணத்தில் மீண்டும் தமிழக முதல்வராக தமிழக மக்கள் தேர்ந்து எடுத்துள்ளார்கள். இந்த 7 ஆண்டு காலத்தில் ஏழை எளிய மக்களுக்கு எத்தனையோ திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள் என்பது மக்களுக்கு நன்கு தெரியும்.

மேலும் சொன்ன சாதனைகளை எல்லாம் விட்டு விட்டு மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏதோ அலை வீசி விட்டது. அதுதான் காரணம் என்கிறார்கள். அன்னை இந்திரா காந்தி இறந்ததும் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆஸ்பத்திரியிலே சிகிச்சை பெற்றது ஆகிய அனுதாபம் தான் தமிழகத்திலே அ.இ.அண்ணா தி.மு.கழகமும், இந்திரா காங்கிரசும் வெற்றிப் பெற்றதாக இந்த மாமன்றத்திலே பேசினார்கள். அப்படி அலை வீசியது என்றால் என் ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் வீசவில்லையே, ஏன்?

என்னுடைய தொகுதி, பின்தங்கிய தொகுதியாக தாராபுரம் தாலுக்காவை அறிவித்தும் இன்னும் எந்தவிதமான தொழிற்சாலைகளும் ஏற்படவில்லை. ஏன் என்று கேட்டால் அருகில் உள்ள அவநாசி தொகுதியில் பழனி தாலுக்காவையும் பின்தங்கிய தாலுக்கா என்று அறிவித்ததன் காரணமாக தாராபுரத்தை எடுக்காமல் விட்டுவிட்டார்கள். தொழில் செய்ய யாரும் அங்கே முன்வரவில்லை. ஆக அங்கே அரசு ஒரு நூற்பாலையையும் தொழிற்கூடங்களையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதே நேரத்தில் தாராபுரத்தில் அமராவதி ஆற்றுப் பாலம் 85 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்தும் இன்னும் பாலம் கட்டப்படாமல் உள்ளது. இதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இனக்கலவரங்களினால் அதிக அளவில் அகதிகள் வந்து கொண்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, மலிவு விலையில் அரிசி, உடைகள், சமையல் பாத்திரங்கள், தங்கு மிடம் இன்னும் பல சலுகைகளை நமது அரசு அவர்களுக்கு செய்து வருவதை நான் பாராட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. அ. பெரியசாமி]

அதோடு இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண நம் மாநில அரசு மத்திய அரசை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி இலங்கை தமிழர்களின் பிரச்சினையை முடிக்க வேண்டுமாய் நான் நம் தமிழக அரசை மன்றாடி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் மேலும் எனது தொகுதியில் கல்லூரிகள் ஒன்றும் இல்லை. தாராபுரத்திலிருந்து வெளியூர்களுக்குச் சென்றுதான் கல்வி கற்க வேண்டிய நிலை உள்ளது. எனது தொகுதி அரிஜனத் தொகுதி ஆனதன் காரணத்தினாலும், ஏழைக் குழந்தைகளின் கல்விப் பிரச்சினையை தீர்க்கவும் தாராபுரத்தில் ஒரு அரசுக் கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும் தமிழக அரசையும் கேட்டுக்கொண்டு இங்கே பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் (1—4—1985) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டபடிக்கான விதிகளும், ஆணைகளும்.

143. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41-வது பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (ஆங்கிலம்).

144. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்).

145. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

ஏதுவுமில்லை.

136377

V211,31.N85

N85-4.384